அரசியலமைப்புச் சட்டம் - II

[அரசியலமைப்பு அங்கங்களின் கட்டமைப்பு மற்றும்
மத்திய - மாநில உறவுகள்]

Constitutional Law - II

[Institutional Structure & Centre - State Relations]

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

பி.ஆர்.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

4-ஆம் பதிப்பு

அரசியலமைப்புச்சட்டம் II - பாடத்திட்டம்
அரசியலமைப்பு அங்கங்களின் கட்டமைப்பு
மத்திய – மாநில உறவுகள்
பிரச்சனைகளும் தீர்வுகளும்
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்
அரசியலமைப்புச்சட்டம் II தேர்வை எப்படி எழுத வேண்டும் ? – சில குறிப்புகள்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சிறந்த சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,
69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

இயங்கலையில் (ஆன்லைன்)
நூல்கள் வாங்க : www.shripathirajanpublishers.com

நான்காம் பதிப்பின் முகப்புரை

ஜம்மு–காஷ்மீர் மாநிலம் நமது இந்திய அரசின் ஒரு பகுதியாக இருந்தாலும், அதன் தகுநிலை (அந்தஸ்து) இந்தியாவின் பகுதியாக உள்ள மற்ற மாநிலங்களின் தகுநிலையைக் காட்டிலும் வேறுபட்டதாகும். அம்மாநிலத்திற்கென சிறப்புத் தகுநிலையை (Special Status) இந்திய அரசியலமைப்பின் 370–ஆம் சரத்து வழங்கியுள்ளது. அண்மையில் இந்திய அரசு சரத்து 370–ஐ இரத்து செய்து, ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு தகுநிலையை அகற்றிவிட்டது. இதனால் இந்தியாவின் மற்ற மாநிலங்கள் மைய அரசுடன் எத்தகு சட்ட உறவு கொண்டு கூட்டாட்சியில் இருந்ததோ, அதே உறவு கொண்டு விளங்கும் ஓர் மாநிலமாக ஜம்மு–காஷ்மீர் ஆனது. இதன் விளைவாக வெளி மாநிலத்தவர் எவரும் ஜம்மு–காஷ்மீரில் அசையாச் சொத்து வாங்கமுடியாது, அரசுப் பணியில் அமர முடியாது என்றெல்லாம் வகை செய்யும் சரத்து 35A–ம் நீக்கப்பட்டது. இதனால் இந்நூலின் ஆரம்ப பதிப்புகளின் பக்கம் எண். 240–இன் முடிவில் "ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்புத் தகுநிலையை வழங்கும் சரத்து 370–ஐ ஒழித்துவிடுவது சாலச்சிறந்ததுதானே?" என்ற வினாவிற்கு தற்போதைய அரசு பிரிவு 370–ஐ நீக்கறவு செய்வதன் மூலம் விடை கொடுத்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அந்த வகையில் நமது நாட்டின் மேன்மையான மற்றும் அடிப்படையான சட்டமான 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு', ஜம்மு–காஷ்மீர் மாநிலமும் பிற மாநிலங்களைப் போல கட்டுப்பட்டதாக ஆனது. இதனால் இந்தியக் கூட்டாட்சி மேலும் வலுவடைந்தது.

நமது நாட்டின் நிர்வாகம், சட்டமியற்றுதல், நீதி வழங்குதல் ஆகிய மூன்று அங்கங்களின் கட்டமைப்பை (Institutional Structure) எடுத்துரைக்கிறது. அவற்றிற்கான அதிகாரங்களை அரசியலமைப்புச் சட்டம் தனது பல வகைமுறைகள் மூலம் வழங்குகிறது. மேலும் அவ்வதிகாரங்கள் யாரிடம் இருக்க வேண்டும், அவை எப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும், அதன் மீதான வரம்புகள் யாவை என்பனவற்றையெல்லாம் அரசியலமைப்புச் சட்டம் கூறி நெறிப்படுத்துகிறது. தொடர்ந்து இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர், இந்திய தேர்தல் ஆணையம், அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின் அதிகாரங்களையும் பணிகளையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகுத்துரைக்கிறது.

இது ஒரு புறம் என்றால், மற்றொரு புறம் இந்தியக் கூட்டாட்சிக்கு வலு சேர்க்கும் வகையில் மத்திய–மாநில உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் பல்வேறு சரத்துகளின் வழியாக நமது அரசியலமைப்புச் சட்டம் தெளிவாக

வரையறுக்கிறது. குறிப்பாக சட்டமியற்றுதல் குறித்த உறவுகள் (Legislative Relations), நிர்வாக உறவுகள் (Administrative Relations), நிதி சார்ந்த உறவுகள் (Fiscal Relations) என்ற மூன்று பரந்த வகைப்பாட்டின் கீழ் மத்திய–மாநில உறவுகளை திறம்பட எடுத்துரைக்கிறது இச்சட்டம்.

அத்துடன் வியாபாரம் மற்றும் வணிகத்திற்கான சுதந்திரம் பற்றியும், அரசின் பொறுப்பு நிலை பற்றியும் விரிவாகக் கூறுகிறது. ஒரு நாட்டில் நெருக்கடி ஏற்பட பல காரணங்கள் உள்ளன. அவற்றை விரிவாகக் கூறி, அதன் விளைவுகளையும் (Emergency and its impacts) தெளிவுபடுத்துகிறது அரசியலமைப்புச் சட்டம். அதுபோல் காலம் மற்றும் தேவைக்கு தகுந்தவாறு சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டியது மக்களாட்சியின் அடிப்படை அம்சமாகும். அதற்கு அரசியலமைப்புச் சட்டமும் விதிவிலக்கல்ல. அந்த வகையில் அரசியலமைப்பின் திருத்தம் (Amendment to the Constitution) பற்றி விரிவான வகைமுறைகளை வகுத்துள்ளது இந்திய அரசியலமைப்புச் சட்டம்.

இவற்றையெல்லாம் நாம் 'அரசியலமைப்புச் சட்டம் **II**' என்ற இந்நன் நூலில் 'அரசியலமைப்பு அங்கங்களின் கட்டமைப்பு மற்றும் மத்திய–மாநில உறவுகள்' என்ற தலைப்பில் படிப்படியாக எளிய தமிழில், வழக்கு நெறிகளுடன் காண உள்ளோம்.

இதற்கு இணையான 'அரசியலமைப்புச் சட்டம் **I**' என்ற நூலில் இந்திய அரசியலமைப்பின் பின்னணி, தத்துவம், அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள் (Background, Philosophy, Fundamental Rights and Fundamental Duties) ஆகியன விளக்கப்பட்டுள்ளது.

'அரசியலமைப்புச் சட்டம் **II**' என்ற இந்நூலில் நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய விளக்கங்களை முக்கிய வழக்குகளுடன் தேவைக்குத் தகுந்தவாறு பொருத்தமாகச் சேர்த்துள்ளேன். இந்நூலின் இறுதியில் மொத்தம் 32 பிரச்சனைகளுக்கு தீர்வளித்துள்ளேன்.

வெற்றிகரமான நான்காம் பதிப்பாக வெளியாகியுள்ள இந்நூல் சட்ட மாணவர்களுக்கு மட்டுமல்லாது, இந்திய ஆட்சிப்பணியாளர் தேர்வு உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுதுவோருக்கும் பயன் தரும்.

வாழ்த்துகள் !

என்றும் அன்புடன்,

பி.ஆர்.ஜெ.

பொருளடக்கம்

பகுதி அ

அரசியலமைப்பு அங்கங்களின் கட்டமைப்பு

அத்தியாயம் 1

நிர்வாகத்துறை அதிகாரத்தின் அமைப்பு
[Organisation of Executive Power]

(அ) மத்திய நிர்வாகத்துறை
[The Union Executive]

(i) குடியரசுத் தலைவரும் குடியரசுத் துணைத் தலைவரும் 3
[The President and Vice President]

(ii) மத்திய அமைச்சரவை 27
[Council of Ministers]

(iii) இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் 31
[The Attorney - General of India]

(ஆ) மாநில நிர்வாகத்துறை
[The State Executive]

(i) ஆளுநர் 32
[Governor]

(ii) மாநில அமைச்சரவை 46
[Council of Ministers of State]

(iii) மாநில அரசு முதன்மை வழக்குரைஞர் 49
[The Advocate - General for the State]

அத்தியாயம் 2

சட்டத்துறை அதிகாரத்தின் அமைப்பு
[Organisation of Legislative Power]

(அ) மத்திய சட்டத்துறை
[The Union Legislative]

(i) பாராளுமன்றம் [Parliament] 50

(ii) பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் [Privileges and Immunities of Parliament and its Members] 63

(ஆ) மாநில சட்டத்துறை
[The State Legislative]

(i) மாநில சட்டமன்றம் [State Legislature] 64

(ii) சட்டமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் [Privileges and Immunities of Legislature and its Members] 66

அத்தியாயம் 3

நீதித்துறை அதிகாரத்தின் அமைப்பு
[Organisation of Judicial Power]

(அ) மத்திய நீதித்துறை
[The Union Judiciary]

- இந்திய உச்ச நீதிமன்றம் [Supreme Court of India] 83

(ஆ) மாநில நீதித்துறை
[The State Judiciary]

- உயர் நீதிமன்றம் [High Court] 95

(இ) தீர்ப்பாயங்கள்
[Tribunals]

- தீர்ப்பாயங்கள் [Tribunals] 104

அத்தியாயம் 4

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகள்
[Organisation, Powers and Functions of the CAG, ECI and the Public Service Commission]

(அ) இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர்
[The Comptroller and Auditor General of India]

- இந்தியக்கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர் 106
[The Comproller and Auditor General of India]

(ஆ) இந்திய தேர்தல் ஆணையம்
[Election Commission of India]

- இந்திய தேர்தல் ஆணையம் 108
[Election Commission of India]

(இ) அரசுப் பணியாளர் தேர்வாணையம்
[Public Service Commission]

- அரசுப் பணியாளர்களுக்குண்டான அரசியலமைப்பு பாதுகாப்புகள் 114
[Constitutional Safeguards for Civil Servants]

- அரசுப் பணியாளர் தேர்வாணையம் 120
[Public Service Commission]

அத்தியாயம் 5

அரசியலமைப்பு மறுஆய்வு
[Constitutional Review]

– அரசியலமைப்பு மறுஆய்வு 124
[Constitutional Review]

பகுதி அ

மத்திய - மாநில உறவுகள்

அத்தியாயம் 1

கூட்டாட்சித்துவத்தின் கருத்துப்படிவம்
[Concept of Federalism]

(i) கூட்டாட்சி அரசிற்கான அவசியம் 131
[Necessity and Justification for Federal Government]

(ii) கூட்டாட்சி முறை அரசின் முக்கிய அம்சங்கள் 134
[Essential features of Federal Form of Government]

(iii) கூட்டுறவு கூட்டாட்சித்துவம் 139
[Co-operative Federalism]

அத்தியாயம் 2

இந்திய அரசியலமைப்பின் கீழ் சட்டமியற்றுதல் குறித்த உறவுகள்
[Legislative Relations under Indian Constitution]

- மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான சட்டமியற்றுதல் குறித்த உறவுகள் 142
[Legislative Relations between the Union and the States]

அத்தியாயம் 3

மத்திய மற்றும் மாநிலத்திற்கிடையிலான நிர்வாக உறவுகள்
[Administrative Relations between the Union and States]

- நிர்வாக அதிகாரங்களின் பகிர்ந்தளிப்பு 156
[Distribution of Administrative Powers]

அத்தியாயம் 4

மத்திய மற்றும் மாநிலத்திற்கிடையிலான நிதி சார்ந்த உறவுகள்

[Fiscal Relations between the Centre and State]

(i) வரிகள் மற்றும் மானியத் தொகைகளின் பகிர்வு 164
[Sharing of Taxes and Grants-in-aid]

(ii) மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரத்தின் மீது கட்டுப்பாடு 170
[Restriction on States' Taxing Power]

(iii) அரசின் அங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தனித்தன்மை விதிவிலக்கு கோட்பாடு 173
[Doctrine of Immunity of Instrumentality]

(iv) நிதிக்குழுவின் பங்கு 176
[Role of Finance Commission]

(v) கடன் வாங்கும் அதிகாரமும் அரசியலமைப்பு வரம்புகளும் 178
[Borrowing Powers and Constitutional Limitation]

அத்தியாயம் 5

வியாபாரம் மற்றும் வணிகத்திற்கான சுதந்திரம்
[Freedom of Trade and Commerce]

வியாபாரம், வணிகம் மற்றும் வணிகப் போக்குவரத்து சுதந்திரம்
[Freedom of Trade, Commerce and Intercourse]

- கூட்டாட்சி கருத்தின் சுட்டுகைகள் மற்றும் கட்டுப்பாடுகள் 180
[Implications of the Concept of Federation and Restrictions]

அத்தியாயம் 6

கூட்டாட்சித்துவம் மற்றும் நெருக்கடி நிலைகள்
[Federalism and Emergency Situations]

நெருக்கடி கால சட்ட வகைமுறைகள்
[Emergency Provisions]

- நெருக்கடி நிலையின் வகைகள் மற்றும் அவை கூட்டாட்சி கட்டமைப்பின் மீது ஏற்படுத்தும் விளைவுகள் 189
[Types of Emergency and their impact on the Federal Structure]

அத்தியாயம் 7

அரசியலமைப்பின் திருத்தம்
[Amendment to the Constitution]

- திருத்தத்திற்கான அதிகாரம் மற்றும் நடைமுறை 206
[Power and Procedure for Amendment]

அத்தியாயம் 8

அரசின் பொறுப்புநிலை
[The State Liability]

- தீங்கு மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளில் அரசு அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு நிலை 221
[Liability of State or Government in Torts and Contracts]

அத்தியாயம் 9

சில வகுப்பினர்கள் தொடர்பாக சிறப்பான சட்ட வகைமுறைகள்
[Special Provisions to Certain Classes]

- அட்டவணை சாதியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசியலமைப்பு வழங்கும் பாதுகாப்புகள் 229
[Safeguards to Scheduled Caste and Backward Classes]

அத்தியாயம் 10

ஆட்சி மொழி [Official Language]

- மத்திய அரசு மற்றும் மாநில அரசின் ஆட்சிமொழி 232
[Official Language of the Centre and State]

அத்தியாயம் 11

தற்காலிக, இடைமாறுகால மற்றும் சிறப்பு வகைமுறைகள்
[Temporary, Transitional and Special Provisions]

- சில மாநிலங்களுக்கான சட்ட வகைமுறைகள் 235
[Provisions for certain States]

அத்தியாயம் 12

பலவகைப்பட்டவை
[Miscellaneous]

- பலவகைப்பட்ட வகைமுறைகள் [Miscellaneous Provisions] 241

அத்தியாயம் 13

அட்டவணைகள்
[Schedules]

- அட்டவணைகள் [Schedules] 243

பகுதி இ

பிரச்சனைகளும் தீர்வுகளும்

[Problems and Solutions]

இந்நூலின் 251 முதல் 293 வரையிலான பக்கங்களில் காண்க

பகுதி ஈ

வினாத்தாள்கள்

[Question Papers]

மூன்றாண்டு சட்டக் கல்வி

புதிய வழிவிலான வினாத்தாள்கள்

- November 2018 297
- May 2019 299
- November 2019 301
- January 2021 303
- February 2022 305
- June 2022 308

ஐந்தாண்டு சட்டக்கல்வி

- May 2014 310
- November 2014 312
- May 2015 315
- November 2015 318
- May 2016 321
- November 2016 323
- May 2017 327
- November 2017 329
- May 2018 332
- November 2018 335
- May 2019 337
- November 2019 340

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

- January 2021 343
- February 2022 345
- June 2022 347

குறுகிய விடை தருதல்

1. இந்தியக் குடியரசுத் தலைவரை நீக்குதல் 14
[Removal of President of India]
2. குடியரசுத் தலைவரின் பதவி நீக்க முறை 14
[Impeachment of the President]
3. குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடத்தும் காலம் 14
[Time of holding election to the office of the President]
4. குடியரசுத் தலைவரின் அவசர காலச் சட்டமியற்றும் அதிகாரம் 16
[Ordinance making power of the President]
5. குடியரசுத் தலைவரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம் 16
[Pardoning power of the President]
6. குடியரசுத் தலைவரின் சிறப்புரிமை 17
[Privilege of the President]
7. குடியரசுத் துணைத் தலைவர் 25
[Vice - President of India]

8.	இந்தியப் பிரதமரை நியமித்தல் [Appointment of Prime Minister of India]	27
9.	அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு [Collective Responsibility of the Ministers]	29
10.	இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் [Attorney - General of India]	31
11.	மாநில அரசு முதன்மை வழக்குரைஞர் [The Advocate-General for the State]	49
12.	நாடாளுமன்ற இரு அவைகளின் முரண்பாட்டினால் செயலற்றுப் போதல் [Deadlock of both Houses of Parliament]	54
13.	பண மசோதா [Money Bill]	54
14.	நிதிநிலை மசோதாக்கள் [Finance Bills]	58
15.	வருடாந்திர நிதி அறிக்கை [Annual Financial Statement]	59
16.	மாநிலங்களவை தலைவர் [Chairperson of Rajya Sabha]	61
17.	மக்களவை சபாநாயகர் [Speaker of Lok Sabha]	62
18.	சட்டமன்ற சபாநாயகர் [Speaker of legislative assembly]	78
19.	மாநிலத்தின் மேல்சபையை தோற்றுவித்தல் [Creation of legislative council in a State]	80
20.	உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை வழங்கும் அதிகாரம் [Advisory Jurisdiction of the Supreme Court]	92
21.	இந்திய தலைமை நீதிபதியை நியமித்தல் [Appointment of chief justice of India]	93
22.	உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நீக்குதல் [Removal of Supreme Court Judges]	94
23.	உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரவரம்பு [Writ Jurisdiction of High Court]	103
24.	தீர்ப்பாயங்கள் [Tribunals]	104
25.	செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் [Administrative Tribunals]	104
26.	இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர் [The Comptroller and Auditor General of India]	106

27.	தேர்தல் ஆணையம் [Election Commission]	108
28.	பல உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணையத்தில் தலைமை தேர்தல் ஆணையரின் நிலை [Status of Chief Election Commissioner in a multi-member Election Commission]	109
29.	தலைமை தேர்தல் ஆணையரின் முதன்மை [Primacy of the Chief Election Commissioner]	109
30.	தலைமை தேர்தல் கமிஷனரை நீக்குதல் [Removal of Chief Election Commissioner]	109
31.	டி.என்.சேஷன் எதிர் இந்திய யூனியன் [T.N.Seshan v. Union of India]	109
32.	அரசுப் பணியாளர்களுக்கு அரசமைப்பு சட்ட பாதுகாப்பு [Constitutional Protection to Public Servants]	115
33.	விருப்பக் கோட்பாடு [Doctrine of Pleasure]	116
34.	அனைத்திந்திய பணிகள் [All India Services]	119
35.	அரசுப் பணியாளர் தேர்வாணையம் [Public Service Commission]	120
36.	அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள் [Functions of the Public Service Commission]	120
37.	மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் [Union Public Service Commission]	120
38.	அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினரை நீக்குதல் [Removal of a member of Public Service Commission]	122
39.	அரசியலமைப்பு மறு ஆய்வு [Constitutional Review]	124
40.	கூட்டாட்சித்துவம் [Federalism]	131
41.	கூட்டுறவுக் கூட்டாட்சித்துவம் [Co-operative Federalism]	139

42. எல்லைத் தொடர்புக் கோட்பாடு 149
[Doctrine of Territorial Nexes]

43. பெரும்பாமை விதி 151
[Doctrine of Pith and Substance]

44. சட்டத்தின் பொய்மைத் தோற்ற விதி 152
[Doctrine of Colourable Legislation]

45. ஆக்கிரமித்துக் கொள்ளல் விதி 154
[Doctrine of Occupied Field]

46. எஞ்சியுள்ள அதிகாரங்கள் 154
[The Residuary Powers]

47. முரண்பாட்டுக் கோட்பாடு 154
[Doctrine of Repugnancy]

48. முழு நம்பிக்கை மற்றும் மதிப்பு குறித்த வகைமுறைகள் 163
[Full faith and Credit clause]

49. காவிரி நதி நீர் பிரச்சனை 163
[In Re Cauvery Water Dispute]

50. மாநிலங்களுக்கிடையேயான மன்றம் 163
[Inter-State Council]

51. நிதி சார்ந்த உறவுகள் 164
[Financial relations]

52. அரசின் துணை அதிகார அமைப்புகளின்
சட்ட விலக்களிப்பு கோட்பாடு 174
[Doctrine of immunity of instrumentality]

53. இந்தியாவின் திரட்டு நிதி 175
[The Consolidated fund of India]

54. இந்தியாவின் நிகழ்வுசார் நிதி 175
[The Contingency Fund of India]

55. நிதிக்குழு 176
[Finance Commission]

56. மத்திய அரசின் கடன் வாங்கும் அதிகாரம் 178
[Borrowing Powers]

57.	தொழில் மற்றும் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் நாடாளுமன்ற அதிகாரம் [Parliament's power to regulate trade and commerce]	178
58.	அடிப்படை உரிமைகள் மீது நெருக்கடி நிலை பிரகடனத்தின் விளைவுகள் [Effects of proclamation of Emergency on fundamental rights]	203
59.	நாட்டு நெருக்கடி நிலை [National Emergency]	204
60.	மாநில நெருக்கடி நிலை [State Emergency]	204
61.	நிதி நெருக்கடி [Financial Emergency]	204
62.	எஸ்.ஆர்.பொம்மை எதிர் இந்திய அரசு [S.R.Bommai v. Union of India]	205
63.	வருநிகழ்வு ஒதுக்கித்தள்ளல் கோட்பாடு [Doctrine of Prospective Overruling]	219
64.	அடிப்படை உரிமைகளை திருத்துதல் [Amendment of Fundamental Rights]	211
65.	இந்திய அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாடு [Theory of Basic Structure of the Indian Constitution]	211
66.	அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாடு [Theory of 'Basic Structure']	211
67.	ஆட்சி மொழி [Official Language]	232
68.	அரசியலமைப்பின் கீழ் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ள தனி அந்தஸ்து [Special Status conferred on the State of Jammu and Kashmir under the Constitution]	236
69.	அரசமைப்பு சட்டத்தின் ஒன்பாதாவது அட்டவணை [Nineth Schedule of the Constitution of India]	243
70.	அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை [Tenth Schedule of the Constitution]	244

சுட்டிக்காட்டப்பட்ட வழக்குகளின் பட்டியல்

'A'

Ansumali v. State of W.B. 69, 260
Atiabari Tea Company v. State of Assam 184, 288
Automobile Transport Ltd. v. State of Rajasthan 185, 287
Avinder Singh v. State of Punjab 267

'B'

Baxi Amrick Singh v. Union of India 227
Bhikraj Jaipura v. Government of India 223, 273
Bihar ECF Co-op. Society v. Sipahi Singh 222, 223, 272
Bradlaugh v. Gossaf 70

'C'

Chambak Lal v. Union of India 119
Collector v. Day 174
Contonment Board v. W.I. Theatres Ltd. 166, 267

'D'

Dig Vijay v. Union of India 112

'G'

G.K. Krishnan v. State of Tamil Nadu 185
Godse v. State of Maharashtra 40, 253
Golak Nath v. State of Punjab 214, 282

'H'

H.L.Mehra v. State of Maharashtra 165, 267
Hukum Singh v. Union of India 43

'I'

In Re Kerala Educational Bill 90
In Re Keshav Singh (or) In Re Art.143 73, 75, 257, 258
In re Presidential Election Case 15
In re Presidential Reference

(Appointment and Transfer of Judges Case III) 97, 101
In the Matter of Cauvery Water Disputes Tribunal (or)
In re Cauvery Water Dispute 160
Inderjeet v. Election Commissioner 112
Indian Motor Cycle Co. v. U.S. 174
Indira Nehru Gandhi v. Raj Narain 217, 283

'J'

Jaichand v. State 193
Jatish Chandra v. Hari Sadan 68, 256
Jumman Khan v. State of U.P. 40, 253, 254

'K'

K.Anandan Nambiar v. Chief Secretary, Government of Madras 260
K.C.G. Narayan Dev v. State of Orissa 153
K.M.Nanavathi v. State of Bombay 41
K.T. Moopil Nair v. State of Kerala 153
K.Venkatachalam v. A.Swamickan 113
Karamshi v. State of Bombay 223, 272
Karhinath G.Salim v. The Speaker 247, 292
Kasturi Lal Ralia Ram Jain v. State of U.P. 226, 291
Kehar Singh v. Union of India 40, 43, 253
Keshavanada Bharati v. State of Kerala 216, 282
Kihoto Hollohan v. Zachitu 247, 292
Kuljeet Singh v. Lt. Governor of Delhi 39, 252

'M'

M.Karunanidhi v. Union of India 148
M.S.M.Sharma v. Krishna Sinha 70, 73
M/s. B.R.Enterprises v. State of U.P. 186, 289
Manuram v. Union of India 39, 252
Mechulloch v. Maryland 174
Melbering v. Gerhardt 174
Minerva Mills Ltd. v. Union of India 199, 219
Mohd. Yakub v. State of J&K 290
Mohinder Singh v. Chief Election Commission of India 112

'P'

P & O Steam Navigation Company v. Secretary of State 225
P.V.Narasimha Rao v. State 68
Ponnu Swami v. Returning Officer, Namakkal 281
Prakash Singh Badal v. Union of India 247, 292
Profalla Kumar Mukerjee v. Bank of Khulna 151
Purushottam Lal Dhingra v. Union of India 118

'R'

R.D.Joshi v. Ajit Mills 153
R.M.D.C. v. Union of India 183
Rooplal v. Union of India 227

'S'

S.C.Advocate on Record Association v. Union of India (Judges Transfer Case II) 94, 268
S.C.Advocate-on-Record Association v. Union of India (Judges Transfer Case II) 97
S.C.Advocate-on-Record Association v. Union of India 100, 101
S.P.Gupta v. Union of India (Judges Transfer Case I) 97, 98, 268, 269
S.R.Bommai v. Union of India 195, 196, 201
Sajjan Singh v. State of Rajasthan 214
Satyavir Singh v. Union of India 117
Shankari Prasad v. Union of India 213
Sher Singh v. State of Punjab 42
Shyam Lal v. State of Uttar Pradesh 118, 277
State of Bihar v. Harihar Prasad Debuka 186, 289
State of Bihar v. Kameshwar Singh 153
State of Bombay v. F.N.Balsara 152
State of Bombay v. R.M.D.C 150, 183
State of Rajasthan v. Union of India 196
State of Rajasthan v. Vidyawathi 226
Subash Sharma v. Union of India 99
Sukh Bansh Singh v. State of Punjab 276
Sunil Kumar v. Government of West Bengal 47

'T'

T.N.Seshan v. Union of India 110

T.R.Rangarajan v. Govt. of Tamil Nadu 279
Tata Iron and Steel Company v. State of Bihar 151

'U'

Union of India v. Rallia Ram 224, 273, 274, 275
Union of India v. Sankalchand Sheth 97, 268

'W'

Wallace v. Income Tax Commissioner, Bombay 150

-o0o-

அர்ப்பணம்

எனது தந்தை அமரர்

திருமிகு. பி.ஆர்.ரங்காச்சாரி, பி.எஸ்.சி., பி.எல்., டி.பி.பி.ஏ.,

வழக்குரைஞர் அவர்களின் நீங்கா நினைவிற்கு.....

- பி.ஆர்.ஜெ.

பாடத்திட்டம் [Syllabus]

CONSTITUTIONAL LAW II

Unit - I Organization of Executive Power - The President - Governors - Powers and Functions - Immunities - Pardoning Power - Ordinance Making Power - Judicial Decisions.

Unit - II Organization of Legislative Power - Parliament and the State Legislatures - Office of the Speaker - Chairperson of Rajya Sabha and Legislative Councils - Legislative Privileges - Judicial Interpretations - Qualifications and Disqualifications - X th Schedule.

Unit - III Organization of Judicial Power - Supreme Court - High Courts - Appointment, Transfer and Removal - Independence of Judiciary - Tribunals.

Unit - IV Organization, Powers and Functions of the CAG, ECI and the Public Service Commissions - Constitutional Safeguards for Civil Servants.

Unit -V Constitutional Review - Need and extent of Review - Constitutional Review Committee's Report

Unit - VI Concept of Federalism - Necessity and Justification for Federal Governments - Essential Features of Federal Form of Government.

Unit - VII Legislative Relations under Indian Constitution - Doctrine of Territorial Nexus - Doctrine of Pith and Substance - Colourable Legislation - Implied and Residuary Powers - Central Control over State Legislation - Areas of Conflict.

Unit - VIII Administrative Relations between Union and State- "Full Faith and Credit Clause" - Central and Inter-States Conflict Management.

Unit - IX Fiscal Relations between the Centre and State

Sharing of Taxes and Grants in Aid - Restrictions on the Power of State Legislature as Fiscal Powers - Doctrine of Immunity of Instrumentality - Role of Finance Commission - Borrowing Powers - Constitutional Limitations.

Unit - X Freedom of Trade and Commerce -Exceptions - Implications of the Concept of Federation.

Unit - XI Federalism and Emergency Situations - Types of Emergency and their Impact on the Federal Structure.

Unit -XII Amendment of the Constitution - Power and Procedure for Amendment

Statutory Materials with Amendments

1. Constitution of India,1950.

Books for reference:

1.	Seervai H.M.	-	Constitutional Law in India
2.	D.D.Basu	-	Shorter Constitution of India
3.	M.P.Jain	-	Indian Constitution Law
4.	Dr. Anirudh Prasad	-	Centre - State relations in India
5.	S.N.Jain, Subash C.Kashyap and N.Srinivasan	-	The Union and the States
6.	Dr. K.P.Krishna Shetty	-	The law of Union - State relations and Indian Federalism
7.	Kashyap S.C.	-	Our Parliament
8.	A.G.Noorani	-	The Presidential System : The Indian Debate.
9.	Venkataraman R.	-	My Presidential years
10.	Verinder Grover	-	Federal System, Centre - State relations and state autonomy
11.	Kashyap S.C.	-	Basic Constitutional Values
12.	Tope T.K.	-	Constitution of India

-o0o-

பகுதி அ

(Part A)

அரசியலமைப்பு அங்கங்களின் கட்டமைப்பு

(Institutional Structure)

அத்தியாயம் 1

நிர்வாகத்துறை அதிகாரத்தின் அமைப்பு
(Organisation of Executive Power)

(அ) மத்திய நிர்வாகத்துறை
(ஷரத்துகள் 52 முதல் 78, 123, 352, 356 மற்றும் 360)
The Union Executive
(Articles 52 to 78, 123, 352, 356 & 360)

(i) குடியரசுத் தலைவரும் குடியரசு துணைத் தலைவரும்
(The President and Vice President)

உள்ளே நுழைவதற்கு முன் ஒரு சிறு விளக்கம்....

இந்தியாவில் பாராளுமன்ற முறையிலான அரசாங்கம் (Parliamentary form of government) நடைபெற வேண்டும் என்று நமது இந்திய அரசியலமைப்பு கூறுகிறது. இதே அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அதிபர் முறையிலான அரசாங்கம் (Presidential form of government) நடைபெறுகிறது. பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் முக்கியத்துவம் யாதெனில், நாட்டின் தலைவரே அரசியலமைப்பு ரீதியான தலைவர் அவர். எனினும் உள்ளபடியான நிர்வாக அதிகாரங்கள் அமைச்சரவையிடம் அடங்கியுள்ளது. அமைச்சரவையானது மக்களவைக்கு பொறுப்புடையதாகும். அரசியலமைப்பின் படி நிர்வாக அதிகாரம் குடியரசுத் தலைவரிடமே இருந்தாலும்

அவர் தனது அதிகாரத்தை அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் செயல்படுத்துகிறார்.

இதன் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இந்தியாவிற்கு குடியரசுத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டுமென **ஷரத்து 52** விதிக்கிறது. இவர், நாட்டின் தலைவராக, நிர்வாக அதிகாரங்களைக் கொண்டு விளங்குகிறார்.

குடியரசுத் தலைவரின் தகுதிகளாக (Qualification) பின்வருவனவற்றை ஷரத்து 58 உரைக்கிறது. **ஷரத்து 58 (1)–ன்படி,** குடியரசுத் தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர், (அ) ஒரு இந்தியக் குடிமகனாகவும், (ஆ) 35 வயது நிரம்பியவராகவும், (இ) பாராளு மன்றத்தின் மக்களவைக்கு போட்டியிடத் தகுதி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

மேலும் **ஷரத்து 58 (2)–ன்படி,** இந்திய அரசாங்கத்திலோ அல்லது ஏதேனுமொரு மாநில அரசாங்கத்திலோ அல்லது மேற்படி அரசாங்கங்களின் கீழ் இயங்கும் ஏதாவது ஒரு வட்டார அல்லது பிற அதிகாரஅமைப்பிலோ, ஆதாய அடிப்படையில் அமைந்த எந்த பதவியையும் வகிப்பவராக இருக்கக் கூடாது.

அதுபோல், இந்தியாவிற்கு குடியரசுத் துணைத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டுமென **ஷரத்து 63** விதிக்கிறது. குடியரசுத் தலைவருக்குரிய மேற்கண்ட அதே தகுதிகளையே, குடியரசுத் துணைத் தலைவரும் பெற்றிருக்க வேண்டும்; ஒரே ஒரு மாறுபாட்டைத் தவிர. அது, குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் மக்களவைக்கு (House of the People) போட்டியிடத் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்; ஆனால் குடியரசுத் துணைத் தலைவரோ, **ஷரத்து 66 (3) (c)-ன்படி,** மாநிலங்களவைக்கு (Council of States) போட்டியிடத் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

குடியரசுத் தலைவரின் ஊதியம், முன்பு மாதமொன்றுக்கு ரூ.50,000/-மாக இருந்தது. அது தற்போது ரூ. 1,50,000/-மாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதே சமயத்தில் குடியரசுத் துணைத் தலைவரின் ஊதியம் முன்பு மாதமொன்றுக்கு ரூ. 40,000/-மாக இருந்தது. அது தற்போது ரூ.1,25,000/-மாக உயர்த்தப்பட்டுள்ளது. இனி அவர்களது பிற நிலைகளைக் காண்போமா?

மத்திய அரசின் கட்டமைப்பு

நிர்வாகத்துறை (Executive)



1.What is executive power? On whom it is vested? Discuss the scope and extent of the executive power of the Union and the States under the Constitution of India. (அரசின் நிர்வாக அதிகாரம் என்றால் என்ன? அவை யாரிடம் அளிக்கப்பட்டுள்ளது? இந்திய அரசமைப்பின்படி யூனியன் மற்றும் மாநிலங்கள் அரசின் நிர்வாக அதிகாரத்தின் அளாவுகையையும் எல்லையையும் ஆராய்க.)

நிர்வாக அதிகாரம் - விளக்கம்:

இந்திய அரசியலமைப்பை சட்டமியற்றும் அதிகாரம், நிர்வாக அதிகாரம் மற்றும் நீதி நிறுத்தல் அதிகாரம் என மூவகை அதிகாரங்கள் வழி நடத்துகின்றன. சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ள சட்டத்துறை அதாவது பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம், நாட்டின் நல வாழ்விற்கு உற்ற சட்டங்களை இயற்றுகின்றன. அச்சட்டங்களை நிறைவேற்றி, மக்களிடையே செயலாக்கி அரசாங்கத்தை வழிநடத்த ஒரு அமைப்பு வேண்டுமல்லவா? அந்த அமைப்பே 'நிர்வாகத் துறை' **(Executive)** ஆகும். இது இவ்வாறாக நாட்டின் அரசாங்கத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தைக் கொண்டு விளங்குகிறது.

இந்த நிர்வாக அதிகாரம் யாரிடம் உள்ளது?

இந்திய ஒன்றியத்தைப் (மத்திய அரசு) பொருத்தவரை குடியரசுத் தலைவரிடமும் (The President), மாநிலங்களைப் பொருத்தவரை ஆளுநரிடமும் (The Governor) நிர்வாக அதிகாரம் குடி கொண்டுள்ளது.

இந்திய ஒன்றியத்தின் (மத்திய அரசின்) நிர்வாக அதிகாரத்தின் அளாவுகை மற்றும் எல்லை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் *52வது ஷரத்து*, இந்தியாவிற்கு ஒரு குடியரசுத் தலைவர் இருத்தல் வேண்டும் என்று கூறுகிறது. இவர் இந்திய நாட்டின் தலைவராக வீற்றிருக்கிறார். இவரிடம் இந்திய அரசின் நிர்வாக அதிகாரம் (executive power of the Union) வழங்கப்பட்டுள்ளது என்றும், இவர் இவ்வதிகாரத்தை இந்திய அரசியலமைப்பிற்குட்பட்டு நேரடியாகவோ, தனது கீழுள்ள அலுவலர்கள் மூலமாகவோ செயல்படுத்தலாம், என்றும் *ஷரத்து 53 (1)* கூறுகிறது.

குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்:

[வினா எண். (6)-ல் காண்க.]

மாநிலங்களின் நிர்வாக அதிகாரத்தின் அளாவுகை மற்றும் எல்லை:

[விரிவாக பக்கம் எண். 32-ல் வினா எண். (1)-ல் காண்க.]

2. Office of Profit - Write short notes. (ஆதாயப் பதவி - குறுகிய விடை தருக.)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் பதவி வகிக்க பெற்றிருக்க வேண்டிய தகுதிகளைப் பற்றிக் கூறுகையில், 'ஆதாயப் பதவி வகிக்கக்கூடாது' என்று ஒரு தகுதியையும் குறிப்பிடுகிறது. அதாவது குடியரசுத் தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர், இந்திய அரசாங்கத்தின் கீழோ, அல்லது ஒரு மாநில அரசாங்கத்தின் கீழோ, அல்லது மேற்சொன்ன அரசாங்கங்களில் ஏதேனும் ஒன்றின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கின்ற வட்டார அல்லது பிற அதிகாரஅமைப்பின் (Local or other Authorities) கீழோ, ஆதாயப் பதவி எதனையும் ஏற்றிருக்கக் கூடாது. அப்படி ஏற்றிருந்தால், அவர் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு போட்டியிட தகுதியற்றவர் ஆகிவிடுவார். ஒருவேளை அவர் அப்படிப்பட்ட பதவி ஏற்றிருந்தால், அதனை தேர்தலுக்கு முன்னர் இராஜினாமா செய்துவிட வேண்டும். இது ஆளுநருக்கும் பொருந்தும். ஆனால், பின்வரும் பதவியில் இருப்பவர்கள் ஆதாயப் பதவி வகிக்கிறார்கள் என்று கருத முடியாது. அவர்கள், 1. குடியரசுத் தலைவர்; 2. துணைக் குடியரசுத் தலைவர்; 3. மாநில ஆளுநர்; 4. மாநில அல்லது மத்திய அமைச்சர்.

3. "The Position of the President of India is similar to that of the Queen of England" Explain this statement. (இந்திய ஜனாதிபதியின் நிலையானது இங்கிலாந்து அரசியின் நிலை போன்றது. இக் கூற்றினை விளக்குக.)

முன்னுரை:

இங்கிலாந்தில் பாராளுமன்ற முறை அரசாங்கமே செயல்பட்டு வருகிறது. இந்த முறையை அப்படியே அடியொற்றி இந்திய அரசியலமைப்புச் சட்டமும் செயல்படுகிறது. அதாவது இந்தியாவிலும் பாராளுமன்ற முறை ஆட்சியே அமலில் உள்ளது

எனலாம். அந்த வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம், எந்த விதத்தில் இங்கிலாந்தின் பாராளுமன்ற ஆட்சி முறையை பின்பற்றியுள்ளது அல்லது இந்திய குடியரசுத் தலைவரின் நிலையானது எந்த விதத்தில் இங்கிலாந்து அரசியின் நிலையுடன் ஒத்துள்ளது என்பதை பின்வருமாறு காண்போம்.

எவ்வாறு ஒத்துள்ளது?

இங்கிலாந்து பாராளுமன்றம் அரசி (The Queen), மக்கள் அவை (House of Commons), உயர் குடியினர் அவை (House of Lords) என மூன்று அங்கங்களைக் கொண்டதாகும். இங்கிலாந்து பாராளுமன்றத்தின் கீழவையாக மக்களவையும், மேலவையாக உயர் குடியினர் அவையும் உள்ளது. இங்கிலாந்து நாட்டு மக்களின் பிரதிநிதியாக கீழவை மிகச்சிறப்புடன் திகழ்கிறது. அதுபோலவே, இந்தியப் பாராளுமன்றம் குடியரசுத் தலைவரையும் (President), மக்களவை (Lok Sabha - Lower House), மாநிலங்களவை (Rajya Sabha - Upper House) என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதாகும். மக்களவை என்பது பாராளுமன்றத்தின் கீழ் பிரிவாகவும். மாநிலங்களவை என்பது மேல் பிரிவாகவும் உள்ளன. நாட்டின் சார்பாக மக்களவையும். மாநிலங்களின் சார்பாக மாநிலங்கள வையும் செயல்படுகின்றன.

பிரிட்டன் அரசியலமைப்புப்படி. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சித்தலைவரை பிரதம மந்திரியாக அரசி நியமிக்கிறார். அவர் தனது சக அமைச்சர்களை தேர்ந்தெடுத்தவுடன் அரசி அவர்களையும் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். இந்நிலை அப்படியே நமது இந்திய அரசியலமைப்பிலும் பின்பற்றப்பட்டுள்ளது. அங்கு அரசி நியமனம் செய்கிறார் என்றால், இங்கு குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

மேலும் இங்கிலாந்தில் அரசி அலங்காரத் தலைவராக பெயரளவில் உள்ளார். உண்மையான நிர்வாக அதிகாரம், பிரதம மந்திரியின் தலைமையில் அமைந்த அமைச்சரவையிடம்தான் உள்ளது. இதைப் போலவே. இந்தியாவில் குடியரசுத் தலைவர், பெயரளவில் நாட்டின் தலைவராக உள்ளார். நிர்வாக அதிகாரம், பிரதம மந்திரியிடமும், அவரது அமைச்சரவையிடமும் உள்ளது.

பாராளுமன்ற முறை ஆட்சிக்கு அடிப்படையான அம்சம். அது சட்டமியற்றுத்துறைக்கு பொறுப்புடன் விளங்குவதில்தான்

அமைந்துள்ளது. இங்கிலாந்தில் பாராளுமன்றம், மக்கள் மன்றம் எனும் மக்களவைக்கு (House of Commons) பொறுப்புடன் செயல்படுகிறது. அதே போல இந்திய பாராளுமன்றம், மக்களவை அதாவது சட்டமியற்றுத்துறைக்கு (Lok Sabha - Legislature) கட்டுப்பட்டு பொறுப்புடன் நடக்கிறது.

இங்கிலாந்தில் அரசியானவர், பிரதம மந்திரி மற்றும் அவரது அமைச்சரவையின் ஆலோசனைக்குட்பட்டு நடக்க வேண்டும். இந்தியாவிலும் இதே நிலைதான். அதாவது குடியரசுத் தலைவர் மேற்படியார்களின் ஆலோசனைக்குட்பட்டு நடக்க வேண்டும். மேலும் பிரிட்டனில் உள்ளது போல. இந்தியாவிலும் பிரதமரும் அவரது அமைச்சரவையும், மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பு வகிக்கின்றனர். அதாவது இவர்கள் சட்டத்துறைக்கு கட்டுப்பட்டவர்கள். மக்களவை உறுப்பினர்களின் உறுப்பினர்களின் நம்பிக்கை இருக்கும் வரை, இவர்கள் தொடர்ந்து அமைச்சர் பதவி வகிக்கலாம். அவ்வுறுப்பினர்கள் ஏகமனதாக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தால், சம்பந்தப்பட்டவர் அமைச்சர் பதவியிலிருந்து கீழிறங்க வேண்டியதுதான்.

முடிவுரை:

எனவே இந்திய குடியரசுத்தலைவரின் நிலையும், இங்கிலாந்து அரசியின் நிலையும் பல வகைகளில் ஒத்து அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

4. (a) How is the President of India elected?

(b) What is the procedure for the impeachment of the Presidnet of India?

(அ) இந்தியக் குடியரசுத் தலைவர் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

(ஆ) இந்தியக் குடியரசுத் தலைவர் மீது பழி சாற்றுவதற்குரிய நடைமுறைகள் யாவை?

(அல்லது)

Explain the procedure for election and impeachment of the President. (குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கும் அவரை பதவியிலிருந்து விலக்குவதற்கும் ஆன விதிமுறைகளை விளக்கிக் கூறுக.)

(அல்லது)

Discuss the procedure for the election of the President and point out how it can be challenged? (குடியரசுத் தலைவரின் தேர்தல் குறித்த வழிமுறையை விவாதித்து அதனை எவ்வாறு மறுதளிக்கலாம் என்பதைக் குறிப்பிடுக.)

(a) இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் முறை:

இந்தியக் குடியரசுத் தலைவர், மக்களால் நேரடியாக தேர்ந் தெடுக்கப்படுவதில்லை. மாறாக, அவர் ஒரு தேர்தல் குழுவின் உறுப் பினர்களால் (Electoral College) தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத் தேர்தல் குழு (அ) பாராளுமன்றத்தின் இரு அவைகளின் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும்; (ஆ) மாநில சட்டமன்றத்தின் கீழவையான சட்டப் பேரவையின் (Legislative Assembly) தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகும், என்று ஷரத்து 54 கூறுகிறது.

பாராளுமன்றத்தின் இரு அவைகளிலுமுள்ள நியமன உறுப்பினர்கள் (Nominated Members) இத்தேர்தல் குழுவில் இடம் பெறாதது குறிப்பிடத்தக்கது. இதைப்போலவே மாநிலச் சட்ட மன்றக் கீழவையில் உள்ள நியமன உறுப்பினர்களும் இக்குழுவில் இடம் பெறவில்லை. மாநிலச் சட்டமன்றத்தின் மேல்சபை (Legislative Council) உறுப்பினர்கள் முற்றிலும் இக்குழுவில் இடம் பெறாததும் குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தல் குழுவினரால் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் போது விகிதப் பிரதிநிதித்துவ முறை (Proportional Representation) பின்பற்றப்படும். உறுப்பினர்கள் அளிக்கும் ஓட்டு, ஒன்றைமாற்று ஓட்டு (Single transferable vote) ஆகும். உறுப் பினர்கள் இரகசிய முறையில் ஓட்டளிப்பர் (secret ballot). இந்திய அரசில் உள்ள மாநிலங்கள், வேறுபட்ட மக்கள் தொகையினைக் கொண்டவை. மாநில மக்கள் தொகைக்கும் மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகின்றது. அதே மாறுபாடு இந்தியாவின் மக்கள் தொகைக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் இடையேயும் உள்ளது.

இவ்வேறுபாடுகளை நீக்கி முடிந்தவரை பல்வேறு மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கும், மத்திய

பாராளுமன்ற அமைப்பின் உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கும் பிரதி நிதித்துவத்தின் அளவில் ஒரு சீர்மை (uniformity) இருப்பதற்காக இந்திய அரசியலமைப்பின் **55வது ஷரத்து** கீழ்கண்ட முறையினைக் கொடுக்கிறது. அம்முறையின்படி, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கு ஒரு மதிப்பும், பல்வேறு மாநிலச் சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கு பல்வேறு மதிப்புகளும் கொடுக்கப் படுகின்றன.

மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஓட்டுகளின் மதிப்பு பின்வரும் முறையில் கணக்கிடப்படுகிறது

$$\frac{\text{மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை}}{\text{மாநிலச் சட்டப் பேரவையின் தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை}} \times \frac{1}{1000}$$

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓட்டுக்களின் மதிப்பு பின்வரும் முறையில் கணக்கிடப்படுகிறது

$$\frac{\text{மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட மொத்த ஓட்டுகள்}}{\text{பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை}}$$

இதில் கிடைக்கும் விடையில் உள்ள அரை அல்லது அதற்கு மேலும் உள்ள எண்ணை ஒன்று ஆக்கிக் கணக்கிட வேண்டும். இம்முறையின் வாயிலாக குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்கு கொண்டு அவரைத் தேர்ந்தெடுக்கும் மாநிலச் சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கு கூடிய வரையில் ஒரே மாதிரியான பங்கு தேர்தலில் கிடைக்கிறது.

விகிதப் பிரதிநிதித்துவ முறை (Proportional representation) என்பது, ஒரே தொகுதி வாக்காளர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவரைத் தேர்ந்தெடுக்கும் போதுதான் பின்பற்ற இயலும். ஆனால், குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் குழு குடியரசுத் தலைவராக ஒருவரைத்தான் தேர்ந்தெடுக்கிறது. இத்தேர்தல் குழு ஒருவரைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தாலும் விகிதப் பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்பட வேண்டும் என அரசியலமைப்பு கூறுகிறது. மேலும் ஒற்றை மாற்று ஓட்டு (Single transferable vote) முறை பின்

பற்றப்படுவதால் தேர்தல் முழு உறுப்பினர்கள், தங்கள் வாக்குகளில் தங்கள் முன்னுரிமையை (Preference) வரிசைப்படுத்தி 1, 2, 3 எனக் குறிக்கிறார்கள். தேர்தல் ஓட்டுகள் எண்ணப்படும் போது, முதலாவது கட்டத்தில் வாக்காளர்களின் முதலாவது ஓட்டு (First vote) மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பதிவான உள்ள மொத்த ஓட்டுகளின் எண்ணிக்கையில் பெரும்பான்மை ஓட்டுகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப் படுகிறார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு ஓட்டும் அதன் மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. இவ்விதம் கணக்கிடும் பொழுது எந்த ஒரு வேட்பாளரும் பெரும்பான்மை ஓட்டுகளைப் பெறாவிட்டால், இக்கணக்கிடலில் மிகக் குறைந்த ஓட்டுகளைப் பெற்ற வேட்பாளர் கணக்கிடலிலிருந்து நீக்கப்பட்டு, அவர் பெற்றிருந்த ஓட்டுகளில் உள்ள இரண்டாவது ஓட்டின் (Second vote) அடிப்படையில் அது மற்றவர்களுக்கு கொடுக்கப் படுகின்றது. இம்முறை ஒரு வேட்பாளர் பெரும்பான்மை ஓட்டுகளைப் பெறும் வரையில் பின்பற்றப்பட்டு, வெற்றி பெற வேண்டிய நபரை முடிவு செய்கின்றனர். உதாரணமாக 1969-ல் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் திரு. வி. வி. கிரி, முதல்கட்ட ஓட்டு எண்ணலில், மொத்த ஓட்டில் பெரும்பான்மை ஓட்டினைப் பெற்றிருக்கவில்லை. இரண்டாவது ஓட்டினை கணக்கெடுத்தவுடன் தான் அவருக்கு பெரும்பான்மை ஓட்டுகள் கிடைத்தன. அதன் பிறகே அவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டார். **ஷரத்து 324 (1)ன்படி**, குடியரசுத் தலைவர் தேர்தலை நடத்தும் பொறுப்பு, தேர்தல் ஆணையத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவர், தாம் பதவி ஏற்ற தினத்தில் இருந்து 5 ஆண்டுகள் தொடர்ந்து பதவி வகிக்கலாம். ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும், குடியரசுத் தலைவர் பதவித் தேர்தலுக்கு போட்டியிடலாம்.

(b) குடியரசுத் தலைவர் மீதான பதிச்சாட்டல் (அரசியல் குற்றச்சாட்டு):

"குடியரசுத் தலைவர் மீது பதிச்சாற்றுவது (அரசியல் குற்றச்சாட்டு செய்வது)" தொடர்பான நடைமுறைகளை **ஷரத்து 61** கூறுகிறது. பொதுவாக இந்தியக் குடியரசுத் தலைவர், தாமாகவே தனது பதவியை இராஜினாமா செய்யலாம். எனினும், அவரைப் பதவியிலிருந்து விலக்கும் முறையும், சரத்தில் கூறப்பட்டுள்ளது "குடியரசுத் தலைவர் மீது அரசியல் குற்றச்சாட்டு" என்பது குடியரசுத்

தலைவர் இந்திய அரசியலமைப்பை மீறினார் என குற்றஞ்சாட்டி, அவரைப் பதவியிலிருந்து விலக்குதலாகும். அக்குற்றச்சாட்டு பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு அவையால் கொண்டுவரப்பட வேண்டும் என **ஷரத்து 61 (1)** கூறுகிறது.

அப்படிக் குற்றஞ்சாட்டும் உரிமையைப் பாராளுமன்றத்தின் எந்த ஒரு அவையும் பயன்படுத்தி, அவையின் மொத்த உறுப்பினர்களுள் நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஒரு தீர்மானத்தின் வாயிலாக, குடியரசுத் தலைவர் மீது குற்றஞ்சாட்டலாம். குற்றச்சாட்டு தீர்மானத்தின் நகல் குடியரசுத் தலைவருக்கு அது தொடங்கப் படும் 14 நாட்களுக்கு முன்பாகவே கொடுக்கப்பட வேண்டும் என **ஷரத்து 61 (2) (a)** கூறுகிறது. பிறகு அத்தீர்மானம் அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் நிறைவேற்றப்பட வேண்டும் என **ஷரத்து 61 (2) (b)** கூறுகிறது. அவ்வாறு ஒரு குற்றச்சாட்டு பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒரு அவையால் கொண்டு வரப்படும் பொழுது, மற்றொரு அவையானது அக்குற்றச் சாட்டை புலனாய்வு செய்யும். அச்சமயத்தில், அப்புலனாய்வில், குடியரசுத் தலைவர் ஆஜராகி தனது விளக்கத்தை எடுத்துக்கூற அவருக்கு உரிமை உண்டென **ஷரத்து 61 (3)** கூறுகிறது.

அப்புலனாய்வின் முடிவில் அந்த மற்றொரு அவையானது குற்றச்சாட்டு உண்மையானதுதான் என ஒரு தீர்மானத்தைச் அவையின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர் ஆதரவோடு நிறைவேற்றினால் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து குடியரசுத் தலைவர் பதவியிலி ருந்து விலக்கப்பட்டதாகக் கருதப்படும் என **ஷரத்து 61 (4)** தெரிவிக்கிறது.

குடியரசுத் தலைவரின் தேர்தலை மறுதளிக்கும் நடைமுறை (Procedure for challenging the election of President):

குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுத்த முறையில் பிரச்சனைகள் ஏதும் எழுந்தால் அதை எவ்வாறு முடிவு செய்வது என்பது குறித்து அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 71 சில நடைமுறைகளை வகுத்துள்ளது. அதாவது, குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலிலிருந்து அல்லது அது தொடர்பாக எழும் எல்லா பிரச்சனைகளையும் உச்ச

நீதிமன்றம் விசாரணை செய்து முடிவு செய்ய வேண்டும். இது குறித்து உச்ச நீதிமன்றத்தின் முடிவே இறுதியானதாகும். எனினும், குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத் துணைத் தலைவரின் தேர்தலானது உச்ச நீதிமன்றத்தால் செல்லாது என்று அறிவிக்கப் பட்டால், அவ்வாறு அறிவிக்கப்படும் தேதிக்கு முன்னதாக அவர்கள் தங்களுக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி செயல்கள் ஏதும் செய்திருந்தால், அவை மேற்படி அறிவிப்பின் காரணமாக செல்லாத தாகாது. குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத் துணைத் தலைவரின் தேர்தல் தொடர்பான விடயம் எதையும் பாராளு மன்றம், சட்டம் வாயிலாக ஒழுங்குபடுத்தலாம் என்று **ஷரத்து 71 (3)** கூறுகிறது. குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தல் குழு உறுப்பினர்களின் (electoral college) பதவி, ஏதாவது காரணத்தால் காலியாக இருந்தது என்ற அடிப்படையில் அவர்களது தேர்தலை மறுதளிக்க முடியாது என்று **ஷரத்து 71(4)** கூறுகிறது.

5. Removal of President of India - Write short notes. (இந்தியக் குடியரசுத் தலைவரை நீக்குதல் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Impeachment of the President - Write short notes. (குடியரசுத் தலைவரின் பதவி நீக்க முறை - குறுகிய விடை தருக.)

(முந்தய வினாவின் விடையில் (b) பகுதியைக் காண்க.)

6. Time of holding election to the office of the President - Write short notes. (குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் நடத்தும் காலம் - குறுகிய விடை தருக.)

ஷரத்து 56-ன்படி குடியரசுத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக் கப்படுபவர், பதவி ஏற்கும் நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பார். எனினும் ஐந்தாண்டு காலம் முடிவடைந்தாலும் அடுத்த குடியரசுத் தலைவர் பதவி ஏற்கும் வரை அவர் அந்தப் பதவியில் நீடிக்க உரிமையுண்டு [**ஷரத்து 56(1)(c)**]. அதே நேரத்தில் அவரே மீண்டும் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவும் தகுதி படைத்தவர்.

ஷரத்து 62(1)-ன்படி குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிவுறுவதன் காரணமாக எழும் காலியிடத்தை நிரப்புவதற்கான

தேர்தல் அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன் நடத்தி முடிக்கப்பட வேண்டும். ஷரத்து 62(2)-ன்படி. குடியரசுத் தலைவரின் இறப்பு, பதவித் துறப்பு அல்லது நீக்கம் அல்லது வேறுவகையிலான காரணத்தால் ஏற்படும் அவரது பதவிக் காலியிடத்திற்கான தேர்தல் இயன்ற வரைவில் விரைவாக நடத்தப்பட வேண்டும். அதுவும் பதவிடம் காலியான தேதியிலிருந்து 6 மாதங்களுக்கு மிகாத ஒரு கால அளவிற்குள் அத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் முன் சொன்னவாறு அவர் பதவியேற்ற தேதியிலிருந்து ஐந்து முழு ஆண்டுகள் காலத்திற்கு அப்பதவியை தொடர்ந்து வகிக்கலாம். குடியரசுத் தலைவர் பதவி காலியானால், அவரது இடத்தில் குடியரசுத் துணைத் தலைவர் அமர்ந்து குடியரசுத் தலைவராக செயல்படுவார். குடியரசுத் துணைத் தலைவர் மேற்சொன்ன காரணங்களில் ஏதேனுமொன்றினால் பதவியேற்க இயலவில்லையானால், இந்திய தலைமை நீதியரசர் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி குடியரசுத்தலைவரின் பணிகளை நிறைவேற்றுவார்கள்.

In re Presidential Election Case[1] என்ற வழக்கில் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிவுறுவதன் காரணமாக எழும் காலியிடத்தை நிரப்புவதற்கான தேர்தல், ஷரத்துகள் 62(1), 54 மற்றும் 55ஐ கருத்தில் கொண்டு, அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் குடியரசுத் தலைவருக்கு அடுத்து வருபவர் அப்பதவியை ஏற்கும் வரை மட்டுமே, பதவிக்காலம் முடிந்த அக்குடியரசுத் தலைவர் அப்பதவியில் தொடர்ந்திருக்க முடியும் என்றும், இத்தகு சூழலுக்குத்தான் ஷரத்து 56(1)(c) பொருந்தும் என்றும் உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது.

ஏற்கனவே சொன்னவாறு குடியரசுத் தலைவர் எத்தனை முறைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்படலாம். பாபு இராஜேந்திர பிரசாத் மட்டுமே இது வரையில் இரண்டாவது முறையாக குடியரசுத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார். இந்திய மக்களின் மாண்பிற்குரிய நாயகனாக கருதப்பட்ட மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் இரண்டாவது முறையாகவும் அப்பதவிக்கு வர வேண்டும் என்று இந்திய மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் அப்பதவிக்கு மீண்டும் வர விரும்பவில்லை.

1. AIR 1974 SC 1982

7. What are the powers and functions of the President of India? Is Indian President bound by the advice tendered by the Council of Ministers? (இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் யாவை? இந்தியக் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் அறிவுரைக்கு கட்டுப்பட்டவரா?)

(அல்லது)

Explain the constitutional position of the President of India. Is he always bound by the advice of the Council of Ministers? (இந்திய அரசியலமைப்பில் குடியரசுத் தலைவரின் தகுநிலையை விளக்குக. அவர் எப்போதும் அமைச்சர்கள் குழுவின் அறிவுரைக்கு கட்டுப் பட்டவரா?)

(அல்லது)

Critically examine the constitutional position, powers and functions of the President of India. (இந்தியக் குடியரசுத் தலைவரின் அரசியல் சட்ட நிலை, அதிகாரங்கள் மற்றும் பணிகள் பற்றி திறனாய்வு செய்க.)

(அல்லது)

Explain the various functions and powers of the President of India. (இந்தியக் குடியரசுத் தலைவரின் பல்வேறு பணிகளையும் அதிகாரங்களையும் விளக்குக.)

(அல்லது)

Discuss the powers and position of President under the Indian Constitution. (இந்திய அரசமைப்பின் கீழ் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் நிலை குறித்து விவாதிக்கவும்.)

(அல்லது)

Give an account of the legislative and judicial powers of the president of India. (இந்திய குடியரசுத் தலைவரின் சட்ட ஆக்கல் அதிகாரம் மற்றும் நீதி பரிபாலன அதிகாரங்களை தொகுத்து தருக.)

(அல்லது)

Ordinance making power of the President - Write short notes. (குடியரசுத் தலைவரின் அவசர காலச் சட்டமியற்றும் அதிகாரம்

- குறுகிய விடை தருக.)

(அல்லது)

Pardoning power of the President - Write short notes. (குடியரசுத் தலைவரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Critically examine the role and constitutional protection of the President of India. (இந்தியக் குடியரசுத் தலைவரின் நிலை மற்றும் அரசியலமைப்பு சட்ட பாதுகாப்பு பற்றி விளக்குக.)

(அல்லது)

Privilege of the President - Write short notes. (குடியரசுத் தலைவரின் சிறப்புரிமை - குறுகிய விடை தருக.)

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்:

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சுமார் 109 ஷரத்துகளின் வாயிலாகவும், மூன்று அட்டவணைகளின் வாயிலாகவும் மிகுந்த அதிகாரங்களையும், உரிமைகளையும், பொறுப்புகளையும் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. பல தலைப்புகளின் கீழ் இவ்வதிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது. முதலில் நிர்வாகத்துறை அதிகாரங்களைப் பார்க்கலாம்.

நிர்வாகத்துறை அதிகாரங்கள் (Executive Powers):

அதிக அளவிலான நிர்வாக அதிகாரங்கள், குடியரசுத் தலைவருக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம், குடியரசுத் தலைவரிடம் வழங்கப்பட்டு உள்ளது. மற்றும் அவர் அவ்வதிகாரத்தை இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்டு நேரிடையாகவோ, தனது கீழுள்ள அலுவலர்கள் மூலமாகவோ செயலுறுத்தலாம், என்று **ஷரத்து 53 (1)** கூறுகிறது. அனைத்து நிர்வாகப் பணிகளும், குடியரசுத் தலைவரின் பெயரால்தான் நிறைவேற்றப்படுகிறது என **ஷரத்து 77** கூறுகிறது. பிரதம மந்திரியையும் மற்றும் அவருடைய ஆலோசனையின் பேரில் இதர அமைச்சர்களையும் நியமிக்க குடியரசுத் தலைவர் அதிகாரம் படைத்துள்ளார் என **ஷரத்து 75 (1)** குறிப்பிடுகிறது.

மேலும், உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், மாநிலங்

களின் ஆளுநர்கள், இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர், கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறை தலைவர், பொதுப்பணி தேர்வாணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் களுக்குண்டான தனி அலுவலர்கள், தாழ்த்தப்பட்ட பகுதியின் விவரத்தை தயார் செய்யும் குழு, பிற்பட்டோர் நிலையை ஆயும் குழு மற்றும் மொழிவாரி சிறுபான்மையினோருக்கு தனி அலுவலர் இவர்களை நியமிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். மேற்படியார்கள் அனைவரும் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் தங்கள் பதவிகளை கொண்டிருக்க வேண்டும். இதன் மறைபொருள் யாதெனில், குடியரசுத் தலைவர் மேற்கண்டோர்களை அவர்களுடைய பணியிலிருந்து நீக்கி விடவும் அதிகாரம் உண்டு என்பதுதான். எனினும், இவ்வதிகாரம், அரசியலமைப்பில் கூறப்பட்ட நடைமுறைக்கு உட்பட்டு செயலுறுத்தப்பட வேண்டும்.

இராணுவ அதிகாரங்கள் (Military Powers):

இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரத் தலைவராக (Supreme Commander) இந்தியக் குடியரசுத் தலைவர் உள்ளார். போரினையும், அமைதியையும் அறிவிக்க அதிகாரம் படைத்துள்ளார். எனினும் குடியரசுத் தலைவரின், இராணுவ அதிகாரங்கள் சட்டத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது (regulated by law). மேலும், நாட்டின் பாதுகாப்பு, பாராளுமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் இருப்பதால், பாராளுமன்றம் இராணுவத்தின் ஆள் தேர்வு, பயிற்சி, நிர்வாகம், கட்டுப்பாடு ஆகியவை பற்றியும் சட்டங்களை இயற்றுகிறது.

தூதாண்மை அதிகாரங்கள் (Diplomatic Powers):

அரசின் தலைவர் என்கிற முறையில் தூதுவர்களை அனுப்பவும், பிறநாட்டு தூதுவர்களை வரவேற்கவும் குடியரசுத் தலைவர் அதிகாரம் படைத்துள்ளார். எல்லாவிதமான சர்வதேச ஒப்பந்தங்களும், உடன்படிக்கை களும் குடியரசுத் தலைவரின் பெயரில் பேசப்பட்டு, முடிக்கப் பெறுகின்றன.

சட்டமியற்றுத்துறை அதிகாரங்கள் (Legislative Powers):

இந்தியக் குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் எந்த ஒரு அவையிலும் உறுப்பினராக இருக்கக் கூடாது, எனத் தடை விதிக்கும் **ஷரத்து 79** பாராளுமன்றத்தின் அமைப்பை விவரிக்குங்கால்

குடியரசுத் தலைவரையும், பாராளுமன்றத்தின் ஓர் அங்கம் என விவரிக்கின்றது. பாராளுமன்றத்தின் அவைக் கூட்டங்களைப் பொறுத்த வரையில் **ஷரத்து 85-ன்படி** அவைகளைக் கூட்டும் (summoning) அதிகாரமும், ஒத்திவைக்கும் (proroguing) அதிகாரமும் குடியரசுத் தலைவரிடம் உள்ளது. மக்களவையைக் கலைக்கும் (dissolving) அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மேலவையான, மாநிலங்களவையைக் (ராஜ்ய சபா) கலைக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் **ஷரத்து 86-ன்படி,** குடியரசுத் தலைவர் பாராளுமன்ற அவைகளில் உரை நிகழ்த்தவும், அல்லது இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தவும் உரிமைப் பெற்றுள்ளார். அவைகளுக்குச் செய்தி அனுப்பும் உரிமையையும் இவர் பெற்றுள்ளார். **ஷரத்து 80 (1)-ன்படி,** மேலவையான மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.

ஷரத்து 111-ன்படி, பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்ட மசோதா, ஒரு சட்டமாவதற்கு குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற அவரிடம் அனுப்பப்பட வேண்டும். இம்மசோதா குறித்து அவர் தனது இசைவினை அளிக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது பண மசோதா தவிர சாதாரண மசோதாக்களில் நாம் குறிப்பிட்டுள்ள விபரம் குறித்து மீண்டும் மறு பரிசீலனை செய்வதற்காக அம்மசோதாவை அவைக்கே திருப்பி அனுப்பலாம். அம்மசோதா குடியரசுத் தலைவரின் யோசனைப்படி திருத்தப்பட்டோ அல்லது திருத்தப் படாமலோ மீண்டும் அவருடைய இசைவிற்கு அனுப்பப்பட்டால், குடியரசுத் தலைவர் தன்னுடைய இசைவினை அளிக்க மறுக்க முடியாது. ஆனால், நிதி மசோதாக்களைக் (Currency Bill) குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இல்லாமல் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய முடியாது.

ஷரத்து 108-ன்படி, ஒரு சாதாரண மசோதா குறித்து, பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கிடையே முரண்பாடு எழுமேயாயின், அதனைத் தீர்த்து வைக்க, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

அவசரச் சட்டம் உண்டாக்கும் அதிகாரம் (Ordinance Making Power):

குடியரசுத் தலைவருக்குள்ள சட்டமன்ற அதிகாரங்களிலேயே மிக முக்கியமான அதிகாரம், அவசரச் சட்டம் உண்டாக்கும் அதிகாரமேயாகும். பாராளுமன்றத்தின் இரு அவைகளும், கூட்டத்தொடரில் (Session) இல்லாத காலத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலைகள் நிலவுகிறது எனத் திருப்தி அடைந்தால், அச்சூழ்நிலைகளின் தேவைக்கு ஏற்றபடி அவசர சட்டங்களை உண்டாக்கலாம், என **ஷரத்து 123** கூறுகிறது. பாராளுமன்றத்தின் ஒரு செய்சட்டத்திற்கு உள்ள வலிமையையும் விளைவையும் குடியரசுத் தலைவரினால் பிறப்பிக்கப்படும் அவசர சட்டமும் பெற்றிருக்கும். இப்படி பிறப்பிக்கப்படும் அவசர சட்டங்களை பாராளுமன்றம் மறுமுறை கூடும்போது அதன் முன் சமர்ப்பிக்கப் பட வேண்டும். இந்த அவசர சட்டம், பாராளுமன்றம் கூடிய தேதி முதல் ஆறு வார காலத்திற்கு மட்டும்தான் நடைமுறையில் இருக்கும். எனினும் குடியரசுத் தலைவர் விரும்பினால், அந்த அவசர சட்டத்தை எந்த நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். குடியரசுத் தலைவரின் இவ்வதிகாரம் ஒரு நிர்வாகத்துறை செயலாகவோ அல்லது முடிவாகவோ கருதப்பட இயலாது. எதிர்பாராத மற்றும் அவசரமான விஷயங்களைச் சமாளிப்பதற்காக, இவ்வதிகாரம் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மன்னிப்பளிக்கும் அதிகாரம் (Pardoning Power):

இராணுவ நீதிமன்றங்கள் விசாரிக்கும் வழக்குகளிலும், பிற நீதிமன்றங்கள் விசாரிக்கும் வழக்குகளிலும் குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இந்த வழக்குகளில் கொடுக்கப் பட்ட தண்டனைகளையும் அல்லது வேறு எவ்வித வழக்குகளில் கொடுக்கப்பட்ட மரண தண்டனையைத் தவிர, பிற தண்டனைகள் அடைந்த குற்றவாளிகளை மன்னிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. இதுபற்றி **ஷரத்து 72** கூறுகிறது. **இதனை குடியரசுத் தலைவரின் நீதிபரிபாலன அதிகாரம் என்றும் கூறலாம்.** [மேலும் விரிவாக பக்கம் எண். 37-ல் வினா எண் (2)-ல் காணவும்.]

நெருக்கடிக்கால அதிகாரங்கள் (Emergency Powers):

352 முதல் 360 வரை உள்ள ஷரத்துகள், குடியரசுத் தலைவருக்கு உச்ச அளவில் நெருக்கடிக்கால அதிகாரத்தினை வழங்கியுள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர் சில குறிப்பிட்ட தருணங்களில் நெருக்கடி நிலைமையை (state of emergency)

பிரகடனப்படுத்தக்கூடிய அதிகாரம் பெற்றுள்ளார். அரசியலமைப்பில் விளக்கப்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினை, மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. தேசிய நெருக்கடி நிலைமை; 2. மாநில நெருக்கடி நிலைமை; 3. நிதி நெருக்கடி நிலைமை.

1. இந்தியாவின் பாதுகாப்பு வெளித்தாக்குதலாலோ, ஆயுதக் கலகங்களாலோ அல்லது போரினாலோ அச்சுறுத்தப் படுகிறது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால் **[ஷரத்து 352 (1)]** அல்லது 2. மாநில ஆளுநர் அனுப்பிய அறிக்கையின் பேரில் அரசியலமைப்பின்படி, அம்மாநில அரசாங்கம் நடத்தப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால் **[ஷரத்து 356 (2)]** அல்லது 3. இந்தியாவின் நிதி நிலைமை அச்சுறுத்தப் படக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால் **[ஷரத்து 360 (1)]**, அவர் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம். நெருக்கடிக் காலங்களில், அடிப்படை உரிமைகளை வலியுறுத்த நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமையை குடியரசுத் தலைவர் நிறுத்தி வைக்க அதிகாரமுண்டு. **[ஷரத்து 359 (ஷரத்து 21 மற்றும் 22 தவிர)]**. மாநிலமானது எவ்வகையில் தன் நிர்வாக அதிகாரங்களை, நெருக்கடிக் காலங்களில் செயலுறுத்த வேண்டும் என்று ஏவுரைக்க குடியரசுத் தலைவருக்கு அதிகார முண்டு.

அரசியலமைப்பின்படி, ஒரு மாநிலத்தின் அரசாங்கம் நடத்தப்பட முடியாத சூழ்நிலையினால் உண்டான நெருக்கடி நிலைமையில், அம்மாநில ஆளுநருக்கு உள்ள அனைத்து அதிகாரங்களையும் குடியரசுத் தலைவர் பெற்றவராவார். மாநிலத்தில் சட்டமியற்றும் அதிகாரம், குடியரசுத் தலைவரின் கைக்கு வருகிறது.

நிதி நிலைமையினால் ஏற்பட்ட நெருக்கடிக் காலத்தில், மத்திய அரசு மாநில அரசுக்கு பொருந்தும் என்று தோன்றக்கூடிய நிதி ஏவுரைகளை (Financial Directions) அளிக்கலாம். மாநில அரசு ஊழியர்கள், உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், இவர்களின் ஊதியத்தை குறைக்க குடியரசுத் தலைவர் ஏவுரைக்கலாம். மாநிலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் எல்லா நிதி மசோதாக்களையும் தமது பரிசீலனைக்கு அனுப்புமாறு குடியரசுத் தலைவர் உத்திரவிடலாம்.

இந்தியக் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனைக்கு (அறிவுரைக்கு) கட்டுப்பட்டவரா?

ஆம். அதில் அய்யப்பாடு ஏதுமில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **52-வது ஷரத்து,** இந்தியாவிற்கு குடியரசுத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்று விதிக்கிறது. இந்திய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் வழக்கப்பட்டுள்ளது என்றும், இவர் அவ்வதிகாரத்தை இந்திய அரசியலமைப்பிற்குட்பட்டு, நேரடியாகவோ, தனது கீழுள்ள அலுவலர்கள் மூலமோ செயலுறுத்தலாம் என்றும், **ஷரத்து 53 (1)** கூறுகிறது. இதனைப் படித்தவுடன், நாட்டின் உண்மையான தலைவர் குடியரசுத் தலைவர்தான் என்ற எண்ணம் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. இவர் பெயரளவில் (nominal) மட்டுமே நாட்டின் தலைவராக விளங்குகிறார். எவ்வாறெனில், **ஷரத்து 74 (1)-ன்படி,** குடியரசுத் தலைவர், தனது அதிகாரங்களையும் பணிகளையும் பிரதம மந்திரியை தலைவராகக் கொண்ட அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில்தான் செயல்படுத்த வேண்டும். அந்த ஆலோசனை சாதாரணமாக குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும். எனினும் அந்த ஆலோசனையை மறுபரிசீலனை செய்ய அவர் கோரலாம். அவ்வாறு மறுபரிசீலனை செய்து அமைச்சரவையால் வழங்கப் பட்ட ஆலோசனையின்படிதான், மீண்டும் குடியரசுத் தலைவர் செயல்பட்டாக வேண்டியுள்ளது. மேலும் **ஷரத்து 74 (2)-ன்படி,** அமைச்சரவையால் என்ன ஆலோசனை குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டது எனும் வினாவை, எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்க இயலாது. எனவே, அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனைக்கு குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவரே.

மேலும், அரசாங்கத்தின் முடிவுகள் அனைத்தும் அமைச்சரவையினாலேயே செய்யப்படுகின்றன. நடைமுறைக்குத் தக்க விதத்தில் அவை குடியரசுத் தலைவரின் பெயரில் வெளியிடப் படுகின்றன. தேர்தல்கள் முடிந்து புதிய பாராளுமன்றம் அமைக்கப் பட்டவுடன் முதலாவது கூட்டத்திலும், ஒவ்வோர் ஆண்டின் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்திலும் இந்தியக் குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவார். இவ்வுரையில் அரசாங்கத்தின் கொள்கைகள் விளக்கப்படும். இந்த உரையானது, **'குடியரசுத் தலைவரின் உரை' (President's Address)** எனப்படும். இவ்வுரை உண்மையில் அமைச்சரவையால் தயாரிக்கப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் பணிகள் தொடர்பாகப் பொதுவான கொள்கைகளையும், அவற்றை அமல்படுத்தப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் அமைச்சரவை நிர்ணயம் செய்கின்றது.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை (Foreign Policy) அமைச்சரவையே நிர்ணயம் செய்கிறது. நாட்டின் பாதுகாப்பும் (Defence) அமைச்சரவையின் முழுப் பொறுப்பில் உள்ளது.

பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரல் **(Agenda)** அமைச்சரவையினால் நிர்ணயம் செய்யப்படுகிறது. மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் (Budget) பற்றிய அனைத்து விபரங்களையும், அமைச்சரவையே முடிவு செய்கிறது; அரசாங்கத்தின் வரவு செலவு இவைகளின் விபரங்கள் அமைச்சரவையாலேயே முடிவு செய்யப்படும். நிதி ஒதுக்கீடு பற்றிய மசோதாக்கள் நடைமுறையில் அமைச்சரவையின் அனுமதியின்றி மக்களவையில் தாக்கல் செய்யப்பட முடியாது. இவ்வாறு நாட்டின் வரவு செலவு மீது முழுக்கட்டுப்பாட்டையும் அமைச்சரவை பெற்றுள்ளது. இந்தியா அடிப்படையில் ஒரு கூட்டாட்சி அரசு. ஆகவே மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களுடன் நிதித்துறையில் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. இந்த உறவினை மத்திய அமைச்சரவை தாம், அரசியலமைப்பு விதிகளுக்கு உட்பட்டு நிர்ணயம் செய்கின்றது.

இந்தியக் குடியரசுத் தலைவர் பெற்றுள்ள நீதிபதிகள் நியமன அதிகாரம் உண்மையில் அமைச்சரவையின் வாயிலாக பயன்படுத்தப் படுகிறது. மேலும் குடியரசுத் தலைவர், நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு அளிப்பு அதிகாரங்களை அமைச்சரவையின் ஆலோசனை மீதே பயன்படுத்துவார்.

மேற்கண்டவையெல்லாம், இந்திய நாட்டில் அமைச்சரவை தான் உண்மையான அரசாங்கத்தை நடத்துகிறது. குடியரசுத் தலைவர் அதன் உதவி மற்றும் ஆலோசனைக்குட்பட்டு பெயரளவில் செயல்படுகிறார் என்பதை பறைசாற்றுபவையாகும். எனினும், அமைச்சரவை பதவி ஏற்காத சமயத்தில் அல்லது அமைச்சரவை மக்களவையின் நம்பிக்கை இழந்து பதவி இழக்கும் போது, குடியரசுத் தலைவர் மீண்டும் ஒரு புதிய அமைச்சரவை ஏற்படும் வரை சுயமான அதிகாரங்களைக் கொண்டு விளங்குகிறார்.

குடியரசுத் தலைவரின் அரசியல் சட்டப் பாதுகாப்பு (அல்லது) குடியரசுத் தலைவரின் சிறப்புரிமை (Constitutional Protection (or) Privilege of the President):

இது குறித்து **ஷரத்து 361** குறிப்பிடுகிறது. **ஷரத்து 361 (1)-ன்படி**, குடியரசுத் தலைவர், அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநர்

அல்லது இராஜப் பிரமுகர் (Rajpramukh of a State) ஆகியோர், தங்களது அதிகாரங்களை மற்றும் கடமைகளை செயல்படுத்தியது குறித்து எந்த நீதிமன்றத்திற்கும் பதிலளிக்கக் கடமைப்பட்டவரல்லர். **ஷரத்து 361 (2)-ன்படி,** குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் மீது அவர்களது பதவிக் காலத்தில் எந்நீதிமன்றத்திலும் எவ்வித குற்றவியல் நடவடிக்கைகளையும் தொடர முடியாது. மேலும் **ஷரத்து 361 (3)-ன்படி,** அவர்களின் பதவிக் காலத்தின் போது அவர்களுக்கெதிராக கைது அல்லது சிறைவைத்தலுக்கான பிடியாணை ஏதும் பிறப்பிக்க முடியாது. இவை மட்டுமல்லாது, **ஷரத்து 361 (4)-ன்படி,** அவர்களுக்கெதிராக உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளையும் தொடர இயலாது.

9. Explain the provision relevant to legislative powers of Indian President. Can he delegate his power? If so, when and how? (இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டம் இயற்றும் அதிகாரம் குறித்து, தொடர்பான வகைமுறைகளை விளக்குக. அவர் அந்த அதிகாரத்தை ஒப்படைப்புச் செய்யலாமா? அப்படியானால் எப்பொழுது? எவ்வாறு?)

(அல்லது)

Discuss the legislative powers of the President of India. (இந்தியாவின் குடியரசுத் தலைவருக்குள்ள சட்டமியற்றும் அதிகாரங்களை ஆராய்க.)

குடியரசுத் தலைவரின் சட்டமியற்றும் அதிகாரம்:

[வினா எண் (7)-ல் காண்க.]

அவர் அந்த அதிகாரத்தை ஒப்படைப்புச் செய்யலாமா?

சட்டமியற்றும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் ஒப்படைப்புச் செய்யலாம்.

எப்பொழுது?:

ஒரு மாநிலத்தில் நெருக்கடி நிலைமை (State Emergency) ஏற்படும் பொழுது.

எவ்வாறு?:

ஒரு மாநில அரசாங்கமானது, அரசியலமைப்பு சட்ட

வகைமுறைகளின்படி நடத்தப்பட முடியாத சூழ்நிலை (Emergency due to break down of Constitutional Machinery in State) உருவாகி உள்ளது என அம்மாநில ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அறிவித்தால், அவர் அந்த மாநிலத்தின் மீது நெருக்கடி நிலைமையினை அறிவிப்பார். அந்நெருக்கடி நிலைமையின் போது அம்மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி (President's Rule) நடக்கும். அம்மாநில சட்டமன்றத்திற்கு உண்டான அதிகாரங்களை **ஷரத்து 356 (1)-ன்படி** பாராளுமன்றம் கைக்கொள்ளும். அம்மாநிலத்தின் நலனிற்காக சட்டமியற்றும் அதிகாரத்தினை, பாராளுமன்றம் குடியரசுத் தலைவருக்கு அளிக்கும். தனக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரத்தினை தன்னால் குறித்துரைக்கப்பட்ட பிற அதிகார அமைப்பிலும் (Other authority) குடியரசுத் தலைவர் ஒப்படைப்பு (delegate) செய்யலாம். இதற்கு பாராளுமன்றம் அனுமதியளிக்கிறது. **[ஷரத்து 357 (1) (a)].**

10. Vice-President of India - Write short notes. (குடியரசுத் துணைத் தலைவர் - குறுகிய விடை தருக.)

இந்தியாவிற்கு குடியரசு துணைத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டுமென **ஷரத்து 63** கூறுகிறது. அவர் மாநிலங்களவையின் பதவிவழித் தலைவராக (*ex-officio* Chairman of Council of States) இருத்தல் வேண்டும்; மற்றும் பிற ஆதாயப் பதவி (office of profit) எதனையும் அவர் ஏற்றிருத்தலாகாது என **ஷரத்து 64** கூறுகிறது.

ஒருவேளை குடியரசுத் தலைவர் இறந்து விட்டாலோ, இராஜினாமா செய்தாலோ அல்லது பதவியிலிருந்து நீக்கப் பட்டாலோ, அவரது பதவியிடம் காலியாகிறது (vacancy). அப்பொழுது அந்த காலியிடத்தை நிரப்புவதற்காக ஒரு புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியில் அமரும் தேதி வரை, குடியரசுத் துணைத் தலைவர், குடியரசுத் தலைவராக செயல்படுவார், என **ஷரத்து 65 (1)** குறிப்பிடுகிறது.

அதுபோல், குடியரசுத் தலைவர் நோய்வாய்ப்படுதல், வருகையில்லாமல் இருத்தல் அல்லது பிற காரணம் பொருட்டு அவர் தம் அலுவலகப் பணிகளை செய்ய முடியாமற் போனால், அச்சமயங்களில் அவர் மீண்டும் தம் கடமைகளை மேற்கொள்ளும் தேதி வரையில், அப்பணிகளை குடியரசு துணைத் தலைவர் செய்தல் வேண்டுமென **ஷரத்து 65 (2)** விதிக்கிறது. மேலும், அச்சமயத்தில், குடியரசு துணைத் தலைவருக்கு, குடியரசுத் தலைவருக்குண்டான

அனைத்து அதிகாரங்களும் பாதுகாப்புரிமைகளும் உண்டு; மற்றும் ஊதியங்கள், படித் தொகைகள் மற்றும் சிறப்புரிமைகளைப் பெற உரிமையுண்டு, என **ஷரத்து 65 (3)** கூறுகிறது. குடியரசு துணைத் தலைவருக்குண்டான தேர்தல் முறை மற்றும் தகுதிகள் குறித்து **ஷரத்து 66** கூறுகிறது.

குடியரசு துணைத் தலைவர், தாம் பதவியேற்ற தேதியிலிருந்து அய்ந்து ஆண்டுகள் அப்பதவி வகிப்பார், என **ஷரத்து 67** கூறுகிறது. எனினும் அவர் தனது பதவியை இராஜினாமா செய்யலாம். மேலும் பதவியிலிருந்து நீக்கப்படவும் வழிவகை உண்டு. குடியரசு துணைத் தலைவரின் பதவிக் காலம் முடிந்த பிறகும், அவருக்கு பின்னிட்டு மற்றொருவர் பதவி வகிக்க வரும்வரை, தொடர்ந்து அவர் அப்பதவியிலேயே இருத்தல் வேண்டும்.

குடியரசு துணைத் தலைவரின் பதவிக்காலம் முடிவுறுவதால், ஏற்படவிருக்கும் காலியிடத்தை நிரப்புவதற்கான தேர்தல், அந்தக் காலம் முடிவடைவதற்கு முன்பு, நடத்தி முடிக்கப்பட வேண்டுமென **ஷரத்து 68 (1)** கூறுகிறது. ஒருவேளை குடியரசு துணைத் தலைவரின் இறப்பு, இராஜினாமா அல்லது பதவி நீக்கத்தின் காரணமாக, அல்லது பதவியிடம் காலியானால், அதனை நிரப்புவதற்கான தேர்தல் இயன்ற அளவு விரைவாக நடத்தப்படல் வேண்டுமென, **ஷரத்து 68 (2)** கூறுகிறது.

(ii) மத்திய அமைச்சரவை
(Council of Ministers)

11. State the executive power of the President of India. Explain the relation between the President and the Prime Minister. (இந்தியக் குடியரசுத் தலைவரின் செயலாட்சி அதிகாரங்களைக் கூறு. குடியரசுத் தலைவருக்கும் பிரதம மந்திரிக்கும் உள்ள உறவினை விளக்குக.)

(அல்லது)

Appointment of Prime Minister of India - Write short notes. (இந்தியப் பிரதமரை நியமித்தல் - குறுகிய விடை தருக.)

[குடியரசுத் தலைவரின் செயலாட்சி (நிர்வாக) அதிகாரங்களை வினா எண். (6)-ல் காண்க.]

இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் பிரதம மந்திரிக்கும் இடையே உள்ள உறவு (அல்லது) பிரதம மந்திரியின் நியமனம்:

இந்திய அரசியலமைப்பின், **74 மற்றும் 75வது ஷரத்துகள்** அமைச்சரவையின் அமைப்பு மற்றும் வகைமுறைகளைப் பற்றித் தெரிவிக்கிறது. பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்டு ஓர் அமைச்சரவை, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு உதவியும், ஆலோசனையும் அளிக்கும் பொருட்டு இருத்தல் வேண்டும், என **ஷரத்து 74 (1)** கூறுகிறது.

இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியாவின் பிரதம மந்திரியை நியமிக்கிறார். பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் இந்தியக் குடியரசுத் தலைவர் மற்ற அமைச்சர்களை நியமனம் செய்கிறார், என **ஷரத்து 75(1)** தெரிவிக்கிறது. இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியாவின் பிரதம மந்திரியை நியமனம் செய்கிறார், என்று மேற்படி ஷரத்து கூறுகிறது. ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்கையில், குடியரசுத் தலைவர் பிரதம மந்திரியை பெயரளவிற்குத்தான் நியமனம் செய்கிறார் என்பது தெரியவரும். பாராளுமன்றத்தின் மக்களவையில் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சியின் தலைவரைத்தான் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதம மந்திரியாக நியமனம் செய்தல் வேண்டும். எனவே, இது பெயரளவு நியமன அதிகாரமேயாகும். சில

அமைச்சரின் 'தனிப்பட்ட பொறுப்பு' என்றால் என்ன? கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன?

கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility) [ஷரத்து 75 (2)]:

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு: பிரதம மந்திரியை தலைமையாகக் கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டுமென **ஷரத்து 74 (1)** கூறுகிறது. அந்த அமைச்சரவை மக்களவைக்கு (கிழ் அவை - House of the People) கூட்டாக பொறுப்பு வகிக்க வேண்டும், என்று **ஷரத்து 75 (3)** கூறுகிறது. பாராளுமன்ற முறையில் அமைந்த அரசாங்கத்தின் முக்கியத்துவமே, அமைச்சரவை, மக்களவைக்கு கூட்டாக பொறுப்பு வகிப்பதில்தான் அடங்கியுள்ளது எனில், அது மிகையன்று. அது சரி, கூட்டுப் பொறுப்பு என்பதின் விளக்கம்தான் என்ன? இதோ வருமாறு.

கூட்டுப் பொறுப்பு - விளக்கம்: கூட்டுப் பொறுப்புக் கொள்கை எனப்படுவது, அரசாங்கத்தின் பொது நடைமுறை விவகாரங்களுக்கு அமைச்சரவை, ஒரு கூட்டமைப்பாக (as a body) பொறுப்பு வகிக்க வேண்டும் என்பதாகும். அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள், அதன் உறுப்பினர்களின் கூட்டுத் தீர்மானமாக கருதப்படும். அமைச்சரவையினுள் அத்தீர்மானம் குறித்து தனிப்பட்ட கருத்து வேறுபாடு இருப்பினும், ஒரு தடவை தீர்மானம் அமைச்சரவையினால் எடுக்கப்பட்டுவிட்டால், எல்லா அமைச்சர்களும் பாராளுமன்றத்திலும் சரி, அதற்கு வெளியிலும் சரி, அத்தீர்மானத்திற்கு பக்கபலமாக நின்று செயல்பட வேண்டியது அமைச்சர்களின் கடமையாகும். அமைச்சரவையின் தீர்மானத்துடனோ அல்லது பிரதம மந்திரியுடனோ ஒரு அமைச்சர் ஒத்து செல்லவில்லையென்றால், அவர் தனது பதவியை இராஜினாமா செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இதன் மூலமாக பிரதம மந்திரி, அமைச்சரவையின் ஒற்றுமையையும், ஒழுக்கத்தையும் கட்டிக் காக்கிறார். இக்கொள்கையின்படி, மக்களவைக்கு அமைச்சரவை கூட்டாக பொறுப்பேற்பதனால், மக்களவையின் நம்பிக்கைக்கு பாத்திரமாக அமைச்சரவை செயல்பட வேண்டும். அப்படி செயல் படாவிட்டால், மக்களவையானது, நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அமைச்சரவையை கவிழ்த்து விடலாம். அமைச்சர்கள் பதவி விலக வேண்டியதுதான்.

தனிப்பட்ட பொறுப்பு (Individual Responsibility):

அமைச்சரவைக்கு கூட்டுப் பொறுப்பு இருப்பதைப்

போன்று, ஒவ்வொரு அமைச்சருக்கும் தனிப்பட்ட பொறுப்பு உண்டு, என்பதையும் இங்கு மறுத்தலாகாது. அதாவது, ஒவ்வொரு அமைச்சரும் தனது இலாகாவின் செயல்களுக்கு பாராளுமன்றத் திற்கு தனிப்பட்ட பொறுப்புடையவர். அவர் அதை மற்றொரு அமைச்சருக்கு மாற்றவியலாது. அவரது செயற்பாடுகள் குறித்து பாராளுமன்றம் வினவினால், அதற்கு அந்த அமைச்சர் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்.

மாநிலங்களில் என்ன நிலை?

மத்திய அமைச்சரவை எவ்வாறு மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பு வகிக்கிறதோ, அதே போன்று மாநில அமைச்சரவையும் **ஷரத்து 164 (2)**-ன்படி மாநில சட்டப்பேரவைக்கு (Legislative Assembly of the State) கூட்டுப் பொறுப்புடையதாகும். எனவே, அதே பொறுப்புநிலைதான் இங்கும்.

(iii) இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் (The Attorney - General of India)

13. Attorney-General of India - Write short notes. (இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர் - குறுகிய விடை தருக.)

உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக அமர்த்தப்படுவதற்கு தகுதியுடைய ஒருவரை இந்திய அரசின் தலைமை வழக்குரைஞராக குடியரசுத் தலைவர் அமர்த்த வேண்டும், என்று **ஷரத்து 76 (1)** கூறுகிறது. குடியரசுத் தலைவரால் அவ்வப்போது அரசு தலைமை வழக்குரைஞருக்கு சுட்டி அனுப்பப்படுகிற சட்ட வினாக்களில் இந்திய அரசுக்கு அறிவுரை வழங்குதல், சட்டத் தன்மை கொண்ட இன்னபிற கடமைகளைப் புரிதல், மற்றும் அரசியலமைப்பின் செயலாற்றலிலுள்ள பிற சட்டங்கள் வாயிலாக அவருக்கு வழங்கப் பட்டுள்ள அலுவற் பணிகளை ஆற்றுதல் ஆகியவை அன்னாரது கடமைகள் ஆகும், என்று **ஷரத்து 76 (2)** கூறுகிறது.

இந்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ள எந்த வழக்கிலும், எந்த உயர் நீதிமன்றத்திலும் ஆஜராக வேண்டிய பொறுப்பினை இவர் கொண்டுள்ளார். இந்திய அரசாங்கத்திற்கு எதிரான வழக்குகளில் இவர் ஆஜராகவோ அல்லது ஆலோசனை வழங்கவோ கூடாது. இதே போன்று இவர் எந்த ஒரு நிறுவனத்திலும் இயக்

குனராக பொறுப்பேற்றுக் கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளார்

இவரது உரிமைகளைப் பற்றி ஆராயும்பொழுது, முதலில், இவர் தனது வாதத்தினை இந்திய எல்லைக்குள் உள்ள எந்த நீதிமன்றத்திலும் எடுத்துக் கூற உரிமை படைத்தவராவார் என்று **ஷரத்து 76 (3)** கூறுகிறது. இரண்டாவதாக, பாராளுமன்றத்தின் எந்த ஒரு அவையிலும் பேசவோ அல்லது கலந்து கொள்ளவோ உரிமை பெற்றவராவார். (ஓட்டுரிமை கிடையாது). மூன்றாவதாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகளை பெற இவருக்கும் உரிமை உண்டு.

(ஆ) மாநில நிர்வாகத்துறை

(ஷரத்துகள் 153 முதல் 167 மற்றும் 213)

The State Executive

(Articles 52 to 78, 123, 352, 356 & 360)

(i) ஆளுநர் (Governor)

1. Give an account of the powers of the Governor of a State. Is he always bound by the advice of the Council of Ministers? (மாநில ஆளுநருடைய அதிகாரங்களை தொகுத்துக் கூறுக. அவர் எப் பொழுதும் அமைச்சரவையின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டவரா?)

(அல்லது)

Discuss the powers and functions of the Governor of a State under the Indian Constitution. (இந்திய அரசியலமைப்பின் கீழ், ஒரு மாநில ஆளுநருக்குரிய அதிகாரங்களையும் செய்கடமைகளையும் விளக்குக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, மாநில ஆளுநருக்கு அதிகமான அதிகாரங்களை அளித்துள்ளது. அவற்றை பின்வரும் நான்கு தலைப்புகளின் வாயிலாகக் காணலாம்.

1. நிர்வாக அதிகாரம் (Executive Power):

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளுநர் ஒருவர் இருத்தல்

மாநில அரசின் கட்டமைப்பு



வேண்டும், என்று **ஷரத்து 153** விதிக்கிறது. மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் அம்மாநில ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ளது; அவர் அவ்வதிகாரத்தை தானே நேரடியாகவோ அல்லது தனக்கு கீழுள்ள அலுவலர்களின் வாயிலாகவோ செயலுறுத்துவார், என **ஷரத்து 154 (1)** கூறுகிறது. மாநில சட்டமன்றமானது, தாம் சட்டங்களியற்ற அதிகாரம் உள்ள விபரங்கள் வரையிலும், மாநிலத்தின் நிர்வாக அதிகாரமும் நீளும், என **ஷரத்து 162** கூறுகிறது. ஒரு மாநில அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகள் யாவும் ஆளுநரின் பெயரில்தான் எடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. உத்திரவுகள் மற்றும் ஆவணங்கள் ஆளுநர் பெயரில் உண்டாக்கப் பட்டு நிறைவேற்றப்பட வேண்டும், என்று **ஷரத்து 166 (1)** கூறுகிறது. அது ஆளுநரால் உண்டாக்கப்பட்ட விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள முறையின்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட உத்திரவோ, ஆவணமோ அவை ஆளுநரால் செய்யப்பட்டதல்ல எனக் கூறப்பட முடியாது, என்று **ஷரத்து 166 (2)** கூறுகிறது. மாநில அரசின் செயல்பாட்டு முறைகளை மேலும் வசதியாக்கும் பொருட்டு விதிகளை உண்டாக்க ஆளுநருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும், அவற்றை அமைச்சர் களிடையே ஒதுக்கீடு செய்யும் அதிகாரமும் அளிக்கப் பட்டுள்ளது, என **ஷரத்து 166 (3)** கூறுகிறது. இவரும் சிலவற்றில் தவிர குடியரசுத் தலைவர் போல பெயரளவில்தான் மாநிலத்தின் தலைவராக விளங்குகிறார். இவர் பொதுவாக, மாநில அமைச் சரவையின் ஆலோசனையின்படி இயங்க வேண்டியுள்ளது.

2. நிதித்துறை அதிகாரங்கள் (Financial Powers):

ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் ஒரு பண மசோதா மாநிலச் சட்டப் பேரவையில் (Legislative Assembly) அறிமுகப் படுத்தப்பட முடியாது. ஆளுநரின் பரிந்துரையின் பேரில் தவிர மானியத் தொகை கோரிக்கை செய்யப்பட முடியாது, என **ஷரத்து 203 (3)** கூறுகிறது. பட்ஜெட் என்று அழைக்கப்படும் **'வருடாந்திர நிதி அறிக்கையை'** (Annual Financial Statement) ஆளுநர் சட்ட மன்றத்தின் இரு அவைகளிலோ அல்லது ஒன்றிலோ சமர்ப்பிக்க வேண்டும், என **ஷரத்து 202 (1)** கூறுகிறது.

3. சட்டமியற்றல் சார்ந்த அதிகாரங்கள் (Legislative Powers):

மாநில ஆளுநர், சட்டமன்றத்தின் அவையை அல்லது அவைகளை (House) ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றும் இடத்தில்

கூடுமாறு அழைப்பு விடுக்க அதிகாரமுடையவர். அவ்வாறு அழைப்பு விடுக்கும்போது சட்டமன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடரின் கடைசி நாளுக்கும், கூட்டப்படும் கூட்டத் தொடரின் முதல் நாளுக்குமான இடைவெளி ஆறு மாதங்களுக்கு மேல் போகாமல் இருக்க வேண்டும், என **ஷரத்து 174 (1)** கூறுகிறது. சட்டமன்ற அவைகளை அல்லது அவையை ஒத்தி வைக்கவும், கலைக்கவும் ஆளுநருக்கு உரிமை உண்டு, என **ஷரத்து 174 (2)** கூறுகிறது. ஒரு மாநிலத்தைப் பொறுத்தவரை, அதன் எந்த மசோதாவும் குடியரசுத் தலைவரின் இசைவில்லாமல் சட்டமாக்கப்பட முடியாது. எனினும், ஆளுநர், சில மசோதாக்களை குடியரசுத் தலைவரின் இசைவிற்காக ஒதுக்கீடு செய்ய **ஷரத்து 200** உரிமையளிக்கிறது. சட்டமன்ற மேல்சபைக்கு (Legislative Council) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தவிர, மீதமுள்ளோர்களை நியமனம் செய்ய **ஷரத்து 171** ஆளுநருக்கு உரிமையளிக்கிறது.

4. அவசர சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் (Ordinance Making Power):

சட்டமியற்றல் சார்ந்த அதிகாரத்திலேயே மிக முக்கியமான அதிகாரம், ஆளுநரின் அவசர சட்டம் பிறப்பிக்கும் அதிகாரமே யாகும். ஆளுநரின் அவசர சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம், குடியரசுத் தலைவரின் மேலாணை பிறப்பிக்கும் அதிகாரத்திற்கு ஒத்ததாகும். **ஷரத்து 213** இது பற்றி கூறுகிறது. இதன்படி, சட்டமன்றத்தின் ஒரு அவையோ அல்லது இரு அவைகள் இருப்பின் அந்த இரு அவைகளோ கூட்டத் தொடரில் இல்லாத போது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் இருப்பதாக ஆளுநர் திருப்தி அடைந்தால், அந்தச் சூழ்நிலைக்குத் தேவையான முறையில் ஆளுநர் அவசர சட்டங்களை பிறப்பிக்கலாம். இந்த அவசர சட்டங்கள் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களைப் போலவே வலுவையும், விளைவையும் கொண்டிருக்கும்.

ஆனால், ஆளுநர் அவசர சட்டங்களைப் பிறப்பிக்கும்போது, அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தான் செயல்பட வேண்டும். அதன்படி கீழ்கண்ட வகையான அவசர சட்டங்களை மாநில ஆளுநர், இந்தியக் குடியரசுத் தலைவரின் அறிவுறுத்தங்களின்றி (without instructions) பிறப்பிக்க முடியாது.

(அ) மாநிலச் சட்டமன்றத்தில் ஒரு சில குறிப்பிட்ட மசோதாக்களை அறிமுகம் செய்யக் குடியரசுத் தலைவரின்

முன்னனுமதி பெறப்பட வேண்டும், என அரசியலமைப்பு விதிக்கிறது. அப்படிப்பட்ட அதே வகைமுறைகளை உள்ளடக்கிய ஒரு மசோதாவின் மீது குடியரசுத் தலைவரின் முன்னனுமதி இல்லாமல், ஆளுநர் அவசர சட்டம் எதையும் பிறப்பிக்க முடியாது.

(ஆ) குடியரசுத் தலைவரின் முன்னனுமதி பெறுவது அவசிய மானது என்று ஆளுநர் கருதி ஒதுக்கி வைத்த ஒரு மசோதாவின் மீது அவசர சட்டம் எதையும் அவர் பிறப்பிக்க முடியாது.

(இ) ஒரு மசோதா குடியரசுத் தலைவரின் முன்னனுமதியை பெற்ற பிறகே, மாநில சட்டசபையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனும் அதே வகைமுறைகளை உள்ளடக்கியிருக்கும் மாநில சட்டமன்றத்தின் ஒரு சட்டம் குடியரசுத் தலைவரின் கருத்துகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்து, குடியரசுத் தலைவரின் இசைவையும் அது பெற்றிருந்தது என்ற நிலை இல்லாது போனால், அச்சட்டம் செல்லாததாகி விட்டிருக்கும் என்றால், அங்கும் குடியரசுத் தலைவரின் அறிவுறுத்தங்களின்றி, ஆளுநர் அதையொத்த அவசர சட்டம் எதையும் பிறப்பிக்க முடியாது.

ஆளுநர் பிறப்பிக்கும் அவசர சட்டங்களின் சட்டமன்ற பேரவையின் முன்போ, இரு அவைகள் இருப்பின், இரு அவைகளின் முன்போ ஆளுநரால் அவைகள் கூடும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். சட்டமன்றம் கூடிய தேதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை இந்த அவசர சட்டங்கள் அமலில் இருக்கும். இக்காலக் கெடுவிற்கு முன்பாகவே, சட்டமன்றத்தின் அவையோ, அவைகளோ மேற்படி அவசர சட்டத்தை ஒரு தீர்மானம் வாயிலாக நிராகரித்தால், தீர்மானம் நிறைவேறிய தேதியிலிருந்து அவசர சட்டம் செல்லுபடி ஆகாது. ஆளுநர் பிறப்பித்த அவசர சட்டத்தை, ஆறு வாரங்களுக்குள் அவராகவே திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

மன்னிப்பளிக்கும் அதிகாரம் (Pardoning Power):

மாநில ஆட்சித்துறை வரம்பிற்குட்பட்ட விபரங்கள் சார்ந்த வழக்குகளில் தண்டனை பெற்றவர்களை மன்னிக்கவும், தண்டனையை ஒத்திவைக்கவும், குறைக்கவும், தள்ளுபடி செய்யவும், மாநில ஆளுநர், **ஷரத்து 161-ன்படி** அதிகாரம் பெற்றுள்ளார். (மேலும் விவரமாக, 'ஆளுநரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம்' எனும் வினா எண் (2)-ல் காண்க.)

இவற்றைத் தவிர பின்வரும் பதவிகளுக்கான நியமன (Ap-

pointment) அதிகாரங்களையும் ஆளுநர் பெற்றுள்ளார். 1. மாநில முதலமைச்சர், 2. மற்ற அமைச்சர்கள், 3. மாநில அரசு முதன்மை வழக்குரைஞர், 4. சட்டமன்றத் தலைவர், சட்டப்பேரவைத் தலைவர், (தற்காலிக காலியிடத்திற்கு மட்டும்), 5. மாவட்ட நீதிபதிகள் (மாநில உயர்நீதிமன்ற ஆலோசனையுடன்), 6. மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்கள்.

ஆளுநர் எப்பொழுதும் அமைச்சரவையின் அறிவுரைக்கு கட்டுப்பட்டவரா?

"முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு அமைச்சரவை இருக்க வேண்டும். அது அரசியலமைப்பின் கீழ், ஆளுநர் தன் பணிகளை அல்லது அவற்றில் சிலவற்றை **தன்விருப்புரிமையின்படி (in his discretion)** செய்யத் தேவைப்படும் பொழுதைத் தவிர, மற்ற பணிகளை ஆளுநர் செய்யும் பொழுது அவருக்கு உதவியும், அறிவுரையும் வழங்கிட வேண்டும்" என **ஷரத்து 163** கூறுகிறது.

மேற்படி ஷரத்து 163-லிருந்து ஆளுநர் **எப்பொழுதும்** அமைச்சரவையின் அறிவுரைக்கு கட்டுப்பட்டவரல்ல என்பது புலனாகிறது. அதாவது, ஆளுநர் தன்விருப்புரிமையின்படி செயல்படும் பொழுது, அவர் அமைச்சரவையின் அறிவுரைப்படி செயல்படத் தேவையில்லை. மேலும் அவர்களின் அறிவுரைகளைப் பெற வேண்டிய அவசியமில்லை. இதனை **ஷரத்து 163 (2)** மேலும் தெளிவாக்குகிறது. அதாவது, "அரசியலமைப்பின் கீழ் எவ்வித ஷரத்துக் குறித்த பிரச்சனையானாலும் அல்லது ஒரு விஷயமாக இல்லாமல் இருந்தாலும் கூட, ஆளுநர் தன்விருப்புரிமையின்படி செயல்படத் தேவைப்படும்பொழுது, அவர் எடுக்கும் தீர்மானம் தான், இறுதித் தீர்மானமாக இருக்கும். ஆளுநரின் எச்செயலின் செல்லுதன்மையைக் குறித்தும், அவர் தன்விருப்புரிமையின்படி செயல்படக் கூடாது என்ற அடிப்படையில் வினவ முடியாது".

ஆனால் குடியரசுத் தலைவரைப் பொறுத்தவரை, அவர் எச் செயலையும் தன்விருப்புரிமையின்படி செய்ய, அரசியலமைப்பு அவருக்கு அதிகாரமளிக்கவில்லை. அவர் பிரதம மந்திரியை தலைவராகக் கொண்ட அமைச்சரவையின் அறிவுரைக்கு கட்டுப்பட்டுத்தான் எப்பொழுதும் நடக்க வேண்டும்.

2. Explain how the president exercises the power of pardon. மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பயன்படுத்தும்

முறை குறித்து விளக்குக.

(அல்லது)

What is Pardoning Power? Can it be subjected to judicial review? Compare President's pardoning power with Governor's pardoning power. (மன்னிப்பு வழங்கும் அதிகாரம் என்றால் என்ன? அது நீதிமன்ற மறுசீராய்விற்குட்பட்டதா? குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தையும், ஆளுநரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தையும் ஒப்பிடுக.)

(அல்லது)

Explain the Pardoning Power of President and Governor. (குடியரசுத் தலைவரின் மற்றும் மாநில ஆளுநரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தினை விவரி.)

(அல்லது)

Compare
Pardoning Power of the President and the Governor.
ஒப்பிடுக.
குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம்.

(அல்லது)

State whether the pardoning power of the President under the Constitution extends to criminal contempts of Court. (இந்திய அரசியல் சட்டத்தில் குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரம் நீதிமன்ற அவதூறுக்கும் உள்ளதா என்பதை விளக்குக.[1])

மன்னிப்பளிக்கும் அதிகாரம் (Pardoning Power):

குற்றவாளிகளுக்கு, அவர்களது தண்டனையிலிருந்து மன்னிப்பு அளிப்பதற்கு குடியரசுத் தலைவருக்கும், ஒரு மாநில ஆளுநருக்கும் உள்ள அதிகாரமே மன்னிப்பளிக்கும் அதிகாரம் எனப்படுகிறது. குடியரசுத் தலைவருக்கும் ஆளுநருக்கும் இந்திய அரசியலமைப்பு பல்வேறு அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. அந்த வகையில் இந்த மன்னிப்பளிக்கும் அதிகாரமும் அடங்கும்.

1. ஒரே வினாவிலேயே குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தைக் காண உள்ளதால், குடியரசுத் தலைவரின் மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் தொடர்பான இவ்வினா இங்கும் சேர்க்கப்பட்டுள்ளது - ஆசிரியர்

குடியரசுத் தலைவரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம் (President's Pardoning Power):

இந்த அதிகாரத்தை, குடியரசுத் தலைவருக்கு **ஷரத்து 72** வழங்கியுள்ளது. இதன்படி, அவர் பின்வரும் தண்டனைக்குள்ளான எந்த நபரையும் அத்தண்டனையிலிருந்து மன்னிப்பளிக்கவும் (pardon), அதனை நிறுத்தி வைக்கவும் (reprieve), தண்டனை நிறை வேற்றுகையை காலந் தாழ்த்தவும் அல்லது குறைக்கவும் (respite or remission) அல்லது தண்டனையை இடைநிறுத்தி வைக்க (suspend), குறைக்க (remit), அல்லது மாற்றிக் குறைக்க (commute) அதிகாரம் அளித்துள்ளது. அவை,

(a) இராணுவ நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனை அல்லது சிறைவாசம்;

(b) மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் பொருந்தக் கூடிய விஷயம் தொடர்பான சட்டம் எதற்கும் எதிரான குற்றத்திற் குண்டான தண்டனை அல்லது சிறைவாசம்;

(c) சம்பந்தப்பட்ட தண்டனை, ஒரு மரண தண்டனையாக இருக்கும் அனைத்து தேர்வுகளிலும்.

Manuram v. Union of India[1]

இவ்வழக்கில், மன்னிப்பளிக்கும் அதிகாரத்தினை குடியரசுத் தலைவர், அமைச்சரவையின் அறிவுரையின்படி செயல்படுத்த வேண்டும், என்று கூறப்பட்டது.

Kuljeet Singh v. Lt. Governor of Delhi [2]

இவ்வழக்கு 'பில்லா ரங்கா வழக்கு' என பிரபலமாக அழைக்கப்பட்டதாகும். இவ்வழக் கில் மரண தண்டனை குற்ற வாளிகளான பில்லா மற்றும் ரங்கா, ஷரத்து 72-ன் கீழ் தங்கள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையிலிருந்து மன்னிப்பளிக்கும்படி குடியரசுத் தலைவரிடம் கருணை மனு செய்தனர். ஆனால் இதை குடியரசுத் தலைவர் நிராகரித்து விட்டார். இதை எதிர்த்து குடியரசுத் தலைவர் தனது மேற்படி அதிகாரத்தை நியாயமான (fair and reasonable) முறையில் செயல்படுத்தியிருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டனர். ஆனால் கருணை மனுவை

1. (1981) 1 SCC 107
2 AIR 1982 SC 774

ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது குறித்த குடியரசுத் தலைவரின் அதிகாரம் தொடர்பான வழிமுறைகள் (guidelines) எதையும் இந்திய அரசு வகுக்கவில்லை என்று உச்ச நீதிமன்றம் கை விரித்துவிட்டது. இதனால் அவர்களுடைய மரண தண்டனையை நிறைவேற்ற உத்திரவிட்டது.

Kehar Singh v. Union of India[1]

Kehar Singh என்பவர் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியை சுட்டுக் கொலை செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர். இவ்வழக்கில் **ஷரத்து 72**-ன்படி, Kehar Singh தன்னை மன்னிக்கக் கோரி கருணைமனு ஒன்றை குடியரசுத் தலைவரிடம் கொடுத்தார். ஆனால் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில், எவ்வித காரணத்தை யும் காட்டாமல், அக்கருணை மனுவை நிராகரித்து விட்டார். எவ்வித காரணத்தையும் தெரிவிக்காமல், கருணை மனுவை நிராகரிக்க குடியரசுத் தலைவருக்கு உரிமை உண்டு என மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் மன்னிப்பளித்தல் தொடர்பாக குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தின் எல்லையை உச்ச நீதிமன்றம் பல கோணங்களில் எடுத்துக்காட்டியது.

மேற்படி வழக்குகளுக்கெல்லாம் முன்னர் எழுந்த **Godse v. State of Maharashtra**[2] எனும் வழக்கில் **மகாத்மா காந்தியை** சுட்டுக் கொலை செய்த **Godse** கொடுத்த கருணை மனு முறையற்ற விதத்தில் நிராகரிக்கப்பட்டதாக, அவன் உச்ச நீதிமன்றத்தில் வாதிட் டார். அவ்வாறு நிராகரிக்கப்பட்டது, முறையான விதத்திலா, முறையற்ற விதத்திலா என்பது தொடர்பாக குடியரசுத் தலைவரின் மன்னிப்பளிக்கும் அதிகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. எனினும் பின்வரும் வழக்கில் குடியரசுத் தலைவர் நிராகரித்த கருணை மனுவில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு அதைப் பரிசீலனை செய்தது குறிப்பிடத்தக்கது.

Jumman Khan v. State of U.P.[3]

இவ்வழக்கில் 6 வயது சிறுமியை வன்புணர்ச்சி செய்து, கழுத்தை நெறித்து கொலை செய்த குற்றத்திற்காக மனுதாரருக்கு

1. AIR 1989 SC 653 : (1989) 1 SCJ 126
2. AIR 1961 SC 600
3. (1991) 1 SCC 752

அமர்வு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது உயர் நீதிமன்றத்தாலும் உறுதி செய்யப்பட்டது. இதை எதிர்த்து மனுதாரர் உச்ச நீதிமன்றத்தில் செய்த சிறப்பு அனுமதி மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் தனக்கு மன்னிப்பு அளிக்க வேண்டி மாநில ஆளுநரிடம் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து மனுதாரர் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினார். ஆனால் இதுவும் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் இவ்வாறு குடியரசுத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்ட கருணை மனு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. எனவே உச்ச நீதிமன்றம் இதை மறு பரிசீலனை செய்து முடிவில் அதில் தலையிடுவதற்கு முகாந்திரம் ஏதுமில்லை என்று கூறியது.

மாநில ஆளுநரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம் (Governor's Pardoning Power):

ஷரத்து 161, ஒரு மாநில ஆளுநருக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரத்தை வழங்குகிறது. அதன்படி, மாநில ஆளுநரானவர், மாநில நிர்வாக அதிகாரம் பொருந்தக் கூடிய ஒரு விஷயம் தொடர்பான சட்டம் எதற்கும் எதிராக செய்யப்பட்ட குற்றத்திற்கான தண்டனையடைந்த எந்த நபரின் தண்டனையும் மன்னிக்க, நிறுத்தி வைக்க, அதன் நிறைவேற்றலை காலந்தாழ்த்த அல்லது குறைக்க அல்லது தண்டனையை இடைநிறுத்தி வைக்க, குறைக்க அல்லது மாற்றிக் குறைக்க அதிகாரம் படைத்தவராவார்.

K.M.Nanavathi v. State of Bombay[1]

இவ்வழக்கில், நானாவதி என்பவர் கொலைக் குற்றத்திற்கு ஆளாகி, மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு கொணரப்பட்டு உயர் நீதிமன்றத்தால் 14 வருட காலம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டார். அவரைக் கைது செய்து சிறையிலடைக்கும்படி நீதிமன்றம் பிடியாணையைப் பிறப்பித்தது. ஆனால் அப்பிடியாணையைப் பெற்ற அக்காவலர் அதனை செயல்படுத்த முடியாமல் திரும்பினார். ஏனெனில், பம்பாய் மாநில ஆளுநரின், அரசியல் சட்டம் **161வது ஷரத்தின்** கீழ் கொலைக் குற்றத்திற்குண்டான ஆயுள் தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உத்திரவு ஒன்று காவலதிகாரிக்கு வழங்கப்பட்டது. ஆளுநரின் அவ்வுத்திரவினால் ஏற்பட்ட இச்சூழ்நிலையில்,

1. AIR 1961 SC 112

ஆளுநரின் செயல் சட்டத்திற்குட்பட்டதா என்பதை பம்பாய் வழக்கில் உச்ச நீதிமன்றம் பரிசோதனை செய்தது. நீதிமன்றத்தின் உத்திரவிற்கும், ஆளுநரின் அரசியலமைப்பு சட்ட அடிப்படையான உத்திரவிற்கும் ஏற்பட்ட மோதலில் ஆளுநரின் செயல் அரசியல் சட்டத்திற்குட்பட்ட ஒன்றாகும் எனப்பட்டது. ஏனெனில், அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 161, ஆளுநரின் அதிகாரத்திற்கு எவ்விதமான கட்டுப்பாடும் விதிக்கவில்லை என்றும், ஆளுநர், குற்றத்திற்குரிய தண்டனையை நீதிமன்றம் விசாரணைக்கு முன்னும், நடந்து கொண்டிருக்கும் பொழுதும், தண்டனை அளித்தற்குப் பின்னும், இடைநிறுத்தி வைக்கலாம் என்பதை அரசியலமைப்பு சட்டத்தின் 161வது ஷரத்து தெளிவாக்குகிறது என்றும், ஆளுநரின் இவ்வதிகாரத்தின் மீது நீதிமன்றம் எந்தக் கட்டுப்பாட்டையும் செய்ய இயலாது என்றும், இருப்பினும், ஆளுநரின் தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உத்திரவானது உச்ச நீதிமன்றம் அவ்வழக்கின் மேல்முறையீட்டை எடுத்துக் கொள்ளும் வரைதான் செல்லும், என்றும் கூறப்பட்டது.

Sher Singh v. State of Punjab[1] எனும் வழக்கில் தண்டனையை மன்னிக்கக் கோரும் கருணை மனுவில், விரைவாக முடிவு வழங்கப்பட வேண்டும், என்று கூறப்பட்டது.

குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம் - ஒரு ஒப்பு நோக்கல்:

தண்டனையை மன்னிக்க இருவருக்கும் அதிகாரம் உள்ளது. இதில் மாற்றுக் கருத்து ஏதும் இல்லை. ஆனால் மரண தண்டனை தொடர்பான அனைத்து நேர்வுகளில் குடியரசுத் தலைவர்தான் ஷரத்து 72 (1) (c) படிக்கு மன்னிப்பளிக்க அதிகாரம் படைத்தவர். மாநில ஆளுநருக்கு இவ்வதிகாரம் கிடையாது. மேலும் **ஷரத்து 72(1)(a)**-ன்படி, இராணுவ நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தண்டனையில், குடியரசுத் தலைவர் மன்னிப்பு முதலியவற்றை அளிக்கலாம். ஆனால் ஆளுநர் அவ்வாறு செய்ய இயலாது. எனினும், மரண தண்டனையை நிறுத்தி வைத்தல், குறைத்தல் அல்லது மாற்றியமைத்தல் ஆகியவற்றில் குடியரசுத் தலைவரும் சரி, மாநில ஆளுநரும் சரி, இருவருக்குமே ஏககால அதிகாரமுண்டு (Concurrent power).

மன்னிப்பளிக்கும் அதிகாரம் நீதிமன்ற சீராய்விற்குட்பட்டதா?

குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் குற்றவாளியின்

1. AIR 1983 SC 361

தண்டனையை அவரது மனுவின் அடிப்படையில் மன்னிக்கலாம் அல்லது மன்னிக்காமல் நிராகரிக்கவும் செய்யலாம். இவர்கள் இவ்வாறு செய்தது நீதிமுறைக் குட்பட்டதா இல்லையா என்பதை ஆராயும் அதிகாரம், உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு. அதாவது, மன்னிப்பளிக்கும் அதிகாரம், உச்ச நீதிமன்றத்தின் சீராய்வு (judicial review) அதிகாரத்திற்குட்பட்டதே. இவ்வாறு **Hukum Singh v. Union of India**[1] வழக்கில் கூறப்பட்டது. மேலும், ஷரத்து 72-ன் கீழ் மன்னிப்பு முதலானவற்றை அளிப்பதற்கு குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தின் பரவெல்லையை, நீதிமுறை சீராய்வின் கீழ் நீதிமன்றம் ஆய்ந்தறியலாம், என **Kehar Singh v. Union of India**[2] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

3. Discuss the executive powers of the President of India. How do they differ from that of Governor of a State? (குடியரசுத் தலைவரின் செயலாட்சி அதிகாரங்களை விவாதிக்க. அவை எவ்வாறு ஒரு மாநில ஆளுநரின் அத்தகு அதிகாரங்களுடன் மாறுபடுகின்றது?)

(அல்லது)

Is the Indian President bound by the advice tendered by the Council of Ministers? Compare the position of Governors of States in India with that of the President on the question. (இந்தியக் குடியரசுத் தலைவர் அமைச்சரவை கொடுக்கும் அறிவுரைக்கு கட்டுப் பட்டவரா? இது பற்றிய ஆளுநர்களுடைய நிலையை குடியரசுத் தலைவர் நிலையோடு ஒப்பிடுக.)

(அல்லது)

Constitution of India confers every power to the President. Similarly to the Governors in States. How do they exercise their powers? (இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்து அதிகாரங்களையும் குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது. அதே போல் மாநிலங்களில் ஆளுநர்களுக்கும். இந்த அதிகாரங்களை அவர்கள் எவ்வாறு செயல்படுத்துகிறார்கள்?)

(அல்லது)

Compare the constitutional position of the President and Governor

1. AIR 1975 P & H 902
2. AIR 1989 SC 653

of a State. Are they always bound by the advice of the Council of Ministers? (இந்திய அரசியலமைப்பில் குடியரசுத் தலைவர் மற்றும் ஒரு மாநில ஆளுநரின் நிலையை ஒப்பிடுக. அவர்கள் எப்போதும் அமைச்சர்கள் குழுவின் அறிவுரைக்கு கட்டுப்பட்டவர்களா?)

குடியரசுத் தலைவரின் நிர்வாக (செயலாட்சி) அதிகாரங்கள்:

[பக்கம் எண். 17-ல் வினா எண் (7)-ல் காண்க.]

குடியரசுத் தலைவரின் நிர்வாக (செயலாட்சி) அதிகாரத்திலிருந்து மாநில ஆளுநரின் அத்தகு அதிகாரம் வேறுபடும் விதம்:

இந்திய அரசாங்கத்தின் நிர்வாக (செயலாட்சி) அதிகாரம், குடியரசுத் தலைவருக்கு (President) வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசாங்கத்தின் நிர்வாக (செயலாட்சி) அதிகாரம், ஆளுநருக்கு (Governor) அளிக்கப்பட்டுள்ளது. ஆளுநர், தனது மாநில அமைச்சரவை (Council of Ministers) கூறும் அறிவுரைகளுக்கு கட்டுப்பட்டவர் என்றாலும் அவர் சிலவற்றை தன்விருப்புரிமைப்படி (in his discretion) செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளார். ஆனால் குடியரசுத் தலைவருக்கு அப்படிப்பட்ட தன்விருப்புரிமை அதிகாரம் அளிக்கப் படவில்லை. எனினும், குடியரசுத் தலைவர், பதவியால் ஒரு மாநில ஆளுநரை விட உயர்ந்தவர். மாநில ஆளுநரை நியமிக்கும் அதி காரமே இவரிடம்தான் உள்ளது. மேலும், ஆளுநர் சில மசோதாக் களின் மீது குடியரசுத் தலைவரின் முன்னனுமதி இல்லாமல், அவசர சட்டம் (Ordinance) எதையும் பிறப்பிக்க இயலாது. மேலும் நெருக்கடி நிலை பிரகடன அதிகாரம் குடியரசுத் தலைவரிடம்தான் உள்ளது. இதைத்தவிர, குடியரசுத் தலைவரின் நிர்வாக (செயலாட்சி) அதிகாரத்திலிருந்து மாநில ஆளுநரின் அத்தகு அதிகாரத்தை பிரித்துக் காட்டும் வண்ணம் பெரிய மாறுபாடுகள் ஏதுமில்லை. மாறாக அதிக ஒற்றுமைகள்தான் காணப்படுகின்றன. [மேலும் விபரங்களுக்கு குடியரசுத் தலைவரின் மற்றும் மாநில ஆளுநரின் நிர்வாக (செயலாட்சி) அதிகாரங்களைச் சேர்த்துப் பயிலவும்.]

4. (a) What are the Constitutional functions and powers of a Governor?

(b) Examine the nature and extent of the discretionary powers, if any, enjoyed by a Governor.

(c) Do you agree with the view that the office of the Governor

should be abolished?

(அ) ஒரு ஆளுநரின் அரசியலமைப்புரீதியான பணிகள் மற்றும் அதிகாரங்கள் யாவை?

(ஆ) ஒரு ஆளுநரால் அனுபவிக்கப்படும் தன்விருப்புரிமை அதிகாரங்கள் ஏதேனும் இருந்தால், அதன் தன்மை மற்றும் எல்லையை ஆராய்க.

(இ) ஆளுநர் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் நீர் ஒத்துப் போகிறீரா? உமது விடைக்கு ஆதாரங்காட்டி விளக்குக.

(a) *பக்கம் எண். 32-ல் வினா எண். (1)-ல் காண்க.*

(b) *பக்கம் எண். 46-ல் வினா எண். (5)-ல் காண்க.*

(c) ஆளுநர் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ஒத்துப்போகவியலாது. நாட்டிற்கு ஒரு அரசனாக, குடியரசுத் தலைவர் வீற்றிருக்கும் பொழுது, மாநிலத்திற்கு ஒரு சிற்றரசாக ஆளுநர் வீற்றிருக்க வேண்டியது, பதவியின் அடிப்படையில் இன்றியமையாததாகும்.

இந்திய அரசியலமைப்பு எங்ஙனம் குடியரசுத் தலைவருக்கு சில அதிகாரங்களை அளித்துள்ளதோ, அதே போன்று மாநில ஆளுநர்களுக்கும் அதிகாரங்களை வழங்கியுள்ளது. ஆளுநர் பதவி ஒழிக்கப்பட்டுவிட்டால் இத்தகு அதிகாரங்களை எப்படி, யார் செயல்படுத்துவது என்பது குழப்பத்திற்குரிய பிரச்சனையாகிவிடும்.

குடியரசுத் தலைவரைப் போல் ஆளுநர் தனது பணிகளைச் செய்யும்பொழுது, அமைச்சரவையின் அறிவுரைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர் அல்லர். அவர் தன்விருப்புரிமையின்படி (discetion) செயல்படலாம். முதலமைச்சரை நியமனஞ் செய்யும் பொழுதும், ஒரு அமைச்சரை பதவி நீக்கம் செய்யும் பொழுதும், சட்டமன்றத்தைக் கலைக்கும் பொழுதும, மேலும் ஷரத்து 356ன்படி, மாநிலத்தில் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தக் கோரி குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பும் பொழுதும் அவர் தனது தன்விருப்புரிமை அதிகாரத்தின்படி செயல்படலாம். குடியரசுத் தலைவருக்கு இல்லாத தன் விருப்புரிமை அதிகாரம் மாநில ஆளுநர்களுக்கு அளிக்கப்பட்டதிலிருந்து, ஆளுநர் பதவியின் முக்கியத்துவம் புலனாகும். ஆகவே, ஆளுநர் பதவி ஒழிக்கப்படக் கூடாது.

(ii) மாநில அமைச்சரவை (Council of Ministers of State)

5. State the relation between a Governor of a State and its Council of Ministers. (ஒரு மாநில ஆளுநருக்கும் அதன் அமைச்சரவைக்கும் உள்ள தொடர்பினைக் கூறுக.)

பொதுவில், மாநிலத்தின் ஆளுநருக்கும் அதன் அமைச் சரவைக்கும் இடையே உள்ள உறவு, இந்திய அரசின் குடியரசுத் தலைவருக்கும் அதன் அமைச்சரவைக்கும் உள்ள உறவை ஒத்ததாக இருக்கும். எனினும், ஒரு முக்கிய வேறுபாடு இவ்வுறவினை பாகுபடுத்திக் காட்டுகிறது. அஃதாவது, குடியரசுத் தலைவருக்கு **தன்னுரிமைப்படி (In his discretion)** எச்செயலையும் செய்ய அரசியலமைப்பு அதிகாரமளிக்கவில்லை. ஆனால், ஆளுநருக்கு அவ்விதம் தன்னுரிமைப்படி சில செயல்களைச் செய்ய அரசியலமைப்பு அதிகாரமளிக்கிறது.

"முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு அமைச் சரவை இருக்க வேண்டும். அது அரசியலமைப்பின் கீழ் ஆளுநர் தன் பணிகளை அல்லது அதில் சிலவற்றை தன்னுரிமைப்படி செய்யத் தேவைப்படும் பொழுதைத் தவிர, மற்ற பணிகளை ஆளுநர் செய்யும்பொழுது, அவருக்கு உதவியும், அறிவுரையும் வழங்கிட வேண்டும்," என **ஷரத்து 163** கூறுகிறது. ஷரத்து 163ன்படி, ஆளுநர் தனது தன்னுரிமை அதிகாரத்தை பயன்படுத்தும்பொழுது, அவர் அமைச்சரவையின் அறிவுரைப்படி செயல்படத் தேவையில்லை. மேலும் அவர்களது அறிவுரையினை நாட வேண்டிய அவசியமு மில்லை. இதனை **ஷரத்து 163 (2)** மேலும் தெளிவாக்குகிறது. அதாவது "அரசியலமைப்பின் கீழ் எவ்வித ஷரத்தைக் குறித்த பிரச்சனையானாலும் அல்லது ஒரு விஷயமாக இல்லாமல் இருந் தாலும் கூட ஆளுநர் தன்னுரிமைப்படி செயல்படத் தேவைப்படும் பொழுது, அவர் எடுக்கும் தீர்மானம்தான், இறுதித் தீர்மானமாக இருக்கும். ஆளுநரின் எச்செயலின் செல்லுதன்மையைக் குறித்தும், அவர் தன்னுரிமைப்படி செயல்படக்கூடாது என்ற அடிப்படையில், வினவ முடியாது".

இவற்றையெல்லாம் கூறிய அரசியலமைப்பு, ஆளுநரின் தன்னுரிமை அதிகாரங்கள் என்னென்ன என்று வரையறுக்கவில்லை. இப்படிக் கூறாமல் விடுத்தது, பல சிக்கல்களை உண்டு செய்தது.

Sunil Kumar v. Government of West Bengal[1]

இவ்வழக்கில், "ஆளுநரின் தன்னுரிமை அதிகாரமானது தற்பொழுதைய அரசியலமைப்பால் எடுக்கப்பட்டுவிட்டது. ஆகையால், அவர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான் செயல்பட வேண்டும்", என கல்கத்தா உயர் நீதிமன்றம் கூறியது.

அரசியலமைப்பின் ஒரு இடத்தில் மட்டும், அதாவது **6வது அட்டவணையில் 9 மற்றும் 18வது பத்திகளில்**, ஆளுநர், அஸ்ஸாம் மலைப்பகுதிகளின் நிர்வாகம் குறித்து தன்னுரிமைப்படி செயல்பட வேண்டும் என அரசியலமைப்பால் வெளிப்படையாக வேண்டப்படுகிறார். சாதாரணமாக, இவர் அமைச்சரவையின் ஆலோசனையின்படி செயல்பட வேண்டி உள்ளது. ஆனால் ஆளுநருக்கும் அமைச்சரவைக்குமிடையே ஏதாவதொரு விஷயம் குறித்து முரண்பாடு எழுமாயின், ஆளுநர் தனது தன்னுரிமை அதிகாரத்தை முழு அளவுடன் செயல்படுத்தலாம்.

மேலும், பின்வரும் காரணங்களுக்காக ஆளுநர் தனது தன்னுரிமை அதிகாரத்தினை செயல்படுத்த வேண்டப்படலாம்.

1. முதலமைச்சரை நியமனம் செய்யும் பொழுது;

2. ஒரு அமைச்சரை, பதவி நீக்கம் செய்யும் பொழுது;

3. சட்டமன்றத்தைக் கலைக்கும் பொழுது;

4. ஷரத்து 356ன்படி மாநிலத்தில் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தக்கோரி குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பும் பொழுது.

மாநிலத்தில் பொறுப்பான அமைச்சரவை செயல்படும் பொழுது, அம்மாநில ஆளுநர் பெயரளவிற்கான தலைவராகச் செயல்படுகிறார். அவரது பெயரில் அமைச்சரவை மாநிலத்தை ஆட்சி புரிகின்றது. அரசியல் நிலையில்லாத தன்மை நிலவும்போது தான், அவர் உண்மையான மாநில ஆளுநராகச் செயல்படுகிறார். அவர் உண்மையில் அதிகாரங்களைப் பயன்படுத்தும்பொழுது அரசியலமைப்பிற்கு உட்பட்ட முறையில்தான் அதைச் செய்ய வேண்டும். மேலும், அவரது செயல்கள் மத்திய அரசால் கவனிக்கப் படுகின்றன. ஆக, திட்டமான, வரம்புக்குட்பட்ட நிர்வாகத்துறை தலைவராக அவர் செயல்பட வேண்டியுள்ளது.

1. AIR 1950 Cal. 274

மத்திய - மாநில பாராளுமன்ற அரசாங்கம்
(Parliamentary Form of Government)



(iii) மாநில அரசு முதன்மை வழக்குரைஞர் (The Advocate - General for the State)

6. The Advocate-General for the State - Write short notes. (மாநில அரசு முதன்மை வழக்குரைஞர் - குறுகிய விடை தருக.)

ஷரத்து 165 (1)–ன்படி, உயர் நீதிமன்ற நீதிபதியாவதற்கு தகுதி பெற்றுள்ள ஒருவரை, மாநில ஆளுநர், மாநில அரசின் முதன்மை வழக்குரைஞராக நியமித்தல் வேண்டும்.

ஷரத்து 165 (2)–ன்படி, அவர், ஆளுநரால் ஒப்படைக்கப் படும் சட்ட விஷயங்களில் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். மேலும் சட்டத் தன்மை வாய்ந்த பிற கடமைகளைச் செய்தல் வேண்டும்.

இவை மட்டுமல்லாது, அவர், அரசியலமைப்பாலோ அல்லது பிற சட்டங்களின் கீழோ அவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை ஆற்ற வேண்டும்.

ஷரத்து 165 (3)–ன்படி, ஆளுநரின் விருப்புரிமைக்குட் பட்டு அவர் அப்பதவி வகித்தல் வேண்டும். மேலும் ஆளுநர் தீர்மானிக்கும் ஊதியத்தை பெற வேண்டும்.

-o0o-

அத்தியாயம் 2

சட்டத்துறை அதிகாரத்தின் அமைப்பு
(Organisation of Legislative Power)

(அ) மத்திய சட்டத்துறை
(ஷரத்துகள் 79 முதல் 122)
The Union Legislature
(Articles 79 to 122)

(i) பாராளுமன்றம்
(Parliament)

1. Give a brief account of the Constitutional provisions regarding introduction and passing of Bills. (மசோதாக்களை அறிமுகம் செய்வதிலும் நிறைவேற்றுவதிலும் உள்ள அரசமைப்பு வகை முறைகளை சுருக்கமாக தருக.)

(அல்லது)

Passing of Bills in Parliament - Write short notes. (நாடாளு மன்றத்தில் சட்ட முன் வடிவங்களை நிறைவேற்றல் - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்பின் **79வது** ஷரத்தானது, மத்திய

அரசுக்கு குடியரசுத் தலைவரையும், மாநிலங்களவை (Council of States), மக்களவை (House of the People) என முறையே அழைக்கப் படும் இரண்டு அவைகளையும் உள்ளடக்கியதொரு பாராளுமன்றம் இருத்தல் வேண்டும் என்று கூறுகிறது. மேலும் **ஷரத்துகள் 80 மற்றும் 81 முறையே** மேற்கண்ட இரண்டு அவைகளின் அமைப்பைக் குறித்து கூறுகின்றன. இப்படிப்பட்ட பாராளுமன்றத் தில்தான் மசோதாக்கள் (Bills) அறிமுகப்படுத்தப்பட்டு, சட்டமாக இயற்றப்படுகின்றன. அவற்றிற்குண்டான நடைமுறை குறித்து பின்வருமாறு காண்போமா?

மசோதாக்களை அறிமுகப்படுத்தலும் நிறைவேற்றலும் (ஷரத்து 107):

ஷரத்து 107-ன்படி, பண மசோதா (Money Bill) மற்றும் இதர நிதி மசோதாக்களைத் தவிர உள்ள சாதாரண மசோதாக்களை (Ordinary Bills) பாராளுமன்றத்தின் இரு அவைகளில் (Houses) எந்தவொரு அவையிலும் அறிமுகப்படுத்தலாம்.

அம்மசோதா பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறை வேற்றப்பட்ட பின்னர் **ஷரத்து 111-ன்படி,** குடியரசுத் தலைவரின் இசைவு வேண்டி அவரிடம் அனுப்பப்படும். குடியரசுத் தலைவரால் இசைவு அளிக்கப்பட்டால், அம்மசோதா, சட்டமாகிவிடும்.

சற்று விளக்கமாகக் கூறினால், ஒரு மசோதாவை நிறைவேற்ற மேற்கண்ட இரண்டு அவைகளும் பின்வரும் மூன்று கட்டங்களை தாண்டி வர வேண்டியுள்ளது. அதாவது, **முதல் கட்டத்தில்,** பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளில் ஏதேனுமொன்றில் அமைச்சர்களாலோ அல்லது அவையின் உறுப்பினர்களாலோ ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது. இக்கட்டத்தில் அம்மசோதா வின் மீது எவ்வித விவாதமும் செய்யப்படுவதில்லை. இதற்கடுத்த **இரண்டாவது கட்டத்தில்,** அம்மசோதாவின் ஒவ்வொரு பகுதியும் விவாதிக்கப்படுகிறது. மேலும் அவ்விவாதத்தின் அடிப்படையில், அம்மசோதாவில் திருத்தங்கள் ஏதேனும் செய்யப்பட வேண்டி யிருந்தால், அவை செய்யப்படுகின்றன. **மூன்றாவது கட்டத்தில்,** அம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட அந்த அவையால் நிறைவேற் றப்படுகிறது (passed). இவ்வாறு நிறைவேற்றப்பட்ட அம்மசோதா, மற்றொரு அவையால் நிறைவேற்றப்பட அங்கு அனுப்பப்படுகிறது. அந்த மற்றொரு அவை, அம்மசோதா குறித்து விவாதிக்கிறது. அம்மசோதாவில் திருத்தங்கள் எதையும் செய்யாமல், அந்த அவை

அதனை நிறைவேற்றி விடலாம். ஒருவேளை அம்மசோதாவில் அந்த மற்றொரு அவை திருத்தங்கள் எதையும் செய்தால், அதை தனக்களுப்பிய அவையின் ஒப்புதலுக்காக திருப்பி அனுப்ப வேண்டும். அங்கு அத்திருத்தங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டால், அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாக பொருளாகும். இறுதியாக, அம்மசோதா **ஷரத்து 111-ன்படி** குடியரசுத் தலைவரின் இசைவிற்கு அனுப்பப்பட்டு, அவரும் தனது இசைவை அளித்து விட்டால், அது சட்டமாகி விடுகிறது.

இரு அவைகளின் கூட்டு அமர்வு (Joint sitting of both Houses) (ஷரத்து 108):

சில சூழல்களில், ஒரு மசோதா குறித்து இரு அவைகளும் ஒத்துப்போக முடியாத (முரண்பாடான நிலை) ஏற்படலாம். அப்பொழுது அம்மசோதா நிறைவேற்றப்பட ஒரு முட்டுக்கட்டை **(deadlock)** நிலை உருவாகிவிடும். இம்முட்டுக்கட்டை நிலையைத் தீர்க்க, இரு அவைகளையும் ஒன்றாக கூட்டி, அம்மசோதாவை நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டம் **ஷரத்து 108-ன் கீழ்** வகை செய்கிறது. இங்ஙனம் இரு அவைகளையும் ஒன்றாகக் கூட்டுவது **கூட்டு அமர்வு (joint sitting)** எனப்படும்.

ஷரத்து 108 (1)–ன்படி, பின்வரும் சூழல்களில் மேற்படி முட்டுக் கட்டை நிலை உருவாகிறது. அதாவது, ஒரு மசோதா ஒரு அவையால் நிறைவேற்றப்பட்டு, மற்றொரு அவையின் நிறைவேற்றலுக்காக அனுப்பப்படும் பொழுது, (a) அம்மற்றொரு அவை அம்மசோதாவை நிராகரித்து விட்டால்; அல்லது (b) அம்மசோதாவில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து இரு அவைகளும் இறுதியாக ஒத்துப்போக முடியவில்லையென்றால்; அல்லது (c) அம்மசோதாவை அம்மற்றொரு அவை பெற்ற பிறகு, ஆறு மாதங்கள் ஆகியும், அதனை நிறைவேற்றாமலேயே காலம் கடத்தி இருந்தால்.

குடியரசுத் தலைவர், அம்மசோதா குறித்து கலந்தாலோசிக்கவும், அதன் மீது வாக்களிக்கவும் இரண்டு அவைகளையும் ஒன்றாக கூடும்படி அழைப்பு விடுப்பார். அவ்வாறு ஒன்றாகக் கூடிய பிறகு, அப்பொழுது ஆஜராகியுள்ள இரு அவைகளின் உறுப்பினர்களின் பெரும்பான்மையோர், அம்மசோதாவை ஆதரித்தால், அது இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். **[ஷரத்து 108 (4)]**. இவ்வாறு நிறைவேற்றப்படும் மசோதாவும், குடியரசுத்

மக்களவை அமைப்பைக் காட்டும் படம்



தலைவரின் இசைவைப் பெற்ற பிறகே சட்டமாகின்றது. இவ்வாறு முட்டுக்கட்டை (முரண்பாடு) தீர்க்கப்படுகிறது.

2. Deadlock of both Houses of Parliament - Write short notes. (நாடாளுமன்ற இரு அவைகளின் முரண்பாட்டினால் செயலற்றுப் போதல் - குறுகிய விடை தருக.)

(முந்தய வினாவின் விடையில் "இரு அவைகளின் கூட்டு அமர்வு" எனும் தலைப்பின் கீழ் காண்க.)

3.Define 'Money Bills' and explain the special procedure in respect of them. ('பண மசோதாக்கள்' என்பதற்கு இலக்கணம் கூறுக. மற்றும் அவை பொறுத்த தனிப்பட்ட நடைமுறையை விளக்குக.)

(அல்லது)

Money Bill - Write short notes. (பண மசோதா - குறுகிய விடை தருக.)

பண மசோதா (Money Bill) - வரையறை:

பின்வரும் விஷயங்களில் ஏதேனுமொன்றையோ அல்லது அனைத்தையுமோ உள்ளடக்கியது மட்டுமே, ஒரு பண மசோதா, என்று **ஷரத்து 110 (1)** வரையறுக்கிறது. அவை,-

(a) எந்த வரியின் விதிப்பும், ஒழிப்பும், குறைப்பும், மாற்றலும் அல்லது ஒழுங்குபடுத்தலும்.

(b) பணத்தை கடனாக வாங்குவதில் ஒழுங்குமுறை அல்லது இந்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட பொறுப்புறுதி ஏதாவது.

(c) திரட்டுநிதி (Consolidated Fund) அல்லது நிகழ்வுசார் நிதியின் (Contingency Fund) பாதுகாப்பு, அந்நிதியிலிருந்து, பணத்தை கொடுத்தல் அல்லது எடுத்தல்.

(d) இந்தியாவின் திரட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்கல்.

(e) இந்திய திரட்டு நிதியிலிருந்து ஈடுகட்டப்படும் என எந்த செலவினத்தையாவது அறிவித்தல்.

(f) இந்திய திரட்டு நிதி கணக்கில் அல்லது இந்தியாவின்

பொதுக் கணக்கில் பணத்தை பெற்றுக் கொள்ளல். அப்படிப்பட்ட பணத்தின் பாதுகாப்பு அல்லது வெளியீடு, அல்லது மத்திய அல்லது மாநில அரசினுடைய கணக்குகளை தணிக்கை செய்தல்.

(g) மேற்படி (a)-விலிருந்து (b) வரையிலுள்ள துணைச் சட்டக் கூறுகளில் குறிப்பிடப்பட்ட விபரங்களின் உடன் நிகழ்வான விபரங்கள்.

ஆனால் பின்வரும் காரணங்களுக்காக மட்டும் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு மசோதா, பண மசோதா ஆகாது.

(a) அபராதங்கள் அல்லது பணத்தொடர்பான தண்டனைத் தொகைகள் விதிப்பு; அல்லது

(b) உரிமத்திற்கான கட்டணம் செலுத்தல் அல்லது சேவைக்கான கட்டணம் செலுத்தல்; அல்லது

(c) வட்டார அதிகாரஅமைப்பால் அல்லது வட்டார நோக்கங்களுக்காக உண்டாக்கப்பட்ட அமைப்பினால் விதிக்கப்பட்ட, ஒழிக்கப்பட்ட, குறைக்கப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட எவ்வரியும். **[ஷரத்து 110 (2)].**

பாராளுமன்றத்தில் பண மசோதா நிறைவேற்றப்படும் தனிப்பட்ட நடைமுறை:

பண மசோதா ஒன்றினை மக்களவையில் (House of the People) மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். மாநிலங்களவையில் (Council of States) முடியாது, என **ஷரத்து 109 (1)** கூறுகிறது. பண மசோதாவானது மக்களவையால் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது மாநிலங்களவையின் பரிந்துரைகளுக்காக (Recommendations) அனுப்பப்படும். மாநிலங்களவை அதனை தன்னுடைய பரிந்துரைகளுடன் 14 தினங்களுக்குள் மக்களவைக்கு திருப்பி அனுப்பிவைத்துவிட வேண்டும்.

மாநிலங்களவையின் பரிந்துரைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ நிராகரித்துவிட்டு, அப்பண மசோதாவினை மக்களவை ஏற்றுக் கொள்ளலாம். ஒருவேளை, மக்களவை, மாநிலங்களவையின் பரிந்துரையில் எதையாவது ஏற்றுக் கொண்டு விட்டால், மேற்படி பண மசோதா இரு அவைகளிலும்

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்



2. நிர்வாகத் துறையினரை கட்டுப் படுத்தும் அதிகாரம்
1. கேள்வி கேட்க
2. விசாரணைவேண்டுமெனக்கோர
3. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்ற

1. சட்டமியற்றும் அதிகாரங்கள் மத்தியப் பட்டியல் மற்றும் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து துறைகளைப் பொறுத்தும் சட்டமியற்றுக் கூடிய அதிகாரம்

3. நிதிநிலை அதிகாரம்
1. பட்ஜெட்டை அங்கீகரிக்க
2. நிகழ்வுசார் செலவை அங்கீகரிக்க
3. வரி விதிக்க அல்லது விதிக்கப்பட்ட வரியை நீக்க

POWERS OF PARLIAMENT

5. இதர அதிகாரங்கள்
1. குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுத்தல்
2. குடியரசுத் தலைவர் மீது பழிச்சாற்றுதல்
3. உச்சநீதிமன்ற நீதிபதியை நீக்குதல்

4. அரசியலமைப்பை திருத்தும் அதிகாரம்.
1. எளிய பெரும்பான்மை பலத்தினால் திருத்தம்
2. தனிப்பெரும்பான்மை பலத்தினால் திருத்தம்
3. தனிப்பெரும்பான்மை பலத்தினாலும் மற்றும் பாதிக்கும் குறையாத மாநிலங்களின் ஒப்புதலாலும் திருத்தம்

நிறைவேற்றப்பட்டுவிட்டதாக கருதப்படும்.

ஒரு பண மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டு, மாநிலங் களவையின் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படும்பொழுது, அதனை பரிந்துரைகளுடன் 14 தினங்களுக்குள் மக்களவைக்கு, மாநிலங்களவை அனுப்பி வைக்காவிட்டால், அந்த 14 தினங்கள் முடிவுற்றவுடன் மேற்படி பண மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். அதாவது, மக்களவையில் நிறைவேற்றப்பட்டவாறே ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு மாநிலங்களவையானது பண மசோதாவை 14 தினங்களுக்கு மட்டும் நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்.

மாநிலங்களவையின் அனைத்து பரிந்துரைகளையும் மக்களவை நிராகரித்துவிட்டாலும் கூட, அப்பண மசோதா மக்களவையில் எப்படி நிறைவேற்றப்பட்டதோ, அதே வடிவிலேயே இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். பிறகு இது குடியரசுத் தலைவரின் இசைவிற்காக அனுப்பப்படுகிறது.

4. (a) What is a Money Bill? Describe the procedure for passing a Money Bill in Parliament.

(b) Describe the procedure for resolving a conflict between the two Houses of Parliament.

(அ) பண மசோதா என்றால் என்ன? பாராளுமன்றத்தில் ஒரு பண மசோதாவை நிறைவேற்றும் நடைமுறையை விளக்குக.

(ஆ) பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கு இடையேயான ஒரு முரண்பாட்டை தீர்ப்பதற்கு உண்டான நடைமுறையை விளக்குக.

(a) முந்தய வினாவில் காண்க.

(b) வினா எண் (1)-ல் "இரு அவைகளின் கூட்டு அமர்வு" எனும் தலைப்பின் கீழ்க் காண்க.

5. Describe the procedure for passing the following bills in Parliament

(a) Ordinary bills
(b) Money bills

(c) Constitution amending bills

நாடாளுமன்றத்தில் கீழ்க்கண்ட மசோதாக்களை நிறைவேற்றுவதற்கான முறைகளைப் பற்றி எழுதுக.

(அ) சாதாரண மசோதாக்கள்
(ஆ) நிதிநிலை மசோதாக்கள்
(இ) அரசமைப்பு சட்ட திருத்த மசோதாக்கள்

[(a) *வினா எண் (1)-ல் காண்க.* (b) *வினா எண் (6)-ல் காண்க.* (c) *பக்கம் எண். 206-ல் வினா எண் (1)-ல் காண்க.*]

6. Financial Bills - Write short notes. (நிதிநிலை மசோதாக்கள் - குறுகிய விடை தருக.)

ஷரத்து 110 (1) பண மசோதாக்களைப் பற்றிக் கூறுகிறது. அதன் கீழான (a) முதல் (f) வரையிலான உட்கூறுகளில் குறிப்பிடப் பட்டுள்ள விஷயங்களில் ஏதேனுமொன்றைக் குறித்த ஒரு மசோதா, நிதிநிலை மசோதா எனப்படும். இதனை நிறைவேற்றும் தனிப்பட்ட நடைமுறை குறித்து **ஷரத்து 117** கூறுகிறது.

அதன்படி, ஒரு நிதிநிலை மசோதாவை, குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் அறிமுகப்படுத்தக் கூடாது. மேலும், மக்களவையில் தான் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமே தவிர, மாநிலங்களவையில் கூடாது. எனினும் எந்த வரியையாவது குறைக்க அல்லது ஒழிப்பதற்கான வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு ஒரு திருத்தத்திற்கான மசோதாவை அறிமுகப்படுத்த, குடியரசுத் தலைவரின் பரிந்துரை தேவையில்லை. இந்த நிதிநிலை மசோதாக்கள் அங்கு நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றவுடன் சட்டமாகிறது.

7. Distinguish between Prorogation and Dissolution.

வேறுபடுத்துக
பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரை ஒத்தி வைத்தல் மற்றும் அவையைக் கலைத்தல்.

பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரை ஒத்தி வைக்கும் அதிகாரமும் **[ஷரத்து 89 (9)]** அவையைக் கலைக்கும் அதிகாரமும் **[ஷரத்து 85 (5)]** குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டத் தொடரை ஒத்தி வைத்தல் என்பது அவையின் வாழ்வையே முடித்ததாகாது. கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப் படுகிறது அவ்வளவுதான். ஆனால் கலைத்தல் என்பது, அவையின் வாழ்வினையே ஒரு முடிவுக்கு கொண்டு வரலாகும்.

கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்ட பின்னும், அவை மீண்டும் ஒன்று கூடும். ஆனால் அவையினைக் கலைத்த பிறகு, ஒரு புதிய மக்களவையை பொதுத் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

கூட்டத் தொடரை ஒத்தி வைத்தலில், அவையானது, ஒரு குறிப்பிட்ட காலம் வரை தனது தொழிலை செய்யாதிருக்கிறது. அவை மீண்டும் கூடும்பொழுது, தனது விட்ட பணியைத் தொடரும். ஆனால் அவையைக் கலைத்தவுடன் அதன் தொழில்கள் யாவும் முடிந்து விடுகிறது.

மக்களவை மட்டும் கலைக்கப்படும். மாநிலங்களவை ஒரு நிரந்தர அமைப்பாகையால் அது கலைக்கப்பட முடியாது. மக்களவையைக் கலைக்கும்போது பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் செயல்பட வேண்டும்.

8. Annual Financial Statement - Write short notes. (வருடாந்திர நிதி அறிக்கை - குறுகிய விடை தருக.)

வருடாந்திர நிதி அறிக்கை என்பது **'பட்ஜெட்' (Budget)** என சிறப்பாக அழைக்கப்படுகின்றது. **ஷரத்து 112 (1)-ன்படி,** குடியரசுத் தலைவர் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் உண்டான, வருடாந்திர நிதி அறிக்கையை பாராளுமன்றத்தில் இரு அவைகளின் முன்பும் வைக்க வேண்டும். இவ்வறிக்கையானது வரவிருக்கும் ஆண்டின், திட்டமிடப்பட்ட வருமானம் [estimated receipts (or) income] மற்றும் செலவினங்களைக் குறித்த விபரங்களைத் தருகிறது. இதில் திட்டமிடப்பட்ட செலவினங்களானது (estimated expenditure) **ஷரத்து 112(2)-ன்படி,** இரண்டு தனியான தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டு உள்ளது.

1. இந்தியாவின் திரட்டு நிதியிலிருந்து (The Consolidated fund of India) செய்யப்பட வேண்டிய செலவினங்கள்; 2. இந்தியத் திரட்டு நிதியிலிருந்து செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ள பிற செலவினங்கள். இங்கு 'இந்தியாவின் திரட்டு நிதி' என்பதன் பொருளை அறிந்து கொள்ளல் அவசியம்.

இந்தியாவின் திரட்டு நிதி (The Consolidated fund of India) - பொருள்:

"வரிகள் மற்றும் தீர்வைகள், இந்திய அரசாங்கத்தால் பெறப்படும் எல்லா வருவாய்களும், கருவூலச் சீட்டுகளின் வாயிலாக வசூலிக்கப்படும் எல்லா கடன் தொகைகளும், ஒன்று திரட்டப்பட்டு உருவாக்கப்படுவதே இந்தியாவின் திரட்டு நிதியாகும்" என்று **ஷரத்து 266** கூறுகிறது.

இந்திய திரட்டு நிதியிலிருந்து பாராளுமன்ற வாக்கெடுப்பு இல்லாமல் செய்யக்கூடிய செலவினங்களை, **ஷரத்து 112 (3)** பின்வருமாறு பகருகிறது.

(a) இந்தியாவின், குடியரசுத் தலைவருடைய ஊதியம் மற்றும் படிகள், அவரது அலுவலகம் தொடர்பான மற்றச் செலவினங்கள்

(b) மாநிலங்களவைத் (ராஜ்யசபா) தலைவர், மக்களவைத் (லோக்சபா) தலைவர், உதவித் தலைவர் ஆகியோரது ஊதியம் மற்றும் படிகள்

(c) இந்திய அரசாங்கத்தின் கடன் பொறுப்புகள்

(d) (i) உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம், படிகள் மற்றும் ஓய்வு ஊதியம்

(ii) கூட்டாட்சி நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு ஊதியம்.

(iii) அரசியலமைப்பு அமலுக்கு வருவதற்கு முன்பிருந்த உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு ஊதியம்

(e) இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் ஊதியம், படிகள் மற்றும் ஓய்வு ஊதியம்.

(f) நீதிமன்றம் அல்லது இசைவுத் தீர்ப்பாயம் ஏதேனும் வழங்கிய தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது முடிவின்படி செலுத்தப்பட வேண்டிய தொகை

(g) அரசியலமைப்பு அல்லது பாராளுமன்றச் சட்டம் அறிவிக்கும் வேறு செலவினங்கள்.

மாநிலங்களில் **ஷரத்து 202**-ன்படி, மாநில ஆளுநர் வருடாந்திர நிதி அறிக்கை சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டும்.

9. Chairperson of Rajya Sabha - Write short notes. (மாநிலங்களவை தலைவர் - குறுகிய விடை தருக.)

ராஜ்ய சபா அல்லது மாநிலங்களவை என்பது பாராளு மன்றத்தின் மேலவை ஆகும். இதன் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 250. இவர்களில் 12 பேரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். மீதியுள்ளோர் அதாவது 238 பேர் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள் ஆவர். **[ஷரத்து 80(1)]**.

குடியரசு துணைத் தலைவர் மாநிலங்களவையின் பதவி வழி தலைவர் (*ex officio* Chairman) ஆவார். மாநிலங்களவையானது தனது உறுப்பினர் ஒருவரை துணைத் தலைவராக (Deputy Chairman) தேர்ந் தெடுக்கும். **(ஷரத்து 89)**. மாநிலங்களவை தலைவரின் பதவியிடம் காலியாக உள்ள போது அல்லது அவர் குடியரசுத் துணைத் தலைவராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது அல்லது குடியரசுத் தலைவரின் பணிகளைச் செய்து கொண்டிருக்கும் போது, மாநிலங்களவைத் தலைவரின் கடமைகளை துணைத் தலைவர் ஆற்றுவார். துணைத் தலைவரின் பதவியிடமும் காலியாக இருந்தால், குடியரசுத் தலைவர் இதற்கென நியமனம் செய்யும் மாநிலங்களவை உறுப்பினர் ஒருவர் அக்கடமைகளைச் செய்வார்.

மாநிலங்களவையின் கூட்டங்களுக்கு தலைவர் தலைமை தாங்குவார். அவர் இல்லாத போது துணைத் தலைவர் தலைமை தாங்குவார். மாநிலங்களவை என்பது நிரந்தரமான அவையாகும். இது கலைக்கப்படுவதற்கு உட்பட்டதல்ல. இதன் உறுப்பினர்கள் ஆறு ஆண்டு கால அளவிற்காக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருப்பினும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகள் முடிந்ததும் ஓய்வு பெறுகின்றனர்.

மாநிலங்களவை என்பது ஒரு நிரந்தரமான அமைப்பு என்றாலும், அது தனது அதிகாரங்களைப் பொறுத்தவரை 'லோக் சபா' எனப்படும் மக்களைக்கு கீழ்ப்பட்ட நிலையிலேயே உள்ளது. ஒரு பண மசோதாவை மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். ஆனால் பண மசோதா மீது மாநிலங்களவைக்கு எந்த அதிகாரமும் இல்லை. அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை மாநிலங்களவையால் நிறைவேற்ற இயலாது. ஒரு சாதாரண மசோதாவை நிறைவேற்றுவது குறித்து இவ்விரண்டு அவைகளுக்கிடையே முட்டுக்கட்டையான

நிலை உருவாகி, இதற்காக நடத்தப்படும் கூட்டு அமர்வில் அதை நிறைவேற்றும் அதிகாரம் மக்களவைக்குதான் உண்டு. எனவே மாநிலங்களவை என்பது வலுக்குறைந்த அமைப்பாக உள்ளது என்றும், இப்படிப்பட்ட அவை தொடர்ந்து நீடித்திருப்பது தேவையா என்ற கேள்வியை அரசியலமைப்பு அறிஞர்கள் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர்.

10. Speaker of Lok Sabha - Write short notes. (மக்களவை சபா நாயகர் - குறுகிய விடை தருக.)

லோக் சபா அல்லது மக்களவை என்பது பாராளு மன்றத்தின் சிறப்பு வாய்ந்த கீழவையாகும். இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 550 ஆகும். இவர்களில் 530க்கும் மிகாதவர்கள் மாநில மக்களின் ஓட்டுக்களால் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். 20க்கும் மிகாதவர்கள் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகளாக உள்ளனர். (ஷரத்து 81). **ஷரத்து 331ன்** கீழ் குடியரசுத் தலைவர் 2க்கும் மிகாத உறுப்பினர்களை ஆங்கிலோ இந்திய சமூகத்தினரில் இருந்து நியமனம் செய்வார்.

மக்களவை தனது முதல் கூட்டத் தொடரிலிருந்து 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீடித்திருக்கும். ஆனால் இக்கால கட்டத்திற்கும் முன்னதாகவே மக்களவையை கலைக்க குடியரசுத் தலைவர் ஆணையிடலாம். நெருக்கடி நிலை அமலில் உள்ள போது இதன் காலத்தை சட்டத்தின் மூலம் மேலும் 1 ஆண்டு காலத்திற்கு நீட்டிக்க வகை செய்யலாம்.

மக்களவை தனது உறுப்பினர்களில் இருவரை அதன் சபாநாயகராகவும், துணைச் சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கிறது. சபாநாயகரின் பதவி காலியாக இருக்கும் போது, அவரது கடமைகளை துணைச் சபாநாயகர் செய்வார். (ஷரத்து 93). துணைச் சபாநாயரின் பதவியும் காலியாக இருக்கும் போது, குடியரசுத் தலைவர் இதற்கென நியமனம் செய்யும் மக்களவை உறுப்பினர் ஒருவர் சபா நாயகரின் கடமைகளைச் செய்வார்.

சபா நாயகரும், துணைச் சபா நாயகரும் மக்களவை உறுப் பினர்களாக நீடித்திருக்கும் வரை, அவர்கள் தங்கள் பதவியில் தொடர்ந்து அமர்ந்திருப்பர். அவர்கள் மக்களவை உறுப்பினர்களாக இல்லாமல் போனால், தங்கள் பதவியை உடனடியாக காலி செய்ய

வேண்டும். எனினும் மக்களவை கலைக்கப்பட்டாலும், புதிய மக்களவை கூடும் வரை சபாநாயகர் தனது பதவியில் தொடர்ந்து அமர்ந்திருக்கலாம்.

சபாநாயகர் பதவி என்பது பெரும் பொறுப்பு வாய்ந்த ஒன்றாகும். மக்களவையின் முதன்மை அலுவலர் சபாநாயகர் ஆவார். இவர் மக்களவையின் கூட்டங்களுக்கு தலைமை தாங்கி, அதன் செயல்பாடுகளை கட்டுப்படுத்துகிறார். அதுபோல மக்களவையின் மாண்பு மற்றும் சிறப்புரிமையை நிலைநிறுத்துகிறார். இவர் கட்சிப் பாகுபாடின்றி நடுநிலைமையுடன் செயல்பட வேண்டும்.

(ii) பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் (Privileges and Immunities of Parliament and its Members)

(மேற்படி தலைப்பின் கீழானவற்றை மாநில சட்டமன்றத்தின் அத்தகு தலைப்புடன் ஒப்பு நோக்கி அறிய வேண்டியுள்ளதால், அடுத்து வரும் தலைப்பின் கீழ் விரிவாகக் காண்போம்.)

(ஆ) மாநில சட்டத்துறை

(ஷரத்துகள் 168 முதல் 212)

The State Legislature

(Articles 168 to 212)

உள்ளே நுழைவதற்கு முன் ஒரு சிறு விளக்கம்

எவ்வாறு மத்திய அரசின் சட்டத்துறையாக பாராளுமன்றம் இலங்குகின்றதோ, அவ்வாறே ஒவ்வொரு மாநிலத்தின் சட்டத் துறையாக அதன் சட்டமன்றம் விளங்குகின்றது. **ஷரத்து 168 (1)**-ஆனது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளுநரை உள்ளடக்கிய சட்டமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும் என்று கூறுகிறது. மாநில சட்டமன்றம் சட்டமன்ற மேலவை (Legislative Council) என்றும், சட்டமன்றப் பேரவை (கீழவை - Legislative Assembly) என்றும்,

இரு அவைகளைக் கொண்டதாகும். பீகார், மத்தியப் பிரதேஷ், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் உத்திரப்பிரதேச மாநில சட்டமன்றங்கள் மேற்கண்ட இரண்டு அவைகளையும் உடையதாகும். தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநில சட்டமன்றங்கள், கீழவையான சட்டமன்றப் பேரவை எனும் ஒரு அவையை மட்டும் கொண்டதாகும். எனினும், சட்டமன்ற மேலவையை ஏற்படுத்திக் கொள்ள, சட்டமன்ற பேரவையால் முடியும் **(ஷரத்து 169).** இனி—

(i) மாநில சட்டமன்றம்
(State Legislature)

1. a) Write a note on the joint sitting of the Houses of Parliament[1].

b) Explain the procedure for resolving a conflict between the two Houses of the Legislatures regard to a Legislative Bill.

அ) பாராளுமன்ற அவைகளின் கூட்டு அமர்வின் மீது குறிப்பு வரைக. [1])

ஆ) ஒரு சட்ட மசோதா குறித்து சட்டமன்றத்தின் இரு அவைகளுக்கு இடையே ஏற்படும் ஒரு முரண்பாட்டை தீர்ப்பதற்குண்டான நடைமுறையின் விளக்குக.)

a) இந்த அத்தியாயத்தின் 'அ' பகுதியில் வினா எண் (1)-ல் "இரு அவைகளின் கூட்டு அமர்வு" எனும் தலைப்பின் கீழ்க் காண்க.

b) பண மசோதாக்கள் அல்லது இதர நிதிநிலை மசோதாக்கள் தவிர, பிற சட்ட மசோதாக்களை, ஒரு மாநில சட்ட மன்றத்தில் இரு அவைகள் இருப்பின், (அதாவது சட்டமன்ற மேலவையும் இருப்பின்) அந்த இரு அவைகளில் எந்த ஒன்றிலும் அறிமுகப்படுத்தலாம் என்று **ஷரத்து 196 (1)** கூறுகிறது. இரு அவைகளும், அம்மசோதாவை திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்கள் இல்லாமலோ ஒத்துக் கொள்ளும் பொழுது, அது நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும், என **ஷரத்து 196 (2)** கூறுகிறது.

---

1. இதே வினா, "Describe the procedure for resolving a conflict between the two houses of parliament (பாராளுமன்றத்தில் இரு அவைகளுக்கும் இடையே ஏற்படும் முரண் பாட்டைத் தீர்த்திடும் நடைமுறையை ஆராய்க.") என்றும் தேர்வில் மாற்றிக் கேட்கப்பட்டுள்ளது. ஆனால் இரண்டிற்கும் விடை ஒன்றுதான் என்பதை கவனத்தில் கொள்க. - ஆசிரியர்.

சில சமயங்களில், சட்டமன்ற மேலவையும் உள்ள ஒரு மாநில சட்டமன்றத்தில், ஒரு சட்ட மசோதாவின் நிறைவேற்றம் குறித்து சட்ட மன்றப் பேரவைக்கும், சட்டமன்ற மேலவைக்கும் இடையே **முரண்பாடான முட்டுக் கட்டை நிலை** ஏற்பட வாய்ப் புண்டு. அப்பொழுது, அதனை எவ்வாறு தீர்ப்பது என்பதற்குண் டான நடைமுறை குறித்து **ஷரத்து 197** பின்வருமாறு கூறுகிறது.

அஃதாவது, நிதி மசோதா அல்லாத ஒரு சாதாரண சட்ட மசோதா சட்டமன்றப் பேரவையால் (Legislative Assembly) நிறைவேற்றப்பட்டு, அது சட்டமன்ற மேலவைக்கு (Legislative Council) அனுப்பப்படும்பொழுது, 1. அம்மசோதா மேலவையால் நிராகரிக்கப்பட்டால்; அல்லது 2. மேலவையின் முன்பு, அம்மசோதா வைக்கப்படுகிற தேதியிலிருந்து. மேற்படி மசோதா நிறைவேற்றப் படாமலேயே மூன்று மாதங்கள் கடந்திருந்தால்; அல்லது 3. சட்டமன்றப் பேரவை ஒத்துக் கொள்ளாத திருத்தங்களை (Amendments) அம்மசோதாவில் செய்து, அதனை மேலவை நிறைவேற்றி யிருந்தால், அங்கு இரு அவைகளுக்கு இடையே அம்மசோதா குறித்து முரண்பாடான (**முட்டுக்கட்டை - Deadlock**) நிலை எழுகிறது.

இப்படிப்பட்ட முரண்பாடான நிலை எழுந்தாலும், சட்டமன்றப் பேரவை, அம்மசோதாவினை அதே கூட்டத் தொடரிலோ அல்லது அடுத்த கூட்டத் தொடரிலோ, சட்டமன்ற மேலவை செய்த திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்கள் இல்லாமலோ, அதனை மீண்டும் நிறைவேற்றும். இப்படி இரண்டாவது தடவையாக (Second time) அம்மசோதா சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிறகு அது மீண்டும் சட்டமன்ற மேலவைக்கு அனுப்பப்படும். அப்பொழுது, முன்கண்ட மூன்று விதங்களில் ஏதேனும் ஒரு விதத்தில், அம்மசோதா குறித்து மீண்டும் சட்டமன்ற மேலவை முரண்பட்டாலும், அதை இங்கு பொருட்படுத்த வேண்டியதில்லை. எனவே, அம்மசோதாவானது இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். இரண்டாவது தடவையாக அதனை சட்டமன்றப் பேரவை எங்ஙனம் நிறைவேற்றியதோ அதே வடிவில் ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு முரண்பாடானது தீர்க்கப்படுகின்றது.

ஆனால் இதனைப் பார்க்குங்கால் ஒரு சாதாரண சட்ட மசோதா (Ordinary Bill except Money Bill) குறித்து சட்டமன்றப் பேரவையின் தீர்மானமே ஓங்கி நிற்பது புலனாகும். சட்டமன்ற

மேலவை, அம்மசோதா குறித்து விவாதம் செய்யும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளதும் புரியும். மேற்கண்ட சூழ்நிலை பாராளு மன்றத்தின் இரு அவைகளுக்குமிடையே ஏற்பட்டால், **ஷரத்து 108**-ன்படி அங்கு குடியரசுத் தலைவர் இரு அவைகளின் கூட்டு அமர்விற்கு (Joint sitting) அழைப்பு விடுக்கலாம். அந்த கூட்டு அமர்வில் இரு அவை உறுப்பினர்களும் அம்மசோதாவை ஆதரித்து வாக்களித்தால், அம்மசோதா நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். ஆனால் இம்மாதிரியான கூட்டு அமர்விற்கு வகை செய்ய மாநில சட்டமன்றத்தில் இடமில்லை.

(ii) சட்டமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் (Previleges and Immunities of Legislature and its Members)

ஒரு சிறு விளக்கம்

மேற்படி தலைப்பின் கீழ் நாம் பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களின் அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகளையும் சேர்த்து காண உள்ளோம். ஏனெனில் மேற்படி நிலைப்பாடு குறித்து பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தின் வகைமுறைகள் ஏறத்தாழ ஒத்த பொருளையே தரக் கூடியதாகும். இனி ....

2. Explain the powers, privileges and immunities of Parliament, State legislatures and its Members. (பாராளுமன்றத்தினுடைய, மாநிலச் சட்டமன்றங்களுடைய மற்றும் அவற்றின் உறுப்பினர் களுடைய அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் ஆகியவற்றை விளக்குக.)

(அல்லது)

Discuss the scope of the privileges and immunities of Parliament and State legislatures and their Members. (நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்கள் மற்றும் அவைகளின் உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் மற்றும் சட்ட விலக்குகளின் அளாவுகையை

விவாதிக்க.)

(அல்லது)

Discuss the powers, privileges and immunities of the Members of Parliament and State legislatures under the Constitution. (பாராளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள், சிறப்புரிமை மற்றும் பாதுகாப்புகள் ஆகியவைகளைப் பற்றி அரசியலமைப்புச் சட்டத்தில் கூறியுள்ளவாறு விவாதிக்க.)

(அல்லது)

Discuss fully the powers and immunities of a member of Parliament. Illustrate your answer with decided cases. (பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள் மற்றும் காப்பு உரிமைகள் குறித்து முழுவதும் விவாதிக்கவும். உமது விடைக்கு தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை உதாரணம் காட்டவும்.)

(அல்லது)

Explain the majority and minority views with respect to the interpretation of Article 105 (2) of the Constitution in P.V.Narasimha Rao. v. CBI reported in (1988) 4 SCC 626. (பி.வி.நரசிம்மராவ் எ. சிபிஐ (1988) 4 SCC 626 என்ற வழக்கில் அரசியல் சட்டம் பிரிவு 105 (2)-ஐ உச்ச நீதிமன்றத்தின் மெஜாரிட்டி மற்றும் மைனாரிட்டி தீர்ப்புகளைப் பற்றி விளக்குக.)

(அல்லது)

What are the privileges available to the members of Parliament? (பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் யாவை?)

முன்னுரை:

பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டமன்றத்திற்கும் உள்ள அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் (Privileges and immunities) குறித்த அரசியலமைப்பின் சட்ட வகைமுறைகள் ஒத்த தன்மை உடையதாக உள்ளது. **ஷரத்து 105**-ஆனது, பாராளுமன்றத்திற்கான அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகளைக் கூறுகிறது. **ஷரத்து 194,** மாநில சட்டமன்றங்களுக்கு உண்டான மேற்படியானவற்றை விளக்குகிறது.

பாராளுமன்றம், சட்ட மன்றம் மற்றும் அவற்றின் உறுப்பினர்களின் அதிகாரங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள்:

(1) ஷரத்து 105 (1)-ஆனது, பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சு சுதந்திரத்திற்கு **(freedom of speech in Parliament)** உத்திரவாதமளிக்கிறது. அவைவோ, (House), அதன் குழுக்களோ (Committees) அல்லது அதன் உறுப்பினர்களோ தங்களது பணியைச் செய்து கொண்டு இருக்கும் பொழுது, அவையின் நாற்சுவருக்குள் கூறப்பட்ட எந்த பேச்சிற்கும் மேற்படி ஷரத்து முழுப்பாதுகாப்பு அளிக்கிறது. இது **ஷரத்து 194 (1)ன்படி** மாநிலச் சட்டமன்றங்களுக்கும் பொருந்தும். ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவையினுள் தன்னால் கூறப்பட்ட அவதூறான கூற்று எதனையும், அவையின் வெளியே கூறினால், அவர் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 500ன்படி தண்டிக்கப்பட வாய்ப்புண்டு, என **Jatish Chandra v. Hari Sadan**[1] வழக்கில் கூறப்பட்டது.

P.V.Narasimha Rao v. State[2] எனும் வழக்கில், ஷரத்து 19 (1) (a)-ன் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சுரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தைக் காட்டிலும் ஷரத்து 105 (1)-ன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பேச்சுரிமை சுதந்திரத்தின் அளாவுகை மிகப்பரந்ததாகும், என்று கூறப்பட்டது. ஏனெனில், ஷரத்து 19 (1) (a)-ன் கீழான பேச்சுரிமைக்கு ஷரத்து 19 (2)-ன் அடிப்படையில் நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம். ஆனால் ஷரத்து 105 (1)-ன் கீழான பேச்சுரிமைக்கு அவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்க அரசியலமைப்பில் வகைமுறை ஏதுமில்லை.

(2) ஷரத்து 105 (2)-ன்படி, பாராளுமன்றத்திலோ அல்லது அதன் குழுக்கள் எதிலாவதோ அதன் உறுப்பினர்கள் பேசிய பேச்சிற்காகவோ அல்லது அவரால் அளிக்கப்பட்ட வாக்கு எதற்காகவும், அவரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கக் கூடாது. மேலும் பாராளுமன்றத்தின் ஏதேனுமொரு அவையால் அல்லது அதன் அனுமதியின் கீழ் எந்த அறிக்கையையும், வரை தாளையும், வாக்கையும், பிரசுரித்ததற்காக, எந்த நபரையும் அவ்வாறு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கக் கூடாது. **இச்சிறப்புரிமை, ஷரத்து 194 (2)–ன்படி மாநில சட்டமன்றங்களுக்கும் பொருந்தும்.**

1. AIR 1961 SC 613
2. AIR 1998 SC 2120

வேறு சில சிறப்புரிமைகள் (Other Privileges):

நாம் மேலே கண்ட இரண்டு சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் இந்திய அரசியலமைப்பால் வெளிப்படையாக பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் வழங்கப்பட்டவையாகும். ஆனால் வேறு சில சிறப்புரிமைகள் குறித்து, ஷரத்து 105-ம், ஷரத்து 194-ம் முறையே பாராளுமன்றமியற்றும் சட்டத்தால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்காகவும் மாநில சட்டமன்றமியற்றும் சட்டத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவும், வரையறுக்கலாம் என்று தெளிவாகக் கூறுகிறது. எனினும் அவ்வாறு சட்டம் இயற்றும் வரை, 1978-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 44வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் 15வது பிரிவு அமலுக்கு வருவதற்கு உடன் முன்பாக, என்ன சிறப்புரிமைகள் இருந்தனவோ அவையனைத்தையும் பாராளுமன்றமும் அதன் உறுப்பினர்களும் அனுபவிக்கலாம் என்று **ஷரத்து 105 (3)** கூறுகிறது. இது போல், மேற்படி திருத்தச் சட்டத்தின் 26வது பிரிவு அமலுக்கு வருவதற்கு உடன் முன்பாக, என்ன சிறப்புரிமைகள் இருந்தனவோ, அவையனைத்தையும் மாநில சட்டமன்றமும் அதன் உறுப்பினர்களும் அனுபவிக்கலாம் என்று **ஷரத்து 194 (3)** கூறுகிறது. அவற்றிற்கு முன்பு, பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தின் மக்கள் அவைக்கு (House of Commons) உள்ள சிறப்புரிமைகளை அனுபவித்து வந்தனர். எனவே, நாம் முன்கண்டபடி, வேறு சிறப்புரிமைகளைப் பொருத்து பாராளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ சட்டமியற்றி வரையறுக்கும் வரை, இங்கிலாந்து பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளே இந்தியாவிலும் தொடர்கிறது. அவை வருமாறு.

(a) கைது செய்யப்படுவதிலிருந்து சுதந்திரம் (Freedom from Arrest): இங்கிலாந்து நாட்டில் பாராளுமன்ற கூட்டத்தின் 40 நாட்களுக்கு முன்போ அல்லது 40 நாட்களுக்கு பின்போ, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை உரிமையியல் வழக்கு நடவடிக்கையொன்றில் கைது செய்ய முடியாது. இதே சிறப்புரிமை இந்தியா பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால் இச்சிறப்புரிமை குற்றவியல் அல்லது தடுப்புக் காவல் சட்ட நடவடிக்கைகளுக்கு பொருந்தாது என்று **Ansumali v. State of W.B.**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

1. AIR 1952 Cal. 632

(b) **விவாதங்களின் இரகசியம் காக்க சிறப்புரிமை (Privilege as to privacy of debates):** இங்கிலாந்தில் அன்னியர்களை வெளியேற்றி விட்டு, இரகசிய கூட்டத் தொடரை நடத்த பாராளு மன்றத்திற்கு சிறப்புரிமை உண்டு. இது இந்தியாவிற்கும் பொருந்தும்.

(c) **தனது நடவடிக்கைகள் பிரசுரிக்கப்படுவதை தடுக்க உரிமை (Right to prohibit publication of its proceedings):** இங்கிலாந்து மக்களவையைப் போல, இந்திய பாராளுமன்றமும், மாநில சட்டமன்றமும் தனது அறிக்கைகள் அல்லது நடவடிக்கைகள் பிரசுரிக்கப்படுவதை தடுக்க உரிமை படைத்தன. **M.S.M.Sharma v. Krishna Sinha**[1] **(Searchlight Case)** எனும் வழக்கில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒருவரின் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பேச்சை பிரசுரித்தது, அவையின் சிறப்புரிமையை மீறிய செயலாகும் எனப்பட்டது.

(d) **விசாரணை நடத்த, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப** பாராளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றத்திற்கும், இங்கிலாந்து நாட்டு மக்களவைக்கு உள்ளது போன்ற சிறப்புரிமை உண்டு (Right to hold enquiries and summon witnesses).

(e) இங்கிலாந்து மக்களவையைப் போல பாராளுமன்றமும், மாநில சட்டமன்றமும் தனக்குண்டான சிறப்புரிமைகளை **மீறும் மற்றும் அவமதிக்கும்** உறுப்பினர்களை மற்றும் அந்நியர்களை தண்டிக்க சிறப்புரிமை படைத்தது.

(f) **உள்நடைமுறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள உரிமை (Right to regulate internal proceedings):** இங்கிலாந்தில் இப்படிப் பட்ட உரிமை மக்களவைக்கு உண்டு. **ஷரத்து 118-ன்படி,** பாராளு மன்றம், தனது செயற்பாடுகளை மற்றும் நடைமுறைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ள விதிகளை இயற்றும் அதிகாரம் படைத்தது. இதைப் போல **ஷரத்து 208-ன்படி,** மாநில சட்ட மன்றங்களுக்கும் உரிமை உண்டு. **Bradlaugh v. Gossaf** [2] எனும் பழைய இங்கிலாந்து வழக்கொன்றில், **பிரட்லாஃப்** என்பவர், அவையினுள் நுழையக் கூடாது என சபாநாயகரால் (Speaker) தடுக்கப்பட்டார். இதை எதிர்த்து பிரட்லாஃப் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இது அவையின் உள்நடை முறையை ஒழுங்குபடுத்த அவைக்குள்ள உரிமையின் கீழ் செய்யப்பட்டதாகும். ஆகவே வழக்கு தள்ளுபடி

1. AIR 1959 SC 395
2. (1824) 12 Q.B.D. 271

செய்யப்படுகிறது என நீதிமன்றம் கூறியது.

(g) **நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்தில் வினா எழுப்ப முடியாது: ஷரத்து 122-ன்படி,** பாராளுமன்றத்தில் எழுந்த எந்த நடவடிக்கைகளின் செல்லுதன்மையைக் குறித்தும் எந்த நீதிமன்றத்திலும் வினா எழுப்ப இயலாது. இந்த உரிமை **ஷரத்து 212-ன்படி,** மாநில சட்டமன்றங்களுக்கும் உண்டு.

3. Critically examine the power of Court to interfere in a matter involving privilege of the legislature. (சட்டமன்ற சிறப்புரிமைக்குட்பட்ட காரியத்தில் குறுக்கிட நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரத்தை பகுத்தாராய்க.)

(அல்லது)

Critically examine the nature and scope of Parliamentary Privileges in India. Point out how far the decisions on violation of parliamentary privileges are subject to judicial review. (இந்திய பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளின் தன்மையையும், அளாவுகையையும் திறனாய்வு செய்க. பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் குறித்துள்ள தீர்மானங்கள் எந்த அளவிற்கு நீதித்துறை மறு ஆய்விற்கு உட்படுத்தப்படுகிறது என்பதை ஆராய்க.)

(அல்லது)

Examine the powers of a High Court and Supreme Court to enquire into the proceedings of the legislature. Can the legislature enquire into the conduct of judges of the High Court and Supreme Court? (உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் சட்டமன்ற நடவடிக்கைகளை விசாரணை செய்யும் அதிகாரங்களை ஆராய்க. சட்டமன்றம், உயர் மற்றும் உச்ச நீதிமன்றம் நீதிபதிகளின் நடத்தையை விசாரணை செய்ய முடியுமா?)

(அல்லது)

Discuss the scope of the privileges of the Houses of Legislature under the Indian Constitution. Whether an order of a legislature punishing a citizen for breach of its previleges can be quashed by a High Court? If so under what circumstances? (இந்திய அரசமைப்பின் கீழ் சட்டமன்ற சிறப்புரிமைகளின் நோக்கெல்லையை விவாதிக்கவும். ஒரு குடிநர் சட்டமன்றங்களின் சிறப்புரிமைகளை மீறியமைக்காக

அவனை தண்டித்து இடும் சட்டமன்ற ஆணையினை உயர் நீதிமன்றம் செல்லுபடியாகாது என்று விலக்கி விட முடியுமா? அப்படியானால் எந்தச் சூழ்நிலைகளில் அவ்வாறு செய்ய முடியும்?)

பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற சிறப்புரிமைகள்:

பாராளுமன்றத்திற்கு **ஷரத்து 105-ன்** கீழும், மாநில சட்டமன்றங்களுக்கு **ஷரத்து 194-ன்**கீழும், சிறப்புரிமைகளை அரசியலமைப்பு வழங்கியுள்ளது. மேலும் இங்கிலாந்தின் மக்கள் அவை அனுபவிக்கும் சிறப்புரிமைகளையும், நமது இந்திய பாராளு மன்றமும் சட்டமன்றமும் அனுபவிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் நாம் சென்ற வினாவில் விரிவாகக் கண்டோம்.

இச்சிறப்புரிமைகளில் நீதிமன்றம் குறுக்கிட முடியுமா? (அல்லது) இவை எந்த அளவிற்கு நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட் பட்டது?

மேற்கண்ட சிறப்புரிமைகளில் முதன்மையானது, பாராளு மன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அவையில் பேசுவதற்கும், அவற்றின் அறிக்கை முதலானவற்றை பிரசுரிப்பதற்கும் அளிக்கப் பட்டுள்ள சுதந்திர உரிமையாகும். இந்த உரிமை, குடிமக்களுக்கு **ஷரத்து 19 (1) (a)**-ன் கீழ், அளிக்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திர உரிமையின் அளாவுகையை விட மிகப் பரந்த தாகும். ஏனெனில், **ஷரத்து 19 (1) (a)**-ன் மீது, **ஷரத்து 19 (2)**-ன்படி, நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்க அரசுக்கு அதிகாரமுண்டு. எனவே, இது கட்டுப்பாடுடைய சுதந்திரமாகும். ஆனால், பாராளு மன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் ஷரத்து 105 மற்றும் 194-ன் கீழான மேற்படி சுதந்திரத்திற்கு, இந்திய அரசியலமைப்பு எவ்வித கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. அங்கு முழு சுதந்திரம் நிலவுகிறது. எனவே, மேற்படி சிறப்புரிமையில் நீதிமன்றங்கள் குறுக்கிட இயலாது.

எனினும், மேற்படி சிறப்புரிமை, ஷரத்து 21-ன்படி, சட்டத் தால் அமைக்கப்பட்ட நடைமுறைகளில் தவிர, வேறு வழியில் ஒரு நபரின் வாழ்வையோ அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தையோ பறிக்கக் கூடாது. அப்படி பறித்தால், பாதிக்கப்பட்ட நபர் தனது சுதந்திரம் சட்டத்தால் அமைக்கப்பட்ட நடைமுறைகளின்படியில் லாமல், தீங்கான எண்ணத்துடன் (malafide) பறிக்கப்பட்டுள்ளது

என்ற அடிப்படையில் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of habeas corpus) பிறப்பிக்க வேண்டி உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தில் மனு செய்யலாம், என **M.S.M. Sharma v. Sri Krishna Sinha**[1] வழக்கில் கூறப்பட்டது.

In Re Keshav Singh (அல்லது) **In Re Art.143**[2] எனும் மிக மிக முக்கிய வழக்கில், சட்டமன்றத்திற்கு சிறப்புரிமைகள் உள்ளதா, அப்படியானால், அதன் அளாவுகை என்ன என்பது போன்ற வினாக்களை தீர்மானிக்கும் அதிகாரவரம்பு நீதிமன்றத்திற்கு உண்டு, என உச்ச நீதிமன்றம் கூறியது.

மேற்படி வழக்கில், சட்டப்பேரவையின் சிறப்புரிமையை கேசவசிங் மீறினார் என்பதற்காக (அவையை அவமதித்த குற்றத்திற்காக), அவரை 7 நாட்கள் சிறைவைக்க உத்திர பிரதேச சட்டமன்றப் பேரவை பொதுப் பிடியாணை (General Warrant) ஒன்றைப் பிறப்பித்தது. அதன்படி, கேசவசிங் சிறையிலடைக்கப் பட்டார். நான்கு நாட்கள் கழித்து, கேசவசிங்கின் சார்பாக, பின்வரும் அடிப்படையில் அவரது வழக்குரைஞர் சாலமன் என்பவர் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் ஷரத்து 226-ன்படி, ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus) மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், சட்ட நடைமுறைகளின்படியல்லாமல், கேசவசிங்கின் வாழ்வு மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. எனவே, அச்சிறைவைப்பு தீயெண்ணமுடையது (malafide) என்றும், இயற்கை நீதிக்கு எதிரானது என்றும், சட்ட முரணானது என்றும், சாலமன் குறிப்பிட்டிருந்தார். மனுவை விசாரித்த அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள், கேசவசிங்கை பிணையத்தில் (ஜாமீனில்) விடுவிக்க இடைக்கால உத்திரவிட்டனர். ஆனால் பிரச்சனை இத்துடன் முடிவடைந்து விடவில்லை. எங்களது சிறப்புரிமையில் நீதிமன்றம் தலையிடுவதா என்று உத்திர பிரதேச சட்டமன்றப் பேரவை கொதித்தெழுந்தது. உடனடியாக பின்வரும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன்படி கேசவசிங், அவரது வழக்குரைஞர் சாலமன், அவரை ஜாமீனில் விடுவித்த அவ்விரு நீதிபதிகள் ஆகியோர் அவையை அவமதித்த குற்றத்தைப் புரிந்துள்ளார்கள்; எனவே, அவர்களில் கேசவசிங் அவருக்களிக்கப்பட்ட

1. AIR 1959 SC 395
2. AIR 1965 SC 745

சிறைத் தண்டனையில் மீதமிருக்கும் நாட்களை கழிக்கும் பொருட்டு பாதுகாப்பில் கொணரப்பட வேண்டுமென்றும், அவரது வழக்குரைஞர் மற்றும் அவ்விரு நீதிபதிகள், சட்டப்பேரவையின் முன்பு ஆஜர்படுத்தப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால், மேற்படி தீர்மானம், நீதிமன்றத்தை அவமதித்ததாகும், மற்றும் அவையின் அதிகாரவரம்பை மீறியதாகும் எனும் அடிப்படையில், அதனை செயல்படுத்த தடைவிதிக்கும்படி கோரி வழக்குரைஞர் சாலமனும், அவ்விரு நீதிபதிகளும் ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தனர். இந்த மனுவினால் அலகாபாத் உயர் நீதிமன்றம் பரபரப்படைந்தது. இதற்காக 28 நீதிபதிகள் கொண்டதொரு முழு ஆயம் (Full Bench) அமைக்கப்பட்டது. அது, அத்தீர்மானத்தின் செயல்பாட்டிற்கு தடை (Stay) விதித்தது. இதைக்கண்டு உத்திர பிரதேச சட்டமன்றப் பேரவை சற்றே பின் வாங்கியது. உடனே, அவ்வழக்குரைஞரும், அவ்விரு நீதிபதிகளும் அவையின் முன் ஆஜராகி, அவையை அவமதித்த தற்காக அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கு விளக்கம் அளிக்க அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது என்றும், அப்பிடியாணை திரும்பப் பெறப்படுகிறது என்றும், மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த தீர்மானத்தின் செயல் பாட்டையும் உயர் நீதிமன்றம் நிறுத்தி வைக்க உத்திரவிட்டது.

இவ்வாறு சட்டமன்றப் பேரவையின் தீர்மானங்களுக்கும் உயர் நீதிமன்ற உத்திரவுகளுக்குமிடையிலான பனிப்போர் வலுவடையவே, குடியரசுத் தலைவர் ஷரத்து 143-ன் கீழ் மேற்படி பிரச்சனையில் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரினார். அப்பொழுது, உச்ச நீதிமன்றமும், சிறப்புரிமை மீறல் எனும் போர்வையில், ஒரு நபரின் ஷரத்து 21-ன்படியான வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை பாராளுமன்றமோ அல்லது சட்ட மன்றமோ, சட்ட முரணான வழியில் மீறினால், அதை விசாரிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்புண்டு என்றும், அது நீதிமுறை மறு ஆய்விற்குட்பட்டதாகும் (Judicial review) என்றும், பாதிக்கப் பட்டவர் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்யலாம் என்றும், அவருக்கு வழக்குரைஞர் உதவலாம் என்றும், பல விளக்கங்களை அளித்தது.

அவற்றின் அடிப்படையில், கேசவசிங்கின் மனுவை ஏற்றுக் கொள்ள அலகாபாத் உயர் நீதிமன்றம் தகுதி படைத்தது என்றும், அவருக்காக நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்ய அவரது

வழக்குரைஞர் சாலமனோ அல்லது அம்மனுவில் உத்திரவிட்ட அவ்விரு நீதிபதிகளோ சட்டமன்றப் பேரவையை அவமதித்த குற்றம் எதனையும் புரியவில்லையென்றும், அவர்களை தங்கள் முன் ஆஜர்படுத்தக் கோர சட்டமன்றப் பேரவைக்கு எவ்வித அதிகார வரம்பும் கிடையாது என்றும், அதிரடித் தீர்ப்பு வழங்கியது. மேலும் முக்கியமானதொரு விளக்கம் அடுத்த தலைப்பில் வருமாறு.

உயர் மற்றும் உச்ச நீதிமன்றம் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளை விசாரணை செய்ய முடியுமா?

ஷரத்து 122-ஆனது, பாராளுமன்ற நடவடிக்கையின் செல்லுதன்மை குறித்து, அதில் நடைமுறை ஒழுங்கீனம் உள்ளது என்ற அடிப்படையில் நீதிமன்றங்கள் எந்த விசாரணையையும் மேற்கொள்ள முடியாது, என்று கூறுகிறது. மேற்கண்ட சிறப்புரிமையை **ஷரத்து 212-ஆனது,** மாநில சட்டமன்றங்களுக்கும் வழங்கியுள்ளது. எனவே, பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளை நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாது என்று பொருளல்ல. அவற்றின் நடைமுறை ஒழுங்கீனத்தைத்தான் **(irregularity of procedure)** நீதிமன்றங்கள் கேள்வி கேட்க முடியாது. ஆனால், அவற்றின் சட்டமுரணான நடைமுறை **(illegality of the procedure)** குறித்து நீதிமன்றங்கள் வினவலாம். எனவே, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றம், சட்டத்திற்கு முரணான நடைமுறைகள் எதையும் நடத்தி, அது ஒருவரின் ஷரத்து 21-ன் கீழான வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை பறிப்பதாக அமையுமானால், பாதிக்கப்பட்டவர் நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி மனுச் செய்யலாம். இங்கு நீதிமுறை மறு ஆய்வு அதிகாரம் நீதிமன்றங்களுக்குண்டு. இவ்வாறும் **In re Keshav Singh**[1] வழக்கில் கூறப்பட்டது.

உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நடத்தையை விவாதிக்க முடியுமா?

முடியாது. ஷரத்து 121-ன்படி, பாராளுமன்றமோ அல்லது ஷரத்து 211-ன்படி மாநில சட்டமன்றமோ உச்ச அல்லது உயர் நீதிமன்ற நீதிபதிகள், அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள நடத்தை குறித்து அவைக்குள் விவாதிக்கக் கூடாது.

4. Critically examine the nature and scope of Parliamentary

1. AIR 1965 SC 745

privileges in India. Do you think that it is desirable to codify the privileges of Parliament and its members? (பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் தனியுரிமைகளைப் பற்றி விளக்குக. பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் தனியுரிமைகளைச் சட்டமாக மாற்றுதல் தேவையா என்பதையும் விளக்குக.)

(அல்லது)

Critically examine the nature and scope of the Parliamentary privileges in India. Point out how far the decisions on violation of Parliamentary privileges are subject to judicial review. Is it desirable to codify the privileges of parliament and its members? (இந்திய பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளின் தன்மையையும் அளவுகையையும் திறனாய்வு செய்க. பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் குறித்த தீர்மானங்கள் எந்த அளவிற்கு நீதித்துறை மறு ஆய்விற்கு உட்படுத்தப்படுகிறது என்பதை ஆராய்க. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டமாக தொகுக்க வேண்டியது அவசியம்தானா?)

(அல்லது)

What are the rights, privileges and immunities of Parliament, State legislatures and their members under the Constitution? To what extent is such privilege subject to judicial control? (அரசியல் சட்டமைப்பில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் மற்றும் அவைகளின் உறுப்பினர்களுக்கும் உள்ள உரிமைகள், தனி விலக்குரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை? எவ்வளவு தூரத்திற்கு அந்த சிறப்புரிமை நீதிமன்ற கட்டுப்பாட்டுக்குள்ளடங்கியது?)

(அல்லது)

Explain the powers and privileges of the legislature under the Indian Constitution. Will it be advisable to enact a law codifying the privileges? (இந்திய அரசமைப்பின் கீழ் சட்டமன்றத்தின் அதிகாரங்களையும் மற்றும் சிறப்புரிமைகளையும் விளக்குக. இந்த சிறப்புரிமைகளைத் தொகுத்தமைக்க ஒரு சட்டம் இயற்றுவது உசிதமாகுமா?)

பாராளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களின் சிறப்புரிமைகள்:

[வினா எண் (2)-ல், ஷரத்து 105-ன் கீழான சிறப்புரிமையையும், வேறு சில சிறப்புரிமைகள் எனும் தலைப்பின் கீழுள்ள சிறப்புரிமைகளையும் படித்தறிக.]

மாநில சட்டமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களின் சிறப்புரிமைகள்:

[வினா எண் (2)-ல், ஷரத்து 194-ன் கீழான சிறப்புரிமைகளையும், 'வேறு சில சிறப்புரிமைகள்' எனும் தலைப்பின் கீழுள்ள சிறப்புரிமைகளையும் படித்தறிக.]

இச்சிறப்புரிமைகள் எந்த அளவு நீதிமன்றக் கட்டுப்பாட்டிற்குட்பட்டது? (அல்லது) இச்சிறப்புரிமைகளின் மீறல் எந்த அளவிற்கு நீதித்துறை மறுஆய்விற்குட்பட்டது?

[வினா எண் (3)-ல் 2-வது மற்றும் 3-வது தலைப்பின் கீழ் காண்க.]

இச்சிறப்புரிமைகள் ஒரு சட்டமாக தொகுக்கப்பட வேண்டுமா?

பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற சிறப்புரிமைகளை, சட்டமாகத் தொகுக்க வேண்டியது அவசியம்தான். ஏனெனில், **ஷரத்து 105 (3)-ஆனது,** பாராளுமன்றம், தன்னால் இயற்றப்பட்ட தொரு சட்டத்தின் வாயிலாக ஏற்கனவே இந்திய அரசியலமைப்பால், வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளைத் தவிர, புதிய சிறப்புரிமைகளை வரையறுக்கலாம் என்று கூறுகிறது.

இதேபோன்று வரையறுக்க, மாநில சட்டமன்றங்களுக்கும் **ஷரத்து 194 (3)-ன்படி** உரிமை உள்ளது. ஆனால் அப்படி வரையறுக்கும் வரை இந்திய அரசியலமைப்பால் வெளிப்படையாக வழங்கப்படாத வேறெந்த சிறப்புரிமைகளையாவது பாராளுமன்றமும் சட்டமன்றமும் கொண்டதென்றால், அவை இங்கிலாந்து பாராளுமன்ற மக்களவைக்கு (House of Commons) உள்ள சிறப்புரிமைகளாகும். ஆனால் பாராளுமன்றமோ அல்லது மாநில சட்டமன்றமோ, அவ்வாறு தனக்கென்று புதிதாக ஒரு சிறப்புரிமையை ஏற்படுத்திக் கொள்ளுதல் அவ்வளவு எளிதல்ல.

முதலில் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தால் கோரப்படும் அச்சிறப்புரிமை, இங்கிலாந்து மக்களவையில்

நடைமுறையிலிருக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். மேலும் அது இங்கிலாந்து நாட்டு நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கும் ஒரு படி மேலாக, அச்சிறப்புரிமை இந்திய நீதிமன்றங்களின் கழுகுப் பார்வைக்குட்பட்டதாகும். ஏனெனில், நமது அரசியலமைப்பைப் பொறுத்தவரை, இந்தியப் பாராளுமன்றம் இங்கிலாந்து பாராளுமன்றத்தைப் போன்று முழு இறைமை யுடையதல்ல. இந்திய அரசியலமைப்புதான் அனைத்திற்கும் மேலான ஜீவாதாரம் ஆகும். பாராளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ, தங்களுக்குண்டான அதிகாரங்களை அரசியலமைப்பிடமிருந்துதான் பெற்றுள்ளது. ஆகவே இவற்றின் நடவடிக்கைகள் மற்றும் இவை இயற்றும் சட்டங்களின் செல்லுதன்மை (Validity) குறித்து வினவ, இந்திய நீதிமன்றங்களுக்கு முழு அதிகாரமுள்ளது. அவ்வாறு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றம் தனது சிறப்புரிமைகளை சட்டமுரணாக நடைமுறைப்படுத்தியது குறித்தும் கேள்வி கேட்பதற்கு இந்திய நீதித்துறை அதிகாரம் பெற்றுள்ளது. இதனால் பாராளுமன்றம் (சட்டமன்றங்கள்) மற்றும் நீதித்துறைக்கிடையே பல வழக்குகள் எழுகின்றன. குழப்பமான சூழ்நிலை நிலவுகிறது.

இதனைத் தீர்க்க நமக்கிருக்கும் ஒரே வழி, பாராளுமன்றம் மற்றும் ஒரு சட்டமன்றம், அவற்றின் உறுப்பினர்கள் ஆகியோரின் சிறப்புரிமைகளை தக்கபடி வகுத்து ஒரு சட்டமாக வெளியிடுவது தான். அப்பொழுதுதான், குழப்பமான சூழலுக்கு வழிவகுக்கும் ஷரத்து 105 (3) மற்றும் 194 (3) ஆகியவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும். இதனால் சிக்கலான விவாதங்கள் தவிர்க்கப்படும். (பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக 29 நெறிமுறைகளை திரு. வாஜ்பாய் அரசு சில ஆண்டுகளுக்கு முன்பு வகுத்தது குறிப்பிடத் தக்கது.)

5. Speaker of legislative assembly - Write short notes. (சட்டமன்ற சபாநாயகர் - குறுகிய விடை தருக.)

சட்ட(மன்றப்) பேரவை, தேர்தல் முடிவுற்று சட்டப்பேரவை கூடும் போது தனது இரு உறுப்பினர்களை சட்டப்பேரவைத் தலைவராகவும் அதாவது சபாநாயகராகவும், துணைத் தலைவராகவும் அதாவது துணைச் சபாநாயகராகவும் (Deputy Speaker) தேர்ந்தெடுக்கும். **(ஷரத்து 178).**

சபாநாயகர் மற்றும் துணைச் சபாநாயகர் சட்டப்பேரவை

உறுப்பினர்களாக இல்லாமல் போனால், அவர் தங்கள் பதவியை விட்டு விலக வேண்டும். அதே நேரத்தில் அவர்களாகவும் பதவியை விட்டு விலகலாம். மேலும் சட்டப்பேரவை உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் வாயிலாக அவர்களை அவர்கள் பதவியிலிருந்து விலக்கவும் முடியும் **[ஷரத்து 180(1)]**. அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் கொண்டு வர விரும்பினால், அதற்கு 14 தினங்கள் அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும் **[ஷரத்து 179]**. சட்டப்பேரவை கலைக்கப்படுவதன் காரணமாக சபாநாயகர் பதவி விலக வேண்டுமென்பதில்லை. புதிய சட்டப்பேரவை கூடுவதற்கு முன்னர் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அவரே தொடர்ந்து பதவியில் நீடிப்பார்.

இந்த உயர்ந்த பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பேரவை சபாநாயகர் ஒருதலைச்சார்பின்றியும் அதாவது கட்சிச்சார்பின்றியும், உறுப்பினர்களின் நலன்களை பாதுகாப்பவராகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார். மத்தியில் மக்களவை சபாநாயகரின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் போன்றதே சட்டப் பேரவை சபாநாயகரின் பணிகளும் அதிகாரங்களும் ஆகும். சட்டப் பேரவையின் அனைத்து அலுவல்களையும் முடிவு செய்வது சட்டப் பேரவைத் தலைவர் ஆவார். உறுப்பினர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள் போன்றவற்றின் ஏற்புத் தன்மையைச் சட்டப் பேரவை சபாநாயகர் முடிவு செய்கிறார். சட்டப்பேரவையின் ஒழுங்கமைவை பேணுதல் அவரது கடமையாகும். அவர் சட்டப்பேரவை உறுப்பினர்களின் சிறப்புரிமைகளின் காப்பாளராகவும் உள்ளார். சட்டப்பேரவை கூட்டுக் கூட்டம் கூடும் போது. சட்டப்பேரவை சபாநாயகரே தலைமை வகிப்பார். சட்டப்பேரவை நடவடிக்கை களை சபாநாயகர் முறைப்படுத்துகிறார். மேலும் விவாதங்களின் போது சட்டப் பேரவையின் ஒழுங்கை கட்டிக்காக்கிறார். சட்டப் பேரவை விதிகளுக்கு அவர் பொருள் விளக்கமளிக்கிறார். சட்டப்பேரவை விதிகளை மீறிய உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேறு மாறு ஆணையிடும் அதிகாரமும் அவருக்கு உண்டு. அவ்வாறு மீறிய உறுப்பினரை அக்கூட்டத் தொடர் முழுவதும் அவர் விலக்கி வைக்கலாம். அவையில் கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டால் கூட்டத் தொடரை ஒத்தி வைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம். ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என்பது குறித்து சான்றளிப்பது சட்டப்பேரவை சபாநாயகரே ஆவார். மேற்கண்ட விடயங்களில் சபாநாயகரின் முடிவே இறுதியானதா கும். அதில் தலையிட நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. சுருங்கச்

சொன்னால் சபாநாயகர் என்பவர் சட்டப்பேரவையினுடைய மாண்பின் காப்பாளர் மற்றும் அதன் நடவடிக்கைகளில் முடிவெடுக்கும் ஒரு நடுநிலையான இசைவுத் தீர்ப்பாளர் (The Speaker is the custodian of the dignity of the House and an impartial arbitrator in its proceedings).

சட்டப்பேரவை சபாநாயகர் நடுநிலையாகவும், சுதந்திரமாகவும் இயங்க ஷரத்துகள் 202(3)(b), 189(1) மற்றும் 179(c) வாயிலாக சில சிறப்பு வகைமுறைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ளன. அவரது சம்பளம் மற்றும் படிகள் மாநிலத் திரட்டு நிதியிலிருந்து பெறப்படுகின்றன. மசோதா மீது முடிவெடுப்பதில் இழுபறி நிலை ஏற்படும் போது தவிர மற்ற நேரங்களில் அவர் வாக்களிக்க உரிமையில்லை. சபாநாயகர் தேர்தலுக்கு ஆளுநரின் ஒப்புதல் தேவையில்லை.

6. Creation of legislative council in a state - Write short notes.
(மாநிலத்தின் மேல்சபையை தோற்றுவித்தல் -குறுகிய விடை தருக.)

எவ்வாறு மத்திய அரசின் சட்டத்துறையாக பாராளுமன்றம் இலங்குகின்றதோ, அவ்வாறே ஒவ்வொரு மாநிலத்தின் சட்டத் துறையாக அதன் சட்டமன்றம் விளங்குகின்றது. **ஷரத்து 168 (1)**-ஆனது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளுநரை உள்ளடக்கிய சட்டமன்றம் ஒன்று இருத்தல் வேண்டும் என்று கூறுகிறது. மாநில சட்டமன்றம் சட்டமன்ற மேலவை (Legislative Council) என்றும், சட்டமன்றப் பேரவை (கீழவை - Legislative Assembly) என்றும், இரு அவைகளைக் கொண்டதாகும். பீகார், மத்தியப் பிரதேஷ், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் உத்திரப்பிரதேச மாநில சட்ட மன்றங்கள் மேற்கண்ட இரண்டு அவைகளையும் உடையதாகும். தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநில சட்டமன்றங்கள், கீழவையான சட்டமன்றப் பேரவை எனும் ஒரு அவையை மட்டும் கொண்டதாகும். எனினும், சட்டமன்ற மேலவையை தோற்றுவித்துக் கொள்ள, சட்டமன்ற பேரவையால் முடியும் **(ஷரத்து 169)**.

சட்ட மேலவை - அமைப்பு முறை:

இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 171, ஒரு சட்ட மேலவையின் அமைப்பு முறையை எடுத்துரைக்கிறது. இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இதன் உறுப்பினர்கள் நகராட்சி, மாவட்ட வாரியங்கள், உள்ளாட்சி

மன்றங்கள் வாயிலாகவும், பட்டதாரிகளாலும், ஆசிரியர்களாலும், சட்டமன்ற உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருப்பர். இவரை ஆளுநர் நியமனம் செய்கிறார்.

மாநில சட்ட மேலவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அந்த மாநில சட்டப்பேரவை உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் இருக்கக் கூடாது. எனினும் குறைந்தது 40 உறுப்பினர்களுக்குக் கீழாகவும் அது இருத்தல் கூடாது.

சட்ட மேலவையின் இடங்கள்:

சட்ட மேலவையின் இடங்கள் பொதுவாக பின்வருமாறு அமைந்திருக்கும்.

1. ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள் மற்றும் அது போன்ற மன்றங்களால் தேர்ந்தெடுக்கப் படுவர்;

2. ஏறத்தாழ பன்னிரண்டில் ஒரு பங்கினர் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகத்தில் குறைந்தது மூன்றாண்டு கால அளவிற்குப் பட்டம் பெற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;

3. ஏறத்தாழ பன்னிரண்டில் ஒரு பங்கினர் குறைந்தது மூன்றாண்டு கால அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்;

4. ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் சட்டப்பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;

5. மீதமுள்ளவர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவர். இலக்கியம், அறிவியல், கலை, கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூகப் பணியில் சிறந்த அறிவாண்மை அல்லது நடைமுறை அனுபவம் பெற்றவர்களை ஆளுநர் உறுப்பினராக நியமிப்பார்.

சட்ட மேலவை உறுப்பினருக்கான தகுதிகள்:

ஒரு மாநில சட்ட மேலவையின் உறுப்பினர்களின் தகுதிகளில் வயது வரம்பு தவிர மற்றவை சட்டப்பேரவையின் உறுப்பினர்களின் தகுதியைப் போன்றதே. சட்ட மேலவை உறுப்பினராவதற்கு ஒருவர் 30 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

பதவிக்காலம்:

மத்திய அரசில் உள்ள மாநிலங்களவை (ராஜ்ய சபா) போன்றே, மாநில சட்டப்பேரவையும் ஒரு நிரந்தர அமைப்பாகும். இதன் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுவர். இவர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களது பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும்.

சட்ட மேலவைத் தலைவர்:

மாநிலத்தின் சட்ட மேலவைக்குத் தலைமை தாங்குபவர், சட்ட மேலவைத் தலைவர் (Chairman) ஆவார். இவரும், துணைத் தலைவரும் (Deputy Chairman) சட்ட மேலவையின் உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுவர். மேலவைத் தலைவரின் பணிகளும் அதிகாரங்களும் சட்டப் பேரவையின் தலைவரது பணிகள் மற்றும் அதிகாரங்கள் போன்றது.

7. 10th Schedule - Write short notes. (பத்தாவது அட்டவணை - குறுகிய விடை தருக.)

(பக்கம் எண். 244-ல் காண்க)

அத்தியாயம் 3

நீதித்துறை அதிகாரத்தின் அமைப்பு
(Organisation of Judicial Power)

(அ) மத்திய நீதித்துறை
(ஷரத்துகள் 124 முதல் 147)
The Union Judiciary
(Articles 124 to 147)

இந்திய உச்ச நீதிமன்றம்
(Supreme Court of India)

1. Examine with reference to relevant Constitutional provisions how independence of the judiciary is secured. (அரசமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளை குறிப்பிட்டு இந்தியாவில் நீதித்துறையின் தனித் தியங்கும் (சுதந்திரம்) உரிமை எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது என்பதை ஆராய்க.)

(அல்லது)

Define the 'Doctrine of Independence of Judiciary'. Explain the provisions incorporated in our constitution to uphold this doctrine. ('சுதந்திரமான நீதித்துறை கோட்பாடு'யினை வரையறை செய். இக்கோட்பாட்டினை உறுதி செய்திட நமது அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வகையங்களை விளக்கு.)

முன்னுரை:

பாரபட்சமற்ற, சுதந்திரமான நீதித்துறை ஒன்று மட்டுமே தனிப்பட்டோரின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு சம நீதியினை, சாதகமாகவோ அல்லது பயம் இன்றியோ அளிக்க முடியும். இதன் காரணமாக உச்ச நீதிமன்றத்தை அரசியல் ஆதிக்கங் களில் இருந்து பிரித்து, சுதந்திரமாக இயக்கச் செய்வது இன்றிய மையாததாகும். நீதித்துறையின் சுதந்திரத்திற்காக அரசியலமைப்பு பல்வேறு சட்ட ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இப்படிப்பட்ட ஏற்பாடுகளினால், உச்ச நீதிமன்றம் **அரசியலமைப்பின் காவலன் (Guardian of the Constitution)** எனப் போற்றப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் தனித்தியங்கும் சுதந்திரம் பாதுகாக்கப் பட்டுள்ள விதம்:

1. பணிக்கால பாதுகாப்பு (Security of tenure): உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பணிக்காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள், குடியரசுத் தலைவரின் உத்திரவால் தங்கள் பணியிலிருந்து நீக்கப்பட முடியாது. அப்படி நீக்கப்பட வேண்டுமெனில், நீதிபதி களின் தவறான நடத்தை அல்லது தகுதியின்மை நிரூபிக்கப்பட வேண்டும். அப்படி நிரூபிக்கப்பட்டாலும் பாராளுமன்றம் அவர்களை நீக்க பல நடைமுறைகளை **[ஷரத்து 124 (4)]** பின்பற்ற வேண்டியுள்ளது.

2. நீதிபதிகளின் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது (Salary of Judges fixed): இது பாராளுமன்றத்தின் ஓட்டுக்கு உகந்தது அல்ல. நீதிபதிகள், தங்கள் பணியில் உள்ள போது, (நிதி நிலைமை நெருக் கடிக் காலங்களில் தவிர) அவர்களின் ஊதியம் மற்றும் படிகளை குறைக்க முடியாது. எனவே, அரசியலமைப்பின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டபடி, அவர்களின் ஊதியம் மற்றும் படிகள் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

3. பாராளுமன்றம், உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பையும், அதிகாரத்தையும் நீட்டிக்கலாமேயொழிய அதனைக் கட்டுப்படுத்த முடியாது (Parliament can extend, but cannot curtail the jurisdiction and power of the Supreme Court) **(ஷரத்து 138).**

4. நீதிபதிகளின் நடத்தை குறித்து சட்டமன்றத்தில் எவ்வித விவாதத்தையும் மேற்கொள்ளலாகாது. (No discussion in Legisla-

ture on the conduct of Judges) **(ஷரத்து 121).**

5. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம், தங்களை அவமதித்த குற்றத்திற்காக எந்த நபரையும் தண்டிக்க அதிகாரம் உள்ளது (Power to punish for its contempt) **(ஷரத்துகள் 129 மற்றும் 215).**

6. நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறை பிரிக்கப்பட்டு உள்ளது (Separation of Judiciary from Executive). நிர்வாகத்துறையின் தலையீட்டிலிருந்து நீதித்துறையினை பாதுகாப்பது, நீதியின் நிலைத்த வாழ்விற்கு அவசியமாகிறது.

7. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கிறார் (Appointment of Judges). இங்ஙனம் ஆலோசனையைப் பெறாமல் குடியரசுத் தலைவரே, உச்ச நீதிமன்ற நீதிபதிகளை தன்விருப்பப்படி நியமிக்க இயலாது, என்பது மேற்கண்ட 6-ம் கூற்றிலிருந்து தெளிவாகும்.

8. நீதிபதிகள் தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு வழக்குரைஞராக பணியாற்றலை **ஷரத்து 124 (7)** தடுக்கிறது (Prohibition on Practice after retirement).

2. Explain the different jurisdictions of the Supreme Court of India. (இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு அதிகாரவரம்புகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Discuss the different kinds of jurisdiction of the Supreme Court of India. (இந்திய உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு அதிகார வரம் பெல்லைகளை விவாதிக்கவும்.)

உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்பின் பாதுகாவலனாக விளங்குகிறது. அதன் அதிகாரவரம்புகளை பின்வரும் தலைப்புகளின் வாயிலாக காணலாம்.

I. உச்ச நீதிமன்றத்தின் அசல் அதிகாரவரம்பு அல்லது முதல் வழக்கு அதிகாரவரம்பு (Original Jurisdiction of the Supreme Court)

இந்தியக் கூட்டாட்சி முறையில் மத்திய அரசாங்கங்கள், மாநில அரசாங்கங்கள் ஆகியவைகளுக்கிடையில் ஏற்படும் வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கும் உரிமையைப் பெற்றுள்ளது.

ஷரத்து 131ல் எப்படிப்பட்ட வழக்குகளை, முதல் வழக்கு அதிகாரவரம்பில் உச்ச நீதிமன்றம் எடுத்துக் கொண்டு விசாரிக்கலாம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

(a) மத்திய அரசாங்கத்திற்கும், ஒரு மாநில அரசாங்கம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசாங்கங்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகள்; (b) மத்திய அரசாங்கம் மற்றும் ஏதாவது மாநிலம் அல்லது மாநிலங்கள் ஒரு தரப்பிலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றொரு தரப்பிலும் இருந்து, இவற்றிற்கிடையே எழும் வழக்குகள்; (c) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான வழக்குகள்.

மேலே குறிப்பிட்ட வழக்குகளை இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றமும் எடுத்துக் கொண்டு விசாரித்து, தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஒரு சாமானியன் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக தொடுக்கும் வழக்குகளை உச்ச நீதிமன்றம், தன் அசல் அதிகாரவரம்பில் விசாரிக்க முடியாது. இவ்வகையான வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது. இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தைவிட உயர்ந்த நீதிமன்றம் இல்லாததால் இவ்வழக்குகளின் தீர்ப்பை எதிர்த்து எங்கும் மேல்முறையீடு செய்து கொள்ள இயலாது. மேலே கண்ட வகையான வழக்குகள் சட்டம் (law) பற்றியோ அல்லது பொருண்மை (fact) பற்றியோ இருக்கலாம்.

சில குறிப்பிட்ட வகை வழக்குகளை அரசியலமைப்பு, உச்ச நீதிமன்றத்தின் அசல் அதிகாரவரம்பிலிருந்து விலக்கி வைத்துள்ளது. அவைகளில் சில பின்வருமாறு:

1. அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் செய்து கொண்ட, ஆனால் நடைமுறைக்கு வந்த பின்பும் அமலில் உள்ள உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் போன்றவை சார்ந்த வழக்குகள். **(ஷரத்து 131).** 2. அரசியலமைப்பு அமல் செய்யப்படுமுன் இந்திய டொமீனியன் அரசாங்கமும், இந்தியச் சுதேசி அரசர்களும் செய்து கொண்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகள். **[ஷரத்து 363 (1)].** 3. மாநிலங்களுக்குச் சொந்தமான

நதியின் நீர் பற்றி மாநிலங்களுக்கு இடையே தோன்றும் வழக்குகள். **[ஷரத்து 263 (2)].** 4. நிதி ஆணைக் குழுவிடம் விடப்படக் கூடிய விவரங்கள். **(ஷரத்து 280).**

அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்தல்:

ஷரத்து 32ன்படி, அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த உச்ச நீதிமன்றம் 5 வகை நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளதையும், அசல் அதிகார வரம்பில் குறிப்பிடலாம்.

II. உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு (Appellate Jurisdiction of the Supreme Court)

ஷரத்து 132, மேல்முறையீட்டு அதிகாரவரம்பைப் பற்றிக் கூறுகிறது. இதன் நீதிப்பேராணைகள் மற்றும் தீர்ப்பாணைகள் இந்தியா முழுமைக்கும் பொருந்தும். மாநில உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவர்கள், அத்தீர்ப்பினை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரவரம்பினை நான்கு முக்கிய வகைகளாகக் பிரித்துப் படிப்பின், மிக்க எளிதாக இருக்கும். அவை, 1. அரசியலமைப்பு விஷயங்கள், 2. உரிமையியல் வழக்கு விஷயங்கள், 3. குற்றவியல் வழக்கு விஷயங்கள், 4. மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி.

1. அரசியலமைப்பு விஷயங்கள் குறித்த வழக்கில் மேல்முறையீடு:

இது பற்றி **ஷரத்து 132 (1)** கூறுகிறது. இதன்படி இந்திய அரசின் நிலப்பரப்பில் அமைந்துள்ள உயர் நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட உரிமையியல், குற்றவியல் அல்லது மற்ற வகையான வழக்குகளின் தீர்ப்பை அல்லது முடிவான உத்திரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். தீர்ப்பை வழங்கிய உயர் நீதிமன்றம், குறிப்பிட்ட வழக்கை விசாரித்து தீர்ப் பளிக்க அரசியலமைப்பின் பொருள் விளக்கம் (Interpretation of the Constitution) தேவைப்படுகிறது எனச் சான்றிதழ் வழங்க வேண்டும். அதாவது வழக்கின் அடிப்படை, அரசியலமைப்பு ஷரத்துகளின் கொள்கைகளையும், விளக்கங்களையும் கொண்டிருக்க வேண்டும். ஆனால், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளத் தேவையான சான்றிதழை (Certificate) வழங்க மறுத்தால், உச்ச நீதிமன்றமே அதற்கான சிறப்பு அனுமதியை (Spe-

cial leave to appeal) வழங்கலாம். ஆனால் இவ்வாறு செய்ய குறிப்பிட்ட வழக்கின் அடிப்படை, அரசியலமைப்பின் பொருள் விளக்கமே என உச்ச நீதிமன்றம் திருப்தி அடைய வேண்டும்.

2. உரிமையியல் வழக்குகளில் மேல்முறையீடு:

உயர் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப் பட்ட சில குறிப்பிட்ட தகுதிகளையுடைய உரிமையியல் வழக்குகளையும் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடியும், என **ஷரத்து 133** கூறுகிறது. இம்மாதிரியான வழக்குகளில், பின்வரும் தகுதிகளில் ஏதேனும் ஒன்றாவது உள்ளது என உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளிக்க வேண்டும், என **ஷரத்து 133 (1)** கூறுகிறது. அதன்படி-,

1. பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சனை ஒன்றினை அவ்வழக்கு கொண்டதாக இருக்க வேண்டும். – **ஷரத்து 133 (1) (a).**

2. அப்பிரச்சனை உச்ச நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டி உள்ளது, என உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்திருக்க வேண்டும். – **ஷரத்து 133 (1) (c).**

மேற்கண்ட இரண்டு தகுதிகளும், 1972ல் செய்யப்பட்ட 30வது திருத்தச் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும். இவ்வாறு உச்ச நீதிமன்றத்திற்கு உரிமையியல் வழக்குகளில் மேல்முறையீடு செய்து கொள்ள உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளிக்கவில்லை யென்றால், முன்பு கூறியபடி **ஷரத்து 132 (2)-ன்** அடிப்படையில் உச்ச நீதிமன்றமே சிறப்பு அனுமதியினை (Special leave to Appeal) வழங்கலாம்.

3. குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீடு:

இதுபற்றி **ஷரத்து 134** குறிப்பிடுகிறது. முடிவான உத்திரவு அல்லது தண்டனையை எதிர்த்து பின்வரும் இருவழிகளில் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(i) உயர் நீதிமன்றத்தின் சான்றிதழில்லாமல்: உயர் நீதிமன்றத்தின் சான்றிதழைப் பெறாமலேயே பின்வரும் காரணங் களுக்காக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். குற்றஞ் சாட்டப்பட்ட நபர் ஒருவரை விடுதலை செய்ய, கீழ் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட உத்திரவை மாற்றி, உயர் நீதிமன்றம்

அவருக்கு மரண தண்டனையை விதிக்கும் பொழுதும், **[ஷரத்து 134 (1) (a)]**; தன்னுடைய அதிகாரத்தின் கீழுள்ள எந்த கீழமை நீதிமன்றத்திலும் நடக்கும் வழக்கை, உயர் நீதிமன்றம் விசாரணை செய்ய எடுத்துக்கொண்டு (withdrawn) அந்த விசாரணையில் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனை அளிக்கும்பொழுதும், **[ஷரத்து 134 (1) (b)]**.

(ii) உயர் நீதிமன்றத்தின் சான்றிதழோடு: உச்ச நீதிமன்றத் திற்கு மேல்முறையீடு செய்து கொள்ள இவ்வழக்கு பொருத்தமாகும், என உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளிக்கும்பொழுது, மேல்முறையீடு செய்து கொள்ளலாம். **[ஷரத்து 134 (1) (c)]**.

4. மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி (Special leave to appeal):

இது குறித்து **ஷரத்து 136** கூறுகிறது. உச்ச நீதிமன்றம் தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தியாவில் எந்த ஒரு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் (tribunals) வழங்கிய தீர்ப்பு, ஆணை, தண்டனை அல்லது உத்திரவை எதிர்த்து தன்னிடம் மேல்முறையீடு செய்துகொள்ள சிறப்பு அனுமதி வழங்க, மேற்படி ஷரத்து உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. இவ்வதிகாரத்தி லிருந்து இந்திய இராணுவம் தொடர்பான சட்டங்கள் வாயிலாக அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளன.

III. உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் அதிகாரவரம்பு (The Advisory Jurisdiction of the Supreme Court)

பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சனையோ அல்லது பொருண்மைப் பிரச்சனையோ எழும்பொழுது, அல்லது அதுபோல் எழுவதற்கு வாய்ப்புள்ளது எனக் குடியரசுத் தலைவர் கருதும்பொழுது, அது குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்பது உசிதமானது என்று அவருக்கு தோன்றினால் அவர் அப்பிரச்சனையை உச்ச நீதிமன்றத்திடம் பரிசீலனைக்காக குறிப்பீடு (refer) செய்யலாம். உச்ச நீதிமன்றம் அப்பிரச்சனையைக் குறித்து தக்க விசாரணை மேற்கொண்ட பிறகு தன்னுடைய கருத்தினை குடியரசுத் தலைவருக்கு தெரியப்படுத்தலாம். **[ஷரத்து 143 (1)]**.

ஷரத்து 131-ன்படி, உச்ச நீதிமன்றத்தில் அசல் அதிகாரவரம்பில் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள விவரங்கள்

குறித்து, குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்திடம் கருத்தினைக் கேட்டால், அதற்கு உச்ச நீதிமன்றம் அப்பிரச்சனை குறித்து தக்கதொரு விசாரணையை மேற்கொண்டு அவருக்கு தன்னுடைய கருத்தினை வழங்க வேண்டும். **[ஷரத்து 143 (2)]**.

In Re Kerala Educational Bill[1] எனும் வழக்கில், குடியரசுத் தலைவர் எச்சட்டப் பிரச்சனை குறித்து ஆலோசனை தேவை எனக் கோருகிறாரோ, அதைத் தவிர மற்றவைகளைப் பற்றி உச்ச நீதிமன்றம் ஆலோசனை கூறாது எனக் கூறப்பட்டது.

மேற்படி அதிகாரவரம்புகளைத் தவிர, பின்வரும் அதிகாரங்களும் உச்ச நீதிமன்றத்திற்கு உள்ளது.

1. நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் (Power of Judicial Review): நிர்வாகத் துறையின் செயல்கள் மற்றும் சட்டங்கள் அரசிய லமைப்பிற்குட்பட்டதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் அதை மறு சீராய்வு செய்து, செல்லாதவை என்று அறிவிக்கும் உயர்ந்த அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் கொண்டுள்ளது.

2. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகளையே மறுசீராய்வு செய்யும் அதிகாரம் (Power of review its own Judgments): உச்ச நீதிமன்றத்திற்கு தான் வெளியிட்ட தீர்ப்புகளையோ அல்லது உத்திரவு களையோ மறுசீராய்வு செய்ய அதிகாரம் உண்டு என **ஷரத்து 137** கூறுகிறது. ஆனால் இவ்வதிகாரம் பாராளுமன்றத்தி னால் இயற்றப்படுகின்ற சட்டங்களுக்கு கட்டுப்பட்டதாகும். பின் வருவனவற்றின் அடிப்படையில் உரிமையியல் வழக்கு நடவடிக்கை ஒன்றில் மறுசீராய்வானது செய்யப்படலாம். 1. சான்றுகள் குறித்து முக்கியமான புதிய மற்றும் விவரங்கள் கண்டறியப்பட்டதினால். 2. ஆவணத்தின் முகப்பிலேயே தோன்றும் தவறு அல்லது பிழை. 3. வேறு போதுமான காரணங்கள்.

3. உச்ச நீதிமன்றத்தின் துணை அதிகாரங்கள் (Ancilliary Powers): உச்ச நீதிமன்றம் தனது பணிகளை செவ்வனே புரிய சில துணை அதிகாரங்கள் தேவைப்படுகின்றன என பாராளுமன்றத் திற்கு தோன்றினால் அது தனது சட்டம் ஒன்றினால் அத்தகு துணை அதிகாரங்களை உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கலாம், என **ஷரத்து 140** கூறுகிறது.

1. AIR 1958 SC 956

4. உச்ச நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் (Binding Powers): உச்ச நீதிமன்றத்தின் முடிவுகள் இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் என **ஷரத்து 141** கூறுகிறது. உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் தீர்ப்பாணைகள் மற்றும் உத்திரவுகளை இந்திய எல்லை முழுவதிலும் வலியுறுத்தி செயல்படுத்த முடியும். இதற்காக இந்திய எல்லையில் உரிமையியல் மற்றும் நீதித்துறையைச் சார்ந்த அனைத்து அதிகார அமைப்புகளும் உச்ச நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயலாற்றுதல் வேண்டும் என **ஷரத்து 144** கூறுகிறது.

5. விதிகள் உண்டாக்கும் அதிகாரம் (Rule Making Power): உச்ச நீதிமன்றம் தனது நடப்பு முறையையும் (Practice) நடை முறையையும் (Procedure) ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக, தானே விதிகள் உண்டாக்கிக் கொள்ள அதிகாரம் படைத்துள்ளது. தன் முன் தொழிலாற்றுபவர்கள் (வாதாடுபவர்கள்) குறித்த விதிகள், மேல்முறையீடுகள் கேட்பதற்குண்டான நடைமுறை குறித்த விதிகள் போன்ற விதிகளை தானே உண்டாக்கிக் கொள்ளலாம். ஆனால் இது பாராளுமன்றத்தின் சட்டத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும், என **ஷரத்து 145** கூறுகிறது.

6. பதிவு செய்துகொள்ளும் நீதிமன்றம் (Court of Record): இந்திய உச்ச நீதிமன்றம் ஒரு பதிவு செய்து கொள்ளும் நீதிமன்றமாக இருக்க வேண்டும் என்று **ஷரத்து 129** கூறுகிறது. இதன் மூலம் உச்ச நீதிமன்றத்தின் பதிவேடுகளை சாட்சியப் பதிவேடுகளாக எங்கும் பயன்படுத்தலாம். அச்சாட்சியத்திற்கான நிரூபணத்தை எந்த நீதிமன்றமும் கோர முடியாது. இந்நீதிமன்றம் பதிவேடுகளை முறைப்படுத்தும் நீதிமன்றமாக விளங்குவதால், இதனை அவமதிப்பவர்களை தண்டிக்கும் அதிகாரத்தையும் (Power to punish for Contempt of Court) பெற்றுள்ளது.

3. Explain the Appellate and advisory Jurisdiction of the Supreme Court of India. (உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீடு மற்றும் பரிந்துரை அதிகாரவரம்புகளை விளக்குக.)

(அல்லது)

Discuss the constitutional provisions relating to the Appellate Jurisdiction of the Supreme Court of India. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு ஆள் வரையை விவாதிக்கவும்.)

(அல்லது)

Advisory Jurisdiction of the Supreme Court - Write short notes. (உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை வழங்கும் அதிகாரம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Discuss the scope of special leave appeal jurisdiction of the Supreme Court. (உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதி மேல்முறையீடு அதிகாரவரம்பின் நோக்கெல்லையை விவாதிக்க.)

(அல்லது)

"The Supreme Court may in its discretion grant special leave to appeal". Explain the scope of special leave jurisdiction of the Supreme Court pointing out the exceptions. Compare with the other appellate jurisdiction of the Supreme Court. ("உச்ச நீதிமன்றம் தன்னுடைய விருப்பத்தில் தன்னிடம் மேல்முறையீடு செய்ய தனி அனுமதி வழங்கலாம்". விதிவிலக்குகளை குறிப்பிட்டு, உச்ச நீதிமன்றத்தின் தனி அனுமதி வழங்கும் அதிகாரத்தை விளக்குக. உச்ச நீதிமன்றத்தின் மற்ற மேல்முறையீடு அதிகாரத்துடன் ஒப்பிடுக.)

(அல்லது)

Examine the scope of the Advisory Jurisdiction of the Supreme Court of India and its Jurisdiction to grant special leave appeal. (இந்திய உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரை அதிகாரவரம்பின் அளாவுகைகளையும் சிறப்புமுறை மேல்முறையீட்டு அதிகாரவரம்பின் அளாவுகையினையும் ஆராய்க.)

[வினா எண் (2)-ல் காண்க.]

4. State briefly the functions and powers of the Supreme Court of India and point out how the independence of the Judges of the Supreme Court is secured by the provisions of the Constitution. (இந்திய உச்ச நீதிமன்றத்தின் பணிகளையும் அதிகாரங்களையும் சுருக்கமாக குறிப்பிட்டு, உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் தனித்து இயங்கும் தன்மை எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது என்பதை அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளைக் கொண்டு

சுட்டிக்காட்டுக.)

[வினா எண் (2)-ஐ சுருக்கி எழுதி பின் வினா எண் (1)-ஐ சேர்த்து எழுதுக.]

5. Appointment of chief justice of India - Write short notes. (இந்திய தலைமை நீதிபதியை நியமித்தல் - குறுகிய விடை தருக.)

உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி ஒருவர் மற்றும் அவர் கீழ் அமைந்த பிற நீதிபதிகளைக் கொண்டதாகும். உச்ச நீதிமன்ற நீதிபதிகளை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். தலைமை நீதிபதியை மட்டும் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களின் அத்தகு நீதிபதிகளுடன் கலந்தாலோசித்த பிறகு குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். எனினும் தலைமை நீதிபதியின் நியமனத்தில் இவ்வாறு கலந்தாலோசிக்க வேண்டும் என்பது குடியரசுத் தலைவருக்கு கட்டாயமானதல்ல. அவர் யாரையும் கலந்தாலோசிக் காமலும் தலைமை நீதிபதியை நியமனம் செய்யலாம்.

பிற நீதிபதிகளைப் பொறுத்தவரை தலைமை நீதிபதியிடம் மட்டும் கலந்தாலோசித்து விட்டு குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். அவசியமானால் குடியரசுத் தலைவர் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களின் பிற நீதிபதிகளிடம் கலந்தாலோசனை செய்யலாம். [ஷரத்து **124(2)**]. எவ்வாறு இருப்பினும், நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரம் முற்றிலும் நடைமுறை சார்ந்ததே தவிர, உள்ளபடியானதல்ல. ஏனென்றால், இந்த விடயத்தில் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் செயல்படுகிறார்.

உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்படுவதற்கு ஒருவர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். (1) அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். (2) உயர் நீதிமன்றத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டு காலத்திற்கு வழக்குரைஞராக தொழி லாற்றி இருக்க வேண்டும். (3) குடியரசுத் தலைவரின் அபிப்பிராயத் தில் அவர் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றவராக இருக்க வேண்டும். எனவே சட்டத் தொழிலாற்றாத அல்லது சட்டத்தில் ஏட்டளவு அறிவுடைய வழக்குரைஞர் ஒருவரும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட முடியும். ஆனால் குடியரசுத் தலைவரின் அபிப்பிராயத்தில் அவர் ஒரு சட்டவியல் வல்லுநராக இருக்க வேண்டும். நீதிபதியாக நியமனம் செய்யப்படுபவருக்கு குடியரசுத்

தலைவர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தல் வேண்டும். [**ஷரத்து 124 (6)**].

உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டவர் 65 வயது வரை அப்பதவியில் நீடிக்கலாம். அவர் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதுவதன் வாயிலாக தனது பதவியைத் துறக்கலாம்.

S.C.Advocate on Record Association v. Union of India (Judges Transfer Case II) [1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் நியமனம் பணிமூப்பின் (Seniority) அடிப்படையில் அமைய வேண்டும் என்றும், பணியில் மூத்த ஒரு நீதிபதியை தலைமை நீதிபதியாக நியமனம் செய்வதே பொருத்தமானதாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

6. Removal of Supreme Court Judges - Write short notes. (உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நீக்குதல் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Explain the Constitutional procedure for the removal of judges of the Supreme Court and High Court. (உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமறை நீதிபதிபளை நீக்குவதற்கு அரசமைப்பு நடைமுறை விதிகளை விளக்குக.)

உச்ச நீதிமன்ற நீதிபதியொருவரின் மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை மற்றும் தகுதியின்மையின் காரணமாக அவரை அப்பதவியிலிருந்து நீக்கலாம். ஆனால் இது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் இதற்கு பல நடைமுறைகளைக் கடந்து வர வேண்டியுள்ளது. அந்நடைமுறைகளை **ஷரத்து 124 (4)** பின்வருமாறு கூறுகிறது.

அதன்படி, உச்ச நீதிமன்ற நீதிபதியொருவரை குடியரசுத் தலைவர் தனது உத்திரவு ஒன்றின் வாயிலாக நீக்கலாம். ஆனால், குடியரசுத் தலைவர் மேற்படி உத்திரவைப் பிறப்பிக்க வேண்டுமெனில், அந்நீதிபதியின் மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது தகுதியின்மை குறித்து பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினராலும், அந்த அவையின் உறுப்பினர்களில் வந்திருந்து

1. (1993) 4 SCC 441

வாக்களிப்பவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாத பெரும்பான்மையினராலும் ஆதரிக்கப்பட்ட ஒரு வேண்டுரை (address) ஒரே தொடர் அமர்வில் குடியரசுத் தலைவரிடம் முன்னிடப்பட வேண்டும். அதை அனுசரித்து, அந்நீதிபதியை நீக்க, குடியரசுத் தலைவர் உத்திரவு பிறப்பிப்பார். இந்நடைமுறையைத் தவிர, வேறு எவற்றின்படியும் உச்ச நீதிமன்ற நீதிபதியை நீக்க முடியாது.

இதே நடைமுறை **உயர் நீதிமன்ற நீதிபதிகளை (removal of High Court Judges) நீக்குவதற்கும்** பொருந்தக் கூடியதாகும், என்று **ஷரத்து 218** கூறுகிறது.

(ஆ) மாநில நீதித்துறை
(ஷரத்துகள் 214 முதல் 237)
The State Judiciary
(Articles 214 to 237)

உயர் நீதிமன்றம்
(High Court)

1. Explain the jurisdiction and power of High Court. (உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு மற்றும் அதிகாரங்களை விளக்குக.)

மாநில நீதித்துறையானது ஒரு உயர் நீதிமன்றத்தினையும் அதன் கீழ் உள்ள பல கீழமை நீதிமன்றங்களையும் (Subordinate Courts) கொண்டதாகும். உச்ச நீதிமன்றத்தின் கீழ் உயர் நீதிமன்றங்கள் வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் உள்ளது. அதன் அதிகாரவரம்பும் அதிகாரங்களும் பின்வருமாறு.

1. பதிவு செய்து கொள்ளும் நீதிமன்றம் (A Court of Record): **ஷரத்து 215-ன்படி,** ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் ஒரு பதிவு செய்து கொள்ளும் நீதிமன்றமாகும். தன்னை அவமதித்தவர்களை தண்டிக்கும் அதிகாரம் உள்ளிட்ட எல்லா அதிகாரங்களையும் அது பெற்றுள்ளது.

2. அனைத்து நீதிமன்றங்களையும் மேற்பார்வையிடும் அதிகாரம்: ஷரத்து 227-ன்படி, தனது அதிகாரவரம்பிற்குள் வருகின்ற அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை (tri-

bunals) மேற்பார்வையிடும் அதிகாரத்தை ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் பெற்றுள்ளது.

3. வழக்குகளைத் தானே எடுத்துக் கொள்ள (withdraw) உள்ள அதிகாரம்: ஷரத்து 228ன் படி, தனக்கு கீழுள்ள கீழமை நீதிமன்றத்தில் உள்ள வழக்கொன்றில், அரசியலமைப்பின் பொருள் விளக்கம் குறித்த பொருளார்ந்த சட்டப்பிரச்சனை ஒன்று உள்ளது என்று உயர் நீதிமன்றம் திருப்தியுற்றால், அவ்வழக்கை அக்கீழமை நீதிமன்றத்திலிருந்து தானே விசாரணைக்காக எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

4. சில நீதிப்பேராணைகளை வெளியிடும் அதிகாரம்: ஷரத்து 226-ன்படி, உயர் நீதிமன்றம், அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்துவதற்காகவும் மற்ற சில நோக்கங்களுக்காகவும் அய்ந்து வகையான நீதிப்பேராணைகள் வெளியிட அதிகாரம் படைத்துள்ளது.

5. பொது அதிகாரவரம்பு (General Jurisdiction): ஷரத்து 225-ன்படி, உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு மற்றும் அதிகாரங்கள், அரசியலமைப்பு தொடங்கப்படுவதற்கு முன்பு எப்படி இருந்தனவோ, அப்படியே இருக்கும்.

6. அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமிக்கும் அதிகாரம்: உயர் நீதிமன்றத்தின் அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் உள்ளது.

2. Explain the appointment of High Court Judges with reference to decided cases. (உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் வழி நின்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து விளக்குக.)

இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி. மாநில ஆளுநர் மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோரைக் கலந்தாலோசித்து உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர், ஆணையதிகாரப்பத்திரம் (வாரண்ட்) வாயிலாகத் தனது கையொப்பம் மற்றும் முத்திரையுடன் நியமனம் செய்வார். **[ஷரத்து 217(1)].**

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் மற்றும் பணியிட மாற்றம் குறித்து உச்ச நீதிமன்றம் பின்வரும் மூன்று வழக்குகளில்

சில முக்கியக் கருத்துகளை கூறியுள்ளது. அவை,

1. **S.P.Gupta v. Union of India (Judges Transfer Case I)**[1]
2. **S.C.Advocate-on-Record Association v. Union of India (Judges Transfer Case II)**[2]
3. **In re Presidential Reference (Appointment and Transfer of Judges Case III)**[3]

எனினும் இம்மூன்று வழக்குகளுக்கு முன்னதாக எழுந்த பின்வரும் மற்றொரு முக்கிய வழக்கை இங்கு கவனிப்பது நலம்.

Union of India v. Sankalchand Sheth[4]

இவ்வழக்கு நீதிபதிகளின் பணியிட மாற்றம் தொடர்பானதாகும். ஷரத்து 222ன்படி ஒரு நீதிபதியை ஒரு உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு, இந்தியத் தலைமை நீதிபதியை கலந்தாலோசித்துவிட்டு, குடியரசுத் தலைவர் பணியிட மாற்றம் செய்யலாம். இவ்வழக்கின் சங்கதிகள்படி, குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி சங்கல் எம்ச் சேத் என்பரை குஜராத்திலிருந்து ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றத்திற்கு குடியரசுத் தலைவர் இட மாற்றம் செய்தார். இதற்காகத் தன்னுடைய இசைவைப் பெறவில்லை என்றும். இந்தியத் தலைமை நீதிபதியிடம் கலந்தாலோசிக்கவில்லை என்றும் கூறி குடியரசுத் தலைவரின் இடமாற்ற அறிவிக்கையை எதிர்த்து வழக்கிட்டார். உச்ச நீதிமன்றத்தில் இது குறித்து தரப்பினரிடையே ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. மத்திய அரசு அவரை மீண்டும் குஜராத் உயர் நீதிமன்றத்திற்கே திரும்ப இடமாற்றம் செய்ய இணங்கியது. இதனைத் தொடர்ந்து மனு திரும்பப் பெறப்பட்டது. எனினும் பொது முக்கியத்துவம் கருதி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சில கருத்துகளை பகர்ந்தனர். அவற்றின்படி, நீதித்துறையின் சுதந்திரம் என்பது ஒரு முக்கியமான அம்சமாகும். மேலும் அது நமது சட்டமுறையின் முக்கிய உட்கூறு. எனவே, அரசு நிர்வாகம் தமது விருப்பத்திற்கேற்ப நீதிபதிகளை இடமாற்றம் செய்வது என்பது நீதித்துறையின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகும். இதை அனைத்து நீதிபதிகளும் ஏற்றுக்

1. AIR 1982 SC 149
2. AIR 1994 SC 268 : (1993) 4 SCC 441
3. AIR 1999 SC 1
4. AIR 1977 SC 2328

கொண்டனர். பொது நன்மையைக் கருதியே ஒரு நீதிபதியை இட மாற்றம் செய்ய வேண்டும். எந்த இடமாற்றத்தையும் இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசிக்காமல் செய்யக் கூடாது. கலந்தாலோசித்தல் (Consultation) என்பது அனைவரின் ஒத்திசைவு (Concurrence) கொண்டது என்ற பொருள் கொண்டது அல்ல. ஷரத்து 222(1)-ன் கீழ் கலந்தலோசித்தல் முழுமையாகவும், பயனுறத் தக்கதாகவும் இருத்தல் வேண்டும். வெறும் வழக்க முறையான தாகவோ, பயனற்ற கலந்தாலோசிப்பாகவோ இருத்தல் கூடாது. இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் குடியரசுத் தலைவரிடையே சரியான தகவல் பரிமாற்றம் இருத்தல் வேண்டும். இவ்வாறு பெரும்பான்மையான நீதிபதிகள் இவ்வழக்கில் கூறினர்.

இந்நிலையில் 18-03-1981 ஆம் தேதியில் மத்திய சட்ட அமைச்சர் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். அதில் ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திலும் மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் வெளி மாநிலத்திலிருந்து வர வேண்டும் என்றும், கூடுதல் நீதிபதிகளும், புதிதாக நியமனம் செய்யப்படும் நீதிபதிகளும் இதற்கு இசைவு அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து பீகார் தலைமை நீதிபதி கே.பி.என்.சிங் சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். சென்னை தலைமை நீதிபதி கேரளாவிற்கு இடமாற்றம் செய்யப் பட்டார். இது நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும் செயல் என்று வழக்குரைஞர்கள் கருதினர். எனவே அலகாபாத், பம்பாய், தில்லி மற்றும் பாட்னாவில் இது தொடர்பாக நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. பின்னர் இம்மனுக்கள் யாவும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு ஏழு நீதிபதிகள் கொண்ட ஆயத்தால் விசாரிக்கப்பட்டது. அவ்வழக்கு வருமாறு:-

S.P.Gupta v. Union of India[1]

இவ்வழக்கு **Judges Transfer Case I** என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது. இதில் முதலில் இப்பிரச்சனை தொடர்பாக வழக்கிடுவதற்கான சட்டத்தகுதி (*locus standi*) வழக்குரைஞர்களுக்கு உள்ளதா என்ற வினா எழுந்த போது, உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இங்கு ஒரு வழக்கில் தில்லி உயர் நீதிமன்ற நீதிபதி (கூடுதல் நீதிபதி) எஸ்.என்.குமார் என்பவருக்கு ஊழல் குற்றச் சாட்டு காரணமாக கால நீட்டிப்பு தரப்படவில்லை. இது தில்லி

1. AIR 1982 SC 149

உயர் நீதிமன்ற நீதிபதியின் பரிந்துரைப்படி செய்யப்பட்டதாகும். இதுவும் உச்ச நீதிமன்றத்தின் முன் வந்தது. பெரும்பான்மை நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் நீதிபதி எஸ்.என்.குமாருக்கு கால நீட்டிப்பு தராதது செல்லும் என்று கூறினர். மேலும் ஒரு நீதிபதியை ஒரு உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்வது என்பது பொது நலன் கருதி இருக்க வேண்டும் என்றும், அது தண்டனை அளிப்பதாக இருக்கக் கூடாது என்றும் இவ்வழக்கின் போது கூறப்பட்டது. நீதிபதி கே.பி.என். சிங்கை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்தது பொது நலன் என்ற காரணத்துடன் அமைந்தது என்றும், இதில் தீய நோக்கம் ஏதுமில்லை என்றும் கூறப்பட்டது. முன்னதாக நாம் கண்ட சங்கல் எஃச் சேத் வழக்கின் தீர்ப்பு இவ்வழக்கில் ஏற்கப் பட்டது. மத்திய சட்ட அமைச்சரின் சுற்றறிக்கை செல்லுபடியாகும் என்றும் கூறப்பட்டது. சங்கல் எஃச் சேத் வழக்கில் கூறப்பட்ட நிபந்தனைகளாவன: (1) நீதிபதிகளின் பணியிட மாற்றம் பொது நலன் குறித்ததாக இருக்க வேண்டும்; (2) இதற்காக இந்திய தலைமை நீதிபதியிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.

இவ்வழக்கில் மற்றொரு முக்கியக் கருத்தும் தெரிவிக்கப் பட்டது. அதாவது, ஷரத்து 217ன் கீழ் இந்தியத் தலைமை நீதிபதி, மாநில ஆளுநர், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோரை கலந்தாலோசித்து, குடியரசுத் தலைவர் நீதிபதிகளை நியமிக்க வேண்டும் எனப்பட்டது. இவ்வழக்கில் இம்மூன்று அரசியலமைப்பு பணியாளர்களில் இந்தியத் தலைமை நீதிபதிக்கு மேலமைநிலை (Primacy) கிடையாது என்றும், ஒருவரைவிட மற்றொருவர் மேலமை நிலை கொண்டிருக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதன் வாயிலாக இந்திய உச்ச நீதிமன்றம் தனது மேலமைநிலையை துறந்துவிட்டது. இம்மூவருக்கும் கலந்தாலோசிப்பில் பங்கெடுக்கும் உரிமை மட்டுமே உண்டு. மேலும் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம், நிர்வாகத்திற்கு மட்டுமே உண்டு என்ற கருத்தும் தெரிவிக் கப்பட்டது. ஆனால் இக்கருத்துக்கு பலமான எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. ஏனெனில் இக்கருத்து நீதித்துறையின் சுதந்திரத்தையும், நடுநிலைத் தன்மையையும் பாதிக்கும் எனக் கூறப்பட்டது.

இதற்கு பின்னர் **Subash Sharma v. Union of India**[1] என்ற வழக்கில் மேற்படி எஸ்.பி.குப்தா வழக்கின் பெரும்பான்மை முடிவு அதைவிட நீதிபதிகள் அதிகம் கொண்ட பெரும் ஆயத்தால் விசாரிக்

1. AIR 1994 SC 268

கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து பின் வரும் வழக்கில் ஒன்பது நீதிபதிகள் கொண்ட ஆயம் அமைக்கப் பட்டது. அது வருமாறு:-

S.C.Advocate-on-Record Association v. Union of India[2]

இந்த முக்கியமான வழக்கு **Judges Transfer Case II** என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது. இதில் இந்தியத் தலைமை நீதிபதி நீதித்துறையின் ஒட்டு மொத்தப் பிரதிநிதியாக, அதன் சின்னமாக திகழ்கிறார் என்று கருத்துரைக்கப்பட்டது. இதன் பெரும்பான்மைத் தீர்ப்பின் (5 : 4) முக்கியக் கருத்துக்களைச் சுருக்கமாக இனி காண் போம்:-

1. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்குமான நீதிபதிகள் நியமனத்திற்கான நடைமுறை ஒருங்கிணைந்த (integrated), பங்கு பெறும் கலந்தாலோசிப்பு நடைமுறை (participatory consultative process) ஆகும். இது சிறந்த மற்றும் பொருத்தமான நபர்களைத் தேர்வு செய்வதற்கானதாகும். அரசியலமைப்பு பணியாளர்கள் (Constitutional functionaries) அனைவரும் ஒன்று பட்ட முடிவை அடையக் கூட்டாக இயங்க வேண்டும். அப்போது தான் மேலமைநிலை (primacy) பெறுவது யார் என்ற வினா எழாது.

2. உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்து நியமனத்திற்கான முதல் முயற்சியை இந்தியத் தலைமை நீதிபதியும், உயர் நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்து உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியும் எடுக்க வேண்டும். உயர் நீதிமன்ற நீதிபதி மற்றும் தலைமை நீதிபதியின் பணியிடமாற்றம் குறித்து இந்திய தலைமை நீதிபதிதான் கருத்தே இறுதியானதாகும்.

3. இந்தியத் தலைமை நீதிபதியின் கருத்திற்கு ஏற்ப உச்ச நீதிமன்றத்திற்கோ, உயர் நீதிமன்றத்திற்கோ நீதிபதிகள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

4. உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தலைமை நீதிபதிகளின் பணியிட மாற்றம் குறித்து எந்நீதிமன்றத்திலும் வினா எழுப்பக் கூடாது.

5. உச்ச நீதிமன்றத்தின் மிக மூத்த நீதிபதியே இந்தியத் தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட வேண்டும்.

1. AIR 1982 SC 149

6. உயர் நீதிமன்ற நீதிபதி அல்லது தலைமை நீதிபதியின் இடமாற்றம் குறித்து அவரது இசைவு தேவையில்லை.

7. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதாகும்.

8. இந்தியத் தலைமை நீதிபதியின் பரிந்துரை பேரிலான இடமாற்றம் தண்டனையாகாது.

இத்தீர்ப்பு நாம் முன்கண்ட எஸ்.பி.குப்தா வழக்கில் நீதிபதிகள் நியமனம் மற்றும் இடமாற்றத்தில் உச்ச நீதிமன்றத்திற்கு மேலமை நிலை கிடையாது என்று கூறப்பட்ட கருத்தை தள்ளுபடி செய்துவிட்டது. மேலும் இவ்வழக்கானது நீதிபதிகளின் நியமனம் மற்றும் இட மாற்றம் குறித்த அனைத்துப் பிரச்சனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

இந்நிலையில் இது தொடர்பாக பின்னிட்டு எழுந்த மற்றொரு வழக்கும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அது வருமாறு:

In re Presidential Reference[1]

இவ்வழக்கு **Judges Transfer Case III** என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது. இதில் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் கொண்ட ஆயம் ஒருமனதாக கூறிய கருத்து வருமாறு. அதாவது, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமனம் செய்வது தொடர்பாக மேற்சொன்ன கலந்தாலோசிக்கும் நடைமுறையை பின்பற்றாமல் இந்திய தலைமை நீதிபதி செய்யும் பரிந்துரையானது அரசைக் கட்டுப்படுத்தக் கூடியதல்ல.

இவ்வழக்கில் **S.C.Advocate-on-Record Association v. Union of India**[2] வழக்கில் கூறப்பட்ட கருத்தின்படி நீதிபதிகளின் நியமனத்தில் கலந்தாலோசிக்கும் நடைமுறை குறித்து குடியரசுத்தலைவர் தனக்கு எழுந்த அய்யப்பாட்டை தெளிவாக்குமாறு உச்ச நீதிமன்றத்திடம் கருத்துரை கேட்டார். ஷரத்துகள் 217 (1) மற்றும் 222(1)-ல் கூறப்பட்ட "இந்திய தலைமை நீதிபதியிடம் கலந்தாலோசித்தல்" என்பது இந்திய தலைமை நீதிபதியின் கருத்துரையை உருவாக்குவதில் பல நீதிபதிகளிடம் (Plurality of Judges) கலந்தாலோசிக்க வேண்டும் என்பதையே குறிப்பிடுகிறது. அதாவது

1. AIR 1999 SC 1
2. AIR 1994 SC 268 : (1993) 4 SCC 441

நீதிபதிகளின் நியமனத்தில் இந்திய தலைமை நீதிபதியின் கருத்துரை ஒன்று மட்டுமே ஏற்கத்தக்கதல்ல; ஷரத்து 124(2)-ன்படி உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம் செய்வது தொடர்பாக இந்தியத் தலைமை நீதிபதியானவர், "உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நான்கு பேரைக் கொண்ட ஒரு குழுவிடம்" (a collegium of four seniormost judges of the Supreme Court) கலந்தாலோசிக்க வேண்டும் எனப்பட்டது. மேலும் அந்நீதிபதிகளில் இருவர் மாறுபட்ட கருத்துரையை வழங்கினால், இந்தியத் தலைமை நீதிபதி தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பக் கூடாது என்றும் கூறப்பட்டது. மேற்கண்ட நீதிபதிகள் குழுவின் கருத்துரை எழுத்து வடிவில் இருக்க வேண்டும். இந்தியத் தலைமை நீதிபதி அதை தனது பரிந்துரைகளுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தைப் பொறுத்த வரை, நீதிபதிகளின் குழுவில், இந்தியத் தலைமை நீதிபதியும், உச்ச நீதிமன்றத்தின் இரண்டு மூத்த நீதிபதிகளும் அடங்கியிருக்க வேண்டும் எனப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பணியிட மாற்றம் குறித்த விடயத்தில் நான்கு நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கும் கூடுதலாக, இந்தியத் தலைமை நீதிபதியானவர் சம்பந்தப்பட்ட இரண்டு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளிடமும் கலந்தாலோசிக்க வேண்டும். இங்கு சம்பந்தப்பட்ட இரண்டு உயர் நீதிமன்றங்கள் என்பது, ஒன்று பணியிலிருந்து மாறிச் செல்லும் உயர் நீதிமன்றம், மற்றொன்று பணி ஏற்கச் செல்லும் உயர் நீதிமன்றம்.

மேலும் இவ்வழக்கில் மற்றொரு முக்கியக் கருத்தையும் உச்ச நீதிமன்றம் தெளிவாக்கியது. அதன்படி மேலமை நீதிமன்றங் நீதிபதிகளின் நியமனத்தை, மேற்சொன்ன கலந்தாலோசிக்கும் அதிகாரமானது, முன்னதாக 1993ம் ஆண்டில் கூறப் பட்ட தீர்ப்பில் வகுத்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கும், இந்த 1999ம் ஆண்டு வழக்கின் முடிவில் கூறப்பட்ட கருத்துரைக்கும் (அதாவது உச்ச நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகளை கலந்தாலோசிக்காமல்) இயைந்தவாறு இல்லை என்ற அடிப்படையில் மட்டுமே எதிர்க்க முடியும் எனப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் இம்முடிவு ஒரு பொன் விதியாக உள்ளது. மேலும் இது கலந்தாலோசிக்கும் நடைமுறையை மேலும் வெளிப்படையாகவும், மக்களாட்சியை வலுப்படுத்தக் கூடியவாறும் ஆக்கியுள்ளது எனில் அது மிகையன்று.

3. Writ Jurisdiction of High Court - Write short notes. (உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரவரம்பு - குறுகிய விடை தருக.)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 226 மிக முக்கியமான ஷரத்தாகும். இது அனைத்து உயர் நீதிமன்றங்களுக்கும் நீதிப்பேராணை (Writ) பிறப்பிக்கும் அதிகாரத்தை வழங்குகிறது. இதன் கீழ் ஒரு உயர் நீதிமன்றம் தனது அதிகாரவரம்பிலுள்ள நிலப் பகுதிகளில் எவருக்கும், எந்த அதிகார அமைப்பிற்கும், அரசுக்கும் எதிராக உத்தரவுகள், ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus), செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus), தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition), நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Certiorari), தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo warranto) உள்ளிட்ட நீதிப்பேராணைகளை பகுதி III-ல் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த அல்லது இதர நோக்கம் எதற்காகவும் (for any other purpose) பிறப்பிக்கலாம்.

ஷரத்து 226ன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரம், குடிமக்களின் அடிப்படை உரிமைகளையும், இதர சட்ட உரிமைகளையும் பாதுகாக்கும் காவலனாக நீதிமன்றங்களைச் செயல்பட உரிமையளிக்கிறது. தற்போதைய மக்கள் நலவாழ்வு அரசின் செயல்பாட்டில், அரசின் செயல்களுக்கு எதிராக உரிய தீர்வழி காண இது வழி வகுக்கிறது. நீதிப்பேராணை வாயிலான தீர்வழி, மற்றச் சாதாரண நீதிமன்ற நடவடிக்கை வாயிலான தீர்வழியைவிட விரைவானது; செலவு குறைந்தது.

ஷரத்து 226-ல் 'இதர நோக்கம் எதற்காகவும்' (for any other purpose) என்ற சொற்டொர் பயன்படுத்தப்பட்டிருப்பதால், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய நிகழ்வுகள் மட்டுமன்றி, வேறு எந்த சட்ட உரிமைகளை மீறினாலும் உயர் நீதிமன்றங்கள் பொருத்தமான நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கலாம். இதைப் பொறுத்து ஷரத்து 226ன் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரம், ஷரத்து 32ன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள அத்தகு அதிகாரத்தை விட பரந்ததாகும். எனினும் முழுமையான ஒரு ஒப்பந்தக் கடப்பாடு தொடர்பாக எழும் பிரச்சனைக்காக ஷரத்து 226ன் கீழ் மனு தாக்கல் செய்து தீர்வழி பெற இயலாது. ஏனெனில் இங்கு இழப்பீட்டிற்காக அல்லது குறித்தவகை நிறைவேற்றத்திற்காக (specific performance) சாதாரண உரிமையியல் நீதிமன்றத்தில் உரிமை

வழக்குதான் தொடர வேண்டும். இதைத் தவிர மற்ற வகையில் உயர் நீதிமன்றத்திற்கு உள்ள நீதிப்பேராணை அதிகாரவரம்பு உரிமைகள் பாதிக்கப்பட்ட குடிமக்களின் உடனடி உதவிக்கு வரும் ஒரு உற்ற நண்பன் எனலாம். (நீதிப்போரணைகள் பற்றி விரிவாக நாம் ஏற் கனவே அரசியலமைப்புச் சட்டம் I என்ற நூலில் கண்டுள்ளோம்.)

(இ) தீர்ப்பாயங்கள்

(ஷரத்துகள் 323A மற்றும் 323B)

Tribunals

(Articles 323A to 323B)

Tribunals - Write short notes. (தீர்ப்பாயங்கள் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Administrative Tribunals - Write short notes. (செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் - குறுகிய விடை தருக.)

தீர்ப்பாயங்கள் பற்றிய சட்ட வகைமுறைகளானது, 1976-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 42வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தினால் நமது இந்திய அரசியலமைப்பில், **ஷரத்து 323-A** மற்றும் **ஷரத்து 323-B** ஆகியவற்றின் வாயிலாக புதிதாக சேர்க்கப் பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் கீழ் பணிபுரியும் அரசுப் பணி யாளர்களின் பணி குறித்த நிலைகள் மற்றும் பணியிட அமைவுகள் (recruitments) தொடர்பான தகராறுகளை (disputes) தீர்ப்பதற்காக பாராளுமன்றச் சட்டமொன்றின் வாயிலாக செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் (Administrative Tribunals) ஏற்படுத்துவதற்கு **ஷரத்து 323-A** வழிவகுக்கிறது.

மேற்படி **ஷரத்து 323-A**-யின்படி, பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், அது 1985-ல் செயலாட்சித் துறை தீர்ப்பாயச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின் கீழ், மத்திய அரசு செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் (Central Administrative Tribunals) மாநில அரசு செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் (State Administrative Tribunals) மற்றும் கூட்டு செயலாட்சித்துறை தீர்ப்பாயங்கள் (Joint Administrative Tribunals) என மூவகைத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அது போன்று வரி விலக்காரங்கள், எற்றுமதி மற்றும் இறக்குமதி, தொழிலாளர் மற்றும் தொழில் தகராறுகள், பணி குறித்த விஷயங்கள் (service matters), அத்தியாவசிய பண்டங்களை அளிப்பு செய்தல், பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல்கள் தொடர்பான விஷயங்கள் ஆகிய இவை சம்பந்தமாக எழும் தகராறுகள், முறையீடுகள் (complaints) மற்றும் குற்றங்களை விசாரித்து தீர்மானிப்பதற்கென தீர்ப்பாயங்களை (Tribunals for other matters) உண்டாக்குவது குறித்து ஷரத்து 323-B கூறுகிறது.

ஒவ்வொரு தீர்ப்பாயத்திலும் தலைவர் (Chairman) ஒருவரும், தேவையான துணைத் தலைவர்களும் (Vice-chairman) மற்றும் நீதித்துறை (Judicial) மற்றும் செயலாட்சித்துறை (Administrative) சார்ந்த உறுப்பினர்களும் பதவி வகிப்பார்கள். தீர்ப்பாயத்தின் கூடுதல் ஆயங்களில் (Benches) நீதித்துறை சார்ந்த உறுப்பினர் ஒருவரும், செயலாட்சித்துறை சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இருப்பார்கள்.

-oOo-

அத்தியாயம் 4

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர், இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் அரசுப் பணியாளர் தேர்வாணைத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகள் (Organisation, Powers and Functions of the CAG, ECI and the Public Service Commission)

(அ) இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர்

(ஷரத்துகள் 148 முதல் 151)

The Comptroller and Auditor General of India

(Articles 148 to 151)

The Comptroller and Auditor General of India - Write short notes.
(இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் - குறுகிய விடை தருக.)

நியமனம், நீக்கம், ஊதியம் முதலியவை:

இந்தியாவிற்கு கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்றும், அவரை குடியரசுத் தலைவர் தன் கையொப்பமிட்ட மற்றும் முத்திரையிட்ட ஆணை

யால் நியமிக்க வேண்டும் என்றும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நீக்குவதற்குள்ள நடைமுறைகளின்படிதான் அவரை நீக்க வேண்டுமே தவிர பிற நடைமுறைகளின்படி கூடாது என்றும், **ஷரத்து 148 (1)** கூறுகிறது.

அவர் தன்னுடைய பதவியை ஏற்றுக் கொள்ளும் முன்பு, குடியரசுத் தலைவரின் முன்போ அல்லது இதற்காக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட நபரின் முன்போ அரசியலமைப்பின் மூன்றாவது அட்டவனையில் குறிப்பிட்டுள்ளவாறு உறுதிமொழி (Oath) எடுத்துக் கொள்ள வேண்டுமென, **ஷரத்து 148 (2)** கூறுகிறது.

அவரது ஊதியம் மற்றும் பணிக்கான பிற நிலைப்பாடுகளை பாராளுமன்றம் தனது சட்டமொன்றில் நிர்ணயிக்கலாம். எனினும் அவ்வாறு நிர்ணயிக்கப்படும் வரை, மேற்கண்டவற்றிற்கு அரசிய லமைப்பின் இரண்டாவது அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ளது பொருந்தும் என்று **ஷரத்து 148 (3)** கூறுகிறது.

அவர் தனது பதவியை இழந்த பிறகு, மத்திய அரசு அல்லது மாநில அரசுகளின் கீழ் எப்பதவியையும் வகிக்கத் தகுதியற்றவரா கிறார், என்று **ஷரத்து 148 (4)** விதிக்கிறது.

இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறையில் பணி புரியும் நபர்களின் பணி நிலைப்பாடுகளும் மற்றும் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் நிர்வாக அதிகாரங்களும், அவரிடம் கலந்தாலோசித்த பிறகு குடியரசுத் தலைவரால் செய்யப்படும் விதிகளால் வகுக்கப்படும் என்று, **ஷரத்து 148 (5)** கூறுகிறது.

அவரது அலுவலக நிர்வாகச் செலவுகள், அவரது மற்றும் அவரது அலுவலகத்தில் பணி புரியும் நபர்களின் ஊதியங்கள், படிகள், ஓய்வூதியங்கள் ஆகியவை இந்தியாவின் திரட்டு நிதியிலி ருந்து அளிக்கப்படும் (Consolidated Fund of India) என **ஷரத்து 148 (6)** கூறுகிறது.

கடமைகளும் அதிகாரங்களும்:

இவை குறித்த **ஷரத்து 149** கூறுகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குண்டான கணக்குகள் (Accounts) தொடர்பான தன்னுடைய கடமைகளையும் அதிகாரங்களையும், பாராளுமன்றச் சட்டம் வகை செய்யும் விதத்தில் செலுத்த வேண்டும். இவர்

பின்வரும் இரு கடமைகளைச் செய்கின்றனர். 1. ஒரு கணக்காளர் (Accountant) என்ற முறையில் இவர் இந்தியாவின் திரட்டு நிதியில் இருந்து எடுத்துக் கொள்ளப்படும் அனைத்துத் தொகைகளின் கட்டுப்பாட்டினையும் வைத்திருந்தார். 2. ஒரு தணிக்கையாளர் (Auditor) என்ற முறையில், மத்திய மற்றும் மாநில அரசால் செலவழிக்கப்படும் எல்லா தொகைகளையும் தணிக்கை செய்கின்றார்.

கணக்குகள் படிவம் (Form of Accounts):

ஷரத்து 150-ன்படி, மத்திய அரசின் மற்றும் மாநிலங்களின் கணக்குகள், இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிவுரையின் பேரில், குடியரசுத் தலைவர் வகுத்துரைத்துக் கொடுக்கும் படிவத்தில் வைத்து வரப்படுதல் வேண்டும்.

தணிக்கை அறிக்கைகள் (Audit Reports):

மத்திய அரசு தொடர்பான கணக்குகள் குறித்து இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகள், குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவர் அதை பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும் வைக்கும்படி செய்வித்தல் வேண்டுமென **ஷரத்து 151 (1)** விதிக்கிறது. அதுபோல், ஒரு மாநிலத்தின் கணக்குகளை மாநில ஆளுநரிடம் அவர் சமர்ப்பிக்க வேண்டும்; மாநில ஆளுநர், அதை சட்டமன்ற அவையின் முன்பு வைக்கும்படி செய்வித்தல் வேண்டுமென **ஷரத்து 151 (2)** விதிக்கிறது.

(ஆ) இந்திய தேர்தல் ஆணையம்

(ஷரத்துகள் 324 முதல் 329)

Election Commission of India

(Articles 324 to 329)

Give an account of the structure, powers and functions of Election Commission of India - Write short notes. (இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு, அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஒரு மதிப்பீடு தருக.)

(அல்லது)

Election Commission - Write short notes. (தேர்தல் ஆணையம் -

குறுகிய விடை தருக.)

(அல்லது)

Status of Chief Election Commissioner in a multi-member Election Commission - Write short notes. (பல உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணையத்தில், தலைமைத் தேர்தல் ஆணையரின் நிலை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Primacy of the Chief Election Commissioner - Write short notes. (தலைமை தேர்தல் ஆணையரின் முதன்மை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Removal of Chief Election Commissioner - Write short notes. (தலைமை தேர்தல் கமிஷனரை நீக்குதல் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

T.N.Seshan v. Union of India (1995 4 SCC 611) - Write short notes. [டி.என்.சேசன் எதிர் இந்திய யூனியன் (1955 4 SCC 611) - குறுகிய விடை தருக.]

(அல்லது)

State whether a Writ Petition lies against election disputes. Refer to relevant constitutional provision. (தேர்தல் வழக்குகளின் மீது நீதிப்பேராணை மனு போட முடியுமா? தேவையான அரசியல் சட்டப் பிரிவுகளை விளக்குக.)

தேர்தல் ஆணையம் (Election Commission):

வாக்காளர்களின் பட்டியலை (electoral rolls) தயாரிக்கவும், தேர்தல்களை நடத்தவும், கண்காணிக்கவும், நெறிப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் ஒரு ஆணையத்தை நிறுவ **ஷரத்து 324 (1)** வகை செய்கிறது. இந்த ஆணையம்தான் 'தேர்தல் ஆணையம்' என்றழைக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையத்தின் அமைப்பு (Constitution of Election Commission):

தேர்தல் ஆணையம், ஒரு தலைமை தேர்தல் ஆணையாளரையும் (Chief Election Commissioner), இவருக்கு உதவியாக மற்ற தேர்தல் ஆணையர்களையும் கொண்டிருக்கும் என்றும், இவர்களை குடியரசுத் தலைவர் நியமிப்பார் என்றும், **ஷரத்து 324 (2)** கூறுகிறது.

மற்ற தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்படும் பொழுது, தலைமைத் தேர்தல் ஆணையாளர், தேர்தல் ஆணையத்தின் தலைவராக விளங்குவார், என **ஷரத்து 324 (3)** கூறுகிறது.

மாநில சட்டமன்ற பொதுத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தலுக்காக, குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்த பிறகு, தேர்தல் ஆணையாளர் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவிடும் பொருட்டு தேவையான **வட்டார ஆணையாளர்களை (Regional Commissioners)** கூட நியமிக்கலாம், என **ஷரத்து 324 (4)** கூறுகிறது.

தலைமை தேர்தல் ஆணையாளரின் நிலை (அல்லது) தலைமை தேர்தல் ஆணையரின் முதன்மை (அல்லது) டி.என்.சேஷன் - எதிர் - இந்திய அரசு[1]:

ஷரத்து 324 (2) –ஆல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 1993-ல் திரு. **M.S. கில் மற்றும் திரு. G.V.G. கிருஷ்ணமூர்த்தி** எனும் இருவரை தேர்தல் ஆணையாளர்களாக குடியரசுத் தலைவர் நியமித்தார். மேலும் இவர்கள் இருவரும், தலைமை தேர்தல் ஆணையாளர்களுக்குள்ள அதே அந்தஸ்துடன் சமமாக வைக்கப்பட்டனர் இத்தோடு மட்டுமல்லாமல், இவர்களில் பெரும்பான்மையினர் அளிக்கும் முடிவே இறுதியானது என்றும் கூறப்பட்டது. அச்சமயத்தில் தலைமை தேர்தல் ஆணையாளராக இருந்தவர் திரு. **டி.என். சேஷன்** ஆவார். இவர், தனக்கு இணையான தகுதி (அந்தஸ்து) வழங்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட மேற்படி இரண்டு தேர்தல் ஆணையர்களின் நியமனத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார். உச்ச நீதிமன்றம், தலைமை தேர்தல் ஆணையாளரே **உயர் நிலையில் (Supremacy)** இருப்பவர்; மற்ற ஆணையாளர்கள் அவருக்கு கீழ்ப்பட்டவர்களே என்று திரு. டி.என். சேஷனுக்கு சாதகமாக இடைக்கால உத்திரவு (interim order) ஒன்றைப் பிறப்பித்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் 1995-ல் வழங்கிய இறுதியான தீர்ப்பில் அனைத்து தேர்தல் ஆணையர்களும், தலைமை தேர்தல் ஆணையாளருக்குள்ள அதே அந்தஸ்தையும், அதிகாரங்களையும்

1. (1995) 4 SCC 611

பெற்றவர்கள் என்று திரு. டி.என்.சேஷனுக்கு பாதகமாகக் கூறி, தேர்தல் ஆணையாளர்களை, தலைமை தேர்தல் ஆணையாளருடன் சம அந்தஸ்தில் வைத்தது. விடுவாரா டி.என்.சேஷன்? மேற்படி தீர்ப்பை எதிர்த்து ஒரு சீராய்வு (review) மனுவை தாக்கல் செய்தார். ஆனால் அந்தோ பரிதாபம்! அம்மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

எனவே, பிற ஆணையாளர்களை விட தலைமை தேர்தல் ஆணையாளர் ஒன்றும் உயர்ந்தவரல்ல; அனைவரின் நிலையும், அந்தஸ்தும், அதிகாரமும் ஒன்றே; அவர்கள் சமமானவர்கள். ஒருவேளை அவர்கள் எடுக்கும் முடிவில் மாறுபட்ட கருத்துகள் இருப்பின், தலைமை தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட பிற ஆணையாளர்களின் பெரும்பான்மையான முடிவே செல்லத் தக்கதாகும்; மேலோங்கி நிற்கத் தக்கதாகும், என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

தேர்தல் ஆணையாளர்களின் பதவிக்காலம் (Tenure of Office):

ஷரத்து 324 (5)-ஆனது, தேர்தல் ஆணையாளர்களின் பணி வகைப்பாடுகள் மற்றும் பதவிக் காலம் குறித்து சட்டமியற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது. அதன்படி, 1991-ல் **தலைமை தேர்தல் ஆணையாளர் மற்றும் பிற தேர்தல் ஆணையாளர்கள் (பணி வரைபாடுகள்) சட்டம்,** பாராளுமன்றத்தால் இதற்கென இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தலைமை மற்றும் பிற தேர்தல் ஆணையாளர்கள், தாங்கள் பதவியேற்ற தேதியிலிருந்து 6 ஆண்டுகள் அப்பதவியிலிருப்பர். இவர்களின் ஓய்வு பெறும் வயது 65 ஆகும். மேற்கண்டவற்றில் எது முன்னதாக வருகிறதோ (அதாவது 6 ஆண்டுகளா அல்லது 65 வயதா), அதன்படி தங்கள் பதவியிலிருந்து வெளியேற வேண்டும்.

தேர்தல் ஆணையாளர்களின் நீக்கம் (Removal):

தேர்தல் ஆணையாளர்களை அவ்வளவு எளிதாக நீக்கிவிட முடியாது. ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியை நீக்குவதற்கு ஷரத்து 124-ன்படி என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமோ, அந்த நடைமுறைகளை எல்லாம் பின்பற்றித்தான் நீக்கப்பட முடியும், என **ஷரத்து 324 (5)** கூறுகிறது. அந்நடைமுறைகள் யாவும் சிக்கல் வாய்ந்ததாகும். எனவே, தேர்தல் ஆணையாளர்களின் பதவி அவ்வளவு எளிதாக பறிபோகக் கூடியதல்ல. பதவி நீக்கத்தின்

மேற்படி நடைமுறையின் அடிப்படை நோக்கம் யாதெனில், தேர்தல் ஆணையாளர்கள் ஆளும்கட்சி அல்லது எதிர்கட்சியினரின் எவ்வித அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாமல் தங்களது பணியை சுதந்திர மாகவும், திறம்படவும் செவ்வனே செய்ய வேண்டும் என்பதுதான்.

தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்களும் பணிகளும் (Powers and Functions):

1. ஷரத்து 324 (1)-ன்படி, பாராளுமன்ற தேர்தல், சட்டமன்றத் தேர்தல் மற்றும் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோர்களின் தேர்தலுக்குண்டான வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் தயாரிக்கிறது. 2. தேர்தல்களை நடத்துகிறது, கண்காணிக்கிறது, நெறிப்படுத்துகிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது. 3. அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் சின்னம் ஒதுக்குவது தொடர்பாக எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்கிறது. 4. பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர் முறையே ஷரத்து 102 (1)-ல் மற்றும் ஷரத்து 191 (1)-ல் கூறப்பட்டுள்ள தகுதியின்மைகளைப் பெற்றிருந்தால், அவரை தகுதியற்றவராக விளம்புவதற்கு, குடியரசுத் தலைவருக்கு தேர்தல் ஆணையம் கருத்துரை (opinion) வழங்க வேண்டும். 5. சில சூழல்களில் தொகுதி முழுமைக்கும் மறு வாக்கெடுப்பு (re-poll) நடத்த தேர்தல் ஆணையம் உத்திரவிடலாம், என **Mohinder Singh v. Chief Election Commission of India**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

தேர்தல் ஆணையம் நாம் முன்கண்ட ஷரத்து 324-ன் எல்லைக்கு உட்பட்டுதான் செயல்பட வேண்டும். மீறி செயல்பட்டு உத்திரவுகள் ஏதும் பிறப்பித்தால், அவை நீதிமன்றத்தின் மறு சீராய்விலிருந்து தப்ப முடியாது. ஆனால் மறுசீராய்விற்கு உகந்ததா இல்லையா (reviewable or not) என்பது, அந்தந்த நேர்வின் தன்மைகளைப் பொறுத்ததாகும், என **Dig Vijay v. Union of India**[2] வழக்கில் கூறப்பட்டது.

Inderjeet v. Election Commissioner[3] எனும் வழக்கில், வாக்காளர் பட்டியலை திருத்தியமைக்கும்வரை, தேர்தலை நடத்தக் கூடாது என தேர்தல் ஆணையத்திற்கு நீதிமன்றம் உத்திரவிட முடியாது என்று கூறப்பட்டது.

1. AIR 1978 SC 851
2. JT 1993 (5) SC 1
3. AIR 1984 SC 19

தேர்தல் விஷயங்களில் நீதிமன்றம் தலையிட முடியுமா? நீதிப் பேராணை மனு தாக்கல் செய்ய இயலுமா?

தேர்தல் விஷயங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதை **ஷரத்து 329** தடை செய்கிறது. அதாவது **ஷரத்து 329 (a)-ன்படி,** தொகுதிகளை வரையறுத்தல் அல்லது அத்தொகுதிகளில் இட ஒதுக்கீட்டைச் செய்தல் தொடர்பான எச்சட்டத்தின் செல்லு தன்மைக்கு எதிராக, எந்நீதிமன்றத்திலும் வினா எழுப்ப இயலாது.

மேலும், **ஷரத்து 329(b)-ன்படி,** பாராளுமன்ற அவைகளுக்கு உண்டான தேர்தல் அல்லது மாநில சட்டமன்ற அவைகளுக் குண்டான தேர்தலை எதிர்த்து எந்நீதிமன்றத்திலும் வினா எழுப்ப முடியாது என்றும், உரிய சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக ஏற்படுத்தப் பட்ட அதிகார அமைப்பின் முன்பு ஒரு தேர்தல் மனுவை (an election petiton) தாக்கல் செய்வதன் மூலம் எதிர்த்து வாதாடலாம்.

K.Venkatachalam v. A.Swamickan[1] - ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உண்டான தகுதியின்மை களை, **ஷரத்து 191** கூறுகிறது. அவ்வாறு தகுதியற்று இருக்கும் பொழுது, அவையில் அமர்ந்தாலோ அல்லது வாக்களித்தாலோ அதற்கு அவர் அபராதம் செலுத்த வேண்டும், என்று **ஷரத்து 193** கூறுகிறது. அதாவது தேர்தல்கள் முடிந்து உறுப்பினரின் மேற்கண்ட தகுதியின்மைகள் தெரியவரும் பொழுது, அதை நீதிமன்றம் வினவ லாம்; விசாரிக்கலாம். அதற்கு **ஷரத்து 329 (b)**-யின் கீழான பாதுகாப்பு கிடைக்காது என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது.

எனவே, ஒரு வேட்பாளர் தேர்தலில் நிற்க அரசியலமைப்புச் சட்டப் படியிலான அடிப்படை தகுதிகளை பெற்றிருக்கவில்லை எனும் காரணத்தால், தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகும், உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தால், அது **ஷரத்து 226-ன்** கீழ் அத்தேர்தலை சட்ட முரணானது (election was illegal) என்று விளம்பும். அச்சமயத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினர், அவையில் அமரவோ அல்லது வாக்களிக்கவோ உரிமை படைத்தவ ரல்ல என்று உயர் நீதிமன்றம் ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை பிறப்பித்து விளம்புகிறது.

1. AIR 1999 SC 1723

(இ) அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(ஷரத்துகள் 308 முதல் 314)

Public Service Commission

(Articles 308 to 314)

அரசுப் பணியாளர்களுக்குண்டான அரசியலமைப்பு பாதுகாப்புகள் (Constitutional Safeguards for Civil Servants)

1. What are the constitutional safeguards available to a civil servant? (அரசு ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு சட்ட பாதுகாப்புகள் யாவை?)

(அல்லது)

What is doctrine of pleasure? Are there exceptions? Examine how the provisions under the Constitution, limits the Doctrine of pleasure over the civil servants. (விருப்பக் கோட்பாடு என்றால் என்ன? இதற்கு விதிவிலக்குகள் உண்டா? ஒரு அரசு ஊழியரின் மீது விருப்பக் கோட்பாடு செலுத்துவதை அரசமைப்பு சட்ட வகை முறைகள் எங்ஙனம் கட்டுப்படுத்துகிறது என்பதை ஆராய்க.)

(அல்லது)

Discuss the situation where the disciplinary authority has to do exparte and without giving a hearing to the concerned civil servant. (அரசு ஊழியருக்கு எந்தெந்தச் சூழல்களில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி அவரைக் கேட்காமல் ஒருதலைப்பட்சமாக்கி முடிவெடுக் கலாம் என்பதனை விவாதிக்க.)

(அல்லது)

What are the safeguards available to a civil servant under Article 311 of the Constitution of India. (இந்திய அரசியல் சட்டம் பிரிவு 311-ன் கீழ் அரசுப் பணியாளர்களுக்குண்டான பாதுகாப்புகள் பற்றி எழுதுக.)

(அல்லது)

What are the restrictions placed by Article 311 of the Constitution

on the prerogative of dismissal at pleasure? (விருப்பப்படி பணியிலிருந்து நீக்கிவிடும் தனிச் சிறப்புரிமையின் மீது அரசியலமைப்புச் சட்டம் 311ஆம் பிரிவினால் வைக்கப்பட்ட கட்டுப்பாடுகள் யாவை?)

(அல்லது)

Under what circumstances, the safeguards given to civil servants will be taken away? (அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உத்திரவாதங்கள் எந்தச் சூழ்நிலையில் பறிக்கப்படலாம் என்பதை விளக்குக.)

(அல்லது)

State how far a civil servant is made secure in his office. Refer to cases. (அரசு ஊழியர் ஒருவர் தனது அலுவலக பொறுப்பில் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார் என்பதனை எடுத்துக் கூறுக. முடிவுற்ற வழக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Examine how far the doctrine of pleasure is part of the law of the land. (எந்த அளவிற்கு 'மகிழ்ச்சி சட்ட கோட்பாடு' நாட்டினுடைய சட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதை ஆராய்க.)

(அல்லது)

What are the Constitutional safeguards available for civil servants? Are they adequate? Examine citing relevant provisions and cases. (அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சட்ட பாதுகாப்புகள் யாவை? அவை போதுமானவையா? சட்டப் பிரிவுகள் மற்றும் வழக்குகளை எடுத்துக்காட்டி ஆராய்க.)

(அல்லது)

"When the office is held at pleasure there cannot be any limitation upon the exercise of that pleasure" - Comment. ("விருப்பம் உள்ளவரை பதவி வகித்தல் என்று இருக்கும்போது அந்த விருப்பத்தைச் செலுத்துவதில் வரையறை எதுவும் இருக்கலாகாது" - விளக்கக் குறிப்பு தருக.)

(அல்லது)

Constitutional Protection to Public Servants - Write short notes. (அரசுப் பணியாளர்களுக்கு அரசமைப்பு சட்ட பாதுகாப்பு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Doctrine of pleasure - Write short notes. (விருப்பக் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

விருப்புரிமைக் கோட்பாடு (Doctrine of Pleasure) - விளக்கம்:

விருப்புரிமைக் கோட்பாடு இங்கிலாந்து நாட்டின் அடிப்படையில் வளர்ந்ததாகும். இதனைப் பற்றி, அரசியலமைப்பின் **310 (1)-வது ஷரத்து** குறிப்பிடுகிறது. இதன்படி, மத்திய அரசின் இராணுவ பணியிலோ அல்லது அரசுப் (சிவில்) பணியிலோ உறுப்பினர்களாக இருக்கும் எந்நபர்களும் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்குட்பட்டு தங்களது பதவியினை வகிக்க வேண்டும். அதேபோல் மாநில பணியில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், அம்மாநில ஆளுநரின் விருப்பத்திற்குட்பட்டு, தங்கள் பதவியினை வகிக்க வேண்டும். ஆங்கிலச் சட்டத்தின்படி, பணியில் உள்ள ஒரு உறுப்பினரை எக்காரணங்களும் இல்லாமல் எச்சமயத்திலும் பதவியை விட்டு விலக்கலாம். பணியிலிருந்து நீக்கப்பட்டவருக்கும் அரசுக்குமிடையே பணி ஒப்பந்தம் இருப்பினும், அரசு அதற்குக் கட்டுப்பட்டதல்ல. எனினும் விருப்புரிமை கோட்பாட்டை முழுமையான அளவில் செயல்படுத்த முடியாது. அதன்மீது சில கட்டுப்பாடுகளை அரசியலமைப்பு விதிக்கிறது. அவை வருமாறு.

அரசு ஊழியர் தனது அலுவலகப் பொறுப்பில் பாதுகாக்கப்படும் விதம் (அல்லது) விருப்புரிமைக் கோட்பாட்டின் மீதான கட்டுப்பாடுகள்:

1. ஒரு நபர் (ஒரு இராணுவ பணியிலோ அல்லது ஒரு அனைத்திந்தியப் பணியிலோ அல்லது ஒரு அரசுப் (சிவில்) பணியிலோ உறுப்பினராக இல்லாதவர்) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்தத்தின் மூலம் ஒரு அரசுப் பதவியில் அமர்த்தப்பட்டு, அவருடைய பதவிக் காலத்திலேயே அப்பதவி ஒழிக்கப்படுமாயின் அவருக்கு நஷ்ட ஈடு வழங்கலாம், என அவ்வொப்பந்தத்தில் குறிப்பிடலாம், என்று **ஷரத்து 310 (2)** கூறுகிறது.

2. **ஷரத்து 311 (1)-ன் படி,** எந்த ஒரு அரசு (சிவில்) ஊழியரும் அவரை நியமனம் செய்த அதிகாரிக்கு கீழ் உள்ள அதிகாரியினால் (Subordinate Authority) பதவி நீக்கம் செய்யப்படக் கூடாது.

3. **ஷரத்து 311 (2)-ன்படி,** எந்த ஒரு அரசு (சிவில்) ஊழியரும்,

தான் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு அல்லது பதவிக் குறைப்பு செய்யப் படுவதற்கு முன்பாக, அவரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதில் அவருக்கு தன்னுடைய வாதத்தினை எடுத்துக்கூற ஒரு நியாயமான சந்தர்ப்பம் (reasonable opportunity) அளிக்கப்பட வேண்டும். ஆனால், **பின்வரும் மூன்று சூழ்நிலைகளில், நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் எனும் விதி பொருந்தாது.**

(a) எந்த ஒரு ஒழுக்கக் கேட்டின் காரணமாக ஒரு குற்றவியல் நடவடிக்கையில் (criminal charge) ஒரு அரசு (சிவில்) ஊழியர் தண்டிக்கப் பட்டாரோ, அதே ஒழுக்கக் கேட்டின் அடிப்படையில் அவர் பதவி நீக்கம் செய்யப்படும்பொழுதும்; **[ஷரத்து 311 (2) (a)].**

(b) ஒரு அரசு (சிவில்) ஊழியரை பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் படைத்த ஒரு அதிகாரி, சில காரணங்களை எழுத்து வடிவில் காட்டி அக்காரணங்களால் அவ்வூழியருக்கு நியாயமான சந்தர்ப்பம் அளிப்பது நடைமுறை சாத்தியமல்ல என்று கருதும் பொழுதும்; **[ஷரத்து 311 (2) (b)].**

(c) குடியரசுத் தலைவரோ அல்லது ஆளுநரோ நாட்டின் பாதுகாப்பின் நலனைக் கருதி, ஒரு அரசு (சிவில்) ஊழியருக்கு அத்தகு நியாயமான சந்தர்ப்பத்தினை அளிப்பது உசிதமல்ல என்று திருப்தியுறும் பொழுதும்; **[ஷரத்து 311 (2) (c)].**

4. உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பணிக் காலமானது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் விருப் புரிமையைச் சார்ந்ததல்ல. இது போன்ற பதவிகள் விருப்புரிமைக் கோட்பாட்டின் ஆதிக்கத்திலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டதாகும்.

5. அடிப்படை உரிமைகளுக்கு விருப்புரிமைக் கோட்பாடு பதில் கூறியாக வேண்டும்.

முக்கியமான வழக்குகள்:

Satyavir Singh v. Union of India[1]

RAW -வின் (Research and Analysis Wing) சில ஊரியர்கள் **ஷரத்து 311 (2) (b)**ன் படி, ஒரு விசாரணை வைக்கப்படாமல் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். ஏனென்றால் அவர்கள் ஒழுக்கக்கேடு,

1. AIR 1986 SC 555

மற்ற ஊழியர்களை மிரட்டல், கீழ்ப்படியாமை போன்றவற்றில் ஈடுபட்டனர். இவர்களுக்கு எதிராக விசாரணையை வைத்தால், சாட்சி சொல்ல யாரும் முன்வர மாட்டார்கள். எனவே, இவ்விசாரணை நடைமுறைச் சாத்தியம் அல்ல. இக்காரணங்களை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அவர்களை விசாரணை செய்யாமல் பதவி நீக்கம் செய்தது சரியே, என்று தீர்ப்பு வழங்கியது.

Purushottam Lal Dhingra v. Union of India [1] - இவ்வழக்கில் திங்காரா என்பவர் தற்காலிகமாக (temporary) ஓர் உயர் பதவிக்கு அனுப்பப்பட்டார். இரண்டு வருடங்கள் கழித்து, அவர் செய்யும் பணியின் மீது திருப்தியின்மை காரணமாக, அவர் மீண்டும் பழைய பதவிக்கே திருப்பி அனுப்பப்பட்டார். எனினும், இப்படி திருப்பி அனுப்பப்பட்டது, அவரது எதிர்கால பதவி உயர்வுக்கான (promotion) வாய்ப்புகளை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. இதை எதிர்த்து திங்காரா வழக்கிட்டபொழுது, திங்காராவுக்கு, அவருடைய வாதத்தினை எடுத்துக்கூற நியாயமான சந்தர்ப்பம் (reasonable opportunity) அளிக்கப்படத் தேவையில்லை. ஏனெனில் இப்படி பழைய பதவிக்கே திருப்பி அனுப்பியது ஒரு தண்டனையாகாது (not a punishment) என உச்ச நீதிமன்றம் கூறியது. இவ்வழக்கில் அரசு ஊழியர்கள் பதவி மீதான **'தண்டனை'** என்பதன் பொருளை உச்ச நீதிமன்றம் கூறியது. அதன்படி, ஒரு அரசு ஊழியர் தனது பதவியை வகிக்க சகலவிதமான சட்டப்பூர்வமான உரிமைகளையும் பெற்றிருக்கும் பொழுது, அவரை பதவி நீக்கம் (removal) அல்லது பதவிக் குறைப்பு (reduction in rank) செய்தால், அது தண்டனையாகும். இந்த தருணத்தில்தான் பாதிக்கப்பட்ட ஊழியருக்கு, அவரது வாதத்தினை எடுத்துக்கூற நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்; தவிர மேற்படி வழக்கில் கண்ட சூழ்நிலையின் பொழுது அல்ல, என்றது.

Shyam Lal v. State of Uttar Pradesh[2] - சியாம்லால் என்பவர் கட்டாய பதவி ஓய்வு (Compulsory retirement scheme) திட்டத்தின் கீழ், கட்டாயமாக பணியிலிருந்து ஓய்வு கொடுக்கப்பட்டு அனுப்பப் பட்டார். தன்னுடைய வாதத்தினை எடுத்துக்கூற நியாயமான சந்தர்ப்பம் (reasonable opportunity) அளிக்கப்படவில்லை எனக்கூறி, மேற்படி கட்டாய பதவி ஓய்வு உத்திரவை எதிர்த்து சியாம்லால் வழக்கு தொடுத்தார். இவ்வாறு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது,

1. AIR 1968 SC 36
2. AIR 1954 SC 309

பதவி நீக்கம் செய்ததற்கோ அல்லது பதவிக் குறைப்பு செய்ததற்கோ ஒப்பாகாது. ஆகவே நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்படத் தேவையில்லையென உச்ச நீதிமன்றம் கூறியது.

Chambak Lal v. Union of India[1] - **ஷரத்து 311,** நிரந்தரமாக (permanant) பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமில்லாமல், தற்காலிகமாக (temporary) பணிபுரியும் ஊழியர்களுக்கும் பொருந்தும். இருப்பினும், மேற்படி வழக்கில் நிரந்தரமான பணிக்கும் மற்றும் தற்காலிகமான பணிக்கும் இடையே வேறுபாடுகளை உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. அவை பின்வருமாறு:

1. தற்காலிகமாக பணியில் அமர்த்தப்பட்டவர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்றால், நியாயமான அறிக்கை (reasonable notice) கொடுத்தால் போதுமானது. பொதுவாக ஒரு மாத கால அறிக்கை கொடுக்க வேண்டும். 2. இங்கு **ஷரத்து 311 (2)-ல்** கூறப்பட்டுள்ள நடைமுறை விதிகள் பின்பற்றப்படாது. ஆனால் அப்பதவி நீக்கம், தண்டிக்கும் விதத்தில் அமையுமேயாயின், அதற்கு ஷரத்து 311 (2) பொருந்தும். 3. தற்காலிகமாக பணியில் அமர்த்தப்பட்டிருப்பவர்களின் பதவி நீக்கம் முறையாக செய்யப்படுகிறது. அதற்கு முன் அவருக்கு ஒரு **முதல் நிலை விசாரணைக்கான (preliminary enquiry)** சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஆனால் அவ்வாறு முதனிலை விசாரணை அளிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டுமே காரணமாகக் காட்டி, ஷரத்து 311 (2)-ஐ துணைக்கு அழைக்க முடியாது. ஏனென்றால், தற்காலிகமாக பணியில் அமர்த்தப்பட்டிருப்பவர்களுக்கு முதல் நிலை விசாரணையே தேவையில்லை. ஒரு மாத கால அறிக்கை மட்டுமே போதும்.

2. All India Services - Write short notes. (அனைத்திந்திய பணிகள் - குறுகிய விடை தருக.)

அனைத்திந்திய பணிகளுக்கு, **ஷரத்து 312** வழி வகுக்கிறது. **ஷரத்து 312 (1)-ன்படி,** அனைத்திந்திய பணிகளை ஏற்படுத்துவது தேசிய நலனுக்கு அவசியம் அல்லது அவசரம் என்று மாநிலங்களவையில் (Council of States) வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வெளியிடப் பட்டால், பாராளுமன்றமானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்திந்திய பணிகளை உருவாக்கலாம். இதில் **அனைத்திந்திய**

1. AIR 1964 SC 1854

நீதித்துறைப் பணிகளும் (All India Judicial Services) அடங்கும். மேலும் அப்பணிகள் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்குப் பொதுவானதாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கத்தில் இந்திய ஆட்சித்துறைப் பணி (IAS) மற்றும் இந்திய காவல்துறைப் பணி (IPS) என்றழைக்கப்பட்ட பணிகள், மேற்படி ஷரத்து 312-ன் கீழ் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட பணிகளாகக் கருதப்பட வேண்டும், என **ஷரத்து 312 (2)** கூறுகிறது.

அனைத்திந்திய நீதித்துறைப் பணிகள் என்று குறிப்பிடப் பட்டுள்ளவற்றில், மாவட்ட நீதிபதியின் பதவிக்கும் குறைவாக உள்ள எப்பதவியும் உள்ளடங்காது என்று **ஷரத்து 312 (3)** கூறுகிறது.

அனைத்திந்திய நீதித்துறைப் பணிகளை உருவாக்குவதற்காக இயற்றப்படும் சட்டம், மாவட்ட நீதிபதிகளை குறித்துக் கூறும் அரசிய லமைப்பின் வகைமுறைகளை திருத்தம் செய்ய வேண்டி வரலாம். அவ்வாறு திருத்தப்பட்டால், அது ஷரத்து 368-ன் கீழான ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டமாக கருதப்படாது, என **ஷரத்து 312 (4)** கூறுகிறது.

அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Public Service Commission)

3. Public Service Commission - Write short notes. (அரசுப் பணியாளர் தேர்வாணையம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Functions of the Public Service Commission - Write short notes. (அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Union Public Service Commission - Write short notes. (மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் - குறுகிய விடை தருக.)

அரசுப் பணியாளர்களை அமர்த்துவதற்கு தேர்வுகளை நடத்தும் அதிகாரம் பெற்ற ஆணையங்களே **'அரசுப் பணியாளர் தேர்வாணையம்'** எனப்படுகின்றது. மத்திய அரசிற்கென ஒரு அரசுப்

பணியாளர் தேர்வாணையமும், மாநில அரசுகளுக்கென தலா ஒரு அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இருத்தல் வேண்டும் என **ஷரத்து 315 (1)** கூறுகிறது. இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்கள், அந்த மாநிலங்களின் தொகுதிக்காக **பொதுவாக ஒரே அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Common Public Service Commission)** இருத்தல் வேண்டும் என உடன்பாடு செய்து கொள்வதற்கு **ஷரத்து 315 (2)** வழி வகுக்கிறது. மேலும் **மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமானது (Union Public Service Commission),** மாநில ஆளுநரின் வேண்டுகோளின்படி அம்மாநிலத்திற்கு உண்டான அரசுப பணியாளர் தேர்வாணையமாகவும் செயல்பட சம்மதிக்கும். ஆனால், இதற்கு குடியரசுத் தலைவரின் முன்னனுமதி தேவை. இவ்வாறு மத்திய அரசின் தேர்வாணையம், ஒரு மாநில அரசுக்காகவும், செயல்படும்பொழுது, அது **கூட்டுத் தேர்வாணையம் (Joint Commission)** என அழைக்கப்படும்.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அல்லது ஒரு கூட்டுத் தேர்வாணையத்தின் தலைவரையும், அதன் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் (President) நியமனம் செய்வார். அது போன்று மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களை, அம்மாநிலத்தின் ஆளுநர் நியமனம் செய்வார் என **ஷரத்து 316 (1)** கூறுகிறது. ஆனால் ஒவ்வொரு தேர்வாணையத்தின் உறுப்பினர்களில் கிட்டத்தட்ட ஒரு பகுதியினர், அவர்களை உறுப்பினர்களாக நியமனம் செய்யும் தேதிகளில் மத்திய அரசின் கீழோ, மாநில அரசின் கீழோ குறைந்தது பத்தாண்டுகள் அரசுப் பதவி ஏற்று இருந்தவர்களாக இருத்தல் வேண்டுமென மேற்படி ஷரத்து மேலும் கூறுகிறது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் பணிகளுக்கு தகுதியானவர்களை அமர்த்த தேர்வுகளை நடத்துவது முறையே மத்திய மற்றும் அந்தந்த மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் கடமையாகும் என **ஷரத்து 320 (1)** கூறுகிறது. சிறப்புத் தகுதிகள் (Special qualifications) கொண்டவர்களால் செய்யப்பட வேண்டிய பணிகளுக்கு கூட்டாக ஆள் தெரிவு செய்தல் (Joint recruitment) பற்றி திட்ட முறைகளை வகுப்பதிலும், செயற்படுத்துவதிலும் உதவி புரியுமாறு ஏதேனும் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை வேண்டிக் கொண்டால், அம்மாநிலங்களுக்கு உதவி புரிதல் மேற்படி மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSE) கடமையாகும் என **ஷரத்து 320 (2)** கூறுகிறது.

பின்வரும் விஷயங்களில் மத்திய அல்லது அந்தந்த மாநிலங்களின் அரசுப் பணியாளர் தேர்வாணையங்களானது சம்பந்தப்பட்ட அரசால் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். அவை,- (அ) அரசுப் பணிகளுக்கென (civil post) ஆள் தேர்வு செய்வதற்குண்டான முறை குறித்த அனைத்து விஷயங்களிலும் (ஆ) பணியமர்த்துதல், பதவி உயர்வுகள் செய்தல் மற்றும் பணி மாற்றங்கள் (transfers) செய்தல் போன்றவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள் மீது (இ) அரசுப் பணியாற்றும் நபர் ஒருவரை பாதிக்கும் ஒழுங்கு நடவடிக்கை (disciplinary action) குறித்த விஷயங்கள் (ஈ) தன்னுடைய கடமையை நிறைவேற்றும் பொழுது செய்யப்பட்ட செயல் குறித்து தன் மீது தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை எதிர்த்து வழக்காடிய வகையில், தன்னால் செய்யப்பட்ட செலவுகளை அரசிடமிருந்து திரும்பப் பெற வேண்டி அரசுப் பணியாளர் செய்யும் கோரிக்கைகள் (உ) அரசிற்கு பணியாற்றும்பொழுது ஏற்பட்ட ஊறுகளுக்கு (injuries) இழப்பீடு கேட்டு செய்யப்படும் கோரிக்கைகள். மேற்கண்ட அனைத்து விஷயங்களிலும் சம்பந்தப்பட்ட அரசிற்கு தக்க ஆலோசனை வழங்க வேண்டியது, சம்பந்தப்பட்ட தேர்வாணையத்தின் கடமையாகும். **[ஷரத்து 320 (3)]**. ஆனால் மேற்படி விஷயங்களில் கூறும் ஆலோசனையை சம்பந்தப்பட்ட அரசு ஏற்றுக்கொண்டேயாக வேண்டும் என்ற எவ்வித கட்டாயமுமில்லை. பின்தங்கியோர், அட்டவணை சாதியினர் மற்றும் அட்டவணை பழங்குடியினர்களுக்கு அரசுப் பணியில் இட ஒதுக்கீடு செய்யும் விஷயங்களில் அரசு, மேற்படி தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லையென **ஷரத்து 320 (4)** கூறுகிறது.

4. Removal of a member of Public Service Commission - Write short notes. (அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினரை நீக்குதல் - குறுகிய விடை தருக.)

ஷரத்து **316 (2)**–ன்படி, அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். அவ்வுறுப்பினர் பதவியிலிருக்கும் சமயத்தில் ஓய்வு பெறும் வயதை (retirement age) எட்டிவிட்டால், மேற்படி பதவிக் காலமான 6 ஆண்டுகள் முடிவதற்கு முன்னரே அவர் உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும். (உறுப்பினர் ஓய்வு பெறும் வயது: மத்திய தேர்வாணையம் - 65வது வயதில்; மாநில தேர்வாணையம் - 62வது வயதில்). மேலும், உறுப்பினர் ஒருவர் தானாகவே தனது பதவியை இராஜினாமா செய்யலாம். இதற்கும் அப்பால், தீய நடத்தையின்

(misbehaviour) அடிப்படையில் உறுப்பினர் ஒருவரை குடியரசுத் தலைவர், அவரது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க உத்திரவிடலாம்.

ஆனால், அதற்கு குடியரசுத் தலைவரும் சில நடைமுறை களை பின்பற்ற வேண்டும். அஃதாவது, மேற்படி உறுப் பினரை பதவியிலிருந்து நீக்குவது குறித்து உச்ச நீதிமன்றத்திற்கு குடியரசுத் தலைவர் சுட்டியனுப்ப (reference) வேண்டும். உச்ச நீதிமன்றம் தக்க விசாரணையை மேற்கொண்டு, முடிவில் அவரை பணி நீக்கம் செய்ய வேண்டியது நியாயமானதாக இருப்பின், சம்பந்தப்பட்ட உறுப்பினரை நீக்கும்படி குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் அறிவிக்கும் (report), என **ஷரத்து 317 (1)** கூறுகிறது. அவ்வாறு அறிவிப்பு வரும் வரை, குடியரசுத் தலைவர் அவ்வுறுப்பினரை பதவியிலிருந்து இடைநீக்கம் (suspend) செய்யலாமென **ஷரத்து 317 (2)** கூறுகிறது.

பின்வரும் சந்தர்ப்பங்களில் குடியரசுத் தலைவர் தேர் வாணையத் தலைவரையோ (Chairman) அல்லது உறுப்பினரையோ உச்ச நீதிமன்றத்திடம் சுட்டியனுப் பாமலேயே அவர்களது பதவியை நீக்கம் செய்யலாம். அவை, (அ) மேற்படி தலைவரோ அல்லது உறுப்பினரோ நொடிப்பு நிலையராக (insolvent) அறிவிக்கப் பட்டுவிட்டால் (ஆ) தனது பதவிக் காலத்தின் போது, பணிக் கடமைகளுக்கு புறம்பாக வேறு வேலையில் ஈடுபட்டு ஊதியம் பெறுகிறார் என்றால் (இ) தனது பதவியை உடல் அல்லது உள்ளத் தளர்ச்சியின் காரணமாக தொடர முடியாத நிலையில் மேற்படி தேர்வாணையத் தலைவரோ அல்லது உறுப்பினரோ இருப்பதாக குடியரசுத் தலைவர் கருதினால், அவரை ஒரு உத்திரவு மூலமாக குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கலாம் என **ஷரத்து 317 (3)** கூறுகிறது. அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றின் தலைவரோ (Chairman) அல்லது அதன் உறுப்பினர் எவரேனும் அரசு சார்பான ஒப்பந்தங்களில், தங்களுக்கு இலாபம் வரும் நோக்குடன் பங்கெடுத்துக் கொண்டால், அவர் தீய நடத்தைக் குற்றம் புரிந்தவராக (guilty of misbehaviour) கருதப்படுவார், என **ஷரத்து 317 (4)** கூறுகிறது.

பதவிக்காலம் முடிந்த தேர்வாணைய உறுப்பினர்கள் மீண்டும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் மத்திய அல்லது மாநில அரசின் எப்பணியில் அமர்வதற் கும் தகுதியற்றவர்களாக ஆகிறார்கள், என **ஷரத்து 319** கூறுகிறது.

-o0o-

அத்தியாயம் 5

அரசியலமைப்பு மறுஆய்வு (Constitutional Review)

Constitutional Review - Write short notes. (அரசியலமைப்பு மறு ஆய்வு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Discuss the recommandations made in the Constitutional Review Committe's Report . (அரசியலமைப்பு மறு ஆய்வு குழு அறிக்கையில் செய்யப்பட்ட பரிந்துரைகளை விவாதிக்க.)

முன்னுரை:

நமது நாடு சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. காலச் சூழ்நிலைகளுக்கேற்ப அவ்வப்போது தேவைப்படும் மாற்றங்களை நமது அரசியலமைப்புச் சட்டத்தில் பாராளுமன்ற மானது அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களின் வாயிலாகச் செய்து வருகிறது. இந்நிலையில் இந்திய அரசியலமைப்பை முற்றிலும் மறு ஆய்வு செய்து அதை இன்றைய நவீன இந்தியாவிற்கு உகந்த வகையில் மாற்ற வேண்டும் என்ற விவாதம் தொடர்ந்து எழுந்து வந்தது. இதன் பொருட்டு 17-3-2000-த்தில் மத்திய அரசு தீர்மானத்தின் வாயிலாகக் கட்டமைக்கப்பட்டதே, **'அரசியலமைப்பு செயல்பாட்டினை மறுஆய்வு செய்வதற்கான தேசிய ஆணையம்'** (இனி இதனை சுருக்கமாக 'மறுஆய்வு ஆணையம்' என்று அழைப்போம்) **(The National Commission to Review the Working of the Constitution)** ஆகும். இதன் ஆயுள் காலம் ஓராண்டு ஆகும்.

எனினும் இது சூழலுக்கு ஏற்றவாறு அவ்வப்போது நீட்டிக்கப் பட்டது. இது நமது அரசியலமைப்பை மறு ஆய்வு செய்து தனது பரிந்துரைகளை இரண்டு தொகுதிகளில் 31-3-2002-த்தில் அரசுக்கு சமர்பித்தது.

அரசியலமைப்பு மறுஆய்விற்கான தேவையும் அளாவுகையும் (Need and extent of Review):

மறுஆய்வு ஆணையம் கட்டமைக்கப்பட்ட 2000-ஆம் ஆண்டில் நமது நாடு சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன. இந்த காலகட்டத்தில் இந்திய அரசியலமைப்பு செயல்படும் விதம் குறித்து பெற்ற அனுபவத்தின் பின்னணியில் இருந்து அல்லது பெற்ற படிப்பினையிலிருந்து, அது எந்த அளவிற்கு திறன்மிக்க, இயல்பான மற்றும் வலிமையான அரசாட்சிக்கும் மற்றும் இன்றைய நவீன இந்தியாவின் மாறி வரும் சமூகப் பொருளதார முன்னேற்றத் தேவைகளுக்கும் பொருத்தமான வகையில் செயல்படுகிறது என்பதை பாராளுமன்ற ஜனநாயகத்தின் கட்டமைப்பிற்குள் ஆய்வு செய்து, உரிய பரிந்துரைகளைச் செய்வதற்காக மேற்கண்ட மறுஆய்வு ஆணையம் அமைக்கப்பட்டது.

இந்த மறுஆய்வு இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பில் அல்லது கூறுகளில் (Basic Structure or features of the Constitution of India) தலையிடாமல் எப்படிப்பட்ட திருத்தங்களை அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளில் கொண்டு வர வேண்டும் என்பதை பரிந்துரைக்கும் வண்ணம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த ஆணையம் அரசியலமைப்புச் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு தலைவரையும், பத்துக்கும் மிகாத உறுப்பினர்களையும் கொண்டதாகும். இதற்கு ஒரு செயலாளரும் நியமனம் செய்யப்பட்டார். அந்த வகையில் மேனாள் இந்தியத் தலைமை நீதியரசர் மாண்பமை எம்.என்.வெங்கடாசலய்யா இதன் தலைவராக குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்டார். அவர் இதர உறுப்பினர்களுடன் சேர்ந்து இந்திய அரசியலமைப்பை மறுஆய்வு செய்து உகந்த பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். இந்த ஆணையம் தனக்குண்டான நடைமுறைகளை தானே வகுத்துக் கொள்ளும் அதிகாரத்தை அரசிடமிருந்து பெற்றிருந்தது. இது ஏறத்தாழ ஈராண்டு காலம் பணியாற்றி பின் வரும் பரிந்துரைகளை ஒரு அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பித்தது.

ஆணையத்தின் பரிந்துரைகள் (அல்லது) மறுஆய்வு குழுவின் அறிக்கை - எடுத்துக்காட்டுகள் (Recommandations of Commission or Review Committee's Report):

மறுஆய்வு ஆணையம் பல்வேறு பரிந்துரைகளைச் செய்தது, அவற்றில் 58 பரிந்துரைகள் அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளை திருத்துவது தொடர்பானவையாகும். 86 பரிந்துரைகள் சட்ட மியற்றுத் துறை நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவையாகும். மீதியிருப்பவை நிர்வாகத்துறை செயல்கள் பற்றியவையாகும்.

(1) ஷரத்து 12-ல் வரும் 'வட்டார அதிகாரஅமைப்பு' (Other Authorities) என்பது எதன் பணிகள் பொதுத்தன்மையுடையதாக இருக்கிறதோ அதற்கு தொடர்புடைய நபர் எவரையும் உள்ளடக்கிய தாகும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

(2) ஷரத்து 15 மற்றும் 16-ல் கூறப்பட்டுள்ள பாகுபாட்டிற்கு எதிரான தடையானது, ஒருவரை அவரது இனம் அல்லது சமூகத் தோன்றல், அரசியல் அல்லது பிற கருத்துரை, சொத்து அல்லது பிறப்பு ஆகியவற்றுக்கும் பொருந்தும். அதாவது இவற்றின் அடிப்படையிலும் ஒருவரை பாகுபடுத்தக் கூடாது எனப்பட்டது.

(3) ஷரத்து 19(1)(a)-ல் கூறப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திர உரிமையில், பத்திரிக்கை மற்றும் பிற ஊடகச் சுதந்திரம், கருத்துரைகள் கொண்டிருக்கும் சுதந்திரம், தகவல்கள் மற்றும் கருத்துகளை கேட்கும், பெறும் மற்றும் அனுப்பும் சுதந்திரமும் அடங்கும் எனப்பட்டது.

(4) ஷரத்து 21 என்பதை 21(1) என்று மாற்றிவிட்டு, அதற்குப் பிறகு 21(2) என்றவாறு ஒரு புதிய ஷரத்தைச் சேர்க்க வேண்டும் என்றும், அதன் கீழ் "யார் ஒருவரும் சித்ரவதைக்கு அல்லது கொடுமை, மனிதாபிமானமற்ற அல்லது அவமதிக்கும் செயல் அல்லது தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது" என்பது சேர்க்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

(5) புதிதாகச் சேர்க்கப்படும் ஷரத்து 21(2)க்குப் பிறகு 21(3) என்று மற்றுமொரு புதிய ஷரத்து சேர்க்கப்பட வேண்டும் என்றும், அதன் கீழ், "எவரது வாழ்வு மற்றும் சுதந்திரம் சட்ட விரோதமாகப் பறிக்கப்பட்டதோ அவர் இழப்பீட்டை வலியுறுத்திப் பெறும் உரிமை பெற்றவர்" என்பது சேர்க்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

(6) ஷரத்து 21க்குப் பிறகு ஷரத்து 21-A என்றொரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டு, அதன் கீழ் "ஒவ்வொரு நபரும் இந்திய எல்லையை விட்டு செல்லும் உரிமை பெற்றவர் மற்றும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் இந்தியாவிற்கு திரும்பும் உரிமை பெற்றவர்" என்பது சேர்க்கப்பட வேண்டும்.

(7) ஷரத்து 21-A க்குப் பிறகு ஷரத்து 21-B என்றொரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டு, அதன் கீழ் "ஒவ்வொரு நபரும் தனது அந்தரங்க மற்றும் குடும்ப வாழ்விற்கு, தனது இல்லத்திற்கு, மற்றும் தனது தகவல் தொடர்புக்கு மதிப்பளிக்கும் உரிமை பெற்றவர்" என்பது சேர்க்கப்பட வேண்டும்.

(7) ஷரத்து 21-B க்குப் பிறகு ஷரத்து 21-C என்றொரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டு, அதன் கீழ் "கிராமப்புற கூலி வேலை மற்றும் ஓராண்டில் குறைந்தபட்சம் 80 நாட்களுக்கு கிராமப்புற கூலி வேலைக்கான உரிமைக்கு உத்தரவாதமளிக்க உரிய சட்டமியற்ற வேண்டியது அரசின் கடப்பாடு" என்பது சேர்க்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

(8) இதையடுத்து அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கை களைக் கூறும் பகுதி IV-ல் வரும் ஷரத்து 39-A சம நீதி மற்றும் இலவச சட்ட உதவி (Equal justice and free legal aid) பற்றி கூறுகிறது. இது அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கூறும் பகுதி III-ல் ஷரத்து 30-B ஆக சேர்க்கப்பட வேண்டும் எனப்பட்டது. அதாவது இலவச சட்ட உதவி பெறுவதை அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

(9) ஷரத்து 300-A பின்வருமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும் எனப்பட்டது. அதாவது (1) சொத்தை இழக்கச் செய்தல் அல்லது கையகப்படுத்தலானது சட்டத்தின் அதிகாரத்தினாலன்றி வேறு வகையில் செய்யக் கூடாது, அதுவும் ஒரு பொது நோக்கத் திற்காக இருக்க வேண்டும். (2) சொத்தை ஏதேச்சதிகாரமாக பறித்தல் அல்லது கையகப்படுத்தல் கூடாது.

முடிவுரை:

இவ்வாறு அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள், அடிப் படைக் கடமைகள், பாராளுமன்றம் என பல தலைப்புகளின் கீழும் பரிந்துரைகள் செய்யப்பட்டன. அவற்றை அமல்படுத்தினால், ஒரு புதிய இந்திய அரசியலமைப்புச் சட்டம் மலரும் என்பது திண்ணம்.

பகுதி ஆ

(Part B)

மத்திய - மாநில உறவுகள்

(Centre - State Relations)

அத்தியாயம் 1

கூட்டாட்சித்துவத்தின் கருத்துப்படிவம் (Concept of Federalism)

(i) கூட்டாட்சி அரசிற்கான அவசியம் (Necessity and Justification for Federal Government)

1. Define "Federalism" and explain its necessity. (கூட்டாட்சித்துவம் என்பதை வரையறுத்து, அதன் அவசியத்தை விளக்குக.)

(அல்லது)

Federalism - Write short notes. (கூட்டாட்சித்துவம் - குறுகிய விடை தருக.)

கூட்டாட்சித்துவம் (Federalism) - வரையறை:

அறிஞர் ஏ.வி.டைசி (A.V.Dicey) அவர்கள், , "கூட்டாட்சித் துவம் என்றால், அரசின் அதிகாரங்கள் பல்வேறு ஒருங்கிணைந்த அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுதலாகும்; அந்த அமைப்புகள் அரசியலமைப்பினால் எழுகின்றன மற்றும் கட்டுப்படுத்தப்படு கின்றன,"[1] என்று விளக்கமளிக்கிறார்.

அவரே தொடர்ந்து கூட்டாட்சி பற்றி கூறுகையில், "நாட்டின் ஒற்றுமையையும், அதிகாரத்தையும் மாநிலங்களின்

1. Federalism means the distribution of powers of the State among a number of co-ordinate bodies each originating in and controlled by the Constitution. - A.V.Dicey - The Law of the Constitution, p. 157 (10th edn.)

உரிமைகளோடு சமன் படுத்தும் அரசியல் கருவியே கூட்டாட்சி யாகும்" என்று கூறுகிறார்.

பேராசிரியர் கே.சி. வெய்ர் (K.C.Wheare) அவர்கள், ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு, அரசின் அதிகாரங்களை மத்திய (அல்லது பொது) அரசாங்கத்திற்கும் மற்றும் மாநில (அல்லது வட்டார) அரசாங்கங்களுக்கும் இடையே பகிர்ந்து கொடுக்கிறது. கூட்டாடசி அரசியலமைப்பின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் தங்களது ஆட்சிப் பரப்பில் ஒருங்கிணைந்து செயல்படக் கூடியதும் மற்றும் சுதந்திரமானதுமாகுமே தவிர ஒன்று மற்றொன்றின் கீழ் அமைந்ததல்ல," [2] என்று கூறுகிறார்.

கூட்டாட்சி அரசிற்கான அவசியம் (Necessity for Federal Government) - விளக்கம்:

கூட்டாட்சி எனும் சொல்லே, கூட்டாக ஆட்சி செய்தல் என்ற பொருளைத் தருகிறது. இங்கு இரண்டு அரசாங்கங்கள் செயல்படுகின்றன. மத்தியில் மத்திய அரசாங்கமும், மாநிலங்களில் மாநில அரசாங்கங்களும் ஆட்சி செய்கின்றன. இங்கு மத்திய அரசாங்கத்திற்கும் மற்றும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே அதிகாரப்பகிர்வு காணப்படுகிறது. அதாவது அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படுகிறதே தவிர, பிரித்துக் கொள்ளப்படுவதில்லை. இவ்வாறு அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு மத்திய மற்றும் மாநில அரசுகள் ஆகிய இரண்டும் சேர்ந்து கூட்டாக ஆட்சி செய்கின்றன. அரசாங்கம் எனும் தண்டவாளம் இரண்டு; ஆனால் அவற்றின் மீது அரசாட்சி எனும் ஒரு தொடர்வண்டி செல்கிறது எனலாம். இத்தகு கூட்டாட்சிக்கு நமது அரசியலமைப்பு வழி வகுத்துள்ளது. எவ்வாறு?

ஒரு அரசியலமைப்பில் பின்வரும் அம்சங்கள் இருந்தால், அது கூட்டாட்சி அரசியலமைப்பு எனப்படும். அவை, 1. இரட்டை அரசாங்க முறை; 2. அதிகாரப்பகிர்வு; 3. அரசியலமைப்பின் மேலாண்மை; 4. எழுதப்பெற்ற அரசியலமைப்பு; 5. நெகிழ்வற்ற அரசியலமைப்பு; 6. நீதிமன்றங்களின் அதிகாரம். (இந்த ஆறு

1. A Federal Constitution provides for the distribution of powers of the State between the Central (or *general*) Government and State (or *regional*) Governments. Under the Federal Constitution, the Central and State are coordinate and independent in their sphere and not subordinate to one another. - K.C.Wheare : Federal Government, . 27.

கூறுகளையும் அடுத்து வரும் வினாவில் விரிவாக காண உள்ளோம்.)

மாநிலங்களின் அல்லது வட்டாரங்களின் நலன்கள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன மாநில முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் மாநில அரசுகளிடமும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் மத்திய அரசிடமும் ஒப்படைக்கப்படுகின்றன. இதனால், மாநில அரசுகள் தங்களுக்கு உரித்த விஷயங்களில் தங்களுக்கு தேவைக்கேற்ற விதத்தில், தாங்களாவே சட்டமியற்றிக் கொள்கின்றன. இதனால், மத்திய அரசிடமே அதிகாரங்கள் குவிவது தடுக்கப்படுகிறது. மத்தியில் மற்றும் மாநிலங்களுக்கிடையில் அதிகாரப்பகிர்வு தோன்றுகிறது. இதனால் சர்வாதிகார ஆட்சி தோன்ற வழியில்லை; மாறாக மக்களாட்சி நிலைக்க வழி பிறக்கிறது. எனவே கூட்டாட்சி அரசு சிறப்பும் வலிமையும் வாய்ந்ததாக விளங்குகிறது. அவ்வகையில் நமது இந்திய நாட்டில் கூட்டாட்சி நிலவுவதை பல வகைகளில் எடுத்துரைக்கலாம். குறிப்பாக நமது இந்திய நாட்டில் கூட்டுறவு கூட்டாட்சித்துவம் (Co-operative federalism) அல்லது கூட்டாட்சி போல்வு (Quasi federalism) நிலவுகிறது என்பதே சரியானதாகும்.

கூட்டாட்சித்துவத்தில் காணப்படும் சில குறைகள்:

கூட்டாட்சியில் எவ்வாறு சிறப்புகள் பல உள்ளனவோ, அதே போன்று குறைகளும் இல்லாமல் இல்லை. இங்கு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் பகிர்வு செய்யப்பட்டுள்ள தால், மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்ட விஷயங்களில் மத்திய அரசுக்கு எவ்வித கட்டுப்பாடும் அற்று போய்விடுகிறது. இந்தக் குறை பெரும்பாலும், நெருக்கடிக் காலங்களிலும் வெளிநாட்டு தொடர்பு களின் போதும் தலை தூக்குகிறது. இதனால், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே அதிகார முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. மேலும், தேசியத்துவம் மறைந்து மாநிலத்துவம் ஏற்படும் அபாயமும் உள்ளது. ஏதாவது ஒரு பிரச்சனையில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் முரண்பாடு தோன்றும் பொழுது, ஒரு மாநில மக்கள் மத்திய அரசின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட தங்கள் சார்ந்துள்ள மாநில அரசின் நலனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சூழலும் தோன்ற வழியுண்டு. இது சில சமயங்களில் மக்களாட்சிக்கு ஓட்டு போட்ட மக்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு வேட்டு வைக்கும் நிகழ்ச்சியாக மாறிவிடவும் வாய்ப்புண்டு. மேலும் மத்திய அரசாங்கமானது, மாநில அரசாங்கம் தம் வசம் கொண்டுள்ள விஷயங்களில் அனாவசியமாக மூக்கை நுழைக்கவும் இந்த வகை அரசியலமைப்பு வழிவகுக்கக் கூடியதாகும். இதனால் குழப்பங்கள்

ஏற்படலாம். மேலும் ஒரே அலுவலை மத்திய அரசிற்காகவும் மாநில அரசுகளுக்காகவும் இரண்டு படிகளில் செய்ய வேண்டிய சூழலும் இங்கு உள்ளது. இதனால் அதிகப் பொருட் செலவுகள் ஏற்படுகின்றன. கூட்டாட்சி அரசியலமைப்பு நெகிழ்வற்ற தன்மையுடையதாகும். எனவே, எளிதில் அதைத் திருத்த முடியாது. இதன் விளைவாக மாறி வரும் சமுதாயச் சூழலுக்கேற்ப அரசியலமைப்பை எளிதில் திருத்த முடியாது. கூட்டாட்சி எனப்படும் இந்த இரட்டை அரசாங்க முறையால் (double system of government), அரசுத் திட்டங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் அனாவசிய கால தாமதங்கள் ஏற்படுகின்றன.

(ii) கூட்டாட்சி முறை அரசின் முக்கிய அம்சங்கள் (Essential features of Federal Form of Government)

2. Explain the essential features of federal form of government. (கூட்டாட்சி முறை அரசின் முக்கிய அம்சங்களை விளக்குக.)

(அல்லது)

Discuss whether the Indian Constitution possesses all the essential characteristics of a Federal Constitution. (கூட்டாட்சி அரசமைப்பின் இன்றியமையாத கூறுகள் இந்திய அரசியலமைப்பில் உள்ளனவா என்பதை விளக்குக.)

கூட்டாட்சி முறை அரசின் முக்கிய அம்சங்கள் அல்லது தனிச் சிறப்பியல்புகள் (Essential Characteristics of a Federal Constitution):

1. இரட்டை அரசாங்க முறை (System of Double Government): ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பானது எப்பொழுதும், இரண்டு அரசாங்கங்களை தோற்றுவிக்கிறது. அதாவது மத்திய அரசு மற்றும் மாநில (அல்லது வட்டார) அரசு. எனவே, இரட்டை அரசாங்க (அரசு) முறை இருக்க வேண்டியது, ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பின் முக்கிய கூறுகளுள் ஒன்றாகும்.

2. அதிகாரப் பகிர்வு (Distribution of Powers): கூட்டாட்சி அரசியலமைப்பு முறையென்றாலே, மத்திய அரசிற்கும் மாநில

அரசுகளுக்குமிடையே அதிகாரப்பகிர்வு இருக்குமென்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். அதன்படி, கூட்டாட்சி நடைபெறுவதற்கு வசதியாக மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. கூட்டாட்சி முறையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் (விஷயங்களில்) சட்டமிற்றும் அதிகாரம் மத்திய அரசிடமும், மாநில (வட்டார) முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் சட்டமியற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கும் அளிக்கப்படுகிறது. உண்மையான கூட்டாட்சியில் **எஞ்சியுள்ள அதிகாரங்கள் (residuary powers)** மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அவை யாருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது அந்தந்த நாட்டின் கூட்டாட்சி அரசியலமைப்புத் தன்மையைப் பொறுத்ததாகும். எனவே, மத்திய அரசு தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியிலும், மாநில அரசுகள் மாநிலங்களிலும், உயர் அதிகாரம் கொண்டு விளங்குகிறது.

3. அரசியலமைப்பின் மேலாண்மை (Supremacy of Constitution): ஒரு கூட்டாட்சி அரசு தனது நிலைத்தன்மையை (existence) அதனை உருவாக்கிய அரசியலமைப்பிடமிருந்து பெறுகிறது. அதாவது அரசியலமைப்பு இல்லையென்றால், கூட்டாட்சியும் இருக்க முடியாது. எனவே, நிர்வாகம் (executive), சட்டமியற்றல் (legislative) மற்றும் நீதிநிறுத்தல் (judicial) ஆகிய ஒவ்வொரு அதிகாரமும், அது மத்திய அரசை சேர்ந்ததாக இருந் தாலும் சரி அல்லது ஒரு தனிப்பட்ட மாநில அரசை சேர்ந்ததாக இருந் தாலும் சரி, அது அரசியலமைப்பாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு கூட்டாட்சி அரசின் அரசியலமைப்பானது, அந்நாட்டின் மேலாண்மை வாய்ந்த சட்டமாக (Supreme Law of the Land) உள்ளது. எனவே, அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணாக சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்டால், அது இல்லா நிலையதாகிறது.

4. எழுதப்பெற்ற அரசியலமைப்பு (Written Constitution): ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு, எழுதப்பெற்ற அரசியலமைப்பாக இருக்க வேண்டும். அரசியலமைப்பின் வகைமுறைகள் எழுத்து வடிவில் இல்லாமால் இருப்பின், அரசியலமைப்பின் மேலாண்மையை நிலைநிறுத்துவது, நடை முறைரீதியில் கடினமாகும். எனவே, ஒரு அரசு கூட்டாட்சி அரசு என்று கூறப்பட, அதன் அரசியலமைப்பு எழுதப்பெற்றதாக இருக்க வேண்டும்.

5. நெகிழ்வற்ற அரசியலமைப்பு (Rigid Constitution): ஒரு கூட்டாட்சி அரசுக்கு நெகிழ்வற்ற அரசியலமைப்பு இருப்பது

இன்றியமையாததாகும். ஒரு அரசியலமைப்பு எழுதப்பெற்றதாக உள்ளதென்றாலே, அது இயற்கையாக நெகிழ்வற்ற தன்மையையும் கொண்டிருக்கும். அரசியலமைப்புச் சட்டம், நாட்டின் மேலாண்மை வாய்ந்த உயர் சட்டமாக கருதப்படுவதால், அது நெகிழ்வுறாமல் இருப்பதுதான் சாலச் சிறந்தது. நெகிழ்வற்ற தன்மையில் அரசிய லமைப்பின் சட்ட வகைமுறைகளை திருத்தும் நடைமுறைகள் மிக சிக்கல் வாய்ந்ததாகவும், கடினமாகவும் இருக்கும். ஆனால், இது அரசியலமைப்புச் சட்டத்தை, சட்டரீதியாக திருத்த இயலாது, என்பதைக் குறிப்பிடவில்லை. அரசியலமைப்பினை திருத்தும் அதிகாரம் மத்திய அரசிடமோ, மாநில அரசுகளிடமோ முற்றிலும் இல்லை, என்பதைத்தான் இது குறிக்கிறது. ஒரு அரசிய லமைப்பை திருத்தும் முறை, நெகிழ்வற்ற தன்மை கொண்டிருந்தால் தான் அந்த அரசியலமைப்பின் மேலாண்மை நீடித்தும் நிலைத்தும் இருக்கும்.

6. நீதிமன்றங்களின் அதிகாரம் (Authority of Courts): ஒரு கூட்டாட்சி அரசில், அரசியலமைப்பின் மேலாண்மையானது, கூட்டாட்சி முறை தொடர்ந்து நீடித்து வருவதற்கு இன்றியமையாத ஒன்றாகும், என்று மேலே கண்டோம். கூட்டாட்சி என்றாலே, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அரசியலமைப்பின்படி, அதிகாரம் பகிர்ந்து அளிக்கப் பட்டிருக்கும் என்பதையும் நாம் ஏற்கனவே கண்டோம். எனவே, இந்த இரண்டு அரசுகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை சமநிலையில் வைத்திருக்க வேண்டியது, முக்கியமாகும். இதனைச் செய்வதற்கு, அரசிய லமைப்பின் கீழுள்ள சாதாரண அமைப்புகளுக்கு மேற்பட்டும், அதற்கு அப்பாலும் உள்ள ஒரு சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற அதிகாரம் தேவைப்படுகிறது. அந்த அதிகாரம்தான் நீதித்துறை ஆகும். அதாவது, இரு அரசு களுக்கு இடையே பூசல்கள் ஏற்படும் பொழுது, அதனை நடுவுநிலை தாங்கி தீர்ப்பதற்கு அமைக்கப்பட்ட ஒரு அமைப்புதான், நீதிமன்றங்கள் ஆகும். இரு அரசுகளுக்கும் இடையே உள்ள ஒப்பந்த உறவுகள் மீறப்படாமல் காப்பது, நீதிமன்றகளின் கடமையாகும். எனவேதான், இப்படிப்பட்ட உயர்ந்த அதிகாரம் நீதிமன்றங்களுக்க வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் இந்நெறியில் நின்று அரசியலமைப்பினை சமநிலைப்படுத்தும் ஒரு கருவியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

இந்திய அரசியலமைப்பு எந்த அளவிற்கு கூட்டாட்சி தன்மை பெற்றது ? (அல்லது) இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சியின் கூறுகள் இடம் பெற்றுள்ள விதம்:

நாம் மேலே கண்ட கூட்டாட்சியின் கூறுகள் அனைத்தும் இந்திய அரசியலமைப்பிற்கும் பொருந்துகிறது. அவை எவ்வாறு பொருந்துகிறது என்பதை ஒன்றன் பின் ஒன்றாக பின்வருமாறு காண்போமா?

1. **முதலில்** கூட்டாட்சிக்கு அடிப்படையாக விளங்கும் **இரட்டை அரசாங்க முறையை (System of Double Government)** எடுத்துக் கொள்வோம். இந்திய அரசியலமைப்பானது, மத்திய அரசு என்றும், மாநிலங்களைப் பொறுத்தவரை மாநில அரசுகள் என்றும் இரட்டை அரசாங்க முறைக்கு வழிவகை செய்துள்ளது.

2. **இரண்டாவதாக, அதிகாரப் பகிர்வு (Distribution of Powers)** குறித்து காண்போம். இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரமானது, மத்திய பட்டியல், மாநில பட்டியல், இணைப்புப் பட்டியல் ஆகிய மூன்று பட்டியல்களின் வாயிலாக பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. **மத்திய பட்டியலில் (Union List)** உள்ள துறைகளில் **(subjects)** சட்ட மியற்றிக் கொள்ள மத்திய அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல், **மாநில பட்டியலில் (State List)** உள்ள துறைகளில் சட்ட மியற்றிக் கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது. இவை இரண்டு அரசுகளும் சட்டமியற்றிக் கொள்ளக் கூடிய துறைகளைப் பற்றி, **இணைப்புப் பட்டியலில் (Concurrent List)** குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **மூன்றாவதாக,** கூட்டாட்சியின் மிக முக்கிய கூறான **அரசியலமைப்பின் மேலாண்மை (Supremacy of Constitution)** எவ்வாறு இந்திய அரசியலமைப்பில் அங்கம் வகித்துள்ளது என்பதைக் காண்போம். இந்திய அரசியலமைப்பும் மேலாண்மை வாய்ந்த ஒன்றாகும். ஏனெனில், அரசியலமைப்பின் மூன்று முக்கிய உறுப்பு களாகிய (Organs) நிருவாகம் (Executive), சட்டமியற்றல் (Legislative) மற்றும் நீதிநிறுத்தல் (Judiciary) ஆகியவை தங்களது அதிகாரங்களை, அரசியலமைப்பிடமிருந்து மட்டுமே பெறுகின்றன மற்றும் செயலாற்றுகின்றன. எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்ற சட்டங்களை விட மேலாண்மை வாய்ந்த சட்டமாக விளங்குகிறது. அந்த மற்ற சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எவ்விதத்தில் மீறினாலும், அச்சட்டங்கள் இல்லா நிலையதாகும்.

4. **நான்காவதாக,** கூட்டாட்சிக்கு வழிவகுக்கும் மற்றொரு

கூறான **எழுதப்பெற்ற அரசியலமைப்பை** (Written Constitution) எடுத்துக் கொண்டால், நமது இந்திய அரசியலமைப்பும் ஒரு எழுதப்பெற்ற அரசியலமைப்பே ஆகும். இது 22 பகுதிகளின் (Parts) கீழ் 395 ஷரத்துகளையும் (Articles), 10 அட்டவணைகளையும் (Schedules) கொண்டதொரு மிக நீண்ட அரசியலமைப்பாகும். ஆனால் 2003?ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 92-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்குப் பிறகு, இந்திய அரசியலமைப்பு இன்று **28 பகுதிகளின் கீழ் 444 ஷரத்துகளையும், 12 அட்டவணைகளையும்** கொண்டு விளங்குகிறது.

5. **அய்ந்தாவதாக,** நமது இந்திய அரசியலமைப்பும் நெகிழ்வுறா தன்மை கொண்டதாகும். இதனால், கூட்டாட்சி அரசிலமைப்பில் உள்ளது போல், நமது அரசியலைமைப்பிலும் சட்ட வகைமுறைகளைத் திருத்துவது என்பது கடினமானதாக உள்ளது.

6. **இறுதியாக,** கூட்டாட்சியின் இறுதிக் கூறான **நீதிமன்றங்களின் அதிகாரத்தைப்** (Authority of Courts) பொறுத்தவரை, நமது அரசியலமைப்பு இந்திய நீதித்துறைக்கு சுதந்திரமாக செயல்படும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. எனவே, இது இரு அரசுகளுக்கு இடையே ஏற்படும் பூசல்களை நடுவுநிலை தாங்கி பாரபட்சமற்ற முறையில் தீர்த்து வைக்கும் உயர் அதிகாரத்தை பெற்றுள்ளது. மேலும், இந்தியா உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதி மன்றங்கள், நமது அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் (Interpretation) தரும் மிக உயர்ந்த அதிகாரத்தினை பெற்றுள்ளன. இவற்றின் தீர்ப்புகள் அரசியலமைப்பின் ஷரத்துகளுக்கு நிகரான வலிமையை பெற்றுள்ளன.

முடிவுரை:

இவ்வாறு கூட்டாட்சியின் முக்கியமான அனைத்து கூறுகளையுமே, இந்திய அரசியலமைப்பும் பெற்றுள்ளது. எனவே, இந்திய அரசியலமைப்பை ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு என்று கூறலாம். நமது இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் எண்ணமும், இந்தியாவை ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பை கொண்ட நாடாக உருவாக்க வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. இது குறித்து இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவரான **முனைவர் அம்பேத்கார்** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். அதன்படி, "**இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசு மாநிலங்களின் மீது தனது அதிகாரத்தை செலுத்தும் வண்ணம் பல வகைமுறைகள் இருந்**

தாலும், இது ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாகவே கருதுகிறேன்,"[1] என்று கூறுகிறார். எனவே, இதிலிருந்து மத்திய அரசு மாநிலங்களின் மீது கோலோச்சும் சில **ஒற்றையாட்சி (Unitary)** வகைமுறைகளும் இந்திய அரசியலமைப்பில் உள்ளதாக தெளிவாகிறது. ஆகவே, நமது இந்திய அரசியலமைப்பை கூட்டாட்சி அரசியலமைப்பு என்று கூறுவதை விட **கூட்டாட்சி-போல்வு அரசியலமைப்பு (Quasi-federal Constitution)** என்று கூறுவதுதான் பொருத்தமானதாக இருக்கும் என அரசியலமைப்பு சட்ட வல்லுநர்கள் சிலர் கூறுவர். இந்நிலையை **'கூட்டுறவு கூட்டாட்சித்துவம்'** அல்லது **'நேசக் கூட்டமைப்பு'** என்றும் கூறலாம்.

(iii) கூட்டுறவு கூட்டாட்சிந்துவம் (Co-operative Federalism)

3. Co-operative Federalism - Write Short Notes. (கூட்டுறவுக் கூட்டாட்சித்துவம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

நமது இந்திய அரசியலமைப்பை வடிவமைத்தவர்கள் அதனை ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பாகவும் அதே சமயத்தில் ஒற்றையாட்சிக்கு அடிப்படையான ஒரு வலுவான மத்திய அரசாங்கத்தையும் அமைக்கவே எண்ணம் கொண்டு செயல்பட்டுள்ளார்கள், என்பதை நாம் சென்ற அத்தியாயத்தின் வாயிலாக அறிவோம்.

உண்மையில், நமது அரசியலமைப்பு ஒரு **கூட்டுறவுக் கூட்டாட்சித் துவத்திற்கு (Co-operative Federalism)** வழிவகுக்கிறது என்றே கூற வேண்டும். பல்வேறு அரசாங்கங்களுக்கிடையில் கூட்டுறவை வளர்க்கும் வண்ணம் நமது அரசிலயமைப்பில் பல்வேறு வகைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நிலைப்பாட்டைதான் சற்று அலங்கரமாக, கூட்டுறவுக் கூட்டாட்சித்துவம் என்று அழைக்கிறோம்.

அறிஞர் ஆஸ்டின் அவர்கள் "இந்திய அரசியலமைப்பு,

1. "I think it is agreed that our Constitution notwithstanding the many provisions which are contained in it whereby the Centre has been given powers to override the Provinces (States) nonetheless, is a Federal Constitution" - Dr. Ambedkar, the Chairman of the Drafting Committee - C.A.D., Vol. 4, p. 133. See also C.A.D., Vol. 5, pp. 33-36.

கூட்டாட்சி அரசியலமைப்பு என்று கூறப்பட முடியுமானால், அதனை கூட்டுறவுக் கூட்டாட்சி என்றே வருணிக்கலாம்"[1], என்று மிகச் சரியாக கூறுகிறார்.

இந்திய அரசியலமைப்பில் கூட்டுறவுக் கூட்டாட்சித்துவம் எவ்வாறு உள்ளது?

மத்திய அரசிற்கும் மற்றும் மாநிலத்திற்கும் இடையில் மற்றும் ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையில் கூட்டுறவை வளர்ப்பதற்கு உதவும் அரசியலமைப்புச் சட்ட வகை முறைகளே, கூட்டுறவுக் கூட்டாட்சிக்கு வழிவகுக்கிறது. அந்த வகையில், **ஷரத்து 262**, மாநிலங்களுக் கிடையிலான நதி நீர் தகராறுகளை தீர்த்துக் கொள்ள வழிவகுக்கிறது. காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக தமிழகத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையில் நடந்து வரும் தகராறு, மேற்படி ஷரத்தின் அடிப் படையில்தான். மேலும் இதற்கென மாநிலங்களுக்கிடையிலான குழு (Inter-State Council) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது மேற்கண்ட மாதிரியான மாநிலத் தகராறுகளை தீர்த்து வைக்க தக்க ஆலோசனைகள் வழங்கலாம்; விவாதிக்கலாம்; பரிந்துரைகள் செய்யலாம். மேலும் மாநிலங்களுக்கிடையிலான தகராறுகள் குறித்து சட்டப் பிரச்சனை ஏதும் எழும் பொழுது, அதனை உச்ச நீதிமன்றம் **ஷரத்து 131-ன்** கீழ் தீர்த்து வைக்க அதிகாரம் படைத்தது.

இது தவிர, விற்பனை வரி தொடர்பாக மாநிலங்களுக் கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக, நான்கு வட்டார குழுக்கள் (Four Regional Councils) ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பொதுப் பிரச்சனைகளைத் தீர்த்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் மாநிலங்களுக்கிடையிலான கூட்டுறவை வளர்ப்பதற்காக அய்ந்து மண்டல குழுக்கள் (Five Zonal Councils) அமைக்கப்பட்டுள்ளன.

நெருக்கடிக் காலங்களில் மாநிலங்களின் நிர்வாக மற்றும் சட்டமியற்றல் அதிகாரத்தை மத்திய அரசு கைப்பற்றுகிறது (குடியரசுத் தலைவர்) என்று கண்டோம். ஆனால், அந்த சமயத்திலும், மத்திய அரசு மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களின் அதிகாரத்தை கைப்பற்ற முடிவதில்லை. மேலும் உயர் நீதிமன்றங்கள்

1. If the Indian Constitution can be called federal, it can be described as 'co- operative federation' - Austin, Grenville, Indian Constitution : Cornor- stone of a Nation, at p. 186.

தொடர்பான அரசிலயமைப்பு சட்ட வகைமுறைகளின் செயலாக் கத்தை தடை செய்யவும் முடியாது. இதற்கு மாநில குடிமக்களின் நலன் பாதிக்கப்படக் கூடாது என்பதே காரணமாகும்.

மேலும் 268 முதல் 281 வரையிலான ஷரத்துகள் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையே வருவாயை பங்கீடு செய்து கொள்ள வழிவகுக்கிறது. இதன்படி, மத்திய அரசு, மாநிலங்களுக்கு தேவைப்படும் பொழுது நிதி உதவி (grant-in-aid) செய்ய வேண்டும்.

இவை மட்டுமல்லாது, **ஷரத்து 301-ன்படி**. இந்தியா முழுமைக்கும் வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்கு வரத்து செய்ய அரசியலமைப்பு மாநிலங்களுக்கு சுதந்திரம் வழங்குகிறது.

முடிவுரை:

இவ்வாறு, இந்திய அரசியலமைப்பு சட்டம், மாநிலங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பையும் கூட்டுறவையும் வளர்ப்பதற்கு பல்வேறு சட்ட வகைமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவை, நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு அவசியமாகும். இதனால்தான், இந்திய அரசியலமைப்பு, கூட்டுறவுக் கூட்டாட்சித் துவத்திற்கு வழிவகுத்துள்ளது என்கிறோம்.

-o0o-

அத்தியாயம் 2

இந்திய அரசியலமைப்பின் கீழ் சட்டமியற்றுதல் குறித்த உறவுகள் (Legislative Relations under Indian Constitution)

மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான சட்டமியற்றுதல் குறித்த உறவுகள்

(ஷரத்துகள் 245 முதல் 255)

(Legislative Relations between the Union and the States)

(Articles 245 to 255)

1. Explain the legislative relations between State and Centre. (மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிலவும் சட்டமியற்றும் அதிகார உறவுகளை விளக்குக.)

(அல்லது)

Discuss briefly the provisions relating to the legislative relations between the Union and the States under the Indian Constitution. (மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சட்டம் இயற்றும் முறையைப் பற்றி இந்திய அரசியல் சட்டப்பிரிவுகளில் கூறப்பட்டுள்ளவை பற்றி விவரிக்க.)

(அல்லது)

When and under what circumstances parliament can make laws in the subjects found in the State list? (எப்பொழுது எந்த

சூழ்நிலைகளில் நாடாளுமன்றம் மாநிலப் பட்டியலின் கீழ் உள்ள இனங்களில் சட்டமியற்ற இயலும்?)

(அல்லது)

Explain the delimitation of legislative powers between the Centre and the States. Under what circumstances Centre can make laws in State list? (மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே வரையறுக்கப் பட்ட சட்டமியற்றும் அதிகாரங்களை விளக்குக. மாநில பட்டியலில் எந்த சூழ்நிலையில் மத்திய (நாடாளுமன்றம்) அரசு சட்டம் செய்யலாம்?)

(அல்லது)

Discuss the various circumstances under which the Parliament can legislate on subjects in the State list. Can the legislature of a State encroach on subjects in the Union list? If so, under what circumstances? (மாநில பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள அதிகார இனங்கள் குறித்து நாடாளுமன்றம் எந்த சூழ்நிலைகளில் சட்டமியற்றலாம் என்பதை ஆராய்க. ஒரு மாநில சட்டமன்றம் யூனியன் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார இனங்கள் குறித்து அத்துமீறி செயல்பட முடியுமா? அப்படியென்றால் எந்த சூழ்நிலைகளில்? [1])

(அல்லது)

How does the union parliament get its power to legislate on state subjects? (மாநில பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்ற எப்படி அதிகாரம் பெற்றுள்ளது?)

(அல்லது)

Explain the distribution of legislative powers between the Centre and the States. How can the repugnancy between Parliament made law and legislature made in law be solved? (மத்திய மற்றும் மாநிலங் களுக்கிடையே சட்டமியற்றும் அதிகாரங்களின் பிரிவினையை விளக்குக. பாராளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்திற்கும், சட்ட மன்றம் இயற்றிய ஒரு சட்டத்திற்கும் இடையேயான முரண்பாடு

1. தேர்வில் இந்த வினாவிற்கு, வினா எண். 3-ல் வரும் பெரும்பான்மை விதியையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும் - ஆசிரியர்.

எங்ஙனம் தீர்க்கப்படும்?)

(அல்லது)

Briefly examine the provisions of the Constitution of India regarding the distribution of legislative powers between the Centre and the States. (மத்திய மாநிலங்களுக்கு இடையே சட்டம் இயற்றும் அதிகாரங்களின் பங்கீட்டுத் திட்டம் குறித்து இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள வகைமுறைகளைப் பற்றி சுருக்கமாக ஆராய்க.)

(அல்லது)

Explain, referring to relevant case-law, how a Conflict between Union legislation and State legislation in the Concurrent legislative field is resolved. (யூனியன், மாநிலம் இரண்டும் சட்டம் இயற்றக் கூடிய பொதுப்படைப் பொருள் பொறுத்து யூனியன் சட்டத்துக்கும், மாநிலச் சட்டத்துக்கும் இடையே ஏற்படும் முரண்பாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்படுகிறது என்பதை பொருத்தமான முடிவுற்ற வழக்குவழிச் சட்டத்தைக் குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

What is the pattern of distribution of legislative powers between the Union and the States in India? How is a repugnancy resolved? (இந்தியாவில் யூனியன் மற்றும் மாநிலங்களுக்கிடையே சட்டமியற்றும் அதிகாரப் பங்கீட்டின் விதம் என்ன? முரண்பாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்படுகிறது?)

(அல்லது)

"The Constitution of India makes three fold distribution of legislation powers" - Explain and point out the circumstances in which the Union Parliament can legislate on a subject contained in the State list. ("இந்திய அரசமைப்புச் சட்டம் மூன்று வகையான சட்டமியற்றும் அதிகார பகிர்மானத்திற்கு வழிவகை செய்கின்றது" இதை விளக்கி ஒன்றியத்து நாடாளுமன்றம் எந்த சூழ்நிலைகளில் மாநில பட்டியலில் உள்ள ஒரு பொருள் குறித்து சட்டமியற்ற முடியும் என்பதை குறிப்பிடுக.)

முன்னுரை:

ஒவ்வொரு கூட்டாட்சி அரசியலமைப்பிற்கும் அதிகார

பகிர்ந்தளிப்பு என்பது இன்றியமையாத அம்சமாகும். அதாவது மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரமானது பகிர்ந்தளிக்கப்படுகிறது. அப்பொழுதுதான், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் பலப்படுகின்றன. இப்படிப்பட்ட உறவுகள், (i) சட்டமியற்றல் (ii) நிர்வாகம் மற்றும் (iii) நிதிநிலை எனும் மூவகைகளின் கீழ் அடங்குகிறது. சற்று விரிவாக வருமாறு.

சட்டமியற்றும் அதிகார உறவுகள் (Legislative Relations) (அல்லது) மத்திய மற்றும் மாநிலங்களிடையே சட்டமியற்றல் குறித்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு (Distribution of legislative powers between Centre and the States):

ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு முறையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் (Subjects) சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசிடமும் மாநில முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுகளிடமும் அளிக்கப்படுகிறது. இதன்படி மத்திய அரசு பாராளு மன்றத்தின் வாயிலாகவும் மாநில அரசுகள் சட்டமன்றங்களின் வாயிலாகவும் தங்களுக்குரிய துறைகளில் சட்டமியற்றிக் கொள்ளலாம்.

ஷரத்து 245, இந்திய பாராளுமன்றம் இந்தியா முழுமைக்குமோ அல்லது இந்திய எல்லைக்குள் உள்ள ஏதேனும் ஒரு பகுதிக்கோ சட்டம் இயற்றலாம் என்றும், மாநிலச் சட்டமன்றங்கள் அந்தந்த மாநிலங்கள் முழுமைக்கோ அல்லது அம்மாநிலங்களில் உள்ள ஏதேனும் ஒரு பகுதிக்கோ சட்டமியற்றலாம் என்றும் கூறுகிறது.

இவ்வாறு சட்டமியற்றுவதற்கு வசதியாக **ஷரத்து 246** பின்வரும் மூன்று பட்டியல்களைக் குறிப்பிடுகிறது. அவை,

(1) மத்திய பட்டியல் (Union list)

(2) மாநில பட்டியல் (State list)

(3) இணைப்புப் பட்டியல் (Concurrent list)

மத்திய பட்டியலில் 97 துறைகள் உள்ளன. இத்துறைகளில் பாராளுமன்றம் மட்டுமே சட்டமியற்றும் அதிகாரத்தை படைத்துள்ளது. பாதுகாப்பு, வெளி விவரங்கள், தபால் மற்றும் தந்தி போன்றவை இப்பட்டியலில் அடங்கும்.

மாநிலப் பட்டியலில் 66 துறைகள் உள்ளன. இவைகள் யாவும் வட்டார முக்கியத்துவம் வாய்ந்தவை. இத்துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தை அம்மாநில சட்டமன்றம் மட்டுமே பெற்றுள்ளது. காவல் துறை, நீதி நிர்வாகம், உள்ளாட்சித் துறை போன்றவை இப்பட்டியலில் அடங்கும்.

இணைப்புப் பட்டியலில் 47 துறைகள் உள்ளன. இத்துறை களில் மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளன. குற்றவியல் சட்டம், ஒப்பந்தங்கள், உரிமையியல் நடைமுறைச் சட்டம் போன்றவை இப்பட்டியலில் அடங்கும்.

மேற்கண்டவாறு தனித்தனி பட்டியல்கள் இருப்பினும், சில சூழ்நிலைகளில் மாநில பட்டியலில் உள்ள துறைகளில் மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம். அச்சூழல்கள் வருமாறு.

மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளில் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் (Power of Parliament to legislate on State subjects):

மாநில துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசு பெற்றிருக்கவில்லையென்றாலும் பின்வரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாநிலப் பட்டியலில் (State list) உள்ள துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசு பெற்றுள்ளது.

(i) தேசிய நலனுக்காக சட்டமியற்றுதல் - மாநிலங்களவை (ராஜ்ய சபை) ஒரு விஷயத்தை தேசிய நலனுக்குகந்தது என அறிவித்து விட்டால் மாநிலப் பட்டியலில் உள்ள எந்தத் துறைகளிலும் மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம். அதற்கு மாநிலங்களவை கூட்டத்தில் பங்கு பெறும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினரின் இசைவு வேண்டும். **[ஷரத்து 249].**

(ii) நெருக்கடி நிலையின் போது சட்டமியற்றல் - நெருக்கடி நிலை அமலில் இருக்கும்போது, இந்தியா முழுமைக்குமோ அல்லது இந்திய எல்லைக்குள் உள்ள ஏதேனும் ஒரு பகுதிக்கோ மாநிலப் பட்டியலில் கூறப்பட்டுள்ள எல்லா விஷயங்கள் குறித்தும் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெறுகிறது என்றும், அப்படிப்பட்ட சட்டங்களானது நெருக்கடி நிலை முடிந்தவுடன் ஆறு மாதங்கள் கழித்து தன்னுடைய செல்லுதன்மையை இழந்துவிடும் என்றும் **ஷரத்து 250** கூறுகிறது.

(iii) மாநிலங்களின் ஒப்புதலுடன் சட்டமியற்றல் - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்கள், மாநில பட்டியலில் உள்ள ஏதேனும் சில விஷயங்களில் மத்தியப் பாராளுமன்றம் சட்டமியற்றுவது விரும்பத்தக்கது, என தீர்மானம் நிறைவேற்றினால் அவ்வாறு அக்குறிப்பிட்ட விஷயங்கள் மீது பாராளுமன்றம் சட்டம் இயற்றலாம் என்று **ஷரத்து 252** கூறுகிறது. இத்தகைய சட்டத்தை மற்ற மாநில சட்டமன்றங்களும் ஒரு தீர்மானம் இயற்றுவதன் மூலம் பின்பற்றலாம்.

(iv) ஒப்பந்தங்களையும், சர்வதேச உடன்படிக்கைகளையும் அமலாக்குவதற்கு சட்டமியற்றல் - ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளை அமலாக்குவதற்கு, பாராளுமன்றம் இந்தியா முழுமைக்குமோ, இந்திய எல்லைக்குள் ஏதேனும் ஒரு பகுதிக்கோ எச்சட்டத்தையும் இயற்றலாம், என்று **ஷரத்து 253** கூறுகிறது.

(v) மாநிலமானது அரசியலமைப்பின்படி செயல்பட முடியாத போது சட்டமியற்றல் - பாராளுமன்றமானது ஒரு மாநில அரசாங்கம் அரசியலமைப்பின்படி செயல்பட முடியாத நிலையில் உள்ளது என அறிவிக்கும் பொழுது, அம்மாநிலப் பட்டியலில் உள்ள எந்த விஷயம் குறித்தும் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெறுகிறது என **ஷரத்து 356** கூறுகிறது.

மாநிலத்தினுடைய சட்டமியற்றலின் மீதான மத்திய அரசின் கட்டுப்பாடு (Control of Centre over State's legislation):

அரசியலமைப்பின் சில ஷரத்துகள் மத்திய அரசு, சில கட்டுப்பாடுகளை மாநிலத்தின் சட்டமியற்றலின் மீது விதிக்க வகை செய்கிறது. அவை பின்வருமாறு:

1. **ஷரத்து 200-ன்படி,** ஒரு மாநிலத்தின் ஆளுநர், ஒரு மசோதா சட்டமாக்கப்பட்டால் அது உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களை பாதிக்கும் என்று கருதினால் அம்மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஒதுக்கி (reserve) வைக்கலாம்.

2. **ஷரத்து 288 (2)-ன்படி,** பாராளுமன்றச் சட்டத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட ஒரு அதிகார அமைப்பினால் தேக்கி வைக்கப்பட்டு இருக்கும், நுகரப்படும், உற்பத்தி செய்யப்படும், பகிர்ந்தளிக்கப்படும் அல்லது விற்கப்படும் நீரின் அல்லது மின்சாரத்தின் மீது மாநில அரசாங்கம் ஒரு சட்டத்தின் மூலமாக வரி விதிக்கலாம். ஆனால் அத்தகைய சட்டமானது குடியரசுத்

தலைவரின் பரிசீலனைக்கு ஒதுக்கி வைக்கப்பட்டு அவருடைய அனுமதியைப் பெற்ற பிறகுதான் செல்லத்தக்கது ஆகும்.

3. **ஷரத்து 304 (b)-ன்படி,** ஒரு மாநில அரசு ஒரு சட்டத்தின் மூலம் தேவைப்படலாம் எனும் பொழுது வியாபாரம் வணிகம் மற்றும் வியாபார போக்குவரவு மீது நியாயமான கட்டுப் பாடுகளை விதிக்கலாம். ஆனால் அத்தகு சட்டமானது, குடியரசுத் தலைவரின் முன்அனுமதியினைப் பெற்றிருக்க வேண்டும்.

இணைப்புப் பட்டியலில் (பொதுப் பட்டியல்) (Concurrent List) உள்ள துறைகளில் மத்திய அரசு இயற்றிய சட்டத்திற்கும், ஒரு மாநில அரசு இயற்றிய சட்டத்திற்கும் இடையே முரண்பாடு ஏற் பட்டால், அது தீர்த்து வைக்கப்படும் விதம்

(அல்லது)

முரண்பாட்டுக் கோட்பாடு (Doctrine of Repugnancy):

இதனைத் தீர்ப்பது குறித்து **ஷரத்துகள் 251 மற்றும் 254 (1)** கூறுகின்றன. மாநில சட்டமன்றம் இயற்றிய எச்சட்டமாவது பாராளுமன்றம் இயற்றிய சட்டத்துடனோ அல்லது இணைப்புப் பட்டியலில் (Concurrent list) கூறப்பட்டுள்ள விபரம் குறித்து இயற்றப் பட்டுள்ள சட்டத்துடனோ முரண்பட்டு இருப்பின், பாராளுமன்றம் இயற்றிய சட்டம்தான் (அல்லது இணைப்புப் பட்டியலில் உள்ள விவரம் குறித்த சட்டம்தான்) செல்லுபடியாகும். மாநில சட்ட மன்றம் இயற்றிய சட்டம், முரண்பாட்டளவிற்கு இல்லாநிலைய தாகும்.

மாநில சட்டம் எப்பொழுது செல்லும்?

மேற்படி இந்த முரண்பாட்டு கோட்பாட்டிற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. **ஷரத்து 254 (2)-ன்படி,** பாராளுமன்றச் சட்டத்துடன் முரண்பட்டு உள்ள மாநிலச் சட்டமானது குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று விட்டால், அதுதான் செல்லுபடி யாகும். எனினும் பாராளுமன்றம் அச்சட்டத்தை, அதே விஷயம் குறித்த மற்றொரு சட்டத்தினை இயற்றுவதன் வாயிலாக, ஒதுக்கித் தள்ளலாம்.

M.Karunanidhi v. Union of India[1] எனும் வழக்கில், சம்பந்தப்

1. AIR 1979 SC 898

பட்ட முரண்பாடானது தெளிவாகவும் நேரடியானதாக வும் இருக்க வேண்டும் என்றும், அதுதான் தீர்ப்பதற்கு உகந்த முரண்பாடாகும் என்றும் கூறப்பட்டது.

எஞ்சியுள்ள அதிகாரங்கள் (Residuary Powers):

பாராளுமன்றத்தின் எஞ்சியுள்ள அதிகாரங்களைப் பற்றி **ஷரத்து 248** கூறுகிறது. அதன்படி இணைப்புப் பட்டியலிலோ அல்லது மாநிலப் பட்டியலிலோ விளக்கப்படாத எத்துறையின் மீதும் பாராளுமன்றம் மட்டுமே சட்டமியற்றும் அதிகாரத்தை பெற்றுள்ளது.

முடிவுரை:

இவ்வாறாக, மத்திய மற்றும் மாநில சட்டமியற்றும் அதிகார உறவுகள் செல்கின்றன. மத்திய மற்றும் மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் முரண்பாடாக இருப்பின் அவற்றை தீர்க்க உச்ச நீதிமன்றம் வேறு சில கோட்பாடுகளையும் கையாண்டுள்ளன. அவை அடுத்து வருமாறு. (அவற்றையும் மேற்கண்ட வினாக்களுக்கு சுட்டிக்காட்டினால், அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். - ஆசிரியர்.)

2. Doctrine of Territorial Nexes - Write short notes. (எல்லைத் தொடர்புக் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

ஒரு மாநிலத்தின் சட்டமன்றம் அந்த மாநிலம் முழுமைக்கோ அல்லது அதன் ஒரு நிலஎல்லைப் பகுதிகோ சட்டமியற்றலாம் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 245(1)** கூறுகிறது. இதன் பொருள் யாதெனில், ஒரு மாநிலம் தனது மாநில எல்லைக்கு அப்பால் (extra - territorial) உள்ள மற்றொரு மாநிலத்திற்கு அல்லது அதன் நில எல்லைப் பகுதிக்கு பொருந்தக் கூடிய வண்ணம் சட்டமியற்றினால் அது இல்லா நிலையதாகும். எனினும் இந்தப் பொதுவான விதிக்கு ஒரு விதி விலக்கு உண்டு. அதாவது ஒரு மாநிலம் தனது எல்லைக்கு அப்பால் செயல்படக் கூடியவாறு ஒரு சட்டத்தை இயற்றியிருந்து, அச்சட்டம் எதற்காக இயற்றப்பட்டதோ அந்த விடயத்திற்கும் அம்மாநிலத்திற் கும் இடையே போதுமான தொடர்பு இருந்தால் அது செல்லத் தக்கதாகும். இந்நிலைப்பாட்டைத்தான் **'எல்லைத் தொடர்பு கோட்பாடு'** என்று அழைக்கிறோம். இதை பின்வரும் சில வழக்குகளின் வாயிலாக விளக்கினால் மேலும் தெளிவாகும்.

Wallace v. Income Tax Commissioner, Bombay[1] என்ற பழைய வழக்கில் இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று இந்தியாவில் உள்ள ஒரு நிறுமத்தின் பங்குதாரராக இருந்தது. இந்நிலையில் வருமான வரித்துறையினர் அந்நிறுவனம் ஈட்டிய மொத்த வருமானத்திற்கும் வரி விதித்தனர். இதை எதிர்த்து அந்நிறுவனம் தொடர்ந்த வழக்கில் பிரிவி கவுன்சில் மேற்படி எல்லைத் தொடர்பு கோட்பாட்டைப் பின்பற்றி, அவ்வாறு வரி விதித்தது செல்லத்தக்கதே என்று தீர்ப்புரைத்தது. அதாவது, அந்நிறுவனம் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து ஓராண்டில் ஈட்டிய வருமானத்தின் பெரும் பகுதி அது இந்தியாவில் இருந்து கொண்டு ஈட்டியது என்று கூறுமளவிற்கு போதுமான எல்லைத் தொடர்பு கொண்டுள்ளது என்றும், எனவே இங்கு வருமானம் எந்த வகையிலிருந்து வந்திருந்தாலும், அந்நிறுவனத்தின் மொத்த வருமானத்திற்கு விதிக்கப்பட்ட வரி செல்லத்தக்கதே என்று பிரிவி கவுன்சில் நிலைநிறுத்தியது.

State of Bombay v. R.M.D.C[2] என்ற மற்றொரு வழக்கில் பம்பாய் மாநிலம் குலுக்கல் பரிசுச்சீட்டுகள் (லாட்டரி) மற்றும் பரிசுப் போட்டிகளின் மீது வரி விதித்தது. இந்த வரி பெங்களூரில் இருந்து வெளி வரும் ஆனால் பம்பாயில் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் வரும் ஒரு செய்திப் பத்திரிக்கைக்கும் விதிக்கப் பட்டது. இங்கு எதிர்மனுதாரர் அப்பத்திரிக்கையின் வாயிலாக பரிசுப் போட்டிகளை நடத்தி வந்தார். எனவே பம்பாய் மாநிலம் அப்பத்திரிக்கையின் மீது வரி விதிக்க போதுமான அளவு எல்லைத் தொடர்பு உள்ளது என்று நீதிமன்றம் கூறியது. இங்கு எவர் மீது வரி விதிக்கப்படுகிறதோ அவருக்கும், எவர் மீது வரி விதிக்க வேண்டும் ஒரு மாநிலம் கருதுகிறதோ அம்மாநிலத்திற்கும் இடையே போதுமான தொடர்பு இருந்தால் சம்பந்தப்பட்ட வரிச் சட்ட மானது செல்லத்தக்கதேயாகும். ஆனால் அம்மாநிலத்திற்கும், அதன் சட்டத்திற்கு உள்ளாகும் விடயத்திற்கும் இடையே உள்ள தொடர்பு உண்மையானதாக இருக்க வேண்டும். கற்பனையானதாக இருக்கக் கூடாது. மேலும் விதிக்கப்படும் வரியானது அத்தொடர்பு குறித்த தாக இருக்க வேண்டும். போதுமான தொடர்பு உள்ளதா இல்லையா என்பது ஒரு பொருண்மை சார்ந்த பிரச்சனையாகும் (question of fact). அது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும்.

1. AIR 1948 PC 118
2. AIR 1957 SC 699

Tata Iron and Steel Company v. State of Bihar[1] என்ற பிறிதொரு வழக்கில் இக்கோட்பாட்டை உச்ச நீதிமன்றம் விற்பனை வரிச் சட்டங்களுக்கு பொருத்தி தீர்ப்புரைத்தது.

இக்கோட்பாட்டைப் பற்றி வேறு வகையில் சொன்னால், இது பெரும்பாலும் வரிவிதிப்புச் சட்டங்களுக்கு பொருந்தக் கூடியதாக உள்ளது எனலாம். அதாவது மாநிலங்களின் சட்டம் அந்த மாநிலத்தில் மட்டுமே செயல்படும். ஆனால் வரிச் சட்டங்களைப் பொறுத்தவரை மாநிலங்களுக்கிடையிலும் செயல்படும்.

3. Doctrine of Pith and Substance - Write short notes. (பெரும் பான்மை விதி - குறுகிய விடை தருக.)

மத்தியப் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள், தங்கள் தங்களுடைய அதிகாரவரம்பு பகுதிகளில், உயர்ந்தவையாக கருதப்படுகின்றன. ஒன்று, மற்றொன்றின் அதிகாரவரம்பில் (சட்டமியற்றக் கூடிய பகுதி) தலையிடக் கூடாது. அப்படியும் மீறி ஒரு சட்டமானது, மற்றொன்றின் அதிகாரவரம்பில் உள்ள ஒரு துறையினுள் தலையிடுமாறு இயற்றப்பட்டுவிட்டால், சம்பந்தப் பட்ட சட்டமன்றமானது, அப்படி சட்டமியற்ற தகுதி படைத்ததா என்பதைத் தீர்மானிக்க, நீதிமன்றமானது இப்பெரும்பான்மை விதியின் பயனைக் கொள்ளும். ஒரு சட்டத்தினை இயற்றிய சட்டமன்றத்தின் தகுதி குறித்த உண்மையான நோக்கம், அச்சட்டம், சட்டமியற்ற தகுதியற்ற அதிகாரவரம்பில் இயற்றப்பட்டிருப்பினும், அச்சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்குள்ளாகத்தான் (Intra vires) தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது, ஒரு சட்டம் மாநிலத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டிருக்கும் பொழுது, அது தற்செயலாக மத்திய அரசின் அதிகாரவரம்பிலும் தலையிடுகிறது என்றால், அச்சட்டத்தினை தவறானது எனக் கூறிவிட முடியாது. ஏனெனில், பொதுவாக நோக்கும் பொழுது, அச்சட்டம் பெரும்பான்மையில் மாநில அரசின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டே இருக்கிறது. மிகக் குறைந்த அளவில்தான் அதுவும், தற்செயலாகத்தான் மத்திய அரசின் அதிகாரவரம்பை பாதிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அச்சட்டத்தினை தவறு என ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில், அது முறையானதாகவே கருதப்படுகிறது.

Profalla Kumar Mukerjee v. Bank of Khulna[2] - மேற்படி

1. AIR 1958 SC 452
2. AIR 1947 PC 60

விதி, இவ்வழக்கில் பிரிவி கவுன்சிலால் பின்பற்றப்பட்டது. இவ் வழக்கில், வங்காளத்தின் பணம் கடன் கொடுப்போர் சட்டமானது (The Bengal Money Lenders' Act, 1946) வங்காள சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்டது. ஏனெனில், அச்சட்டத்தில் உள்ள 'பண உறுதிச் சீட்டுகள்' (Promissory Notes) என்ற தலைப்பு, மத்திய அரசின் அதிகாரவரம்பிற்குட்பட்ட துறை ஆகும். வங்காள சட்டமன்றம் தன் அதிகாரவரம்பை மீறி அதில் சட்டமியற்றியதால் அது செல்லாது, என அறிவிக்கும்படி பிரிவி கவுன்சிலை வங்காளத் தின் கடன் கொடுப்போர்கள் கேட்டுக் கொண்டார். ஆனால், பிரிவி கவுன்சில் இப்பெரும்பான்மை விதியைப் பின்பற்றி, மத்திய அரசின் ஒரு துறையான 'பண உறுதிச் சீட்டு' என்பதில் வங்காள அரசின் பணம் கடன் கொடுப்போர் சட்டம் தலையிட் டாலும் அது மாநில துறையில் வரும் பணம் கடன் கொடுத்தல் மற்றும் பணம் கடன் கொடுப்போர் பற்றிய விபரங்களை உள்ளடக்கியிருப்பதால், அச்சட்டம் செல்லுபடியாகிறது, எனத் தீர்ப்பளித்தது.

State of Bombay v. F.N.Balsara[1] - இவ்வழக்கில், மாநிலத்தில் மதுபானங்கள் விற்பதையோ, வைத்திருப்பதையோ தடை செய்யும் பம்பாய் மதுவிலக்குச் சட்டமானது (Bombay Prohibition Act), மத்திய அரசின் துறையான சுங்க இலாகாவின் வழியாக மதுபானங்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் அதிகாரவரம்பை ஆக்கிரமிப்பதாக உள்ளது, என பம்பாய் மதுவிலக்குச் சட்டத்தின் செல்லுத்தன்மை குறித்து வினா எழுப்பப்பட்டது. மதுபானத்தை தடுப்பது அதன் இறக்குமதியை பாதிப்பதாக உள்ளது, எனவும் கூறப்பட்டது. ஆனால் நீதிமன்றம், மேற்படி சட்டம், மத்திய சட்டமியற்றும் அதிகாரத்தில் தலையிடுவதாக இருந்தாலும், பெரும்பான்மை விதிப்படி அச்சட்டம் மாநில பட்டியலின் கீழ் வருகிறதே தவிர மத்திய பட்டியலின் கீழ் வரவில்லை என்று கூறி அச்சட்டம் செல்லும் எனத் தீர்ப்பளித்தது.

4. Doctrine of Colourable Legislation - Write short notes. (சட்டத்தின் பொய்மைத் தோற்ற விதி - குறுகிய விடை தருக.)

மத்திய அரசும் மாநில அரசுகளும் தத்தம் பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்ற வேண்டும், என்பது அரசியலமைப்பு கூறும் பொது விதியாகும். சில சமயங்களில், மாநில சட்டமன்றம், தனது அதிகாரவரம்பை மீறி சட்டமியற்றும் சூழல் நேர்ந்து

1. AIR 1951 SC 318

விடுவதுண்டு. அப்படி மீறியிருப்பது தோற்றத்திலேயே வெளிப் படையாக தெரியும். ஆனால் சில சமயங்களில் அந்த மீறுகை அதன் தோற்றத்தில் தெரியாமல் மறைவாகவும் இருப்பதுண்டு. அவ்வாறு மறைவாகவும், உட்கிடையாகவும் இருப்பது, சட்டத்தின் பொய்மைத் தோற்றமெனப்படுகிறது. இதனை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை. ஒன்றைப்பற்றி சட்டமியற்ற அதிகாரம் இல்லாத போது, வெறும் தோற்றத்தினைக் கருவியாக்கி அதிகாரம் பெற்றிட இயலாது. இந்தப் பொய்மை என்னும் திரையை விலக்கி உண்மையைக் கண்டறிய வேண்டியுள்ளது. ஏனென்றால் ஒன்றை நேரடியாகச் செய்ய முடியாது என்றால் மறைமுகமாக மட்டும் எப்படிச் செய்ய முடியும்? எனவே சட்டத்தில் ஏற்படும் இத்தகைய பொய்மைத் தோற்றத்தை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிப்ப தில்லை.

இவ்விதியின் பொருள் மற்றும் பரவெல்லையை உச்ச நீதிமன்றம் **K.C.G. Narayan Dev v. State of Orissa**[1] என்ற வழக்கில் கூறியது.

அரசியலமைப்பில் தடை செய்யப்பட்டுள்ளவற்றை சட்ட மன்றம் மறைமுகமான வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் மீற முடியாது, என **R.D.Joshi v. Ajit Mills**[2] எனும் வழக்கில் கூறப்பட்டது.

State of Bihar v. Kameshwar Singh[3] - இவ்வழக்கில், பீகார் நிலச் சீர்திருத்த சட்டமானது (Bihar Land Reforms Act, 1950) இல்லா நிலையதென அறிவிக்கப்பட்டது. காரணம், அச்சட்டம், நிலமிழந் தோரின் இழப்பீட்டுத் தொகையை நிர்ணயம் செய்வதுபோல் ஒரு பொய்மைத் தோற்றத்தை உண்டு செய்தது. ஆனால் உண்மையில் அவ்வாறு எவ்வித ஏற்பாட்டையும், மேற்படி சட்டம் செய்திருக்க வில்லை. மற்றும் அது, மனுதாரரின் இழப்பீடு பெறும் உரிமையை மறைமுகமாக பறிப்பதாக உள்ளது. ஆகவே அச்சட்டம் பொய்மைத் தோற்ற விதிப்படி செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

K.T. Moopil Nair v. State of Kerala[4] எனும் வழக்கில், திருவாங்கூர் கொச்சின் நில வரிச் சட்டமானது, செல்லத்தக்கதல்ல, என்று மேற்படி விதியின்படி உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது. ஏனெனில், மேற்படி சட்டம், தோற்றத்தில் ஒரு வரி விதிக்கும்

1. AIR 1953 SC 375
2. AIR 1977 SC 2279
3. AIR 1952 SC 252
4. AIR 1961 SC 252

சட்டமாகத் தெரிந்தாலும், உண்மையில் அது அவ்வாறு வரி விதிக்கும் சட்டமல்ல; மாறாக நிலத்தை பறிமுதல் செய்யும் தன்மை கொண்டதாகும்.

5. Doctrine of Occupied Field - Write short notes. (ஆக்கிரமித்துக் கொள்ளல் விதி - குறுகிய விடை தருக.)

இவ்விதிப்படி, மத்திய அரசு ஏதாவது ஒன்று பற்றிச் சட்டம் இயற்றினால், அது அதனால் எடுத்துக் கொள்ளப்பட்டதாக பொருள்படும். எனவே, மாநில அரசாங்கம் அதில் தலையிட இயலாது. எப்போது ஒரு சட்டம் ஒன்றில் தலையிட முனைகிறதோ, அப்பொழுதே அது அதன் சொந்தம் ஆகிவிடுகிறது. எனவே அதே நோக்கோடு மற்றொரு சட்டம் தேவையற்றதாகி விடுகிறது, என்பதோடு தலையிடவும் முடியாமல் போய்விடுகிறது என்கிறார், **ஐசக்ஸ் நீதிப்பெருமகனார்.** இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **254**ஆவது ஷரத்திற்குப் பொருந்தும்.

6. The Residuary Powers - Write short notes. (எஞ்சியுள்ள அதிகாரங்கள் - குறுகிய விடை தருக.)

பாராளுமன்றத்தின் எஞ்சியுள்ள அதிகாரங்களைப் பற்றி **ஷரத்து 248** கூறுகிறது. அதன்படி இணைப்புப் பட்டியலிலோ அல்லது மாநில பட்டியலிலோ, விளக்கப்படாத எத்துறையின் மீதும் சட்டமியற்றும் அதிகாரத்தை, பாராளுமன்றம் முழுமையாகப் பெற்றுள்ளது. மத்திய பட்டியலில் 97வது நுழைவும் (Entry) இதனைப் பற்றியே கூறுகிறது. மேற்கண்ட பட்டியலில் கூறப்படாத வரியினைப் பற்றியும் பாராளுமன்றம் சட்டமியற்றலாம். உண்மையில், இந்த எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அமெரிக்க அய்க்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இவ்வதிகாரம் மாநிலங்களுக்கே அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தியாவில் மட்டும், இவ்வதிகாரம் மத்திய பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம், மத்திய அரசை வலுவான நிலைக்கு கொண்டு வர வேண்டும் என அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் எண்ணியதுதான்.

7. Doctrine of Repugnancy - Write short notes. (முரண்பாட்டுக் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

(வினா எண் 1-ல் காண்க.)

8. With the help of decided cases discuss the different rules of interpretation of legislative entries in the Constitution. (தீர்மானிக்கப் பட்ட வழக்குகளின் துணை கொண்டு, அரசமைப்புச் சட்டத்தில் சட்டமியற்றும் அதிகாரப்பட்டியல் குறிப்புகளை பொருள் விளக்கம் காண்பதற்கான பல்வேறு விதிகளை விவாதிக்கவும்.)

(வினா எண் 1-ன் விடையை சுருக்கமாகக் குறிப்பிட்டு அதற்குப் பின்னிட்டு வரும் பல்வேறு கோட்பாடுகளை சுருக்கமாகச் சுட்டிக்காட்டுக.)

-o0o-

அத்தியாயம் 3

மத்திய மற்றும் மாநிலத்திற்கிடையிலான நிர்வாக உறவுகள் (Administrative Relations between the Union and State)

நிர்வாக அதிகாரங்களின் பகிர்ந்தளிப்பு
(ஷரத்துகள் 256 முதல் 263)
(Distribution of Adminstrative Powers)
(Articles 256 to 263)

1. Discuss the administrative relation between the Union and States.
(மத்திய - மாநிலங்களுக்கிடையே உள்ள நிர்வாக ஆட்சி உறவினை விளக்குக.)

(அல்லது)

Discuss briefly the provisions relating to the administrative relations between the Union and the States under the Indian Constitution.
(இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மத்திய மாநில அரசுகளின் நிர்வாக முறை உறவுகள் பற்றியுள்ள வகைமுறைகளை சுருக்கமாக விவாதிக்க.)

(அல்லது)

Discuss the provisions relating to administrative relations between the centre and the state and point out how far these provisions

promote co-operative federalism in India. (மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான செயலாட்சி உறவுகள் குறித்த வகையங்களை விவாதித்து அவை எந்த அளவிற்கு இந்தியாவில் கூட்டுறவுக் கூட்டாட்சியை ஊக்குவிக்கிறது என்பதைக் குறிப்பிடுக.)

அரசியலமைப்புச் சட்ட அறிஞர் D.D.பாசு அவர்களின் கருத்து:

"அதிகாரப் பகிர்ந்தளிப்பு மற்றும் இரட்டை அரசாங்க முறை இவற்றினை உள்ளடக்கியதுதான் ஒரு கூட்டாட்சி முறை. ஆனால் கூட்டாட்சிக் கொள்கையின் வெற்றியும், வலிமையும் அரசாங்கங்களுக்கு இடையேயான உச்ச அளவு ஒத்துழைப்பையும், ஒத்திசைவையும் சார்ந்து உள்ளது" என திரு. **D.D. பாசு** கூறுகிறார்.

விளக்கம்:

உண்மையில் ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே, அவற்றின் நிர்வாக உறவினை சரிப்படுத்துவது என்பது சிக்கல் மிகுந்த பிரச்சனையாகும். எனவே, இவற்றிற்கிடையேயான நிர்வாக உறவு மோதல்களை தவிர்க்கும் பொருட்டு; இந்திய அரசியலமைப்பினை உருவாக்கியவர்கள், அதில் சில விளக்கமான சட்ட ஏற்பாடுகளை சேர்த்தனர். மத்திய அரசாங்கம் நாட்டின் ஒழுங்கு மற்றும் அமைதி காக்கும் பொறுப்பு உடையதாக்கப்பட்டது. நாட்டில் ஒழுங்கு மற்றும் அமைதியை பராமரிக்க வேண்டுமெனில், மாநில அரசின் ஒத்துழைப்பும் ஒத்திசைவும் மத்திய அரசிற்கு இன்றியமையாததாகும்.

மத்திய அரசு மாநிலங்களின் நிர்வாகத்தை எப்பொழுது கட்டுப் படுத்தும்?

மேற்கண்ட ஒத்துழைப்பு மற்றும் ஒத்திசைவிற்காக, நிர்வாக உறவினை பலப்படுத்த நெருக்கடி நிலைமை போன்ற காலங்களில், மாநில அரசின் கட்டுப்பாடு மத்திய அரசிற்கு வரும்படியாகவும், அரசியலமைப்பில் ஷரத்துகள் செய்யப்பட்டன. ஆனால் பின்வரும் வழிகளில், சாதாரண காலங்களில் கூட மாநில அரசின் கட்டுப் பாட்டை மத்திய அரசு கைக்கொள்ளும். அதனைப்பற்றி **256 முதல் 263 வரை உள்ள ஷரத்துகள்** கூறுகின்றன.

1. மத்திய அரசினால் மாநில அரசிற்கு இடப்படும் ஏவுரை அல்லது கட்டளை (Direction). 2. மத்திய அரசின் பணிகள் மாநில

அரசிடம் ஒப்படைக்கப்படல் (Delegation). 3. அனைத்திந்திய அரசுப் பணிகள் (All India Services). 4. உதவித் தொகை அளிப்பு (Grants-in-aid). 5. முழு நம்பிக்கை மற்றும் மதிப்பு குறித்த வகைமுறைகள் (Full faith and credit clause).

வகைமுறைகள்:

1. மாநில அரசின் மீதான மத்திய அரசின் ஏவுரை (Direction by the Union to the State Governments):

பாராளுமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்ப மாநில அரசின் நிர்வாக அதிகாரம் (executive power) செயல்படுகிறது. மேலும், மத்திய அரசின் நிர்வாக அதிகாரம், மாநில அரசிற்கு தகுந்த ஏவுரைகளை அளிக்கும் அளவிற்கு நீளும் என **ஷரத்து 256** கூறுகிறது.

இந்த ஏவுரை அதிகாரம் மத்திய அரசிற்கு இல்லையென்றால் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களை செயலுறுத்துவது, அரிதாகிவிடும். தேசிய அல்லது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட வேண்டிய விபரங்களிலும், மாநிலங்களின் இருப்புப் பாதைகளை பாதுகாக்க வேண்டிய தருணங்களிலும், தொடர்புடைய மாநிலம் எவ்வாறு தனது நிர்வாக அதிகாரத்தை பயன்படுத்தலாம், என மத்திய அரசு ஏவுரைகளை அல்லது கட்டளைகளை பிறப்பிக்கும். அதனை நிறைவேற்றுவதற்குண்டான கூடுதல் செலவுகளை மத்திய அரசு அளிக்கும், என **ஷரத்து 257 (4)** குறிப்பிடுகிறது. இந்த ஏவுரைகளை பின்பற்றி ஒரு மாநிலம் செயல்படவில்லையென்றால், **ஷரத்து 356-ன்படி,** குடியரசுத் தலைவர் அம்மாநிலத்தின் மீது நெருக்கடி நிலையை பிரகடனப் படுத்தலாம்.

2. மத்திய அரசின் பணிகள், மாநில அரசிடம் ஒப்படைக்கப்படல் (Delegation of Union functions to the States):

மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்களின் கீழ்வரும் அரசாங்கத்தின் அல்லது அதன் அலுவலர்களின் பணிகளை, மாநில அரசின் இசைவோடு நிபந்தனையுடனோ அல்லது நிபந்தனையற்றோ அம்மாநில அரசிடம் குடியரசுத் தலைவர் ஒப்படைவு செய்யலாம், என **ஷரத்து 258** கூறுகிறது. மத்திய அரசின் சட்டங்களை வலியுறுத்த மாநில அரசின் நிர்வாக இயந்திரத்தை (Executive Machinery of the States) பயன்படுத்திக் கொள்ள **ஷரத்து**

258 (2) பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கின்றது.

3. அனைத்திந்திய அரசுப் பணிகள் (All India Services):

மத்திய மற்றும் மாநில அரசுக்கெனத் தனித்தனியான அரசுப் பணிகள் உள்ளன. ஆனால் மத்திய மாநில அரசுகளுக்கு பொதுவாக சில கூடுதல் அரசுப் பணிகளை 'அனைத்திந்திய அரசுப் பணிகள்' என்ற வகையில் உண்டாக்க அரசியலமைப்பு வழி செய்கிறது. இப்பணிகளில் அமர்த்தப்படும் நபர்களின் தேர்ந்தெடுப்பு மற்றும் நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. **(ஷரத்து 312)**

4. உதவித் தொகை அளிப்பு (Grants-in-aid):

அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின்படி சமூகத்தை உயர்த்த பல்வேறு பணிகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டி இருப்பினும், அரசியலமைப்பால் மாநிலங்களின் நிதிவளம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலங்களின் அத்தகு நிரந்தர தேவைகளை பூர்த்தி செய்ய, மத்திய அரசு மாநிலங்களுக்கு உதவித் தொகை அளிக்கிறது. இது இரு நோக்கங்களை பூர்த்தி செய்கிறது. 1. சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் இவ்வுதவித் தொகை வழங்கப்படுவதால், மாநில அரசின் மீது ஒரு கெடுபிடியான கட்டுப்பாட்டை கொண்டதாக மத்திய அரசு உள்ளது. 2. மத்திய மாநில நல்லுறவுகளையும், ஒத்துழைப்பையும் இது வளர்க்கிறது.

5. முழு நம்பிக்கை மற்றும் மதிப்பு குறித்த வகைமுறைகள் (Full faith and credit clause):

அரசின் பொதுச் செயல்கள் (Public acts), பொது ஆவணங்கள் மற்றும் நீதி நடவடிக்கைகளுக்கு இந்திய எல்லை முழுவதும், முழு நம்பிக்கை மற்றும் மதிப்பு கொடுக்கப்பட வேண்டும், என **ஷரத்து 261** கூறுகிறது. இதன்படி இந்தியாவில் ஒரு பகுதியில் இருக்கும் உரிமையியல் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட தீர்ப்பு, நாட்டின் எப்பகுதியில் வேண்டுமானாலும் நிறைவேற்றப்படலாம். அதாவது, மேற்படி தீர்ப்பிற்கு முழு நம்பிக்கையும் மதிப்பும் இதன்படி கொடுக்கப்படுகின்றது.

நதி நீர் தொடர்பாக தகராறுகள் (Disputes relating to waters):

ஷரத்து 262-ன்படி, மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியின்

நீர் குறித்த பயன்பாடு, பகிர்மானம் அல்லது கட்டுப்பாடு தொடர்பான புகார் அல்லது தகராறை தீர்க்கும் பொருட்டு பாராளுமன்றம் சட்டமியற்றலாம் என்று கூறுகிறது. இதனடிப்படையில் பாராளுமன்றம் பின்வரும் இரு சட்டங்களை இயற்றியுள்ளது. **முதலாவது,** மாநிலங்களுக்கிடையிலான நதி மற்றும் நதிப் பள்ளத்தாக்கு ஆகியவற்றினை ஒழுங்குபடுத்தவும் மேம்படுத்தவும் **1956-ல் நதி வாரியச் சட்டம் (The River Board Act, 1956)** இயற்றப் பட்டது. **அதுபோல்,** மாநிலங்களுக்கிடையிலான நதி நீர் தகராறைத் தீர்க்க ஒரு தீர்ப்பாயத்தை அமைக்க மத்திய அரசுக்கு அதிகாரமளிக் கும் வண்ணம் **1956-ல் மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தகராறுச் சட்டம் (The Inter-State Water Disputes Act, 1956)** இயற்றப்பட்டது.

காவிரி நீர் தகராறு தீர்ப்பாயம் குறித்த விஷயத்தில்[1] **(In the Matter of Cauvery Water Disputes Tribunal (or) In re Cauvery Water Dispute),** அத்தகராறை தீர்க்க **ஷரத்து 265-ன்படி,** மேற்படி தீர்ப்பாயத்தை மத்திய அரசு அமைத்தது. இத்தீர்ப்பாயத்தில் கர்நாடக மற்றும் தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் பங்கீடு குறித்த தகராறு முறையிடப்பட்டது. தமிழ்நாட்டிற்கு நீர் விட, மேற்படி தீர்ப்பாயம் இடைக்கால நிவாரணம் வழங்கியது. இவ்வாறு வழங்குவதற்கு உத்திரவிட தீர்ப்பாயத்திற்கு அதிகாரமுண்டு என்று உச்ச நீதிமன்றமும் தெளிவுபடுத்தியது.

ஆனால், இவ்வாறு தீர்ப்பாயம் இடைக்கால நிவாரணம் வழங்குவதை தவிர்க்கும் பொருட்டு, கர்நாடக மாநிலம் அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பித்தது. மேலும் அது, இடைக்கால நிவாரணம் வழங்கியது சரிதான் என்று உச்ச நீதிமன்றம்அளித்த தீர்ப்பு செல்லாது என்றும் வழக்கிட்டது. அப்பொழுது உச்ச நீதிமன்றம், மேற்படி அவசர சட்டம் அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்ட செயல் பாட்டைக் கொண்டது என்றும், அது, காவிரி நீரின் பயன்பாடு குறித்து தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியின் நியாயமான உரிமைகளில் குறிக்கிடுவதாக உள்ளது என்றும் தீர்ப்பளித்தது. மேலும், தீர்ப்பாயத்தின் தீர்மானிப்புகளில் குறுக்கிடும் நிர்வாகத் துறையினரின் எந்த ஒரு உத்திரவும் அல்லது மாநிலத்தின் எந்த ஒரு சட்டமும், மாநில நீதித்துறையின் அதிகாரத்தில் குறுக்கிடுவதற்கு ஒப்பாகும் என்றும், எனவே கர்நாடக மாநிலத்தின் அவசரச் சட்டம் செல்லாது என்றும், அச்சட்டமானது, சட்டத்தின் ஆட்சிக்கு விரோதமானது என்றும், கர்நாடக மாநிலம் சட்டத்தை தன் கையில்

1. AIR 1992 SC 522

எடுத்துக்கொண்டு, சட்டத்தைவிட மேலாக செயல்பட விழைகிறது என்றும் தீர்ப்பளித்து, கர்நாடக மாநிலத்தை கண்டித்தது.

மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையிலான தகராறுகள் மேலாண்மை (Centre and Inter-States Conflict Management):

மாநிலங்களுக்கிடையேயான மன்றம் (Inter-State Council):

கட்டமைப்பு:

மாநிலங்களுக்கிடையே நல்லுறவுகளை வளர்ப்பதற்காக, மாநிலங்களுக்கிடையேயான மன்றம் அமைக்கப்பட வேண்டும், என **ஷரத்து 263** கூறுகிறது. அதாவது, மாநிலங்களுக்கு இடையேயான மன்றத்தினை அமைப்பதால், பொது மக்களுக்கு நலன் (Public interest) ஏற்படுகிறது என்று குடியரசுத் தலைவருக்கு தோன்றினால் அவர் மேற்படி மன்றத்தினை அமைக்கலாம். இதில் பின்வரும் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். (1) பிரதம மந்திரி, (2) எல்லா மாநிலங்களுடைய முதலமைச்சர்கள், (3) சட்டப் பேரவை கொண்ட யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள் மற்றும் சட்டப்பேரவை கொண்டிராத யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள், (4) பிரதம மந்திரியால் நியமனம் செய்யப்படும் மத்திய அமைச்சரவையின் ஆறு மந்திரிகள். இவர்கள் தவிர, மத்திய அரசில் தனிப்பட்ட பொறுப்பு வகிக்கும் மாநில அமைச்சர்கள், அவர்களது அமைச்சகம் தொடர்பாக விவாதம் செய்யப்படும் போது அழைக்கப்படலாம்.

பிரதம மந்திரி இமன்றத்தின் தலைவராக இருந்து, இதன் கூட்டங்களுக்கு தலைமை வகிப்பார். இவர் வருகை தர இயலாத போது, இவர் மத்திய அமைச்சரவையில் உள்ள அமைச்சர் யாரையேனும் கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் பொருட்டு நியமனம் செய்யலாம்.

மன்றத்தின் கடமைகள்:

1. மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் தகராறுகளை விசாரித்து, அவற்றைத் தீர்க்க தக்க அறிவுரைகளை வழங்குதல்.

2. அனைத்து மாநிலங்களுமோ அல்லது ஒன்றிரண்டு மாநிலங்களோ பொதுவான அக்கறை கொண்டுள்ள விஷயங்களை புலனாய்வு செய்து, அவை குறித்து விவாதித்தல்.

3. மாநிலத்தின் நல்லுறவுகளை வளர்ப்பதற்கு உண்டான

விஷயங்கள் மீது பரிந்துரை செய்தல்.

இமன்றமானது, சட்டம் மற்றும் சட்டமல்லாத விடயங்களை ஆராய்ந்தாலும், இதன் பணி வெறுமனே அறிவுரை வழங்குவதோடு நின்றுவிடுகிறது. இம்மன்றத்தின் முக்கிய நோக்கமே, மாநிலங்கள் ஒரு பொதுவான விஷயம் குறித்து தங்களது கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, தங்களிடையே நல்லுறவை வளர்த்துக் கொண்டு, தங்களது முடிவினை மத்திய அரசின் செவிக்கு எட்டச் செய்வதே ஆகும்.

சர்காரியா கமிஷன் (Sarkaria Commission) மாநிலங்களுக் கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்கு மன்றம் ஒன்று நிறுவப் படல் மிகவும் அவசியம் என வலுவாக பரிந்துரை செய்துள்ளது.

மன்றத்தின் நடைமுறை:

இப்படிப்பட்ட மன்றமானது தனது அலுவலை செய்யும் போது பின்வரும் நடைமுறையை கடைப்பிடிக்க வேண்டும். அவை, (1) தன் முன் கொண்டு வரப்படவுள்ள பிரச்சனைகளை தேர்ந்தெடுப் பதிலும் அடையாளம் காண்பதிலும் இக்மமறஙவழிகாட்டு நெறிகளைப் பின்பற்ற வேண்டும். (2) இமன்றத்தின் தலைவர் முடிவு செய்யும் அத்தகு நேரத்திலும் இடத்திலும் இது ஆண்டிற்கு குறைந்தது மூன்று முறையாவது கூட வேண்டும். (3) இம்மன்றத்தின் கூட்டங்கள் அந்தரங்கமான தனியறையில் நடத்தப்பட வேண்டும். (4) மன்றத்தின் கூட்டத்திற்கான பிரச்சனை வினாவை தலைவர் அடங்கிய உறுப்பினர்கள் வடிவமைக்க வேண்டும். (5) கூட்டத்தில் எழும் எல்லாப் பிரச்சனை வினாக்களும் ஒருமனதாக முடிவு செய் யப்பட வேண்டும். (6) இம்மன்றம் மத்திய அரசின் ஒப்புதலுடன் அவ்வப்போது ஏற்படுத்திக் கொள்ளும் அத்தகு நடைமுறையை தனது அலுவலை செய்யும் போது பின்பற்றலாம்.

விற்பனை வரியைப் பொறுத்து மாநிலங்களுக்கிடையே கூட்டுறவை ஏற்படுத்த **நான்கு வட்டார மன்றங்களும் (Regional Councils),** பொதுப் பிரச்சனையைத் தீர்க்க **அய்ந்து மண்டல மன்றங்களும் (Zonal Councils)** அமைக்கப்பட்டன. [மேலும் விரிவான விளக்கத்திற்கு இந்த இரண்டாம் பகுதியில் வரும் அத்தியாயம் 1-ல், வினா எண். 3-ல் **'கூட்டுறவு கூட்டாட்சித்துவம்' (Co-operative Federalism)** என்ற தலைப்பில் காண்க.]

2. Full faith and Credit clause - Write short notes. (முழு நம்பிக்கை

மற்றும் மதிப்பு குறித்த வகைமுறைகள் - குறுகிய விடை தருக.)

(முந்தய வினாவின் விடையில் காண்க.)

3. In re Cauvery Water Dispute - Write short notes. (காவிரி நதி நீர் பிரச்சனை - குறுகிய விடை தருக.)

(முந்தய வினாவின் விடையில் காண்க.)

4. Inter-State Council - Write short notes. (மாநிலங்களுக்கிடையே யான மன்றம்- குறுகிய விடை தருக.)

(அல்லது)

Discuss Centre and Inter-States Conflict Management. (மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையான தகராறு மேலாண்மையை விவாதிக்க.)

(முந்தைய வினாவின் விடையில் இறுதிப்பகுதியில் காண்க.)

-o0o-

அத்தியாயம் 4

மத்திய மற்றும் மாநிலத்திற்கிடையிலான நிதி சார்ந்த உறவுகள் (Fiscal Relations between the Centre and State)

(i) வரிகள் மற்றும் மானியத் தொகைகளின் பகிர்வு

(ஷரத்துகள் 265 மற்றும் 268 முதல் 279)

(Sharing of Taxes and Grants-in-aid)

(Articles 265 and 268 to 279)

1. Critically analyse the provisions relating to the financial relations between the Union and the States under the Indian Constitution. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி உறவுகளைப் பற்றி உள்ள வகைமுறைகளை விவாதிக்கவும்.)

(அல்லது)

Financial relations - Write short notes. (நிதி சார்ந்த உறவுகள் - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்பு சட்ட அறிஞர் D.D. பாசு கூறும் கருத்து:

"அரசியலமைப்பின் கீழ் மத்திய அரசும் மாநில அரசுகளும் தங்களுக்குரிய பொறுப்புகளை ஆற்ற, தங்களுக்கென போதுமான நிதி வளம் இல்லாவிட்டால், கூட்டாட்சியின் எந்த முறையும் வெற்றி

பெற வழியில்லை" என திரு. **D.D. பாசு** கூறுகிறார்.

கூட்டாட்சியானது சிறந்த முறையில் செயல்பட வேண்டுமெனில், வருவாயானது (revenue) மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். இந்த வருவாயானது மத்திய அரசும், மாநில அரசுகளும் மக்கள் மீது விதிக்கும் பல்வேறு விதமான வரிகளின் (Taxes) வாயிலாக கிடைக்கிறது.

சட்டத்தின் அனுமதியுடன் மட்டுமே வரி விதிக்கப்படல்:

"சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது" (No levy or collection of taxes except by authority of law) என **ஷரத்து 265** திட்டவட்டமாகக் கூறுகிறது. அதாவது நிர்வாகத் துறையின் உத்திரவினாலோ (executive order) அல்லது விதிகளினாலோ (rules) எந்த வரியும் விதிக்கப்படக்கூடாது. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றினால் மட்டுமே வரி விதிக்கப்பட வேண்டும்.[1] அதுவும் செல்லத்தக்க சட்டமாக (valid law) இருத்தல் வேண்டும். வேறு விதத்தில் கூறுவதாக இருந்தால், அச்சட்டமானது அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசியலமைப்புச் சட்ட வகைமுறைகள் எவற்றையும் மீறக்கூடாது. எடுத்துக்காட்டாக, ஷரத்து 14-ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள சமத்துவ உரிமையை (Fundamental Right to Equality) ஒரு வரி மீறுவதாக இருந்தால், அவ்வரி இல்லாநிலையதாகி விடும் (void).

வரி மற்றும் கட்டணம் (Tax and Fee) - வேறுபாடு:

"சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது" எனும் ஷரத்து வரிகளுக்கு (Taxes) மட்டுமே பொருந்தும்; கட்டணங்களுக்கு (fees) பொருந்தாது.

வரி எனப்படுவது பொதுநல முன்னேற்றத்திற்காக, பொது மக்களிடமிருந்து கட்டாயமாக வசூலிக்கப்படுவது ஆகும். இதனால் வரி செலுத்துபவர் நாட்டிற்கு விளையும் பொது ஆதாயத்தில் (common benefit) பங்கு கொள்கிறாரே ஒழிய, அவருக்கு தனிப்பட்ட விதத்தில் எவ்வித ஆதாயமும் ஏற்படுவதில்லை. ஆனால் கட்டணம் (fee) என்பது அப்படிப்பட்டதல்ல. கொடுக்கப்பட்ட சேவைக்கு, வசூலிக்கப்படும் பண மதிப்பு ஆகும். இதில் கட்டணம் செலுத்தியவர் தனிப்பட்ட ஆதாயம் பெறுகிறார். ஆகவே மேற்படி ஷரத்தின்

1. H.L.Mehra v. State of Maharashtra, AIR 1975 SC 1130

வாசகங்கள் வரிகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும். ஆனால் ஒன்றின் மீதே **இருமுறை வரி விதிப்பதை (Double Taxation)** அரசியலமைப்பு சட்டம் தடை செய்யவில்லை, என **Contonment Board v. W.I. Theatres Ltd.**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

அவ்வாறு சட்டத்தால் விதிக்கப்படும் மற்றும் வசூலிக்கப் படும் தீர்வைகளும் வரிகளும் வருமாறு.

நிதி உறவுகள் (அல்லது) மத்திய மற்றும் மாநில அரசுகளுக் கிடையே வருவாய் பகிர்ந்தளிப்பு (Distribution of Revenue between the Union and the States):

ஷரத்து 268-ஆனது, மேற்கூறியவாறு வருவாயைப் பகிர்ந் தளிக்க வழி செய்கிறது. மாநில அரசானது, தனக்குரிய மாநிலப் பட்டியலில் (State list) குறிப்பிடப்பட்டுள்ள வரிகளின் மீது முழு உரிமை படைத்துள்ளது. மத்திய அரசு, மத்தியப் பட்டியலில் (Union list) உள்ள வரிகளின் வாயிலாக வரும் வருவாயைப் பெற முழு உரிமை பெற்றுள்ளது. இணைப்புப் பட்டியல் (Concurrent list) எவ்விதமான வரியையும் கொண்டிருக்கவில்லை. மாநிலப் பட்டியலி ல் உள்ள வரிகளின் வாயிலாகப் பெறப்படும் வருவாய் முழுவதையும் மாநில அரசுகளே இருத்தி வைத்துக் கொள்ளலாம். இது தவிர, மத்தியப் பட்டியலில் உள்ள வரிகளின் வருவாயானது, மாநில அரசுகளுக்கு முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ மத்திய அரசால் அளிக்கப் படலாம். மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகள் பின்வரும் விதத்தில் மாநிலங்களுக்கு முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அளிக்கப்படுகின்றன என அரசியலமைப்பு குறிப்பிடுகின்றது.

1. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் வரிகள் (Duties levied by the Union but collected and appropriated by the States):
ஷரத்து 268-ன்படி, மத்திய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள முத்திரைத் தீர்வைகள் (Stamp duty) மற்றும் மருந்து மற்றும் ஒப்பனை ஆக்கப் பொருள்கள் மீதான ஆயத் தீர்வைகள் (duties of excise on medicinal and toilet preparation) மத்திய அரசால் விதிக்கப்படுகின்றன. ஆனால் அவை மாநில அரசால் வசூலிக்கப்பட்டு பயன்படுத்தப் படுகின்றன.

1. AIR 1964 Bom. 261

2. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, மத்திய அரசும் மாநில அரசுகளும் வசூலித்து இரண்டு அரசுகளும் அடைந்து கொள்ளும் சேவை வரி (Service Tax levied by Union and collected and appropriated by Union and States): 268-A என்ற ஒரு புதிய ஷரத்து 2003-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 88-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தால் (Inserted by 88th Amendment Act, 2003) இந்திய அரசியலமைப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டது. இச் ஷரத்து சேவை வரி விதிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. இத்தகு வரிகளை பாராளுமன்றம் தனது சட்டம் வாயிலாக வகுத்தமைக்கும் அத்தகு கொள்கைகளின் அடிப்படையில் மத்திய அரசும் மாநில அரசுகளும் வசூலிக்க வேண்டும். மேலும் அவற்றை தங்கள் பயன்பாட்டிற்காக அடைந்து கொள்ள வேண்டும்

3. மத்திய அரசால் விதிக்கப்பட்டும் வசூலிக்கப்பட்டும், ஆனால் மாநில அரசுகளுக்கு அளிக்கப்படும் வரிகள் (Taxes levied and collected by the Union and assigned to the States): ஷரத்து 269 சில வரிகள் மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் என்று கூறுகிறது. ஆனால் அதன் மூலம் வரும் வருவாய், மாநில அரசுகளுக்கிடையே பாராளுமன்றச் சட்டத்தால் கூறப்பட்டுள்ள முறைப்படி பகிர்ந்து அளிக்கப்படும் என்று கூறுகிறது.

இச்ஷரத்து 269-ஆனது **2000-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 80-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் (Constitution 80th Amendment Act, 2000)** திருத்தப்பட்டது. மேலும் இது ஷரத்து 269-ன் கீழ் வரும் கூறுகள் (1) மற்றும் (2)-ன் இடத்தில் அதற்குப் பதிலாக புதிய கூறுகளையும் சேர்த்தது. மேலும் ஷரத்து 270-க்குப் பதிலாக அந்த இடத்தில் ஒரு புதிய ஷரத்தையும் சேர்த்தது. அதுபோல ஷரத்து 272-ஐ நீக்கி விட்டது. இத்திருத்தச்சட்டம் 10-வது நிதிக்குழு (Finance Commission) செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் இயற்றப்பட்டதாகும். இக்குழு மத்திய அரசு விதிக்கும் சில வரிகளில் இருந்து பெறப்படும் மொத்த வருமானத்தில் 29 விழுக்காட்டை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. இத்திருத்தங்கள் கடந்த 1-4-1996-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாகக் கருதப்படுகிறது.

ஷரத்து 269-ன் கீழான புதிய கூறு (1)-ஆனது, சரக்குகளை விற்பனை செய்தல் அல்லது கொள்முதல் மீதான வரிகள் மற்றும் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்புவதன் மீதான வரிகளை மத்திய அரசு விதிக்க வேண்டும் மற்றும் வசூலிக்க

வேண்டும். ஆனால் அவற்றை பாராளுமன்றம் சட்டத்தின் வாயிலாக வகுத்துரைக்கும் அத்தகு முறையில் மாநிலங்களுக்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 269-ன் கீழான புதிய கூறு (2)-ஆனது, நிதியாண்டு ஏதேனுமொன்றில் அத்தகு வரி ஒன்றினால் கிடைக்கும் மொத்த வருவாயானது, இந்திய திரட்டு நிதியின் அங்கமாகாது. அது மாநிலங்களுக்கு ஒதுக்கித் தரப்பட வேண்டும். மேலும் பாராளு மன்றம் சட்டம் ஒன்றினால் வகுத்துரைக்கும் அத்தகு கொள்கை களின்படி அவ்வருவாய் மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படவும் வேண்டும்.

4. மத்திய அரசால் விதிக்கப்பட்டும், வசூலிக்கப்பட்டும் ஆனால் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே பகிர்ந் தளிக்கப்பட வேண்டிய வரிகள் (Taxes levied and collected by the Union but shall be distributed between the Union and States): வருமான வரி (Income Tax) இத்தகு வகையைச் சார்ந்தது என **ஷரத்து 270** கூறுகிறது. இச்ஷரத்து 270-ஆனது 2000-ஆம் ஆண்டின் 80-வது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்ட தாகும். இச்ஷரத்து 'பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்' (Shall be distributed) என்று ஏவுரைக்கும் வகையில் அமைந்துள்ளது.

5. மத்திய அரசால் விதித்து, வசூலிக்கப்பட்டு, மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்பட லாம் (may be distributed) எனப்படக் கூடிய வரிகள்: மத்திய அரசால் விதித்து வசூலிக்கப்பட்டு மேற்கண்டவாறு பகிர்ந்து அளிக்கப்படலாம் என ஒரு வரியை பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் வாயிலாகக் கூறினால், அவ்வாறு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும், என **ஷரத்து 272** தெரிவிக்கின்றது.

6. மத்திய அரசின் நோக்கங்களுக்காகச் சில தீர்வைகள் மற்றும் வரிகள் மீதான மேற்கட்டணம் (Surcharge): ஷரத்து 269 மற்றும் 270ல் கூறப்பட்டுள்ள வரிகளை பாராளுமன்றம் மத்திய அரசின் நோக்கங்களுக்காக, மேற்கட்டணம் (Surcharge) விதிப்பதன் வாயிலாக மிகுதிப்படுத்தலாம். இக்கட்டணம் முழுவதும், இந்திய திரட்டு நிதியில் சேர்க்கப்பட வேண்டும், என **ஷரத்து 271** கூறுகிறது.

7. ஏற்றுமதி தீர்வைக்கு பதிலாக மானியத் தொகை அளிப்பு (Grants in lieu of export duty): சணல் (Jute) மற்றும் சணல்

பொருட்களின் மீதான ஏற்றுமதி தீர்வைக்கு பதிலாக, இம்மானியத் தொகை அஸ்ஸாம், பீகார், ஒரிஸா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு மத்திய அரசால் அளிக்கப்படுகின்றது, என **ஷரத்து 273** கூறுகிறது.

7. மாநில அரசுகள் அக்கறை கொண்டுள்ள வரிகளை பாதிக்கும் வண்ணம் சட்டமியற்றல்: மாநில அரசுகள் அக்கறை கொண்டுள்ளவற்றில் வரி அல்லது தீர்வையை விதிக்கும் வண்ணம் அல்லது அவற்றை மாற்றும் வண்ணம் எந்த மசோதாவும் அல்லது திருத்த மசோதாவும் பாராளுமன்ற அவையில் அறிமுகப்படுத்தப் படக் கூடாது. அவ்வாறு அறிமுகப்படுத்த வேண்டுமெனில், அதற்கு குடியரசுத் தலைவரின் பரிந்துரை முன்னதாகப் (prior recommendation of the President) பெறப்பட்டிருக்க வேண்டும், என **ஷரத்து 274** கூறுகிறது.

8. சில மாநில அரசுகளுக்கு மத்திய அரசு மானியம் அளித்தல் (Grants from the Union to certain States): ஒவ்வொரு ஆண்டும், சில மாநிலங்களுக்கு தேவைப்படும் உதவித் தொகைகளை இந்திய திரட்டு நிதியிலிருந்து மானியமாக மத்திய அரசு வழங்கும், என **ஷரத்து 275** கூறுகிறது.

9. பணத் தொழில்கள், வாணிகங்கள், கொள்தொழில்கள், வேலையமைவுகள் ஆகியவற்றின் மீதான வரிகள் (Taxes on professions, trades, callings and employments): மாநிலத்தின் அல்லது நகராட்சி, மாவட்ட வாரியம், உள்ளூர் வாரியத்தின் அல்லது பிற உள்ளூர் அதிகார அமைப்புகளின் நலப்பயனுக்காக (benefit) பணித் தொழில்கள், வாணிகங்கள், கொள்தொழில்கள், வேலையமைவுகள் ஆகியவற்றின் மீது மாநில சட்டமன்றத்தால் விதிக்கப்படும் வரிகள், அவை வருமானத்தின் மீதான ஒரு வரி எனும் அடிப்படையில் செல்லாதவையென ஆக்கப்படக்கூடாது, என்று **ஷரத்து 276** கூறுகிறது.

மாநில அரசுகளின் வரி விதிக்கும் அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகளை (Restriction on States' Taxing Power) **ஷரத்து 286** கூறுகிறது.

முடிவுரை:

மேற்கண்ட நிதி உறவுகளைப் பார்க்கும்பொழுது, மத்திய அரசின் கட்டுப்பாடு மாநிலங்கள் மீது அதிகமாக இருத்தல்

புலனாகும். இந்த உறவுகளை தூர இருந்து மேலோட்டமாக பார்த்தால் கூட்டாட்சியின் பண்பு புலப்படுகின்றது. ஆனால் அருகில் நெருங்கும் பொழுதுதான் ஒற்றையாட்சியின் கூறுகளும் இருப்பது தென்படுகின்றது. எது எவ்வாறு இருப்பினும், சட்டத்தின் அனுமதியோடு வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுவது மட்டும் சரியாக நடக்கின்றது. அனைத்து வரிகளும் பாராளுமன்றச் சட்டத் தினாலேயே விதிக்கப்பட்டுள்ளன, என்பதில் சற்றும் அய்யமில்லை.

(ii) மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரத்தின் மீது கட்டுப்பாடு

(ஷரத்து 286)

(Restriction on States' Taxing Power)

(Articles 286)

2. Discuss the restrictions on the power of State Legislature on Fiscal Powers (நிதி அதிகாரங்களின் மீது மாநில சட்டமன்றங்களுக்கு உள்ள அதிகாரத்தின் கட்டுப்பாடுகளை விவாதிக்க.)

செய்தித்தாள்களைத் தவிர பிற சரக்குகளின் விற்பனை மற்றும் கொள்முதல் மீது வரி விதிக்க மத்திய அரசைப் போன்று மாநில அரசுகளுக்கும் அதிகாரம் உண்டு. எனினும் சரக்குகளின் மீது விற்பனை வரி விதிக்க மாநிலங்களுக்குள்ள அதிகாரத்தின் மீது **ஷரத்து 286** பின்வரும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவை,-

(1) மாநிலத்திற்கு வெளியே நடக்கும் சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதல் (Sale or purchase of goods which takes place outside the State): ஒரு மாநிலத்திற்கு வெளியே நடக்கும் சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதலின் மீது வரி விதிக்க மாநில அரசுகளை ஷரத்து 286(1)(b) தடை செய்கிறது. அதாவது இதன் பொருள் யாதெனில், மாநிலங்களுக்கிடையே நடக்கும் வியாபாரம் அல்லது வணிகத்தில் சரக்குகளை விற்பனை செய்தல் அல்லது கொள்முதல் செய்தலின் மீது வரி விதிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உண்டு. பாராளுமன்றம் 1956-ஆம் ஆண்டில் இயற்றிய மத்திய விற்பனை வரிச் சட்டமானது (Central Sales Tax Act, 1956) ஒரு மாநிலத்திற்கு வெளியே நடக்கும் விற்பனை அல்லது கொள்முதல் மீது வரி நிர்ணயம் செய்யும் கொள்கைகளைப் பற்றி கூறுகிறது.

(2) இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது சரக்குகளின் விற்பனை அல்லது கொள்முதல் (Sale or purchase of goods in the course of import and export): இந்திய எல்லைக்கு வெளியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் போது அல்லது ஒரு மாநிலத்திலிருந்து இந்திய எல்லைக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் போது நடக்கும் சரக்குகளின் விற்பனை அல்லது கொள்முதலின் மீது வரி விதிக்க மாநில அரசுகளை ஷரத்து 286(1)(b) தடை செய்கிறது.

(3) மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தின் போது சரக்குகளின் விற்பனை அல்லது கொள்முதல் (Sale or purchase of goods in the course of inter-State trade or commerce): ஒரு மாநிலம், மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தின் போது நடக்கும் சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதலின் மீது வரி விதிக்க முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட 6-வது சட்டத்திருத்தமானது மாநிலங்களுக்கிடையில் நடக்கும் வியாபாரம் அல்லது வணிகத்தின் போது நடக்கும் விற்பனை அல்லது கொள்முதல் மீது வரிகளை விதிக்கும் முழுமையான அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு கொடுத்துள்ளது. (அ) சரக்குகள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்லும் சமயங்களில், அல்லது (ஆ) சரக்குகள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு கொண்டு செல்லப் படுகையில் அதன் உரிமைக்கான ஆவணங்கள் மாற்றித் தரப் படுமானால், அது மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தின் போது நடக்கும் விற்பனை அல்லது கொள்முதலாகக் கருதப்படும்.

(4) மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள் (Goods of special importance in the inter-State trade or commerce): மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்திற்கு ஒரு சரக்கு 'சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது' (Special Importance) என்று பாராளுமன்றம் ஒரு சட்டம் வாயிலாக விளம்புகை செய்திருந்தால், அதன் விற்பனை அல்லது கொள்முதல் மீது வரி விதிக்க ஒரு மாநில அரசை ஷரத்து 286 (3) தடை செய்கிறது. 1956-ஆம் ஆண்டின் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 14-ஆனது மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள் எவை என்று பட்டியலிட்டுக் காட்டுகிறது. இவ்வாறு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகளின்

மீது மாநில அரசு வரி விதிக்கும் அதிகாரமானது பாராளுமன்றம் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

(5) ஷரத்து 366-இன் கூறு 29-Aயின் உட்கூறுகள் (b), (c), (d) ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறான மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தின் போது நடக்கும் சரக்குகளின் விற்பனை அல்லது கொள்முதலின் மீதான வரிகள் (Taxes on the sale or purchase of goods in the course of inter-State trade or commerce specified in sub-clauses (b), (c), (d) of clause (29-A) of Art. 366): ஷரத்து 366-இன் கூறு 29A 'சரக்குகள் விற்பனை அல்லது கொள்முதலின் மீதான வரி' (Tax on the sale or purchase of goods) பற்றி சில இனங்களை பல உட்கூறுகளின் வாயிலாக பட்டியலிட்டுக் காட்டுகிறது. அவற்றில் பின்வரும் இனங்களின் மீது ஒரு மாநில அரசு வரி விதிக்க முடியாது. அவை, (1) ஒரு பணி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதை உள்ளடக்கிய சரக்குகளின் மாற்றுகை, (2) தவணை முறையில் தொகை செலுத்துவதைக் கொண்ட தவணைக் கொள்முதல் விற்பனையின் பேரில் சரக்குகளை ஒப்படைத்தல், (3) நோக்கம் எதற்காகவும் சரக்குகள் எவற்றையும் பயன்படுத்தும் உரிமையை பணத்திற்காக, தவணை முறையில் தொகை செலுத்த உடன்பட்டு அல்லது வேறு மதிப்புறு மறுபயனுக்காக மாற்றித் தந்தால், அத்தகு மாற்றுகை அல்லது ஒப்படைப்பானது சரக்குகளை விற்பனை செய்தல் அல்லது கொள்முதல் செய்தலாகக் கருதப்படும். எனவே அத்தகு விற்பனை அல்லது கொள்முதலின் மீது வரிகளை விதிக்கும் மாநிலச் சட்டங்கள் பாராளுமன்றம் தனது சட்டம் வாயிலாக குறித்துரைக்கும் அத்தகு கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

3. "No tax shall be levied or collected except by authority of law" - Discuss. ("சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது" - விவாதிக்க.)

(அல்லது)

"No tax shall be levied or collected save by authority of law" - Discuss. Whether tax laws are subject to Fundamental Rights? Refer relevant cases. ("சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது". வரி விதிக்கும் சட்டங்கள் அடிப்படை உரிமைகளுக்கு உட்பட்டதா? தகுந்த வழக்குகளைக் குறிப்பிடவும்.)

(அல்லது)

Explain the unitary feature of the Indian Constitution with regard to financial relation. (நிதி உறவுகள் குறித்து இந்திய அரசியலமைப்பின் ஒற்றையாட்சிப் பண்பினை விளக்குக.)

(அல்லது)

Discuss the devices adopted by the Constitution for the sharing and devolution of funds to States. (மாநிலங்களுக்கு நிதி உரிமையாக்குதல், வரி பங்கீடு செய்தல் ஆகியவைகளுக்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம் கடைபிடிக்கும் வழிகளை விவாதிக்க.)

(வினா எண். 1-ன் விடையில் காண்க.)

4. Explain the relations between the Union and States. (மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே உள்ள உறவுகளை விளக்குக.)

(அல்லது)

Discuss the distribution of powers in the light of Indian Constitution. (அதிகாரப் பகிர்ந்தளிப்பு என்பதனை இந்திய அரசியலமைப்பினைப் பொறுத்து விவாதிக்கவும்.)

(இந்தப் பகுதி ஆ-வில் வரும் அத்தியாயம் 2 மற்றும் 3-ல் உள்ள முதல் வினாக்களின் விடையை எழுதிவிட்டு, இந்த அத்தியாயத்தில் வரும் முதல் வினாவிற்கான விடையையும் சுருக்கமாக எழுதவும்)

(iii) அரசின் அங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தனித்தன்மை விதிவிலக்கு கோட்பாடு

(ஷரத்துகள் 285 மற்றும் 289)

(Doctrine of Immunity of Instrumentality)

(Articles 285 and 289)

5. Explain the doctrine of Immunity of Instrumentality. (அரசின் அங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தனித்தன்மை விதிவிலக்கு கத்துவம் பற்றி விளக்குக.)

(அல்லது)

Doctrine of immunity of instrumentality. (அரசின் துணை அதிகாரஅமைப்புகளின் சட்ட விலக்களிப்பு கோட்பாடு - குறுகிய விடை தருக.)

இக்கோட்பாடு முதன்முறையாக **Mechulloch v. Maryland**[1] எனும் வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப் பட்டது. மேற்படி வழக்கில் Maryland எனும் மாநிலத்தில் அமெரிக்க பாராளுமன்றம் வங்கி ஒன்றை நிறுவியது. அம்மாநிலம் வரி ஒன்றை விதித்தது. ஆனால் Mechullock எனும் காசாளர் (Cashier) அதனை செலுத்த மறுத்து விட்டார். ஏனெனில் அவ்வரி மத்திய அரசின் ஒரு அங்கத்தின் (சொத்தின்) மீதானதென்றும், அதன் மீது மாநில அரசு வரி விதிக்க முடியாது என்றும் அவர் வாதிட்டார். வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், மாநில அரசு மத்திய அரசுச் சொத்தொன்றின் மீது வரி விதிக்க அதிகாரம் படைத்ததல்ல என்று விலக்களித்து தீர்ப்பளித்தது. பின்னர் எழுந்த வழக்கொன்றில்[2] மேற்படி விதி, மத்திய அரசானது மாநில அரசுச் சொத்துக்களின் மீதும் வரிவிதிக்க முடியாது என்று மாநில அரசுகளுக்கும் பொருந்தும் வண்ணம் விலக்குகளை அளித்தது.

மேற்படி விதிவிலக்கு தத்துவம் அமெரிக்காவில் மிகக் கடுமையாகப்[3] பின்பற்றப்பட்டது. எனினும், பின்னர் எழுந்த வழக்கு களில் எல்லாம்[4] மேற்படி தத்துவத்தின் எல்லை குறுக்கப்பட்டது; வரம்பிடப்பட்டது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில், வரிவிதிப்பதில் பரஸ்பர விலக்குரிமை அளிக்கும் மேற்படி தத்துவம், மிகவும் வரம்பிற்குட் பட்ட பொருளிலேயே பயன்படுத்தப்பட்டது. இந்திய அரசிய லமைப்பின் **285** மற்றும் **289-வது ஷரத்துகளில்** வரிவிதிப்பதில் மேற்படி பரஸ்பர விலக்குரிமை தத்துவம் பொதிந்துள்ளது.

ஷரத்து 285-ஆனது, மத்திய அரசுச் சொத்தின் மீது மாநில அரசு வரி விதிப்பதை வரம்பிற்குட்படுத்துகிறது. அதாவது கட்டுப்பாடுகளை விதிக்கிறது என்று சொல்லலாம். **ஷரத்து 285 (1)-ன்படி,** பாராளுமன்றம் வேறுவிதமாக வகை செய்யாத பொழுது, மாநில அரசு விதிக்கும் அனைத்து வரிகளிலிருந்தும், மத்திய அரசு

1. 4 Wheaton 316 (1819)
2. Collector v. Day, 11 Wall 173 (1890)
3. Indian Motor Cycle Co. v. U.S. 283 U.S. 570 (1931)
4. Melbering v. Gerhardt, 304 U.S. 405 (1938): Newyork v. U.S. 326, U.S. 572 (1946)

சொத்துகள் விலக்குரிமை பெற்றனவாகும். இந்த விலக்குரிமை, மத்திய அரசின் சொத்துக்களுக்கு மட்டும் பொருந்தக் கூடியதே தவிர, தனியார் அமைப்புகளின் சொத்துகளுக்கு பொருந்தாது.

மேலும் **ஷரத்து 289-ஆனது,** மத்திய அரசின் வரி விதிப்பதிலிருந்து மாநில அரசுகளின் சொத்துக்கள் மற்றும் வருமானத்திற்கு விலக்குரிமை அளிக்கிறது. இது மத்திய அரசின் நேரடி வரிகளுக்கு (direct taxes) மட்டுமே பொருந்தும்; சுங்கத் தீர்வை, ஆயத் தீர்வை போன்ற மறைமுக வரிகளுக்குப் பொருந்தாது. எனினும் மாநில அரசாலோ அல்லது அதன் சார்பாகவோ செய்யப்படும் எந்த வணிகத்தின் அல்லது வியாபாரத்தின் மீதும் பாராளுமன்றம் வரி விதிக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மாநில அரசு, ஒரு தனியார் அமைப்பைப் போல போக்குவரத்து கழகங்களை நடத்தினால், அதன் மீது வரிவிதிக்க மத்திய அரசிற்கு அதிகாரமுண்டு. இங்கு விலக்குரிமை கிடையாது. அதுபோல் **ஷரத்து 289 (3)-ன்படி,** மத்திய அரசின் வரி விதிப்பிலிருந்து, மாநில அரசின் எந்த வியாபார பிரிவையும் விலக்கி வைக்க பாராளுமன்றம் சட்டமொன்றை இயற்ற தடையேதுமில்லை.

6. The Consolidated fund of India - Write short notes. (இந்தியாவின் திரட்டு நிதி - குறுகிய விடை தருக.)

இது குறித்து **ஷரத்து 266** கூறுகிறது. [விரிவாக பகுதி அ-வில் 'சட்டத்துறை அதிகாரத்தின் அமைப்பு' (Organisation of Legislative Power) என்ற தலைப்பில் உள்ள 2வது அத்தியாயத்தில் பக்கம் எண். 59-ல் உள்ள வினா எண் (8)-ல் பார்க்க.]

7. The Contingency Fund of India - Write short notes. (இந்தியாவின் நிகழ்வுசார் நிதி - குறுகிய விடை தருக.)

இந்தியாவில், இந்திய திரட்டு நிதியைத் தவிர, 'இந்திய நிகழ்வுசார் நிதி' என்றொரு நிதியும் உண்டு. **ஷரத்து 267-ன்படி,** இந்தியப் பாராளுமன்றம் நிர்ணயிக்கின்ற அளவு பணம் அவ்வப்போது இந்நிதியில் போடப்பட்டு சேர்த்து வைக்கப்படுகிறது. இந்நிதியானது குடியரசுத் தலைவர் பொறுப்பில் வைக்கப் படுகின்றது. இந்நிதியிலிருந்து எதிர்பாராத செலவினங்களுக்கு முன்பணம் கொடுக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. பொதுவாக செலவுகளுக்காக முன்பணம் கொடுக்க பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை **ஷரத்துகள் 115 அல்லது 116-ன்படி,**

குடியரசுத் தலைவர் பெற வேண்டும். ஆனால் எதிர்பாராத செலவுகளை சமாளிக்க, அவ்வாறு அங்கீகாரம் அளிக்கும் நடைமுறை நிலுவையில் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் குடியரசுத் தலைவர் முன்பணம் வழங்கலாம். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடந்து விட்டதைச் சார்ந்து, அதனை ஈடு கட்ட, இந்நிதியிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்வதால், இதற்கு 'நிகழ்வுசார் நிதி' என்று பெயர் வழங்கலாயிற்று.

(iv) நிதிக் குழுவின் பங்கு

(ஷரத்துகள் 280 மற்றும் 281)

(Role of Finance Commission)

(Articles 280 and 281)

8. Finance Commission - Write short notes. (நிதிக்குழு - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்புச் சட்டத்தின் **280வது ஷரத்தும், 281வது ஷரத்தும்,** நிதிக்குழுவின் அமைப்பு குறித்தும் அதன் பணிகள் குறித்தும் கூறுகின்றன.

அரசியலமைப்பு தோன்றிய இரண்டு ஆண்டிற்குள் இந்தியாவின் குடியரசுத் தலைவர் நிதிக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகின்றது. அய்ந்தாண்டிற்கு ஒருமுறை நிதிக்குழு அமைக்கப்பட வேண்டும்.

நிதிக்குழுவிற்கு **ஒரு தலைவரும் (Chairman)** மற்றும் **நான்கு உறுப்பினர்களும் (Members)** இருப்பார்கள். இவர்கள் குடியரசுத் தலைவரால் பதவியில் அமர்த்தப்படுவார்கள். நிதிக் குழுவில் அமர்த்தப்படும் உறுப்பினர்களின் தகுதிகள் என்னவென்றும் எப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், பாராளுமன்றம் கூறுகிறது. இதன் பணிகள் பின்வருமாறு.

1. இது மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே நிதி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்கின்றது.

2. இந்தியாவின் திரட்டு நிதியில் இருந்து மாநிலங்களுக்கு மானிய உதவிகளை அளிப்பது குறித்த கொள்கைகளை, இக்குழு பரிந்துரைக்கும்.

3. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாநிலத்தில் உள்ள ஊராட்சிகளின் நிதி வளங்களை மேம்படுத்த மாநில திரட்டு நிதியை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

4. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாநிலத்தில் உள்ள நகராட்சிகளின் நிதி வளங்களை மேம்படுத்த மாநில திரட்டு நிதியை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

5. நிதி குறித்த வேறு விடயங்கள் தொடர்பாக குடியரசுத் தலைவர் ஏதேனும் ஆலோசனை கேட்டால் நிதிக்குழு அவருக்கு அறிவுரை வழங்கும்.

நிதிக்குழுவின் பரிந்துரை ஒவ்வொன்றும் அதன் விளக்க வுரையுடன் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவை முன்பும் குடியரசுத் தலைவர் முன் வைக்க வேண்டும் என்று **ஷரத்து 281** கூறுகிறது. இதுவரை 11 நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பரிந்துரைகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

சட்டமியற்றுதல் மற்றும் நிருவாக அதிகாரங்களின் பகிர்ந்தளிப்பு போலவே நிதியை பகிர்ந்தளிக்கும் திட்டமும் உள்ளது. ஆனால் இது மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதை தெள்ளத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. மத்திய அரசின் நிதி வளங்கள் அளப்பறியது மற்றும் பரந்தது. ஆனால் மாநிலங்களின் நிதி வளமோ மிகவும் குறைந்ததாகும். அதே நேரத்தில் ஒரு மாநிலம் சந்திக்க வேண்டிய செலவினங்களும் பொறுப்புகளும் அதிகம். மாநிலம் தனது நலத்திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும். எனவே மாநிலங்கள் தங்கள் நிதிக்கு மத்திய அரசைச் சார்ந்தேயுள்ளது. இந்த நிதியானது நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் மானிய உதவித் தொகையாக மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கிறது. நிதி விவகாரங்களின் மீது மத்திய அரசு கொண்டுள்ள கட்டுப்பாடானது, இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டுள்ள கூட்டாட்சிக் கொள்கைகளை மீறுவதாகத் தோன்றும். ஆனால் இதை இந்திய அரசியலமைப்பிற்கு அடித்தளமாக விளங்கும் இந்திய நாட்டின் ஒற்றுமையை திரட்டுதல் மற்றும் வலுப்படுத்தல் என்ற வரலாற்றுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு புரிந்து கொள்ள வேண்டும். எனவே இங்கு பொருளாதார ஒற்றுமையை பராமரித்து, நாட்டின் நலவாழ்வை பேணி வளர்க்க வேண்டிய இறுதிப் பொறுப்பு மத்திய அரசுக்கே உரியதாகும். அந்த வகையில் மாநிலங்களுக்கு வாழ்வளிக்கும் நிதிக்குழுவின் பங்கு மகத்தானது

(V) கடன் வாங்கும் அதிகாரமும் அரசியலமைப்பு வரம்புகளும்
(ஷரத்துகள் 292 மற்றும் 293)
(Borrowing Powers and Constitutional Limitation)
(Articles 292 and 293)

9. Borrowing Powers - Write short notes. (மத்திய அரசின் கடன் வாங்கும் அதிகாரம் - குறுகிய விடை தருக.)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 292**-ஆனது இந்திய திரட்டு நிதியை பிணையாக வைத்து கடன் வாங்க மத்திய அரசுக்கு வரம்பில்லா அதிகாரத்தை வழங்கியுள்ளது. மத்திய அரசு உள்நாட்டிலோ, வெளி நாட்டிலோ கடன் வாங்கலாம். பாராளு மன்றம் அவ்வப்போது நிர்ணயம் செய்யும் அத்தகு வரம்பிற்குள் மத்திய அரசு கடன் வாங்கலாம். மேலும் அந்த வரம்பிற்குள் கடன் எதற்கும் உத்தரவாதமும் கொடுக்கலாம்.

மத்திய அரசு கடன் வாங்க எவ்வாறு அதிகாரம் பெற்றுள்ளதோ அவ்வாறே ஒரு மாநில அரசும் கடன் வாங்கலாம். இதற்கு ஷரத்து 293 அதிகாரமளிக்கிறது. ஒரு மாநிலமானது அதன் சட்டமன்றம் நிர்ணயிக்கும் வரம்பிற்குட்பட்டு கடன் வாங்கலாம். ஒரு மாநிலம் தனது மாநில திரட்டு நிதியை பிணையமாக வைத்து இந்திய எல்லைக்குள் பணம் கடன் பெறலாம். எனினும் ஒரு கடன் வாங்க ஒரு மாநிலத்திற்குள்ள அதிகாரத்தின் மீது பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. அதாவது ஒரு மாநிலம் இந்தியாவிற்கு வெளியிலிருந்து கடன் வாங்க முடியாது என்று **ஷரத்து 293** கூறுகிறது. சட்டமன்றமும் வேறு சில வரம்புகளையும் விதிக்கலாம். பாராளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்தின் கீழ் ஒரு மாநிலத்திற்கு தேவையான பணத்தை மத்திய அரசு கடனாகக் கொடுக்கலாம். அப்படிப்பட்ட ஒரு கடன் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்தால் மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் ஒரு மாநில அரசு வேறு புதுக்கடன் எதையும் பெற இயலாது **[ஷரத்து 293(4)]**.

10. Discuss the financial relations between the union and the state. Critically assess the role of Finance Commission in this connection. (மத்திய, மாநிலங்களுக்கிடையே உள்ள நிதி உறவு முறையை விளக்குக. இதன் தொடர்பாக நிதிக்குழுவின் பணியை கூர்ந்து

மதிப்பிடுக.)

(வினா எண். 1 மற்றும் வினா எண். 2-ல்
கண்டவற்றை வாசித்தறிக.)

-o0o-

அத்தியாயம் 5

வியாபாரம் மற்றும் வணிகத்திற்கான சுதந்திரம் (Freedom of Trade and Commerce)

வியாபாரம், வணிகம் மற்றும் வணிகப் போக்குவரத்து சுதந்திரம்

(ஷரத்துகள் 301 முதல் 307)

Freedom of Trade, Commerce and Intercourse

(Articles 301 to 307)

கூட்டாட்சி கருத்தின் சுட்டுகைகள் மற்றும் கட்டுப்பாடுகள் (Implications of the Concept of Federation and Restrictions)

"Trade, Commerce and intercourse throughout the territory of India shall be free" - Discuss. ("இந்திய எல்லை முழுவதிலும் வணிகம், வியாபாரம் மற்றும் வணிகப் போக்குவரத்து சுதந்திரமாக இருக்க வேண்டும்" - வாதிக்கவும்.)

(அல்லது)

"Subject to the other provisions of this part, that trade, commerce and intercouse throughout the territory of India shall be free" - Discuss. ("இந்த பகுதியின் மற்ற சட்ட வகைமுறைகளுக்கு

உட்பட்டு வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரவு இந்திய எல்லை முழுவதும் தடையின்றி இருக்கும்" - விவாதிக்க.)

(அல்லது)

"Trade, Commerce and intercourse shall be free throughout the territory of India" - Comment the scope of this freedom. ("தொழில், வாணிகம் மற்றும் வாணிகப் போக்குவரத்து தொடர்பு ஆகியவை இந்தியப் பரப்பளவு முழுவதும் கட்டுப்பாடற்று இருக்கும்" - இச்சுதந்திரத்தின் அளாவுகையை குறிப்பிட்டு விமர்சிக்க.)

(அல்லது)

"Trade and Commerce shall be free throughout India" - Explain how the Indian Constitution seeks to achieve this object. ("இந்தியா முழுவதும் வாணிகம் மற்றும் தொழில் நடத்துவதில் தடையற்ற நிலை நிலவ வேண்டும்" இந்திய அரசமைப்பு சட்டம் எவ்வாறு இந்த இலக்கினை அடைய விழைகிறது என்பதை விவரிக்கவும்.)

(அல்லது)

Trade, Commerce and intercourse throughout the territory of India shall be free - Elucidate. (இந்திய நிலப்பரப்பு முழுமைக்கும் வர்த்தகம், வாணிபம் மற்றும் வாணிபத் தொடர்பு தங்கு தடையின்றி இருக்க வேண்டும். விளக்கவுரை தருக.)

(அல்லது)

"Trade, Commerce and intercourse throughout the territory of India shall be free" - Comment. (இந்திய எல்லைக்குள் வணிகம், வர்த்தகம் இடையே கூட்டுறவு சுதந்திரமானதாக இருக்க வேண்டும். கூர்ந்தாய்க.)

(அல்லது)

Parliament's power to regulate trade and commerce - Write short notes. (தொழில் மற்றும் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் நாடாளுமன்ற அதிகாரம் - குறுகிய விடை தருக.)

வியாபாரம், வணிகம் மற்றும் வணிகப் போக்குவரத்தில் கூட்டாட்சி:

எல்லா கூட்டாட்சியிலும் பொருளாதார செயல்பாட்டிற்கு

வட்டார அளவில் உள்ள தடைகளை நீக்கியும், அவ்வாறு தடை ஏற்படுத்துவதை தடுத்தும் குறிப்பாக மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் மற்றும் வணிகம் மற்றும் அதன் போக்கு வரத்தின் மீதுள்ள தடைகளை நீக்கியும் ஒரு தேசிய பொருளாதார பின்னலமைப்பை உருவாக்கவும், பேணிக்காக்கவும் அரசியலமைப்பு வகைமுறைகளின் மூலம் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதன் வாயிலாக நாட்டை ஒரேயொரு பொருளாதார ஒருமமாக ஆக்கி, அதன் மூலம் பல்வேறு மாநில ஒருமங்களின் பொருளாதார வளங்கள் நாட்டின் பொது நன்மைக்கு பயன்படுத்தப்படும் வண்ணம் செய்யப்படுகிறது.

இந்திய அரசியலமைப்பினை உருவாக்கியவர்கள், நமது நாட்டில் பொருளாதார ஒற்றுமையை பேணிக் காக்க வேண்டும் என்பதை நன்றாக அறிந்திருந்தார்கள். இந்திய எல்லை முழுவதும் வாணிபச் சரக்குகள் தங்குதடையின்றி சென்றால்தான் நாடு முன்னேற்றம் காணும். அதுதான் நாட்டின் பொருளாதார ஒற்றுமைக்கும் அடித்தளமாக விளங்கும். இந்திய ஒருமைப்பாட்டுக் கும், அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கும் முன்னர் நமது நாட்டில் பல தனி மாநிலங்கள் இருந்தன. அவை தங்களுக்கிருந்த தனியாட்சியைக் கொண்டு பல்வேறு வணிகத் தடைகளை வகுத்திருந்தன. இதனால் வணிகம் சுதந்திரமாக நடக்காமல் தடுமாறியது. எனவேதான் மாநிலங்களுக்கிடையிலான எல்லைத் தடைகளை நீக்கி, இந்திய எல்லை முழுவதும் வியாபாரம், வணிகம் மற்றும் வணிகப் போக்குவரத்தை சுதந்திரமாக்கவும், இந்தியாவை ஒரு பொருளாதார ஒருமைக்குள் கொண்டு வரவும், இன்று நாம் தடைகளற்ற வணிகத்தை அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 301**-ன் வாயிலாகப் பெற்றுள்ளோம் என்று சொன்னால் அதில் சற்றும் மிகையில்லை.

ஷரத்து 301 என்ன கூறுகிறது?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **301வது ஷரத்து,** "இப்பகுதியின் மற்ற சட்ட வகைமுறைகளுக்குட்பட்டு இந்திய ஆட்சிஎல்லை முழுவதும், வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரவு தடையின்றி இருத்தல் வேண்டும்" என்று விளம்புகிறது.

வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரவு (Trade, Commerce and Intercouse):

இப்பதங்களின் பொருள், சட்டப்படியாக நடக்கும்

வியாபார நடவடிக்கைகளை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. **State of Bombay v. R.M.D.C.**[1] வழக்கிலும், அதற்குப்பின் தொடர்ந்த **R.M.D.C. v. Union of India**[2] என்ற வழக்கிலும், சூதாட்டம் (gambling) என்பது ஷரத்து 301-ன் படியோ அல்லது **ஷரத்து 19 (1) (g)**-ன்படியோ வியாபாரம் என்ற பொருளின் கீழ் வருவதில்லை என உச்ச நீதிமன்றம் தெளிவாக விளக்கியது. இது போன்ற சந்தர்ப்பங்களில், அதாவது அந்த வியாபார நடவடிக்கையானது சட்டப்படியானதாக இல்லையென்றால், அதன்மீது விதிக்கப்பட்ட தடையானது நியாயமானதா, இல்லையா என்று கவனிக்க வேண்டிய அவசியமில்லை.

இந்திய ஆட்சி எல்லை முழுவதும் (Throughout the territory of India):

மேற்படி ஷரத்தில் கூறப்பட்டுள்ள '**இந்திய ஆட்சி எல்லை முழுவதும்**' என்ற வாக்கியம் வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரத்துத் தொடர்பானது, மாநிலங்களுக்கு இடையேயும் (Inter-State) மற்றும் மாநிலத்திற்கு உள்ளேயும் (Intra-State) நடைபெறும் என்பதை தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஆகவே, ஒரு மாநிலத்தின் ஆட்சி எல்லையிலோ அல்லது அதற்கு வெளியிலோ ஒரு வியாபாரத்திற்கு தடை விதிக்கப்பட்டால், அங்கு ஷரத்து 301 மீறப்பட்டதாக கருதப்படும். ஷரத்து 301ன் வாயிலாக அளிக்கப்பட்டுள்ள இச்சுதந்திரம், 302 முதல் 305 வரை உள்ள ஷரத்துகளில் கூறப்பட்டவற்றைத் தவிர, எல்லாத் தடைகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தடையற்றது (Free):

ஷரத்து 301-ல் கூறப்பட்டுள்ள 'தடையற்றது' எனும் பதம், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளிலிருந்து தடை இல்லாதது என்ற பொருளைத் தரவில்லை. மேலும் அது முழுமையான தடையற்றதும் (not an absolute freedom) அல்ல. ஷரத்து 301-ன் தொடக்கநிலை வாசகங்கள், '**இப்பகுதியின் மற்ற சட்ட வகைமுறைகளுக்குட்பட்டு (Subject to other provisions of this part)** என்றவாறு ஆரம்பிக்கிறது. இதன் பொருள் என்னவென்றால், 302 முதல் 305 வரை உள்ள ஷரத்துகளால் விதிக்கப்பட்டுள்ள தடைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு ஷரத்து 301 உட்பட்டதாகும், என்ப

1. AIR 1957 SC 699
2. AIR 1957 SC 628, 631

தாகும். இந்தத் தடைகளை தாங்கிக் கொண்டுதான் வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரவு இந்திய எல்லை முழுவதும் தடையற்றதாக செயல்படுகிறது.

'தடையற்றது' எனும் பதத்தின் பரவெல்லை (scope), பின்வரும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளை படிப்பதன் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

Atiabari Tea Company v. State of Assam[1] - *1954-ஆம் ஆண்டின், சாலை மற்றும் உள்நாட்டு நீர்வழிகளின் வாயிலாக கொண்டு செல்லப்படும் பொருட்களின் மீதான அஸ்ஸாம் வரி விதிப்புச் சட்டம்,* (Assam Taxation on goods carried by Road or Inland waterways Act of 1954) *ஷரத்து 301ஐ மீறுவதாக உள்ளது எனக் கூறப்பட்டு, அதன் செல்லுதன்மை* (validity) *குறித்து இவ்வழக்கில் வினா எழுப்பப்பட்டது.*

தேயிலை வளர்ப்பு வியாபார நிறுவனம் ஒன்று, தன்னுடைய தேயிலையை அஸ்ஸாம் வழியாக கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்தது. அத்தேயிலை, அஸ்ஸாம் மாநிலத்தை கடந்து செல்லும் பொழுது, மேற்படி சட்டத்தின்படி அதன் மீது வரி விதிக்கப்பட்டது. இவ்வாறு விதிக்கப்பட்ட வரி ஷரத்து 301ஆல் வழங்கப்பட்டுள்ள வியாபாரம் செய்யும் சுதந்திரத்தினை நேரடியாக (directly) *பாதிப்பதாக உள்ளது, எனக் கூறப்பட்டது.*

உச்ச நீதிமன்றம் "பொருட்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதோ அல்லது பொருட்களின் போக்குவரத்தோ வரி விதிப்பின் மூலமாக தாமதப்படுத்தப்பட்டால் (Impeded) *அல்லது தடுக்கப்பட்டால்* (obstructed) *அல்லது இடையூறு செய்யப்பட்டால்* (hampered) *ஷரத்து 301 வாயிலாக அளிக்கப்பட்டுள்ள சுதந்திரம், ஒரு மாயையாகி* (Illusory) *விடும் என்று கூறியது. மேலும் விதிக்கப்பட்ட வரியானது அதிகமானதா அல்லது குறைவானதா என்று வரி விதிப்பு சுமையின் அளவை* (quantum of tax burden) *நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் வெறுமனே பொருள் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு வரி விதிக்கப்பட்டதை மட்டுமே கருத்தில் கொண்டு மேற்படி சட்டம் ஷரத்து 301ஐ மீறுவதாக உள்ளது", எனத் தீர்ப்பளித்தது. நேரடியாகவும் உட்னடியாகவும் வியாபார சுதந்திரத்*

1. AIR 1961 SC 252

தினை தடை செய்யுமாறு விதிக்கப்பட்ட வரிகளானது, ஷரத்து 301-ஐ மீறுவதாகும்.

Automobile Transport v. State of Rajasthan[1] - மாநிலத்திற் குள் பொது இடங்களில் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப் படுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வாகனங்களின் மீது இராஜஸ்தான் மாநிலம், வரி விதித்தது. (வருடமொன்றுக்கு மோட்டார் காருக்கு ரூ.60ம் பார உந்துகளுக்கு ரூ2000மும் வரியாக விதிக்கப்பட்டது). இவ்வரியின் செல்லுதன்மை குறித்து வினா எழுப்பப்பட்டது. ஆனால் இது ஷரத்து 301-ஐ பாதிப்பதாக இல்லை என்று, உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனென்றால் இவ்வாறு விதிக்கப்பட்ட வரி இழப்பீட்டு வரியாகும் (Compensatory tax). சாலைகள் அரசால் பராமரிக்கப்படு கிறது. அதன்மீது வாகனங்கள் செல்கின்றன. அதாவது அதனை நாம் பயன் படுத்திக் கொள்கிறோம். இவ்வாறு பயன்படுத்திக் கொள்வதற்கு இழப்பீடாகத்தான், இவ்வரி வசூலிக்கப்படுகிறது. இந்த வரிப்பணம் சாலைகளை நல்ல முறையில் செப்பனிடுவதற்கும், மேலும் நல்ல சாலை வசதிகளை வியாபாரப் பெருமக்களுக்கு ஏற்படுத்தித் தரவும் அரசால் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே இம்மாதிரியான இழப் பீட்டு வரிகள் வியாபார சுதந்திரத்தின் மீது எவ்வித தடைகளையும் விதிப்பது இல்லை. மாறாக வியாபார போக்குவரவினை எளிதாக்கு கிறது, என உச்ச நீதிமன்றம் கூறியது.

G.K. Krishnan v. State of Tamil Nadu[2] - "ஒரு இழப்பீட்டு வரியானது, வியாபாரம் மற்றும் வணிகப் போக்குவரத்தின் மீதான தடை ஆகாது", என நீதிமன்றம் இவ்வழக்கில் கூறியது. ஆனால், அவ்வரியானது, அரசுக்கு அளிக்கப்படும் சரியான இழப்பீட்டுத் தொகைக்கு மேல் செல்லக் கூடாது. (தேவைக்கு மேல் இழப்பீட்டுத் தொகை வசூலிக்கப்படக்கூடாது.) அதாவது, சாலைகளை பராமரிப் பதற்கு உண்டான ஒரு சரியான பங்கினைப் பெறும் நோக்கத்துடன் ஒரு வரி விதிக்கப்பட்டு, அது, வியாபாரம் மற்றும் வணிகத்தினை எதிரிடையாக பாதிக்கும் வண்ணம் அமைந்தால், அது வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரவின் மீதான தடையாகும்.

இவ்வழக்கில், வரி வசூலிப்பானது ரூ. 16 கோடிக்கு மேல் தாண்டியது. ஆனால் செலவு ரூ. 19.51 கோடிக்கு வந்தது. இத்தொகை

1. AIR 1962 SC 1406
2. AIR 1975 SC 583

உள்ளூர் அரசுகளுக்கு (local Governments) அவர்களது நீதி வரம்பினுள் வரும் சாலைகளை செப்பனிடவும், பராமரிக்கவும் உண்டான அளிப்புகளை (grants) உள்ளடக்கியிருக்கவில்லை. ஆகவே விதிக்கப்பட்ட வரியானது இழப்பீட்டு வரியாகும். அதனால் செல்லத்தக்கதும் ஆகும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (இங்கு அதிக இழப்பீடு வசூலிக்கப்படவில்லை.)

State of Bihar v. Harihar Prasad Debuka[1] - இவ்வழக்கின் சங்கதிகள்படி ஒரு வாகனத்தில் அல்லது கப்பலில் பீகார் மாநிலம் வழியாக சரக்குகளை கொண்டு செல்வோர் உரிய படிவங்களில் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்று பீகார் மாநில அரசு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இது ஷரத்துகள் 301 மற்றும் 304 அளித்துள்ள சுதந்திரத்தைப் பறிப்பதாக உள்ளது என்று பாதிக்கப் பட்ட ஒருவர் அவ்வறிக்கையை எதிர்த்து வழக்கிட்டார். இங்கு அவர் 165 மூட்டைகள் கடுகை இராஜஸ்தான் மாநிலத்திலிருந்து பீகாரில் உள்ள ஜாம்ஷெட்பூருக்கு ஒரு சரக்குந்து மூலம் கொண்டு சென்றார். இந்நிலைப்பாட்டை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் மேற்படி அறிவிக்கை ஒரு ஒழுங்கு நடவடிக்கையே தவிர, அது மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் அல்லது வணிகத்தை எந்த வகையிலும் தடை செய்யவில்லை அல்லது கட்டுப்படுத்தவில்லை என்று கூறியது. எனவே அது மேற்படி ஷரத்துகள் 301 மற்றும் 304ஐ மீறவில்லை; அது சரக்குகளின் போக்குவரத்தை தடை செய்யவில்லை; எனவே அந்த அறிவிக்கை அரசியலமைப்பிற்கு உட்பட்டதேயாகும் என்றது. மேலும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் போது அவ்வாறு உரிய அனுமதிப் படிவங்களையும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிபந்தனை ஏன் விதிக்கப்பட்டுள்ளது என்பதற்கு, விற்பனை வரி ஏய்ப்பு மற்றும் அதை மதிப்பிட வகை செய்வதற்காகத்தான் என்றும் உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது.

M/s. B.R.Enterprises v. State of U.P. [2] - என்ற இந்த மற்றொரு வழக்கில் மனுதாரர் பாராளுமன்றம் 1998ல் இயற்றிய பரிசுக்குலுக்கல் சீட்டுகள் (ஒழுங்குமுறை) சட்டத்தை [Lotteries (Regulation) Act, 1998] எதிர்த்து வழக்கிட்டார். மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின்படி வெளி மாநில பரிசுக் குலுக்கல் சீட்டுகளை தடை செய்து உத்தரபிரதேச அரசு ஆணை ஒன்றை நிறைவேற்றியது. இந்த ஆணை அரசிய

1. (1989) 2 SCC 192
2. AIR 1999 SC 1867

லமைப்பின் ஷரத்துகள் 301, 302 மற்றும் 303ஐ மீறுவதாக உள்ளது என்றும், எனவே அரசியலமைப்பற்றது என்றும் மனுதாரர் வாதிட்டார். ஆனால் உச்ச நீதிமன்றம் இவ்வாதத்தை நிராகரித்து பின்வருமாறு கூறியது. அதாவது, பரிசுக் குலுக்கல் சீட்டுகள் என்பது அதிர்ஷ்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் என்றும், எனவே அது ஷரத்து 301ல் வகை செய்யப்பட்டுள்ள '**வியாபாரம் அல்லது வணிகம்**' (trade or commerce) என்ற வரையறைக்குள் வராது என்றும், அதிர்ஷ்டத்தை அடிப்படையாகக் கொண்டது சூதாட்டமாகும் என்றும், அப்படிப்பட்ட பரிசுக் குலுக்கல் சீட்டுகளை ஒரு மாநில அரசே நடத்தினாலும், அதை வியாபாரம் அல்லது வணிகம் என்று பொருள் கொள்ள முடியாது, அப்படியே பொருள் கொண்டாலும், அதை ஷரத்து 301ல் கூறப்பட்டுள்ள வியாபாரம் அல்லது வணிகம் என்பதற்கு இணையாகக் கொள்ள முடியாது என்றும், அது அப்படிப்பட்ட ஒரு தகுநிலையை (status) பெறாது என்றும், எனவே அச்சட்டம் ஷரத்து 301 மற்றும் 302ஐ எந்த வகையிலும் மீறவில்லை என்றும், அது செல்லத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் நிலை நிறுத்தியது.

வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரத்து சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் (Restrictions):

பாராளுமன்றம், பொது நலனிற்கு தேவைப்படலாம் எனும் பொழுது, ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத் திற்கும் இடையில் அல்லது இந்திய எல்லைக்குள் எப்பகுதியிலும் நடைபெறும் வியாபாரம், வணிகம் அல்லது வியாபார போக்குவரவு மீதான சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகளை ஒரு சட்டத்தின் மூலம் விதிக்க அதிகாரம் படைத்தது **(Parliament's power to regulate trade and commerce in the public interest)**, என **ஷரத்து 302** கூறுகிறது.

ஏழாவது அட்டவணையில் (Seventh Schedule) கொடுக்கப் பட்டுள்ள எந்த பட்டியல்களிலாவது (list) உள்ள வியாபாரம் மற்றும் வணிகம் சார்ந்த நுழைவின் (entry) மூலமாக பாராளுமன்றத் திற்கு, ஒரு மாநிலத்திற்கு மட்டும் முதன்மை (preference) கொடுத்து எந்தச் சட்டத்தையும் இயற்ற அதிகாரம் இல்லை. ஆனால், ஒரு சட்டமானது, இந்திய எல்லைக்குள், எப்பகுதியிலாவது பற்றாக் குறை ஏற்பட்டு அதனை சமாளிக்க மாநிலங்களிடையே பாகுபாடு செய்வது அவசியம் என அறிவித்தால், பாராளுமன்றம் மாநிலங் களிடையே பாகுபாடு செய்யலாம், என்று **ஷரத்து 303** பகருகிறது.

ஷரத்து 304 (a)-ன் படி, ஒரு மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருளிற்கும், அம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருளிற்கும் இடையே பாகுபாடு காட்டக்கூடாது என்பதற்காக, அம்மாநிலத்தில் உற்பத்தியாகும் ஒரு வகை பொருட்கள் மீது ஒரு வகை வரி விதிக்கப்பட்டிருக்கையில், அதே வகை பொருள் மற்றொரு மாநிலத்தில் இருந்து அம்மாநிலத்தில் இறக்குமதி செய்யப்படும்பொழுது அதே வகை வரியை அப்பொருளின் மீதும், அந்த மாநில அரசு விதிக்க அதிகாரம் படைத்தது **(State's power to regulate trade and commerce)**.

குடியரசுத் தலைவரின் முன் அனுமதியுடன், ஒரு மாநில அரசு பொது நலனிற்கு தேவைப்படலாம் எனும் பொழுது, வியாபாரம், வணிகம் மற்றும் வியாபார போக்குவரவு மீது நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம், என்று **ஷரத்து 304 (b)** கூறுகிறது.

அரசு முற்றுரிமையாக நடத்தும் வணிகம் தொடர்பாக ஏற்கனவே அமலில் இருக்கும் சட்டங்கள் மற்றும் அதற்கு வகை செய்யும் சட்டங்கள் இச்சுதந்திரத்திலிருந்து விலக்கப்பட்டதாகும். அதாவது அவை குடியரசுத் தலைவரின் ஆணையால் வேறு வகையாக ஏவுரைக்கப்படும் வரை, அப்படியே பின்பற்றப்படுதல் வேண்டும் என்று **ஷரத்து 305** கூறுகிறது **(Saving of Existing Laws)**.

-oOo-

அத்தியாயம் 6

கூட்டாட்சித்துவம் மற்றும் நெருக்கடி நிலைகள்
(Federalism and Emergency Situations)

நெருக்கடி கால சட்ட வகைமுறைகள்
(ஷரத்துகள் 352 முதல் 360)
Emergency Provisions
(Articles 352 to 360)

நெருக்கடி நிலையின் வகைகள் மற்றும் அவை கூட்டாட்சி கட்டமைப்பின் மீது ஏற்படுத்தும் விளைவுகள்
(Types of Emergency and their impact on the Federal Structure)

1. Explain the types of emergency and state their impact on the federal structure of our country. (நெருக்கடி நிலையின் வகைகளை விளக்கி, அவை நமது நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பின் மீது ஏற்படுத்தும் விளைவை குறிப்பிடுக.)

(அல்லது)

What are the circumstances in which emergency can be declared under the Constitution of India? (இந்திய அரசியலமைப்பின் கீழ் நெருக்கடி நிலைமை அறிவிக்கப்படும் சூழ்நிலைகள் யாவை?)

(அல்லது)

Critically explain the emergency provisions of the Constitution. (அரசமைப்பு அவசரநிலை சட்ட வகைமுறைகளை விமர்சிக்கவும்.)

(அல்லது)

Give a brief outline of various kinds of emergencies contemplated under the Constitution of India and their impact on fundamental rights guaranteed in Part III of the Constitution of India. (இந்திய அரசமைப்பில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வகை அவசர கால நிலைகளையும், அரசமைப்பு சட்டத்தில் முன்றாம் பகுதியில் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீது அவைகளுடைய செயல் விளைவுகளையும் சுருக்கமாக கோடிட்டுக் காட்டுக.)

(அல்லது)

Give a brief outline of the various kinds of emergencies contemplated under the constitution and the impact of each one of them on fundamental rights. (அரசமைப்புச் சட்டத்தில் கருத்திற் கொள்ளப் பட்டுள்ள நெருக்கடி நிலைகளின் பல்வேறு வகைகளையும், அடிப்படை உரிமைகள் மீது அவை ஒவ்வொன்றும் ஏற்படுத்தும் தாக்கத்தையும் பற்றி சுருக்கமான விளக்கவுரை தருக.)

(அல்லது)

What are the consequences arising out of a proclamation of emergency under Article 352 and 356 and point out whether it is possible to suspend the State legislature instead of dissolving it under Article 356? (உறுப்பு 352 மற்றும் 356-ன் கீழ் செய்யப்படும் அவசர கால பிரகடனத்தால் வரும் விளைவுகள் யாவை? உறுப்பு 356-ன் கீழ் மாநில சட்டசபையை கலைத்துவிடாமல் அதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க இயலுமா?)

(அல்லது)

What are the consequences of the proclamation of emergency? (நெருக்கடிநிலை பிரகடனத்தால் ஏற்படும் விளைவுகள் யாவை?)

(அல்லது)

In the light of decided cases and Constitutional amendments, discuss the nature and scope of emergency provisions of the Constitution. (அவசரகால பிரகடனம் குறித்த அரசமைப்பு பிரிவுகளின் இயல்பு மற்றும் அளாவுகை தொடர்பை தீர்ப்புகள் மற்றும் அரசமைப்புத் திருத்தங்கள் துணையோடு விளக்குக.[1])

நெருக்கடி நிலைமையின் வகைகள்:

இந்திய அரசியலமைப்பு 3 வகையான நெருக்கடி நிலைமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 1. தேசிய நெருக்கடி நிலைமை (National Emergency); 2. மாநில நெருக்கடி நிலைமை (State Emergency); 3. நிதி நெருக்கடி நிலைமை (Financial Emergency).

1. தேசிய நெருக்கடி நிலைமை (National Emergency):

இந்தியாவின் பாதுகாப்பு வெளித்தாக்குதலாலோ (External agression) ஆயுதக் கலகங்களாலோ (armed rebellion) அல்லது போரினாலோ (war) அச்சுறுத்தப்படுகிறது என குடியரசுத் தலைவர் **திருப்தியுற்றால்,** அவர் இந்தியா முழுமைக்குமோ அல்லது இந்திய நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம் (Proclamation) என **ஷரத்து 352 (1)** கூறுகிறது. நெருக்கடி நிலைமை அறிவிப்பினை, அதைத் தொடர்ந்த ஒரு அறிவிப்பின் வாயிலாக மாற்றவோ அல்லது இரத்தோ செய்யலாம்.

தேசிய நெருக்கடி நிலைமை பிரகடனத்திற்குண்டான நடைமுறை:

ஷரத்து 352 (3)-ன்படி, குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம் என்று அமைச்சரவை தனது முடிவை எழுத்து மூலம் அவருக்கு தெரிவித்த பிறகுதான், அவர் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம்.

நெருக்கடி நிலைமை பிரகடனமானது பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனை இரு அவைகளும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அப்பிரகடனமானது, ஒரு மாதத்திற்குள் தன் செயல்திறனை இழந்து விடும், என **ஷரத்து 352 (4)** கூறுகிறது.

அப்பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளும் (Approval) ஒரு

1. இவ்வினாவிற்கு மட்டும் வினா எண்கள் 2 மற்றும் 3-ல் உள்ள விபரங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும் - ஆசிரியர்.

தீர்மானமானது (resolution) தனிப் பெரும்பான்மை பலத்தால் (Special majority) நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்பட்ட பிறகு அப்பிரகடனம் ஆறு மாத காலம் வரை தொடர்ந்து அமலில் இருக்கும். அதற்கு மேற்பட்டும் நெருக்கடி நிலைமை பிரகடமானது தொடர வேண்டுமெனில், மீண்டும் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும், என **ஷரத்து 352 (6)** கூறுகிறது.

ஒரு எளிய பெரும்பான்மை பலத்தில் (Simple Majority), மக்களவை (House of People) குடியரசுத் தலைவரின் நெருக்கடி நிலைமை பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், குடியரசுத் தலைவர் அப்பிரகடனத்தை ரத்து (revoke) செய்ய வேண்டும், என **ஷரத்து 352 (7)** கூறுகிறது. இச்ஷரத்தின் வாயிலாக குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம், பல்வேறு அடிப்படைகளில் (different grounds) பல்வேறு வகையான நெருக்கடி நிலைமை பிரகடனங்களை அறிவிக்கும் அதிகாரத்தையும் உள்ளடக்கியதாகும். ஏற்கனவே ஒரு நெருக்கடி நிலைமை பிரகடனம் இருப்பினும், மேலும் ஒரு நெருக்கடி நிலைமை பிரகடனத்தை குடியரசுத் தலைவர் அறிவிக்கலாம், என **ஷரத்து 352 (9)** கூறுகிறது.

நெருக்கடி நிலைமை சட்ட வகைமுறைகளில் 1968-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 44வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், பல்வேறு மாறுதல்களை உண்டாக்கியது. இதன்படி **ஷரத்து 352 (1)**-ல் கூறப்பட்டுள்ள **'உள்நாட்டுத் தொல்லை' (Internal disturbance)** எனும் பதம் நீக்கப்பட்டது.

தேசிய நெருக்கடி நிலைமை பிரகடனத்தால் ஏற்படும் விளைவுகள் (Effects):

(i) மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் நீட்டிக்கப்படல் – நெருக்கடி நிலைமையின் போது, மத்திய அரசாங்கம் எந்த ஒரு மாநில அரசாங்கத்திற்கும் அம்மாநில நிர்வாகத்துறை அதிகாரம், எவ்வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என ஏவுரை (Direction) பிறப்பிக்கலாம் - **ஷரத்து 353.**

(ii) மாநில பட்டியலில் உள்ள துறைகளில் சட்டமியற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது - ஷரத்து 250. [இதன் காரணமாக, சட்டமியற்றும் அதிகாரத்தில் பகிர்ந்தளிப்பு என்பது நெருக்கடி காலத்தில் அறவே அற்றுப் போகிறது.]

(iii) மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வருவாய் பகிர்ந்தளிப்பை மாற்றியமைக்க மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது - இதனை **ஷரத்து 354** கூறுகிறது. அரசியலமைப்பின் 268 முதல் 279வது ஷரத்து வரை மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு இடையிலான நிதி மற்றும் வருவாய் பங்கீடு பற்றி விளக்குகிறது. நெருக்கடி காலத்தில் இச்ஷரத்துகளில் கூறப்பட்டுள்ள முறை குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் மாற்றங்கள் ஏற்படுத்த உத்திரவிடலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்திரவும் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அவ்வுத்திரவு ஒரு நிதியாண்டு வரை அமலில் இருக்கும்.

(iv) மக்களவையின் (Lok Sabha) காலத்தை நீட்டித்தல் - ஷரத்து 23 (2) நெருக்கடி காலத்தில், மக்களவையின் காலமானது 5 ஆண்டிலிருந்து 6 ஆண்டாக குடியரசுத் தலைவரால் நீட்டிக்கப்படலாம்.

(v) ஷரத்து 19-ன் வாயிலாக அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் நிறுத்திவைக்கப்படல் (Suspension of fundamental rights guaranteed by Art. 19) - போர் மற்றும் வெளித் தாக்குதல்கள் ஆகிய நெருக்கடிக் காலத்தில், அரசியலமைப்பின் 19வது ஷரத்தின் வாயிலாக இந்தியக் குடிமக்களுக்கு அளிக்கப் பட்டுள்ள அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைக்க **ஷரத்து 358** வகை செய்கிறது. அதாவது நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்ட வுடனேயே அடிப்படை உரிமைகளின் செயல்திறன் தானாகவே நின்றுவிடும்.[1]

(vi) அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த உள்ள உரிமையும் நிறுத்தி வைக்கப்படல் (Suspension of right of enforcement of fundamental rights) - ஷரத்து 359. இந்தியக் குடிமக்கள், அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியின் வாயிலாகப் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளை நடைமுறையில் அனுபவிப் பது பாதிக்கப்பட்டால், அதற்காக நீதிமன்றங்கள் வாயிலாகப் பரிகாரம் தேடும் உரிமையைப் பெற்றுள்ளனர். ஆனால் நெருக்கடி நிலைமையின் போது **(ஷரத்து 20 மற்றும் 21 தவிர)** இவ் வுரிமைகளை அமல் செய்யக் கோரி தொடுக்கப்படும் வழக்குகளை அரசு நிறுத்தி வைக்க அதிகாரம் பெறுகிறது.

1. Jaichand v. State, AIR 1967 SC 4

2. மாநில நெருக்கடி நிலைமை (State Emergency):

ஷரத்து 356-ன்படி, குடியரசுத் தலைவர், ஒரு மாநில ஆளுநர் அனுப்பிய அறிக்கையினைப் பெற்றதின் பேரிலோ அல்லது வேறுவிதத்திலோ அம்மாநில அரசாங்கம் அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளின்படி நடத்த முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது என அவர் திருப்தியுற்றால், அந்த மாநிலத்தில், அவர் நெருக்கடி நிலைமையைப் பிரகடனப்படுத்தலாம்.

மாநில நெருக்கடி நிலைமை பிரகடப்படுத்துவதற்கு உண்டான நடைமுறை:

ஷரத்து 356-ன்படியிலான மாநில நெருக்கடி நிலைமை பிரகடனமானது பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும் வைக்கப்பட வேண்டும். அதனை இரண்டு மாத காலம் முடிவடையும் முன் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் அங்கீகரிக்கவில்லை என்றால், அது இரண்டு மாத காலம் வரை அமலில் இருக்கும். அத்தகு பிரகடனத்தை, அதனைத் தொடர்ந்த ஒரு பிரகடனத்தினால், திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது மாற்றியமைக்கலாம். இந்த பிரகடனமானது, மக்களவை கலைக்கப்பட்ட பொழுதோ அல்லது இரண்டு மாத காலத்தில் அக்கலைப்பு நிகழும் பொழுதோ வெளிப்படுத்தப்பட்டால் அப்பிரகடனத்தை மாநிலங்களவை நிறைவேற்ற வேண்டும். அப்பிரகடனமானது 30 நாட்கள் முடிவடையும் முன்னர் மக்களவையினால் நிறைவேற்றப்படவில்லை என்றால், மறு வடிவமைக்கப்பட்ட புதிய மக்களவை கூடும் காலத்திலிருந்து 30 நாட்கள் முடிவடையும் பொழுது, அப்பிரகடனமானது செயல் திறனை இழந்துவிடும். பிரகடனமானது மக்களவையினால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டால், அது ஆறு மாதங்கள் வரை அமலில் இருக்கும். இந்த ஆறு மாத காலம், பாராளுமன்றத்தால் நீட்டிக்கப் படலாம். ஆனால் எந்த நெருக்கடி நிலைமை பிரகடனமும் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு அமலில் இருக்கக்கூடாது. உச்சகால அளவான மூன்று ஆண்டு காலம் முடிவடைந்தவுடன், குடியரசுத் தலைவருக்கோ அல்லது பாராளு மன்றத்திற்கோ, அப்பிரகடனத்தை தொடர்ந்திருக்கச் செய்ய அதிகாரம் இல்லை.

விளைவுகள்:

இப்பிரகடனத்தினால், குடியரசுத் தலைவர் (i) அந்த மாநில

ஆளுநரின் பணிகள் மற்றும் அதிகாரங்களை ஏற்றுக்கொள்வார். (ii) மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள், பாராளுமன்றத்தால் செயல்படுத்தப்படும் என அறிவிப்பார். (iii) நெருக்கடி நிலைமை பிரகடன நோக்கங்களுக்கு செயல்விளைவைக் கொடுப்பதற்கு அவசியம் அல்லது விரும்பத்தக்கது, என குடியரசுத் தலைவருக்கு தோன்றும் உடன் நிகழ்வான சட்ட வகைமுறைகளை அவர் ஏற்படுத்துவார். ஆனால், குடியரசுத் தலைவர் மாநில உயர் நீதிமன்றத்தின் செயல்பாட்டில் கை வைக்க முடியாது.

ஷரத்து 356-ன் கீழ் மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்களை செயல்படுத்தக்கூடய வகையில் பாராளுமன்றத்தாலோ அல்லது குடியரசுத் தலைவராலோ அல்லது எந்த அதிகார அமைப்பாலோ செய்யப்படும் எந்தச் சட்டமும், தகுந்த சட்டமன்றத்தாலோ அல்லது பிற அதிகார அமைப்பாலோ மாற்றப்படும், நீக்கப்படும் அல்லது திருத்தப்படும் வரையிலும், அச்சட்டம் செயல்முறையில் தொடர்ந்து இருக்கும், என **ஷரத்து 357 (2)** கூறுகிறது.

ஷரத்து 356-ன் கீழான மாநில நெருக்கடி நிலைமையின் பொழுது, மாநில சட்டமன்றத்தை கலைத்துவிடாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடியுமா?

முடியும். இதற்கு நாம் ஷரத்து 356-ஐயும், **S.R.Bommai v. Union of India**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய கோட்பாடுகளையும் ஆய்ந்தறிய வேண்டியுள்ளது.

ஷரத்து 356-ன்படி, ஒரு மாநிலத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி அரசாங்கத்தை நடத்த முடியாத சூழல் உருவாகியுள்ளது என்று ஆளுநர் கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் அம்மாநிலத்தில் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்துகிறார். அச்சமயத்தில் ஷரத்து 356 (1) (b)-யின்படி, அம்மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் பாராளுமன்றத்தால் செயல்படுத்தப்படுகின்றன. இதன் உட்பொருள் யாதெனில், அம்மாநில சட்டமன்றம், கலைக்கப்பட்டு விடுகிறது என்பதாகும்.

ஆனால், மேற்படி **S.R.Bommai v. Union of India**[1] வழக்கில், மாநில சட்டமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஷரத்து 356-ல் உட்கிடையாக இருந்தாலும், மாநில / நெருக்கடி நிலைமை பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட

1. (1998) 3 SCC 1

பின்னர்தான் குடியரசுத் தலைவர் அவ்வாறு சட்டமன்றத்தை கலைக்க உத்திரவிட வேண்டுமே தவிர, அதற்கு முன்பே உத்திரவிட முடியாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அது மேலும் கூறுகையில், அவ்வாறு அங்கீகரிக்கப்படும் வரை, மாநில சட்டமன்றத்தின் செயல்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி (suspend) வைக்கலாம் என்றும், மாநில சட்டமன்றத்தை கலைப்பது என்பது போகிற போக்கில் செய்யப்படும் (matter of course) ஒரு செயலல்ல என்றும், அவ்வாறு கலைத்தே ஆக வேண்டிய கட்டாயம், நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தலின் நோக்கத்திற்கு அவசியமான ஒன்றாக இருக்க வேண்டும் என்றும், தெளிவுபடுத்தியது.

State of Rajasthan v. Union of India[1] எனும் முந்தய வழக்கொன்றின் பொருண்மைகளின்படி, 1977-ல் உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பஞ்சாப், பீஹார், ஹிமாச்சல பிரதேசம், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், ஹரியானா மற்றும் இராஜஸ்தான் ஆகிய ஒன்பது மாநிலங்களின் சட்டமன்றம், மாநில நெருக்கடி நிலைமை பிரகடனத்தால் குடியரசுத் தலைவரால் கலைக்கப்பட்டது. ஏனெனில், அம்மாநில சட்டமன்றங்கள் மக்களின் விருப்பங்களை பிரதிபலிக்கவில்லை; மக்களாட்சிக்கு மதிப்பு கொடுக்கவில்லை என்று காரணம் காட்டப்பட்டது. இக்காரணத்தின் அடிப்படையில், அம்மாநில சட்டமன்றங்களை கலைத்தது சரிதான் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதே போல், 1980-ல் தமிழ்நாடு உள்ளிட்ட ஒன்பது மாநிலங்கள், மாநில மக்களின் விருப்பங்களை எடுத்துரைக்கத் தவறி விட்டது எனும் அடிப்படையில், அவற்றின் சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டு அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

பின்னிட்டு 1995-ஆம் ஆண்டில், உத்திர பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. நாம் ஏற்கனவே கண்ட **S.R.Bommai**[2] வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் அம்மாநில சட்டமன்றத்தை எடுத்தவுடன் கலைத்து விடாமல், அதன் செயல்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். அம்மாநில ஆளுநரும் பொறுமை காத்தார். அவர் உத்திர பிரதேசத்தில் புதிய ஆட்சியை அமைக்க அரசியல் கட்சிகளுக்கு சந்தர்ப்பம் கொடுத்தார். ஆனால்

1. AIR 1977 SC 1361
2. (1998) 3 SCC 1

எக்கட்சியும் ஆட்சியமைக்க முன்வரவில்லை. எனவே, இறுதியாக, அம்மாநில சட்டமன்றம் கலைக்கப்பட்டது.

3. நிதி நெருக்கடி நிலைமை (Financial Emergency):

இந்தியாவின் நிதி நிலைமை அல்லது கடன் நிலைமை அச்சுறுத்தப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால், அவர் நிதி நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம், என **ஷரத்து 360** கூறுகிறது.

நிதி நெருக்கடி நிலைமைக் காலத்தில், மத்திய அரசு, மாநில அரசுக்குப் பொருந்தும் என்று தோன்றக்கூடிய நிதி ஏவுரைகளை (Financial Directions) அளிக்கலாம். மாநில அரசு ஊழியர்கள், உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், இவர்களின் ஊதியத்தை குறைக்க குடியரசுத் தலைவர் ஏவுரைக்கலாம். மாநிலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் எல்லா நிதி மசோதாக்களையும் தமது பரிசீலனைக்கு அனுப்புமாறு குடியரசுத் தலைவர் உத்திரவிடலாம். இந்த மாதிரியான நெருக்கடி நிலைமை இதுவரை பிரகடனப்படுத்தப் படவில்லை.

நெருக்கடி நிலை நமது நாட்டின் கூட்டாட்சிக் கட்டமைப்பின் மீது ஏற்படுத்தும் விளைவுகள்:

இந்திய ஆட்சி கூட்டாட்சி போல்வு ஆகும். கூட்டாட்சியின் கூறுகள் இந்தியாவில் அதிகம் காணப்படினும் சில ஒற்றையாட்சிக் கூறுகளும் சில சமயங்களில் தோன்றுகின்றன. அதாவது இந்த ஒற்றையாட்சிக் கூறுகுள் பெரும்பாலும், நெருக்கடிக் காலங்களில், இந்திய அரசியலமைப்பில் அங்கம் வகிக்கின்றன. நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டால், பின்வரும் விளைவுகள் இந்திய அரசியலமைப்பில் ஏற்படும். அப்போது, இந்தியாவின் கூட்டாட்சிக் கட்டமைப்புக் கூறுகள், ஒற்றையாட்சிக் கூறுகளாக மாறிவிடும் என்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை.

1. நெருக்கடிக் காலத்தில் மத்திய அரசின் நிர்வாக அதிகாரம், மாநில அரசின் மீதும் ஆக்ரமிக்கும். அப்போது மத்திய அரசு எடுக்கும் நிர்வாக நடவடிக்கைகள் மாநில அரசு எடுத்ததாகவே கருதப்படும். **(ஷரத்து 353).**

2. ஒரு மாநிலம், அரசியலமைப்புச் சட்ட ஷரத்துகளை கடைப்பிடிக்காமல் தனது அரசாங்கத்தை நடத்துவதாக குடியரசுத்

தலைவர் திருப்தியுற்றால், அவர் அந்த மாநில அரசையும் சட்டமன்றத்தையும் கலைத்துவிட்டு, அந்த மாநிலத்தில் நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்தலாம்; மாநிலத்தின் அனைத்து பணிகளையும் தனது பொறுப்பில் ஏற்றுக் கொள்ளலாம். அதாவது மத்திய அரசின் கீழ் கொண்டு வந்துவிடலாம். **(ஷரத்து 356).**

3. பாராளுமன்றம், மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளில் சட்டமியற்றும் அதிகாரம் பெறுகிறது. **(ஷரத்து 353).**

4. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே உள்ள வருவாய் பங்கீட்டை மாற்ற மத்திய அரசிற்கு அதிகாரம் உண்டாக்கும். **(ஷரத்து 356(b)].**

5. 268 முதல் 279 வரை உள்ள ஷரத்துகளில் வகை செய்யப்பட்டுள்ள, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி அமைப்புகளை மாற்ற குடியரசுத் தலைவர் அதிகாரம் படைத்தவ ராகலாம்.

நெருக்கடிக் காலங்களில் மத்திய அரசு விரைவான தீர்வுகளை எடுக்க வேண்டிய கால கட்டத்தில் உள்ளது. அது ஒற்றையாட்சியாக இருந்தால்தான் முடியும். ஆகவே மத்திய அரசு மேற்கண்டவற்றின்படி ஒற்றையாட்சிக் கூறுகளைக் கைக் கொள்ளும்.

2. What is the effect of Proclamation of Emergency under Article 352? Can a Proclamation of Emergency be challenged before the Courts? If so, on what grounds? (ஷரத்து 352-ன் கீழ் பிரகடனப் படுத்தப்படும் நெருக்கடி நிலைமையின் விளைவு என்ன? நெருக்கடி நிலைமை பிரகடனமொன்றைக் குறித்து நீதிமன்றங் களின் முன்னர் கேள்வி எழுப்ப முடியுமா? முடியுமென்றால் எதன் அடிப்படையில்?)

ஷரத்து 352-ன் கீழான நெருக்கடி நிலைமைப் பிரகடன மெனில், அது தேசிய நெருக்கடி நிலைமைப் (National Emergency) பிரகடனம் ஆகும். (இதன் விளைவுகள் குறித்து முந்தைய வினாவின் விடையைப் பார்க்கவும்.)

நெருக்கடி நிலைமைப் பிரகடனமொன்றைக் குறித்து நீதிமன்றங்களின் முன்னர் கேள்வி எழுப்ப முடியுமா, என்ற வினாவிற்கு "முடியும்" என்றோ அல்லது "முடியாது" என்றோ

விடையளிக்குமுன் சில விவரங்களை திறனாய்வு செய்வது மிகவும் அவசியமாகும். அதாவது, இந்தியாவின் பாதுகாப்பு வெளித் தாக்குதலாலோ அல்லது ஆயுதக் கலகங்களாலோ அல்லது போரினாலோ அச்சுறுத்தப்படுகிறது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால் (satisfaction) அவர் இந்தியா முழுமைக்கோ அல்லது இந்திய நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ தேசிய நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம், என **ஷரத்து 352 (1)** கூறுகிறது. ஆகவே, குடியரசுத் தலைவர் மேற்கண்டவற்றைக் குறித்து திருப்தியுற்றுவிட்டால், அவர் தேசிய நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்திவிடலாம். ஆகவே நெருக்கடி நிலைமை குறித்து நீதிமன்றங்களின் முன்னர் கேள்வி எழுப்ப முடியாது. ஏனெனில், நெருக்கடி நிலைமை அறிவிப்பது முற்றிலும் இந்திய நிர்வாகத் துறையை (executive) சார்ந்த ஒரு அரசியல் பிரச்சனை ஆகும். ஆகவே அதனை நீதிமன்றங்களின் முன்னர் வினவ இயலாது. மேலும், நெருக்கடி நிலைமையை அறிவிக்க வேண்டிய சூழ்நிலைகள் நிலவுகிறதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் குடியரசுத் தலைவரேயாவார்.

ஆனால் **Minerva Mills Ltd. v. Union of India**[1] வழக்கில் ஒரு மாறுபட்ட கூற்றானது, **நீதியரசர் பகவதி** அவர்களால் கூறப் பட்டது. அதாவது, ஷரத்து 352 (1)-ன் கீழ் குடியரசுத் தலைவரால் பிரகடனப் படுத்தப்பட்ட நெருக்கடி நிலைமையை, நீதிமுறைச் சீராய்வு (Judicial review) செய்ய எவ்வித தடையும் இல்லை, என்று அவர் கூறுகிறார். ஆனால், நெருக்கடி நிலைமை பிரகடனம் குறித்த பிரச்சனையில் நீதிமன்றத்தின் அதிகாரம் ஒரு எல்லையுடன் நின்று விடுகிறது. அதாவது, நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த குடியரசுத் தலைவர் முன்கண்ட விஷயங்களைப் பொறுத்து திருப்தியுற வேண்டும் என்பது ஒரு முக்கிய முன் நிபந்தனையாகும். இந்நிபந்தனை சரியானபடி நிறைவேற்றப்பட வில்லை அல்லது குடியரசுத் தலைவர் அவ்வாறு திருப்தியுறவில்லை (not satisfied at all) அல்லது குடியரசுத் தலைவரின் திருப்தி தவறான அடிப்படை யில் (irrelevant ground) அமைந்தது என்பதை காரணமாக காண்பித்து வேண்டுமானால், நெருக்கடி நிலைமை பிரகடனமொன்றை நீதிமன்றங்களின் முன்னர் வினவ முடியும். இந்த அளவிற்கு நீதிமன்றத்தின் எல்லை நின்று விடுகிறது. மேலும் இதற்கும் மேலே சென்று, குடியரசுத் தலைவர் திருப்தியுற்ற அடிப்படைகள்

1. AIR 1980 SC 1789

(வெளித்தாக்குதல், ஆயுதக் கலகங்கள் அல்லது போர்) அமைந்திருந்த சூழ்நிலைகளின் சரிநுட்பம் (correctness) குறித்து நீதிமன்றங்கள் வினா எழுப்பி, நெருக்கடி நிலைமை பிரகடனத்தை தகர்க்கும் எண்ணத்துடன் அணுகவியலாது.

இது இவ்வாறிருக்க **ஷரத்து 352 (3)-ன்படி,** குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம் என்று அமைச்சரவை (cabinet) தனது முடிவை எழுத்துமூலம் (written) அவருக்கு தெரிவித்த பிறகுதான், அவர் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம், என்று கூறுகிறது. இச்ஷரத்தின் வாயிலாக, குடியரசுத் தலைவரின் 'திருப்தியுறல்' ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளாகிறது. அதாவது, நெருக்கடி நிலைமைப் பிரகடனம் குறித்து முதலில் அமைச்சரவை திருப்தியுற்று, அது தனது ஆலோசனையை குடியரசுத் தலைவருக்கு அளித்த பின்னரே, அவர் நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்த இயலும். ஆகவே, குடியரசுத் தலைவரின் 'திருப்தி' என்பது அமைச்சரவையின் 'திருப்தி' என்று மறைமுகமாகப் பொருள்படும்.

ஆகவே, நீதிமன்றத்தின் முன்னர் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே கேள்வி கேட்க முடிகின்ற நெருக்கடி நிலைமைப் பிரகடனத்தை, குடியரசுத் தலைவர் ஏதேச்சதிகாரமாக அறிவித்துவிட முடியாது. மேற்படி ஷரத்து 352-ல், மேற்கண்டவாறு ஒரு மறைமுகமான கட்டுப்பாட்டை விதிக்கும் உட்கூறான (3) ஆனது, 1978ல் கொண்டுவரப்பட்ட 44வது திருத்தச் சட்டத்தால் புதிதாக சேர்க்கப்பட்டதாகும்.

இதற்குப் பின்னால், முக்கியத்துவம் நிரம்பியதொரு காரணம் உள்ளது. அதாவது 1975-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில், அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், தனது அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்காமலேயே, நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்துமாறு குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார். இது பற்றி பலத்த விவாதம் ஏற்பட்டது. இறுதியாக, அடுத்து பதவிக்கு வந்த ஜனதா அரசு, நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்த பிரதம மந்திரியின் ஆலோசனை மட்டும் போதாது, அவரது அவையின் உறுப்பினர்களின் ஏகமனதான ஆலோசனையும் வேண்டும். எந்தக் காரணத்தினாலும், இம்மாதிரியான சூழ்நிலை இனி எதிர்காலத்தில் நடப்பதை தடுப்பதற்காகவும் மேற்படி உட்கூறான (3), மேற்படி ஷரத்து 352ன் 44வது திருத்தச் சட்டத்தின் வாயிலாகப் புகுத்தியது.

3.When President's Rule may be imposed on a State under Article 356? What are its effects? Is it subject to judicial review? If so, under what circumstances? Refer to recent Supreme Court decision.
(ஒரு மாநிலத்தின் குடியரசுத் தலைவரின் ஆட்சியை பிரிவு 356-ன் கீழ் எப்போது பிரகடனப்படுத்தலாம்? அதன் விளைவுகள் யாவை? அது நீதிமன்ற சீராய்வுக்கு உட்பட்டதா? அப்படியென்றால் எந்த சூழ்நிலைகளில்? உச்ச நீதிமன்றத்தின் அண்மைத் தீர்ப்பை குறிப்பிடுக.)

(அல்லது)

Discuss the nature and extent of the power of the President under Article 356 of the Indian Constitution. Refer to decided cases.
(இந்திய அரசமைப்பின் 356வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின் தன்மையையும், அளாவுகையையும் முடிவுற்ற வழக்குத் தீர்ப்புகளை குறிப்பிட்டு விவாதிக்க.)

ஷரத்து 356-ன் கீழான மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சியும் அதன் விளைவுகளும்:

(வினா எண் 1-ல் 'மாநில நெருக்கடி நிலை' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை எழுதவும்.)

அது நீதிமுறை சீராய்விற்குட்பட்டதா?

ஆம்.

எச்சூழ்நிலைகளில்? உச்ச நீதிமன்றத்தின் அண்மைத் தீர்ப்பு ஒன்று வழங்கிய விளக்கம்:

S.R.Bommai v. Union of India[1] எனும் மிக முக்கியமான வழக்கில், மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி தொடர்பாக பல கோட்பாடுகளின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் வரலாற்று சிறப்பு மிக்கதொரு தீர்ப்பை நல்கியது. மேற்படி வழக்கின் பொருண்மைகளின்படி, கர்நாடகா, மேகாலயா, நாகாலாந்து, இராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் ஹிமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில்[2] ஷரத்து 356-ன்படி, குடியரசுத் தலைவராட்சி

1. (1998) 3 SCC 1
2. அம்மாநிலங்களில் பல்வேறு ஆண்டுகளில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது

அமல்படுத்தப்பட்டது. இதற்கு பின்வருவன காரணமாகும். அதாவது இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, என்பதை நமது அரசியலமைப்பின் முகப்புரை கூறுகிறது. மேலும் மதச்சார்பின்மை (Secularism) என்பது, அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகும். எனவே, எந்த ஒரு மாநிலமாவது, மதச் சார்புடைய கொள்கைகளை (unsecular policies) பின்பற்றினால், அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகும். அங்கு ஷரத்து 356-ன் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தலாம். மேற் கண்ட மாநிலங்கள், மதச்சார்புடைய கொள்கைகளை பின்பற்றிய தால், அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிரகடனத்தை எதிர்த்து, **S.R. பொம்மை** உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அப்பொழுது, மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பிரகடனப் படுத்தப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சி செல்லத்தக்கது என்றும் (அதாவது அரசியலமைப்பிற்குட்பட்டது என்றும்), கர்நாடகா, மேகாலயா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் பிரகடனப்படுத்தப் பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சி செல்லாது என்றும், உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் மேற்படி கர்நாடகா, மேகாலயா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் புதிதாக தேர்தல் நடந்து, புதிய சட்டமன்றம் அமைக்கப்படும் வரை, கலைக்கப்பட்ட சட்ட மன்றமோ அல்லது அமைச்சரவையோ மீண்டும் பதவியில் அமர முடியாது, என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

இவ்வழக்கின் பொழுது, மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துவது தொடர்பாக பல்வேறு கொள்கைகளை உச்ச நீதிமன்றம் வகுத்துக் கொடுத்தது. அவற்றில் ஒன்றின்படி, மாநிலத்தில், ஷரத்து 356-ன்படி, குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துவது, நீதிமன்றத்தின் மறு சீராய்விற்குட்பட்டதே, அதிலிருந்து ஷரத்து 356, எவ்வித பாதுகாப்புரிமையும் பெற முடியாது **(The Proclamation issued under Article 356 is not immune from judicial review).** மேலும், அப்பிரகடனத்தை பின்வரும் சூழ்நிலைகளின் அடிப்படையில் உச்ச அல்லது உயர் நீதிமன்றம் இரத்து செய்யலாம். அவை, அப்பிரகடனம் (a) தீயெண்ணம் (malafide) காரணமாக; அல்லது (b) முழுவதும் பொருந்தாத அல்லது முக்கியத்துவமற்ற அடிப்படைகளின் கீழ் இருப்பின், உச்ச அல்லது உயர் நீதிமன்றம் அதனை சீராய்வு செய்து இரத்து செய்யலாம். அப்பொழுது, மத்திய அரசு எதன் அடிப்படையில் குடியரசுத் தலைவர் ஆட்சியை மாநிலத்தில் பிரகடனப்படுத்தியது என்பதற்கு

உண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில், அது கோரும் பொழுது, ஆஜர்படுத்தக் கடமைப்பட்டது. இக்கடமையை மத்திய அரசு மறுக்க முடியாது. எனினும், நீதிமன்றம் அந்த ஆவணங்கள் சரியானதா அல்லது மேற்படி பிரகடன நடவடிக்கைக்கு போதுமானதர (correctness or adequacy) என்பது குறித்து வினவ முடியாது. அதன் அதிகாரம், அந்த ஆவணங்கள், மேற்கண்ட பிரகடன நடவடிக்கைக்கு தொடர்புடையதாக உள்ளதா இல்லையா என்பதோடு நின்று விடுகிறது. அவை முழுவதும் தொடர்பற்ற (Wholly irrelevant) இருப்பின், மாநிலத்தில் செய்யப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனத்தை, சீராய்வின் பொழுது, உச்ச அல்லது உயர் நீதிமன்றம் இரத்து செய்துவிடலாம்.

4. Describe the grounds on which and the procedure according to which a national emergency can be proclaimed by the President under Art. 352 of the Constitution. (அரசியல் சட்டம் பிரிவு 352-ன்படி, குடியரசுத் தலைவர் எந்தக் காரணங்களுக்காக மற்றும் எந்த வகையில் தேசிய நெருக்கடி நிலையை அறிவிக்கலாம் என்பதை விளக்குக.)

[வினா எண் 1-ல் 'தேசிய நெருக்கடி நிலைமை' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை எழுதுக.]

5. Discuss the effects and consequences of a proclamation of national emergency on fundamental rights. (தேசிய நெருக்கடி நிலை பிரகடனம், அடிப்படை உரிமைகள் மீது ஏற்படுத்துகின்ற மாறுதல்களையும், விளைவுகளையும் விவாதிக்க.)

(அல்லது)

Examine the effects of a Proclamation of Emergency under Article 352 of the Constitution on Centre-State relations and Fundamental rights. (அரசியலமைப்புச் சட்டத்தின் 352-ஆம் சட்ட விதியின் கீழ் மைய-மாநில அரசுகளின் உறவுகள், அடிப்படை உரிமைகள் ஒரு நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் எவ்வாறு பாதிக்கப் படுகின்றன என்பதனை ஆராய்க.)

(அல்லது)

Effects of proclamation of Emergency on fundamental rights - Write short notes. (அடிப்படை உரிமைகள் மீது நெருக்கடி நிலை

பிரகடனத்தின் விளைவுகள் - குறுகிய விடை தருக.)

[வினா எண் 1-ல், 'தேசிய நெருக்கடி நிலைமை பிரகடனத்தால் ஏற்படும் விளைவுகள்' எனும் தலைப்பின் கீழ் காண்க.]

6. Critically examine the power and procedure for the imposition of President's Rule on the States under Art. 356 of the Constitution. (அரசியல் சட்டம் பிரிவு 356-ன்படி குடியரசுத் தலைவரின் ஆட்சி எவ்வாறு மாநிலங்களில் ஏற்படுத்தப்படலாம் என்பதை விளக்குக.)

(அல்லது)

Explain the circumstances in which the President's rule can be imposed on the States under the Constitution. (அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மாநிலங்களின் மீது குடியரசுத் தலைவரின் ஆட்சி எந்த சூழ்நிலையில் மற்றும் எந்த நோக்கங்களுக்காக அமல்படுத்தப்படலாம் என்று விளக்குக.)

(அல்லது)

Critically examine Article 356 of the Indian Constitution and its application in recent times. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356-வது சரத்தை கூர்ந்தாய்வு செய்க. சமீக காலங்களில் அதன் செயல் தன்மை குறித்து விளக்குக.)

[வினா எண் 1-ல் 'மாநில நெருக்கடி நிலைமை' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை எழுதவும்.]

7. National Emergency - Write short notes. (நாட்டு நெருக்கடி நிலை - குறுகிய விடை தருக.)

[வினா எண் 1-ன் தொடக்கத்தில் காண்க.]

8. State Emergency - Write short notes. (மாநில நெருக்கடி நிலை - குறுகிய விடை தருக.)

[வினா எண் 1-ன் மத்தியில் காண்க.]

9. Financal Emergency - Write short notes. (நிதி நெருக்கடி - குறுகிய விடை தருக.)

[வினா எண் 1-ன் இறுதியில் காண்க.]

10. S.R.Bommai v. Union of India - Write short notes. (எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய அரசு - குறுகிய விடை தருக.)

[வினா எண் 1-ல் காண்க.]

-oOo-

அத்தியாயம் 7

அரசியலமைப்பின் திருத்தம்
(Amendment to the Constitution)

திருத்தத்திற்கான அதிகாரம் மற்றும் நடைமுறை
(ஷரத்து 368)
(Power and Procedure for Amendment)
(Article 368)

1. Discuss the scope and extent of Parliament's power to amend the Constitution under Article 368. (ஷரத்து 368ன் கீழ் அரசியலமைப்பினை திருத்த பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தின் பரவெல்லை மற்றும் அளவினை விவாதிக்க.)

(அல்லது)

"Indian Constitution is neither rigid nor flexible" - Explain. (இந்திய அரசியலமைப்பு நெகிழ்வற்றதுமல்ல, நெகிழ்வானதுமல்ல" - விளக்குக.)

(அல்லது)

Describe the procedure for amendment of the Constitution. Examine the limitations, if any, on the amending power of Parliament. (அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான விதிகளைக் கூறுக. நாடாளுமன்றம் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏதேனும் கட்டுப்பாடுகள் இருந்தால் விளக்குக.)

(அல்லது)

Explain the constitutional provisions relating to 'amendment'. Is there any limitation on the power to amend the Constitution? ('திருத்தம்' செய்வதற்கு ஏதுவாகவுள்ள அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்துகளை விளக்குக. அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஏதேனும் வரையறைகள் உள்ளனவா?)

(அல்லது)

Critically examine the procedure prescribed for the amendment of the Constitution. (அரசியலமைப்பு சட்டத்தை திருத்துவதற்கு வகுக்கப்பட்ட நடைமுறைகளைக் கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

State the two procedures prescribed under Article 368 to amend the Constitution. (பிரிவு 368-ன் கீழ் அரசியல் திருத்தச் சட்டத்தைத் திருத்துபதற்கான இரண்டு வழிமுறைகளைப் பற்றி விளக்குக.)

(அல்லது)

"Amendment is a safety valve against revolution" - Discuss. ("அரசமைப்புச் சட்டத் திருத்தம் புரட்சிக்கு எதிரான ஒரு பாதுகாப்பு அடைப்பாக அமைந்துள்ளது" - விவாதி.)

(அல்லது)

The power of parliament to amend the constitution is absolute. Critically analyse this comment. (அரசமைப்பினை திருத்தும் பாராளுன்றத்தின் அதிகாரம் முழுமையானது. இக்கூற்றினை கூர்ந்தாய்வு செய்க.)

(அல்லது)

Explain the various methods of amendment of the constitution. Examine the role of State legislatures in constitutional Amendment. (அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்குண்டான பல்வேறு வழிமுறைகளை விளக்குக. அரசமைப்பை திருத்தம் செய்வதில் மாநில ட்டமன்றங்களின் பங்கினை ஆராய்க.)

(அல்லது)

Methods of amending the constitution - Write short notes. (அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான வழிமுறைகள் - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

எதிர்காலத்தில் அரசியலமைப்பின் பணிக்கு எதிராளதாக ஆகலாம் எனக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவே அரசியலமைப்பினை திருத்தக்கூடிய சட்ட வகைமுறைகள் உண்டாக்கப்பட்டன. மேலும் எதிர்காலத்தில் நிகழப் போவது என்ன, அதன்படி, எவ்வாறு அரசியலமைப்பு அமைய வேண்டு மென, யாரும் கணித்து அவ்வாறு அரசியலமைப்பினை அமைக்க இயலாது. சமூக நிலை மாறக்கூடியது. மக்களின் மனம் அதற்குத் தக்கவாறு மாறும். அதற்கொப்ப அரசியலமைப்பும் திருத்தப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். ஒரு எழுதப்பட்ட அரசியல மைப்பில், அரசியலமைப்பை திருத்துவதற்கு உண்டான வகை முறைகள் எதுவும் கூறப்படவில்லை என்றால், அரசியலமைப்பினை திருத்த வேண்டிய ஒரு கால கட்டம் வரும் பொழுது, அதற்காக மக்கள் புரட்சி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். இறுதியில் அமைதியற்ற, புரட்சி வழியில்தான் அரசியலமைப்பை திருத்த வேண்டிய கட்டாயம் தோன்றிவிடும். இதனைத் தவிர்ப்பதற்காகவே நமது அரசியலமைப்பில் **ஷரத்து 368** அரசியலமைப்பினை திருத்தும் முறைகளைப் பற்றிக் கூறுகிறது. எனவேதான், "**அரசிய லமைப்புச் சட்ட திருத்தம் புரட்சிக்கு எதிரான ஒரு பாதுகாப்பு அடைப்பாக (safety valve) அமைந்துள்ளது**" என்று கூறப்படுகிறது.

அரசியலமைப்பை திருத்துவதற்கான நடைமுறைகள்:

அரசியலமைப்பினை திருத்துவதற்காக, அரசியலமைப்பின் பல்வேறு ஷரத்துகள் மூன்று வகைகளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன.

1. எளிய பெரும்பான்மை பலத்தினால் திருத்தம் (Amendment by Simple Majority):

ஒரு சாதாரண சட்டத்தை பாராளுமன்றம் நிறைவேறுவது போல், எளிய பெரும்பான்மை பலத்தினால் அரசியலமைப்பு சட்ட ஷரத்துகளை பாராளுமன்றம் திருத்தமுடியும். எடுத்துக்காட்டாக, ஷரத்துகள் 4, 5, 6, 239-ஆ, 312 ஆகியவை எளிய பெரும்பான்மை பலத்தால் திருத்தம் செய்யப்படத்தக்கதாகும். இச்ஷரத்துகள் **ஷரத்து 368-ல்** கூறப்பட்டுள்ள நடைமுறைகளிலிருந்து குறிப்பாக

விலக்கி வைக்கப்பட்டதாகும்.

2. தனிப் பெரும்பான்மை பலத்தினால் திருத்தம் (Amendment by Special Majority) [ஷரத்து 368 (2)]:

அரசியலமைப்பினை திருத்துவதற்கு ஒரு பொதுவான நடைமுறையை ஷரத்து 368 (2) கூறுகிறது. நாம் மேலே கண்ட ஷரத்துகள் மற்றும் ஷரத்து 368 (2)-ன் **நிபந்தனை வாசகப் பத்தியின் (Provisio)** கீழுள்ள ஷரத்துகள் ஆகியவற்றைத் தவிர, பிற ஷரத்துகளை பாராளுமன்றத்தின் தனிப் பெரும்பான்மை பலத்தினால் திருத்தலாம். அப்படிப்பட்ட பிற ஷரத்துகளை திருத்து வதற்குண்டான மசோதா (Bill) ஒன்று, பாராளுமன்றத்தின் மக்களவையிலோ அல்லது மாநிலங்களவையிலோ கொண்டு வரப்படலாம். அவ்வாறு கொண்டு வரப்பட்ட மசோதா பாராளு மன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களாலும் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். பிறகு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்றவுடன் அம்மசோதாவில் வகுக்கப்பட்டபடி, அரசியலமைப்பானது திருத்தப்படும்.

3. தனிப் பெரும்பான்மை பலத்தாலும் மற்றும் மாநிலங்களின் ஒப்புதலாலும் திருத்தம் (Amendment by Special Majority and Ratification by States) [ஷரத்து 368 (2)-ன் கீழான நிபந்தனை வாசகம்]:

ஷரத்து 368 (2)-ன் கீழான நிபந்தனை வாசகப் பத்தியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஷரத்துகளையும், அட்டவணைகளையும் திருத்துவதற்கு மேலே கண்ட முறையைப்[1] பின்பற்றி அரசியல மைப்புத் திருத்த மசோதாவைப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றிய பிறகு, அம்மசோதாவானது மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெற அனுப்பப்படுகிறது. அவ்வாறு அனுப்பப்படும் மசோதா இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களில் பாதிக்குக் குறையாது உள்ள மாநிலச் சட்டமன்றங் களின் ஒப்புதலைப் பெற்றவுடன் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று அரசியலமைப்புத் திருத்தச் சட்டமாக ஆகிறது. ஷரத்து 368 (2)-ன் நிபந்தனை வாசகப் பத்தியானது (Proviso) மேற்கண்ட முறைகளைப் பின்பற்றி திருத்தப்படத்தக்க ஷரத்துகள் மற்றும் அட்டவணைகளை பின்வருமாறு குறிப்பிடுகிறது. அவை,

1. பாராளுமன்ற தனிப்பெரும்பான்மை பலம்

1. குடியரசுத் தலைவர் தேர்தல் - ஷரத்து 54 மற்றும் 55.

2. மத்திய மற்றும் மாநிலங்களின் நிர்வாக அதிகாரத்தின் நீட்டிப்பு - ஷரத்துகள் 73 மற்றும் 162,

3. உச்ச நீதிமன்றம் மாநில உயர் நீதிமன்றங்கள் பற்றிய ஷரத்துகள் - ஷரத்துகள் 124லிருந்து 147 வரை, 214லிருந்து 231 வரை மற்றும் 241.

4. மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே சட்டமியற்றும் அதிகாரங்களின் பகிர்ந்தளிப்பு - ஷரத்து 245லிருந்து 255 வரை.

5. ஏழாவது அட்டவணையில் உள்ள பட்டியல்கள் எதுவும்.

6. பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம். (நான்காவது அட்டவணை).

7. 368வது ஷரத்து[2] (அரசியலமைப்பைத் திருத்தும் முறை).

திருத்தும் அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகள் (அல்லது) வரம்புகள் (Limitations) (அல்லது) அரசியலமைப்பை திருத்த பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரம் முழுமையானதா?:

எதையும் திருத்தலாம். அதாவது அரசியலமைப்பை திருத்தும் அதிகாரம் முழுமையானது எனலாம். ஆனால் இதைக் கொண்டு அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை அல்லது அம்சங்களை பாராளுமன்றம் திருத்த முடியாது என்பதை நாம் கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கூறு. எனவே அரசியலமைப்பை திருத்த பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரம் முழுமையானது என்று கூறவியலாது. (விரிவாக அடுத்த வினாவில் காண்க.)

முடிவுரை:

நமது இந்திய அரசியலமைப்பு எழுதப் பெற்ற அரசியலமைப்பு (Written Constitution) ஆகும். மேலும் நெகிழ்வற்றதும் (Rigid) ஆகும். ஆகவே இதில் திருத்தங்கள் செய்தல் என்பது சிக்கலான பணி ஆகும் என்பதை மேற்கண்ட பின்னிரண்டு திருத்த முறைகளைக் கண்டாலே தெளிவாகும். எனினும், அரசியலமைப்புச்

1. திருத்தத்திற்கு வழி சொல்லும் 368-வது ஷரத்தைக் கூட திருத்தி விடலாம்.

சட்ட ஷரத்துக்களை நெகிழ்வித்து (Flexible) திருத்தம் செய்வதற்கு அரசியலமைப்பு அனுமதியளிக்கிறது. ஆனால் இதைக் கொண்டு இந்திய அரசியலமைப்பு நெகிழ்வடையக் கூடியது என்று கூறிவிடக் கூடாது. சுருங்கக்கூறின், இந்திய அரசியலமைப்பு நெகிழ்வற்றது மல்ல, நெகிழ்வுடையதுமல்ல.

2. "Article 368 does not enable Parliament to alter the basic structure or framework of the Constitution". Discuss this statement referring to cases. ("அரசியலமைப்புச் சட்டத்தின் 368-ஆம் ஷரத்து பாராளுமன்றத்திற்கு அடிப்படை அம்சங்களை மாற்றுவதற்கு அதிகாரமளிக்கவில்லை" இக்கூற்றினை வழக்குகளின் உதவியுடன் விளக்குக.)

(அல்லது)

Explain the procedure for the amendment of the constitution. What restrictions does the doctrine of "Basic Structure of the constitution" place on the amending power of parliament? (அரசமைப்பு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் "அடிப்படை அம்ச" கோட்பாடானது எத்தகைய கட்டுப்பாடுகளை பாராளுமன்றம் அரசமைப்பு சட்டத்தை திருத்தும் அதிகாரத்தின் மீது விதிக்கிறது?)

(அல்லது)

Amendment of Fundamental Rights - Write short notes. (அடிப்படை உரிமைகளை திருத்துதல் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Theory of Basic Structure of the Indian Constitution - Write short notes. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பு கோட்பாடு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Theory of 'Basic Structure' - Write short notes. ('அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாடு' - குறுகிய விடை தருக.)

(அல்லது)

"Basic features of the Constitution shall not be amended' - Discuss.

("அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களை திருத்தம் செய்யக் கூடாது" - விவாதி.)

(அல்லது)

Explain the procedure for amendment of the Constitution. Can the Parliament amend the provisions coming under the Fundamental Rights chapter. (அரசியலமைப்பை திருத்தும் நடைமுறையை விளக்குக. அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் கீழ் வரும் வகைமுறைகளை பாராளுமன்றம் திருத்த முடியுமா?)

(அல்லது)

What do you understand by the phrase. "basic structure of the Indian Constitution'? Can it be amended under Article 368 of the Indian Constitution? Refer to cases. ("இந்திய அரசமைப்பு சட்டத்தின் அடிப்படை அம்சங்கள்" என்பதில் நீங்கள் அறிவது என்ன? உறுப்பு 368-ன் கீழ் அவை திருத்தக் கூடுமா? வழக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

"Basic features of the Constitution cannot be amended'' - Supreme Court of India. What are the various amendments to the Constitution and for the violation of which basic features, they have been struck down as unconditional so far? ("அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களை மாற்ற முடியாது" - இந்திய உச்ச நீதிமன்றம். எந்தெந்த அடிப்படை அம்சங்களை மீறியதற்காக, பல்வேறு அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள், அரசமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது என்று இதுவரை வீழ்த்தப்பட்டுள்ளது?)

(அல்லது)

Explain the theory of Basic features. How does this theory affect Parliament's Supremacy? (அடிப்படைக் கூறுகள் பற்றிய கோட்பாடுகளை விளக்கவும். இக்கோட்பாடு பாராளுமன்றத்தின் உயர்நிலையை எவ்வாறு பாதிக்கின்றது?)

முன்னுரை:

மேற்கண்ட வினாக்களுக்கு விடை காண வேண்டுமெனில்,

"**அடிப்படை உரிமைகளை திருத்த இயலுமா?**" என்ற ஒரு பிரச்சனையுடன் ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுதுதான், 368-ஆம் ஷரத்து பாராளுமன்றத்திற்கு **அடிப்படை அம்சங்களை (basic structure or basic features)** மாற்றுவதற்கு அதிகாரமளித்துள்ளதா அல்லது இல்லையா என்பது சரிவர புரியும். இதற்குத் துணையாக பல முக்கியமான வழக்குகளின் முடிவுகளையும் திருத்தச் சட்டங்களையும் கவனிக்க வேண்டும். அவற்றினை பின்வருமாறு விரிவாகக் காண்போமா?

அடிப்படை உரிமைகளை திருத்த இயலுமா?

இப்பிரச்சனைக்கு உண்டான தீர்வினை 42வது திருத்தச் சட்டம் முடிவாகக் கூறியது. ஆனால் அதன் பின்னர் எழுந்த வழக்கொன்றினால் அதன் கருத்தில் சற்று மாற்றம் ஏற்பட்டது. இந்த சிக்கலுக்குரிய வினா எங்கிருந்து எழுந்தது, இதன் போக்கு எப்படியெல்லாம் மாறியது, என்பதை பின்வரும் வழக்குகளும் திருத்தச் சட்டங்களும் தெளிவாகத் விளக்கும்.

Shankari Prasad v. Union of India[1] - சங்கரி பிரசாத் என்பவரின் சொத்தானது, அரசியலமைப்பின் முதலாவது திருத்தச் சட்டத்தின் (1st Amendment Act, 1951) வாயிலாக பறிக்கப்பட்டது. இத்திருத்தச் சட்டம், அசையாச் சொத்துக்களை (immovable property) போதுமான இழப்பீடு தராமல் பறிப்பதற்கு, பாராளுமன்றத்திற்கு அதிகாரமளித்திருந்தது. மேற்படி முதலாவது திருத்தச் சட்டமானது தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது எனக் கூறி, அதன் செல்லுதன்மை குறித்து, சங்கரி பிரசாத் நீதிமன்றத்தில் வினா எழுப்பினார் (Challenged the validity of the 1st Amendment Act). **ஷரத்து 13 (2)-ன்** கீழ் கூறப்பட்டுள்ள '**சட்டம்**' **(law)** எனும் பதத்தில் '**திருத்தச் சட்டமும்**' அடங்கும். ஆகவே அத்திருத்தச் சட்டம் அடிப்படை உரிமைகளை மீறுமாறு அமைந்தால் அது **ஷரத்து 13 (2)-ன்** கீழ் இல்லாநிலையாகி (void) விடும் என்று, சங்கரி பிரசாத் வாதாடினார். [சட்டங்கள் அடிப்படை உரிமையை மீறுமாறு அமைந்தால், அது இல்லாநிலையதாகி விடும் என்பது ஷரத்து 13 (2) கூறும் கோட்பாடு]. ஆனால் உச்ச நீதிமன்றம் ஷரத்து 13 (2)-ல் கூறப்பட்டுள்ள 'சட்டம்' எனும் பதமானது, ஒரு திருத்தச் சட்டத்தினை உள்ளடக்காது எனக் கூறி சங்கரி பிரசாத்தின் மேற்படி வாதத்தை நிராகரித்து விட்டது. ஆக ஒரு திருத்தச்

1. AIR 1951 SC 455 at p. 458

சட்டத்தின் வாயிலாக அடிப்படை உரிமைகளை மீறலாம் அல்லது பறிக்கலாம் என இதிலிருந்து தெரிய வருகிறது. சுருங்கக்கூறின், **ஷரத்து 368-ல்** கூறியுள்ளபடி, பாராளுமன்றம் அடிப்படை உரிமைகள் எதனையும் திருத்தி அதனை மீறுமாறு அல்லது பறிக்குமாறு செய்யலாம், என்று இவ்வழக்கில் கூறப்பட்டது.

Sajjan Singh v. State of Rajasthan[1] - இவ்வழக்கில், சாஜன்சிங் என்பவர் 1964-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 17வது திருத்தச் சட்டத்தின் செல்லுதன்மை (validity) குறித்து வினா எழுப்பினார். உச்ச நீதிமன்றம், சங்கரி பிரசாத் வழக்கில் கூறப்பட்ட முடிவினைப் பின்பற்றி, ஷரத்து 13 (2)-ன் கீழ் உள்ள **'சட்டம்'** எனும் பதத்தில் **'ஒரு திருத்தச் சட்டம்'** அடங்காது, என தீர்ப்புக் கூறியது.

Golaknath v. State of Punjab[2] - இப்புகழ் பெற்ற வழக்கில் கோலக்நாத் என்பவர் மீண்டும் மேற்படி 17வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் செல்லுதன்மை குறித்து வினா எழுப்பினார். இவ்வழக்கில்தான், பாராளுமன்றத்தின் உயர்நிலைக்கு (Parliament's Supremacy) மரண அடி கிடைத்தது. **தலைமை நீதியரசர் சுப்பாராவ்** அவர்களும் மற்ற அய்ந்து நீதியரசர்களும் சேர்த்து சங்கரி பிரசாத் மற்றும் சாஜன் சிங் வழக்கில் கூறப்பட்ட முடிவுகளை **ஒதுக்கித் தள்ளினர் (Overruled). அரசியலமைப்பின் III-வது பகுதியின் அடிப்படை உரிமைகளை மீறும் அல்லது பறிக்கும் வண்ணம், அவற்றில் எவ்வித திருத்தத்தையும் செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை** என்று மேற்படி நீதியரசர்கள் கூறினார்கள். மேலும் அவர்கள், தங்களுடைய தீர்ப்புக்கு சார்பாக பின்வரும் காரணங்களை எடுத்துக் கூறினர்.

1. பாராளுமன்றம் என்பது இறைமை (Sovereign) பெற்ற ஓர் அமைப்பு அல்ல. அது, அரசியலமைப்பின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும். 2. திருத்தச் சட்டம் என்பது ஒரு அரசியல் பிரச்சனை அல்ல. அது நீதிமுறை மறு சீராய்வு (Judicial review) உட்பட்டதாகும். **3. ஷரத்து 368,** அரசியலமைப்பினை திருத்தும் நடைமுறையினைப் பற்றி மட்டுமே கூறுகின்றன. மேலும் **ஷரத்துகள் 240 மற்றும் 247** மட்டுமே, **பாராளுமன்றத்திற்கு திருத்தும் அதிகாரத்தினை** அளிக்கின்றன. எனவே, திருத்தம் செய்தல் என்பது, சட்டமியற்று நடைமுறையாகும் (legislative process). 4. ஷரத்து 13

1. AIR 1965 SC 845
2. AIR 1967 SC 1643

(2)-ன் கீழ் கூறப்பட்டுள்ள 'சட்டம்' எனும் பதம் ஒரு 'திருத்தச் சட்டத்தையும்' உள்ளடக்கியதாகும். ஆகவே, ஏதேனும் ஒரு திருத்தச் சட்டம், அடிப்படை உரிமைகளை மீறினால், அது இல்லாநிலைய தாகிவிடும். 5. பாராளுமன்றம் **ஷரத்து 368-ன் கீழ் அடிப்படை உரிமைகளை மீறும்படி அல்லது பறிக்கும்படி திருத்தங்கள் எதையும் கொணர முடியாது.** இவை பாராளுமன்றத்தின் பார்வையிலிருந்து வெகு தூரத்தில் பத்திரமாக உள்ளன.

வருநிகழ்வு ஒதுக்கித்தள்ளல் கோட்பாடு (Prospective overruling):

உச்ச நீதிமன்றம், இக்கோட்பாட்டினை முதன்முதலாக **கோலக்நாத்** வழக்கில் பின்பற்றியது. இதன்படி கோலக்நாத் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பானது, வருநிகழ்வு விளைவினை மட்டுமே கொண்டு உள்ளது என்றும், அது அடிப்படை உரிமைகளை மீறுமாறு அல்லது பறிக்குமாறு பாராளுமன்றத்தால் இவ்வழக்கிற்கு முன்னர் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டங்களை பாதிக்காது என்றும் கூறப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்பானது 1967 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி வெளியிடப்பட்டது. அந்த தேதியிலி ருந்துதான் அதன் செயல்விளைவு (effect) ஏற்படுமே தவிர, அதற்கு முன்னர் ஏற்பட்ட திருத்தச் சட்டங்களை பாதிக்காது எனப்பட்டது. ஆக, இதனடிப்படையில், அடிப்படை உரிமைகளை மீறுமாறு கொண்டு வரப்பட்ட 1வது, 4வது மற்றும் 17-வது திருத்தச் சட்டங்கள் செல்லுதன்மை உடையதாகவே விளங்கும், என்று கூறப்பட்டது.

1971-ஆம் ஆண்டின் 24வது திருத்தச் சட்டம் (24th Amendment Act, 1971):

கோலக்நாத் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பினை ஒதுக்கித் தள்ளுவதற்கு (overrule), பாராளுமன்றம் 24வது திருத்தச் சட்டத் தினைக் கொண்டு வந்தது. இத்திருத்தச் சட்டம், சங்கரி பிரசாத் மற்றும் சாஜன்சிங் வழக்கில் கூறப்பட்ட முடிவுகளை ஆமோதித்தது; அங்கீகரித்தது. அதாவது, ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டம் ஷரத்து 13ல் கூறப்பட்ட 'சட்டம்' எனும் பொருளில் அடங்காது, எனப்பட்டது. மேலும் இத்திருத்தச் சட்டம், பாராளுமன்றத்தின் திருத்தும் அதிகாரத்தை மேலும் அதிகமாக்கியது. இங்கு மீண்டும் **பாராளுமன்றத்தின் உயர் நிலைமை (Parliament's Supremacy)** நிலைநாட்டப்பட்டது.

Keshavanand Bharathi v. State of Kerala[1] (or) Fundamental Rights Case

இவ்வழக்கில் மேற்படி 24வது திருத்தச் சட்டத்தின் செல்லுதன்மை குறித்து வினா எழுப்பப்பட்டது. அதாவது, **ஷரத்து 368ன் கீழ் அரசியலமைப்பினை திருத்துவதற்கு, பாராளுமன்றத்திற்கு எந்த அளவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது** என்பதே அவ்வினாவாகும். இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் பின்வரும் தீர்ப்பினை, பெரும்பான்மையான நீதியரசர்கள் கூறினார்கள். அதன்படி, பாராளுமன்றத்திற்கு அடிப்படை உரிமைகளைக் கூட திருத்தும் அதிகாரம் உள்ளது. ஆனால் அத்தகு திருத்தும் அதிகாரமானது, அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை [Basic Structure (feature) of the Constitution] அழிக்கும் அல்லது மீறும் வகையில் பயன்படுத்தப்படக்கூடாது என்றும், **ஷரத்து 368ன்** கீழ், அரசியலமைப்பை திருத்த கட்டுவரம்பற்ற அதிகாரத்தைப் பாராளுமன்றம் பெற்றிருக்கவில்லை என்றும் மேற்படி வழக்கில் உறுதியாக விளம்பப்பட்டது.

அடிப்படை அம்சங்கள் (அல்லது) அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாடு [Theory of Basic features (or) Basic structure]:

இங்கு அடிப்படை அம்சங்கள் என்றால், அவை எவ்வெவற்றை உள்ளடக்கும் என்ற வினா எழுகிறது. மேற்படி கேசவானந்த பாரதி வழக்கில் தீர்ப்பளித்த பல்வேறு நீதியரசர்கள், எவையெல்லாம் அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள் (Basic features) அல்லது எக்கூறுகளெல்லாம், அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பாக (Basic structure of the Constitution) விளங்குகின்றன என்று கூறினர். அவற்றின் தொகுப்பு வருமாறு.

1. அரசியலமைப்பின் உயர்தன்மை (Supremacy of the Constitution)

2. குடியரசு மற்றும் மக்களாட்சி அமைப்புடைய அரசங்கம் (Republican and Democratic forms of Government)

3. அரசியலமைப்பின் மதசார்பற்ற தன்மை (Secular Character of the Constitution)

4. அதிகாரப் பிரிவு (Separation of Powers)

1. AIR (1973) SC 1461

5. அரசியலமைப்பின் கூட்டாட்சி தன்மை (Federal Character of the Constitution)

6. ஒரு மக்கள் நல அரசை உருவாக்கும் அதிகாரம் (Mandate to build a welfare State)

7. பல்வேறுபட்ட அடிப்படையான சுதந்திர உரிமைகளால் பாதுகாக்கப்படும் தனிமனிதனின் மாண்பு (Dignity of the individual secured by various freedoms and basic rights)

8. நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு (Unity and integrity of the nation)

9. முகப்புரையின் நோக்கங்கள் (Objectives mentioned in the Preamble to the Constitution)

10. சட்டத்தின் ஆட்சி (Rule of Law)

11. பாராளுமன்ற அரசாங்க முறை (Parliamentary system of Government)

மேற்கண்டவை யாவும் எடுத்துக்காட்டுகளே தவிர, முழுமையானதல்ல என்றும், எது அரசியலமைப்பின் அம்சம் என்பது ஒவ்வொரு வழக்கின் சூழலைப் பொறுத்தது என்றும் அந்நீதியரசர்கள் கூறினர்.

இவ்வாறு **Indira Nehru Gandhi v. Raj Narain**[1] எனும் வழக்கில், நீதிமுறை மறுசீராய்வு அதிகாரம் (Judicial Review) மற்றும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு வழிவகுக்கும் மக்களாட்சி (Democracy which implies free and fair Election) எனும் இரு கூறுகள், அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகள் எனப்பட்டன.

மேற்கண்ட அடிப்படை அம்சங்களை அல்லது கூறுகளை (அதாவது அரசியலமைப்பின் கட்டமைப்பை) பாதிக்காமலும், மீறாமலும், பாராளுமன்றம் அரசியலமைப்பின் எந்த சட்ட வகைமுறையிலும் திருத்தம் செய்யலாம். **இவை, பாராளுமன்றத்தின் உயர் நிலையை பாதிக்கிறது (Affects the Parliament's Supremacy).** எவ்வாறெனில், அரசியலமைப்பினை திருத்த முழு அதிகாரம்

1. AIR 1975 SC 2299

பாராளுமன்றத்திற்கு அளிக்கப்படவில்லை. அடிப்படை கூறுகளுக்கு பங்கம் விளைவிக்காமலே, பாராளுமன்றம் அரசிய லமைப்பில் திருத்தம் செய்ய வேண்டும். அரசியலமைப்பினை திருத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு முன்பு இருந்த ஏகபோக அதிகாரம் தற்பொழுது மேற்படி அடிப்படை அம்சங்கள் அல்லது கூறுகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பினை திருத்தும் பொழுது, பாராளுமன்றம் அடிப்படைக் கூறுகளை கருத்தில் கொண்டு, அதனை அழித்துவிடாமல் சர்வ ஜாக்கிரதை யுடன் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அத்திருத்தம் இல்லா நிலையதாகிவிடும் (void). இவ்வாறு பாராளுமன்றத்தின் உயர் நிலைமை அடிப்படைக் கூறுகளால் பாதிக்கப்படுகின்றது.

1976-ன் 42வது திருத்தச் சட்டம் (42nd Amendment Act, 1976):

இத்திருத்தம் மீண்டும் சில மாற்றங்களை, (குழப்பங்களை) கொண்டுவந்தது. இதன்படி பாராளுமன்றத்தின் உயர் நிலைமை மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இத்திருத்தச் சட்டம், அரசியல மைப்பின் அடிப்படை அம்சங்கள் (Basic features of the Constitution) உள்ளிட்ட எச்சட்ட வகைமுறைகளையும் திருத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்தது. (கேசவானந்த பாரதி வழக்கில் பாராளுமன்றத்தின் திருத்தும் அதிகாரமானது அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை அழிப்பதாக இருக்கக்கூடாது என்பதை இங்கு நினைவு கூர்க.) உச்ச நீதிமன்றம் கண்டுபிடித்த அடிப்படை அம்சங்கள் கோட்பாடு, தெளிவற்றதாகும் என்று இத்திருத்தச் சட்டம் கூறியது. மக்களின் பொது விருப்பத் தினையே (common will of the people) பாராளுமன்றம் பிரதிபலிக் கிறது. ஆகவே மக்கள் அரசியலமைப்பினை திருத்த விரும்பினால், அதனை முற்றிலுமாகவே திருத்துவதற்குக்கூட பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அதற்கு எவ்வித தடையும் கிடையாது. இவ்வாறாக 42வது திருத்தச் சட்டமானது, கேசவானந்த பாரதி வழக்கில், அரசியலமைப்பினை திருத்தும் அதிகாரத்தின் மீது பாராளுமன்றத்திற்கு போடப்பட்ட தடையை நீக்கியது. மேலும் இது ஷரத்து 368-ல் பின்வரும் (4)வது உட்கூறையும் மற்றும் (5)வது உட்கூறையும் சேர்ந்தது.

ஷரத்து 368 உட்கூறு (4) [Article 368 Clause (4)]: ஷரத்து 368-ன் கீழ் செய்யப்பட்ட அரசியலமைப்பு திருத்தச் சட்டம் எதனையும், எக்காரணங்கொண்டும், எந்த நீதிமன்றத்திலும் மறுத்து வாதிடக்கூடாது.

ஷரத்து 368 உட்கூறு (5) [Article 368 Clause (5)]: சேர்த்தல் (addition), மாறுதல் செய்தல் (variation) அல்லது நீக்கம் செய்தல் (repeal) வழியாக, அரசியலமைப்பின் வகைமுறைகளை திருத்தம் செய்வதற்குண்டான பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் மீது எத்தடையும் விதிக்கக்கூடாது.

Minerva Mills v. Union of India[1] - இவ்வழக்கில் ஷரத்து 368-ன் உட்கூறுகள் (4)ம், (5)ம், அரசியலமைப்பின் **அடிப்படை அம்சங்களை அழிப்பதாக (destroys the basic features)** இருப்பதால், இல்லா நிலையதாகும் (void) என்று கூறி, அவைகளை உச்ச நீதிமன்றம் நீக்கியது. பாராளுமன்றத்தின் திருத்தும் அதிகாரத்தின் மீது மீண்டும் பழைய தடையை புகுத்தியது. இவ்வழக்கில் **'வரம்பிற் குட்பட்ட திருத்தும் அதிகாரமும்' (limited amending power),** அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும் எனப்பட்டது. இதன் மூலம் அரசியலமைப்புதான் உயர்ந்ததாகுமே தவிர பாராளுமன்றம் அல்ல, என்ற கருத்தினை உச்ச நீதிமன்றம் மீண்டும் தெளிவுபடக் கூறியது.

முடிவுரை:

மேற்கண்ட வழக்குகளின் தீர்ப்புகளையும், இடையிடையே ஏற்பட்ட அரசியல் திருத்தச் சட்டங்களையும் கருத்தில் கொண்டு, இன்றைய நிலைப்படி பார்த்தால், பின்வரும் முடிவுகள் புலனாகும்.

1. பாராளுமன்றம் ஷரத்து 368-ன்படி, அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளை திருத்தலாம். ஆனால் ஒரு திருத்தச் சட்டத்தின் வாயிலாக அவற்றை மீறவோ அல்லது பறிக்கவோ முடியாது. 2. மேலும் ஷரத்து 368-ன்படி, அடிப்படை அம்சங்களை மாற்றுவதற்கோ அல்லது திருத்துவதற்கோ பாராளுமன்றத்திற்கு அதிகாரமில்லை. 3. இவ்வாறு பாராளுமன்றத்தின் உயர் நிலையை (Parliament's Supremacy) அடிப்படை அம்சங்கள் (கூறுகள்) கோட்பாடு பாதிப்பதால், அரசியலமைப்புதான் உயர்ந்தது என்ற கொள்கை நிலைநிறுத்தப்படுகிறது.

3. Doctrine of Prospective Overruling - Write short notes. (வருநிகழ்வு ஒதுக்கித்தள்ளல் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

நீதிமன்றத்தின் ஏதாவதொரு முந்தய தீர்ப்பு ஒதுக்கித்

1. AIR 1980 SC 1789

தள்ளப்படும் பொழுது இக்கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. இங்ஙனம் ஒதுக்கித் தள்ளும் பொழுது நீதிமன்றமானது தனது புதிய தீர்ப்பை எதிர்காலத்தில் எழும் வழக்குகளில் மட்டுமே பொருத்தும். அவ்வாறு ஒதுக்கித் தள்ளப்பட்டதன் விளைவு பின்னோக்கிச் செல்லாது. அதாவது அந்த ஒதுக்கித்தள்ளுதற்கு முன் எழுந்த வழக்குகளை பாதிக்காது.

கோலக்நாத் வழக்கில் இக்கோட்பாடு பயன்படுத்தப்பட்டது. அதன்படி 17வது திருத்தச் சட்டம் உள்ளிட்டு அதுவரை செய்யப்பட்ட திருத்தச் சட்டங்கள், செய்சட்டங்கள் (Acts). முந்திய தீர்ப்புகள் யாவும் செல்லுபடியாகும் என்று மேற்கண்ட வழக்கில் கூறப்பட்டது.

இக்கோட்பாடு அரசியலமைப்பு தொடர்பான விடயங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், அதையும் உச்ச நீதிமன்றம்தான் செய்ய வேண்டும் என்றும் மாண்பமை **நீதியரசர் சுப்பாராவ்** மேற்கண்ட வழக்கின்போது கூறினார். [வினா எண் 2-ல் கூறப்பட்ட கருத்துக்களையும் சேர்த்துக்கொள்க].

-oOo-

அத்தியாயம் 8

அரசின் பொறுப்பு நிலை
(The State Liability)

தீங்கு மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளில் அரசு அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு நிலை
(ஷரத்துகள் 299 மற்றும் 300)
(Liability of State or Government in Torts and Contracts)
(Articles 299 and 300)

1. When and to what extent is the Government of India liable in (a) Contract and (b) Torts? (எப்பொழுது மற்றும் எந்த அளவிற்கு இந்திய அரசாங்கம் பின்வருவனவற்றில் பொறுப்புநிலை வகிக்கிறது? (அ) ஒப்பந்தம் (ஆ) தீங்கியல்.)

(அல்லது)

Define State liability. Explain the State liability regarding Contract and Torts with cases. (அரசின் பொறுப்புநிலை குறித்து வரையறு. ஒப்பந்தம் மற்றும் தீங்கியல் குற்றம் குறித்த அரசின் பொறுப்பு நிலையை வழக்குகளுடன் விளக்கு.)

அரசின் பொறுப்பு நிலை:

இந்திய அரசு இந்திய ஒன்றியத்தின் பெயரிலும், மாநில அரசாங்கம் மாநிலத்தின் பெயரிலும், வழக்கிடவோ அல்லது அதன் மீது வழக்கிடப்படவோ முடியுமென **ஷரத்து 300 (1)** கூறுகிறது.

தனிப்பட்ட சாமானியர்கள் எப்படி வழக்கினை தொடுக்க அல்லது அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட உண்டான நிலையை பெற்றிருக்கின்றார்களோ, அதேபோல் மத்திய மற்றும் மாநில அரசுகளும் பெற்றுள்ளன. இதனால் இவைகள் சட்ட நபர்களாக (Juristic persons) கருதப்படுகின்றன. இந்திய அரசு ஒரு சட்ட நபராக கருதப்படுவதால், அரசியலமைப்பு தொடங்குவதற்கு முன்னர், இந்திய அரசாங்கம் சட்டத் தகுநிலையை கொண்டதாக இருந்ததா என ஆராய வேண்டிய அவசியமில்லை என்று **Bihar ECF Co-op. Society v. Sipahi Singh**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

(அ) ஒப்பந்தத்தில் பொறுப்பு நிலை (Liability in Contract):

ஷரத்து 298, இந்திய அரசாங்கம் ஒப்பந்தத்தில் ஈடுபட அதிகாரம் அளிக்கிறது. ஆனால் அது **ஷரத்து 299ல்** கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி அமைய வேண்டும். அந்நிபந்தனைகள் பின்வருமாறு.

1. ஒப்பந்தமானது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரால் செய்யப்படுகிறது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

2. ஒப்பந்தமானது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் சார்பாக கையொப்பமிடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டு எழுதிக் கொடுக்கப்பட (Executed) வேண்டும்.

3. குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் அவைகளை யாரால் எவ்விதமாகச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறாரோ (Direction) அல்லது இசைவு ஆணை (Authorise) அளிக்கிறாரோ அவ்வாறே அந்த நபர்களால் அவ்விதமாகக் கையொப்பமிடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டு முற்றுப் பெற்றிருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டால், ஒரு ஒப்பந்தத்தில் இந்திய அரசு அதற்கு பொறுப்புடையதாக ஆகி விடும். எனவே, மேற்படி நிபந்தனைகள் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய (mandatory provisions) ஒன்றாகும். மீறினால், அவ்வொப்பந்தம் இல்லா நிலையதாகும்.

ஒப்பந்தச் சட்டப்படி ஒருவருக்கு உள்ள அதே பொறுப்பு நிலையை, அரசு, அரசியலமைப்பின் கீழ் கொண்டுள்ளது. குடியரசுத் தலைவரின் பெயரில் அந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதைக்

1. AIR 1977 SC 2149

காரணமாகக் காட்டி, அவர் மீது ஒப்பந்தப் பொறுப்பைத் தினிக்க முடியாது.

சில முக்கியமான வழக்குகள்:

Bihar ECF Co-operative Society v. Sipahi Singh[1] - ஷரத்து 299-ல் கூறப்பட்டுள்ள மூன்று நிபந்தனைகளை பின்பற்றாமல் செய்யப்படும் அரசு ஒப்பந்தங்கள் இல்லாநிலையதும் (void), செல்லத்தகாததும் (Nullified) ஆகும், என மேற்கண்ட வழக்கில் கூறப்பட்டது.

Karamshi v. State of Bombay[2] - கண்காணிப்பு பொறியாளருக்கும் (Superintendent Engineer) கரும்புப் பண்ணை வைத்திருக்கும் ஒரு நபருக்குமிடையே, கால்வாய் நீரை, அவருடைய கரும்புப் பண்ணை பாகத்திற்கு விடுவதற்கான ஓர் உடன்படிக்கை, கடிதங்கள் மூலமாக ஏற்பட்டது. ஆனால் ஆளுநரின் பெயரில் முறையான ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. சிறிது காலத்திற்கு நீர் அளிக்கப்பட்ட பிறகு, அந்நீர் அளிப்பு நிறுத்தப்பட்டது. நீதிமன்றமானது, அரசிற்கும் தொடர்புடைய நபருக்குமிடையே ஒப்பந்தம் உண்டானதை ஆவணச் சான்று மூலம் அறிந்து கொண்டது. ஆனால் ஆளுநரின் பெயரில் ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொடுக்கப்படவில்லை. மேலும், இவ்வொப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பு பொறியாளர், ஒப்பந்தத்தில் ஈடுபட சட்டப்படி அதிகாரம் அளிக்கப்பட்டவரா என்பது தெளிவாக இல்லை. ஆகவே இவ்வொப்பந்தத்தை வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது, என்று நீதிமன்றம் கூறியது.

Bhikraj Jaipura v. Government of India[3] - இவ்வழக்கில் இரயில்வே நிர்வாகத்தின் கோட்டக் கண்காணிப்பாளருக்கும் (Divisional Superintendent) தனிநபருக்கும் இடையே உணவுத் தானியங்களை இரயில்வேக்கு வழங்குதல் பற்றி ஒப்பந்தம் முறைப்படி செய்யப்பட்டிருந்தது. ஆனால், கோட்டக் கண்காணிப்பாளர், அவ்வொப்பந்தத்தில் இந்தியத் தலைமை ஆளுநரின் (Governor General of India) சார்பில் கையொப்பமிடவில்லை. உச்ச நீதிமன்றம் அவ்வொப்பந்தத்தினை செயல்படுத்த இயலாதென அறிவித்து விட்டது.

1. AIR 1977 SC 2149
2. AIR 1964 SC 1714
3. AIR 1962 SC 113

ஷரத்து 229-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை அப்படியே பின்பற்றினால், அது அரசாங்க நடைமுறைகளை சிக்கல் நிறைந்ததாக ஆக்குவதோடு மட்டுமல்லாமல், சில நேரங்களில் தனி மனிதனுக்கு அநீதியையும் விளைவித்துவிடும். இதனைக் கருத்தில் கொண்டு நீதிமன்றம் வழக்குகளின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மேற்படி ஷரத்தின் கடினத் தன்மையை சற்றே தளர்த்தியது. பின்வரும் வழக்கை எடுத்துக்காட்டாக கூறலாம்.

Union of India v. Rallia Ram[1] - இவ்வழக்கில், இந்திய அரசாங்கத்தின், கொள்முதல் துறையின் தலைமை இயக்குநர் (Chief Director of Purchases) சில சிகரெட்டுகளை வாங்குவதற்காக, ஒப்பந்தப் புள்ளிகளை (Tender) வரவேற்றார். எதிர் மனுதாரரின் ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்பட்டு, அந்த ஏற்புக் கடிதம் இயக்குநரால் கையொப்பமிடப்பட்டது. முறையான ஒப்பந்த ஆவணம் மூலமாகத் தான், ஒப்பந்தம் ஏற்பட வேண்டும், என்று ஷரத்து 299 வலியுறுத்த வில்லை. மேலும் ஒரு ஒப்பந்தம் எங்ஙனம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற முறையை குடியரசுத் தலைவர் அறிவிக்காமல் இருக்கும் பட்சத்தில் தரப்பினர்களுக்கு இடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்தே ஒப்பந்தம் ஏற்படுவதற்கு போதுமானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி வழக்கில் தரப்பினர் களுக்கு இடையே ஏற்பட்ட கடிதத் தொடர்பே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கியது.

(ஆ) தீங்குரிமை வழக்குகளில் பொறுப்பு நிலை (Liability in Torts):

இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பு, ஏதேனும் சட்டப் பிரச்சனை எழுந்தால், அது இங்கிலாந்தின் சட்டங்களை பின்பற்றி தீர்க்கப்பட வேண்டிய நிலை இருந்தது.

'அரசர் தவறு செய்யார்' (King can do no wrong) என்ற முதுமொழி, ஆங்கிலப் பொதுச் சட்டத்தில் இருந்தது. இம்முது மொழியின் தத்துவப்படி, அரசு ஊழியர்கள் செய்த தவற்றிற்கு, அரசரைப் பொறுப்பாக்க முடியாது என்பதாகும். ஆனால் பிரிட்ட னில், 1947 ஆம் ஆண்டில் கொணரப்பட்ட அரசு நடவடிக்கைகள் சட்டம், மேற்கண்ட நிலையினை நீக்கியது. எனவே, இங்கிலாந்தில் இன்று சட்டத் தகுதி (Legal Capacity) வாய்ந்த வயது வந்த ஒரு நபரைப் போன்று அரசாங்கத்தின் தீங்கு செய்கைகளுக்காக (Tor-

1. AIR 1963 SC 1685

tious Act) நீதிமன்றங்களின் முன், அரசிற்கு எதிராக உரிமை வழக்குகளைக் கொண்டு வரமுடியும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 300 (1)**, தீங்கு செய்கைகளுக்காக அரசாங்கத்தின் மீது பகரப்பொறுப்பில் (vicarious liability) உரிமை வழக்குத் தொடர்வது பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனால் அது நேரடியாக எதையும் கூறாமல் சுற்றி வளைத்துக் கூறுகின்றது. அது இன்றைய இந்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் மீது தீங்குச் செய்கைகளுக்காக, அதற்கு பதிலாக அன்றிலிருந்த இந்திய ஆட்சியுரிமை அரசாங்கம் அல்லது அதன் கீழிருந்த மாகாணங்கள் அல்லது இந்திய மாநில அரசாங்கங்கள் மீது இந்திய அரசியலமைப்பு அமலுக்கு வருவதற்கு முன்பாக எவ்வாறு தீங்குச் செயல்களுக்காக உரிமை வழக்குகள் தொடுக்கப் பட்டிருக்குமோ அவ்வாறே தீங்குரிமை வழக்குகள் தொடுக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. இது நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றம், இயற்றும் சட்டத்திற்குட்பட்டதெனவும் கூறுகின்றது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வருவதற்கு முன், அரசு ஊழியர்களின் தீங்குச் செயல்களுக்கு இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனியும், 1858-ஆம் ஆண்டு சட்டம் அமலுக்கு வந்தவுடன், இந்திய அரசின் செயலாளரும் (Secretary of State in Council) பகரப் பொறுப்பு வகித்தனர்.

ஆக, **ஷரத்து 300** உட்கிடையாக உணர்த்துவது என்ன வென்றால் இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனி மீது எவ்வாறு தீங்குச் செய்கைகளுக்காக உரிமை வழக்குகள் தொடரப்பட்டிருக் குமோ அவ்வாறே இன்றைய இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் மீது வழக்குகள் தொடர முடியும் என்பதுதான்.

இது குறித்த மிக முக்கியமான வழக்குகள் பின்வருமாறு:

P & O Steam Navigation Company v. Secretary of State[1] - கப்பல் துறைமுகத்திற்கு (Dockyard), கிடார்பூர் அரசாங்க கப்பல் துறைமுக தொழிலாளர்கள் அருகில் உள்ள பொதுச்சாலை வழியாக இரும்பு எஃகுத் துண்டுகளை எடுத்துச் செல்லுகையில் வாதியின் குதிரைகள் மீது கவனக்குறைவு (negligence) காரணமாக மோதி விட்டார்கள். அதனால் வாதியின் குதிரைகளுக்கு காயம் ஏற்பட் டது. வாதி, இந்திய அரசு செயலாளருக்கு (Secretary of State) எதிராக,

1. 5 Bom. H.C.R. App.

அரசுத் தொழிலாளர்களின் கவனக்குறைவினால் குதிரைகளுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தீங்கீடு (Damages) கோரி வழக்கு தொடுத்தார். அரசு ஊழியர்களின் கவனக்குறைவிற்கு, இந்திய அரசுச் செயலாளர், வாதிக்கு தீங்கீடு கொடுக்க பொறுப்புடையவர் ஆவார், என்று கல்கத்தா உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் இறைமைச் செயல் (Sovereign function) மற்றும் இறைமையல்லாத செயல் (Non-Sovereign function) எனும் கொள்கையும் ஏற்படுத்தப்பட்டது.

ஒரு செயலானது இறைமைத் தன்மையில் செய்யப்பட்டால், அதாவது அச்செயல் அரசால் தவிர மற்ற தனியார் முகமைகளால் செய்யப்படாத பொழுது, ஒரு அரசு ஊழியர் தனது பணிக்காலத்தில் புரியும் தவறுகளுக்கு அரசு பொறுப்பேற்காது. ஆனால், ஒரு செயலானது இறையல்லாத தன்மையில் செய்யப்படும் பொழுது, அதாவது அச்செயலானது அரசாங்கம் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் வாயிலாக (delegation of powers) ஒரு தனி நபர் போன்றோ அல்லது தனியார் முகமை போன்றோ இருந்து செய்யப்படுகையில், எழும் பொறுப்புகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும். ஆனால் செயல்களை, இறைமைச் செயல் என்றும் இறைமை யல்லாச் செயல் என்றும் பிரிப்பது கடினமாகும்

மேற்படி வழக்கில் கப்பல் துறைமுக பராமரிப்பானது ஒரு இறைமையல்லாத செயலாக கருதப்பட்டது. அதனை அரசு அதிகாரம் பெற்ற எந்த ஒரு தனிநபரும் மேற்கொள்ளலாம். பின்வரும் வழக்குகளில் **இறைமையல்லாத செயல்** எனும் கொள்கை (Principle of non-sovereign function) பின்பற்றப்பட்டது.

State of Rajasthan v. Vidyawathi[1] - இவ்வழக்கில் மாவட்ட ஆட்சியருடைய (District Collector) அரசாங்க ஜீப் ஓட்டுநர், பட்டறையிலிருந்து (Workshop) ஜீப்பினை மாவட்ட ஆட்சியருடைய இல்லத்திற்கு ஓட்டி செல்லுகையில், பாதசாரி (Pedestrian) ஒருவர் மீது கவனக்குறைவாக மோதி அவரைக் கொன்று விடுகிறார். உச்ச நீதிமன்றம் அவ்விபத்து இறைமைச் செயலைச் செய்யும்பொழுது ஏற்படவில்லையாதலால் அது இறைமை யல்லாச் செயல் என்று முடிவு செய்து, அரசாங்கம் தீங்கீடு வழங்க வேண்டுமென்று தீர்ப்புக் கூறியது.

Kasturi Lal Ralia Ram Jain v. State of U.P.[2] - இவ்வழக்கில்

1. AIR 1962 SC 933
2. AIR 1965 SC 1039

வியாபாரி ஒருவரை சந்தேகப்பட்டு, அவரிடமிருந்த அளி கலன்களை (தங்கம், வெள்ளி பொருட்கள்) கைப்பற்றிய தலைமைக் காவலர், அதனைக் கையாடிக் கொண்டு (Misappropriation) பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார். பொருள்கள் காவல் நிலையத்தின் பாதுகாப்பில் இல்லை. அவ்வியாபாரி குற்றமற்றவரென விடுவிக்கப் பட்ட பிறகு தன்னுடைய பொருள்களை திரும்ப பெற்றுக் கொடுக்கும்படியோ அல்லது அதற்கு ஈடாக பணத்தையாவது பெற்றுக் கொடுக்கும்படியோ அவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஆனால் அரசாங்கம் அப்பொருள்கள் அரசாங்கத் தின் இறைமைச் செயலின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாகவும், உரிமை வழக்கு அரசாங்கத்தின் இறைமைச் செயலுக்கு எதிராக எழாதென்றும், வாதிட்டது. அரசாங்கத்தின் வாதத்தை ஏற்றுக் கொண்டு, அப்பொருள்களை கொடுக்கவோ அல்லது பணத்தை கொடுக்கவோ அரசாங்கத்திற்கு பொறுப்பு கிடையாது, என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

இறைமை செயல்களுக்கு உதாரணங்கள்:

1. இராணுவத்தினர் கூடாரமடித்துத் தங்கும் பொழுது ஏற்படுத்தும் தீக்காக (Camp fire) விறகுக் கட்டைகளை, இராணுவத்தினர் எடுத்துச் செல்வது இறைமைச் செயலாகக் கருதப்பட்டது. **(Rooplal v. Union of India[1]).**

2. நாள் முழுவதும் இராணுவ அதிகாரிகளையும் அவர்களது பணியையும் கண்காணிப்பது. **(Baxi Amrick Singh v. Union of India[2])**

2. Examine the scope of the contractual liability of the State under the Constitution of India. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அரசின் ஒப்பந்தப் பொறுப்புநிலையின் அளவை ஆராய்க.)

(அல்லது)

Briefly discuss the provision relating to contracts on behalf of Government. Is it a mandatory provision? If so, what are its effects of non-compliance? (அரசின் ஒப்பந்தப் பொறுப்புநிலையின் இயல்பையும் அவை தொடர்பான வழிவகையை குறிப்பிட்டு

1. AIR 1972 J & K 22
2. 1973 Punj. L.R. 1

விளக்கமாக கூர்ந்து ஆராய்க. இவை தவிர்க்கவியலாத வழி வகையா? அப்படியானால் இதன் கீழ்ப்படியாமையின் விளைவுகள் என்ன?)

(முந்தய வினாவின் விடையில் 'ஒப்பந்தத்தில் பொறுப்புநிலை' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை எழுதவும்.)

3. Examine the concept of Sovereign functions in vicarious liability of State. (அரசின் பகரப் பொறுப்புநிலையில் இறை செயல் கருத்தை ஆராய்க.)

(அல்லது)

With the help of decided cases, discuss the liability of the State for the torts committed by its servants in India. (முடிவுற்ற வழக்குகளின் துணையுடன் இந்தியாவில் அரசுப் பணியாளர்களின் செய்கை களுக்கு அரசின் தீங்கியல் பொறுப்புநிலை பற்றி விவாதிக்கவும்.)

(வினா எண் 1-ன் விடையில் "தீங்குரிமை வழக்குகளில் பொறுப்புநிலை" என்ற பகுதியை எழுதவும்.)

-oOo-

அத்தியாயம் 9

சில வகுப்பினர்கள் தொடர்பாக சிறப்பான சட்ட வகைமுறைகள் (Special Provisions to Certain Classes)

அட்டவணை சாதியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசியலமைப்பு வழங்கும் பாதுகாப்புகள்

(ஷரத்துகள் 330 முதல் 342)

(Safeguards to Scheduled Caste and Backward Classes)

(Articles 330 to 342)

Examine Constitutional safeguards for schedule caste and backward classes under the Constitution. (அட்டவணை சாதியினருக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் அரசியலமைப்பின் கீழ் வழங்கப்படும் அரசியல் ரீதியான பாதுகாப்புகளை ஆராய்க.)

அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினர்:

அட்டவணை சாதியினர் (Scheduled Castes) மற்றும் பழங் குடியினருக்கு (Scheduled Tribes) சில அரசியல் பாதுகாப்புகளை அரசியலமைப்பு தருகின்றது. ஆனால் அட்டவணை சாதியினர் எவர் என்றோ அல்லது பழங்குடியினர் எவர் என்றோ அரசிய லமைப்புச் சட்டம் வரையறுக்கவில்லை என்றாலும், இவர்களின் பட்டியலை தயாரிக்க குடியரசுத் தலைவருக்கு அரசியலமைப்பு அதிகாரமளிக்கிறது. இப்பிரிவினர்களுக்கு அரசியலமைப்ப

அளிக்கும் பாதுகாப்புகள் பின்வருமாறு.

சிறப்பான சட்ட வகைமுறைகள்:

அட்டவணை சாதியினருக்காகவும், பழங்குடியினருக்காக வும் பாராளுமன்ற மக்களவையிலும், மாநில சட்டமன்றப் பேரவையிலும் இட ஒதுக்கீடு (seat reservation) செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு, மக்கள்தொகையின் அடிப்படையில் செய்யப் படுகின்றது. **(ஷரத்துகள் 330 முதல் 332)**

அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினர்களின் உறுப்பினர்களின் கோரிக்கைகளை மத்திய அரசு கருத்தில் கொள்ளும். நிர்வாக பராமரிப்பு, பணிகளில் நியமனம் மற்றும் மத்திய மாநிலங்களின் கீழ் பதவி நியமனம் குறித்த கோரிக்கைகளை மத்திய அரசு ஆராயும். பதவி நியமனங்கள் குறித்து, அரசியலமைப்பு இவர்களுக்கென்று தனியாக இட ஒதுக்கீடு செய்துள்ளது. **(ஷரத்து 335)**

இவர்களுக்கென்று ஒரு தனி அதிகாரியை (Special Officer) நியமிக்க, குடியரசுத் தலைவருக்கு அரசியலமைப்பு அதிகாரம் அளித்து உள்ளது. மேற்படி வகுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் குறித்து தீர ஆராய்ந்து, அது பற்றிய அறிக்கைகளை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது, மேற்படி தனி அதிகாரியின் கடமை ஆகும். இந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும், குடியரசுத் தலைவர் வைக்க வேண்டும். இதனால் இவர்களது முன்னேற்றம் மேலும் உயர வழி வகுக்கப்படும். **(ஷரத்து 338)**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (Backward Classes):

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் யார் யார் அடங்குவர் என அரசியலமைப்புச் சட்டம் கூறவில்லை. மத்திய அரசும், மாநில அரசுகளும் மட்டுமே அத்தகு வகுப்பினர் யார் என்பதை குறிப்பிட வேண்டியுள்ளது. இந்திய எல்லைக்குள் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின், குறிப்பாக கல்வியினால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நிலைகளை ஆராய்ந்தறிய, குடியரசுத் தலைவர் **ஓர் ஆணையத்தை (Commission)** நியமிக்க ஷரத்து 340 வகை செய்கிறது. இவ்வாணையம், அவர்களின் துன்பங்களைக் கண்டறிந்து, அதைப் போக்க தக்க வழிகளை மத்திய அரசிற்கோ அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசிற்கோ பரிந்துரை செய்கிறது.

இவர்களுக்கு என்று அரசுப் பதவிகளில், பணிகளில் இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டின் சதவீதம் நியாயமானதா என்று விசாரணை செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அது நியாயமற்றதாக இருந்தால், அரசியலமைப்பினை மீறியதாகப் பொருள்படும். இதன்படி நியமிக்கப்பட்டதுதான் **'மண்டல் கமிஷன்' (Mandal Commission)** ஆகும்.

முடிவுரை:

"அரசு மக்களின் நலிந்த பிரிவினர், குறிப்பாக அட்டவணை சாதியினர், பழங்குடியினர் ஆகியோரின் கல்வி, பொருளாதார நலப் பற்றுகளைத் தனிவகை நாட்டத்துடன் பேணி வளர்த்தல் வேண்டும்; மற்றும் சமுதாய அநீதியிலிருந்தும் அனைத்து வகையான சுரண்டல் களிலிருந்தும் அவர்களுக்கு காப்பளித்தல் வேண்டும்", என **ஷரத்து 46** (அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கை) குறிப்பிடுவதிலிருந்து, அரசியலமைப்பு அவர்களுக்கு அளித்திருக்கும் பாதுகாப்பும் முக்கியத்துவமும் புலனாகும்.

-oOo-

அத்தியாயம் 10

ஆட்சி மொழி
(Official Language)

மத்திய அரசு மற்றும் மாநில அரசின் ஆட்சி மொழி
(ஷரத்துகள் 343 முதல் 351)
(Official Language of the Centre and State)
(Articles 343 and 351)

Official Language - Write short notes. (ஆட்சிமொழி - குறுகிய விடை தருக.)

மத்திய அரசின் ஆட்சிமொழி:

மத்திய அரசின் ஆட்சிமொழி தேவநாகரி எழுத்துருவி லுள்ள இந்தி ஆக இருத்தல் வேண்டும் என்றும், மத்திய அரசின் அலுவல் முறை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய எண்களின் வடிவம், இந்திய எண்களின் பன்னாட்டு வடிவமாக (international form) இருத்தல் வேண்டும் என்றும், **ஷரத்து 343 (1)** கூறுகிறது.

இந்திய அரசியலமைப்பு தொடங்கிய 15 ஆண்டு கால அளவுக்கு அத்தகைய தொடக்கத்தை ஒட்டி முன்பு ஆங்கில மொழி, மத்திய அரசின் எந்த அலுவல் முறை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததோ, அந்த அலுவல் முறை நோக்கங்கள் அனைத்திற்கும் இது தொடர்ந்து பயன்படுத்தப் படுதல் வேண்டும்.

ஆனால் மேற்சொன்ன கால அளவின் போது, மத்திய அரசின் அலுவல்முறை நோக்கங்களில் எதற்காகவேனும் ஆங்கில மொழியோடும் கூட இந்தி மொழியையும், இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தோடும் கூட தேவநாகரி வடிவ எண்களையும் (இந்தி மொழி எண்கள்) பயன்படுத்துவதற்கு குடியரசுத் தலைவர் ஆணை வாயிலாக அதிகாரமளிக்கலாம் என **ஷரத்து 343 (2)** கூறுகிறது.

மத்திய அரசின் அலுவல்முறை நோக்கங்களுக்காக இந்தி மொழியை மேன்மேலும் பயன்படுத்துவதற்காக வேறு சிலவற்றினைக் குறித்தும் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைகள் செய்வதற்காக, **ஆட்சிமொழி ஆணையம் (Commission)** ஒன்றினை நிறுவுதல் பற்றி **ஷரத்து 344** கூறுகிறது.

அலுவல்முறை நோக்கங்களுக்காக மத்திய அரசால் பயன்படுவதற்கென அப்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள மொழி, ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையேயும், ஒரு மாநிலத்திற்கும், மத்திய அரசிற்கும் இடையேயும், செய்தித் தொடர்புக்காக (Communication) ஆட்சிமொழியாக இருத்தல் வேண்டும். ஆனால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள், அத்தகைய மாநிலங்களுக்கு இடைய செய்தித் தொடர்புக்காக, இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என உடன்பாடு கொள்கின்றன என்றால், அந்த மொழி அத்தகைய செய்தித் தொடர்புக்காக பயன் படுத்தப்படலாம், என **ஷரத்து 346** தெரிவிக்கிறது.

மாநில ஆட்சிமொழி:

ஷரத்து 345-ன்படி, மாநிலத்தில் உபயோகத்திலிருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை அல்லது இந்தி மொழியை ஆட்சிமொழியாக மாநில சட்டமன்றம், சட்டமொன்றினால் ஏற்றுக் கொள்ளலாம்.

உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் பயன்படுத்தப் படும் மொழி:

ஷரத்து 348-ன்படி, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் அனைத்து நடவடிக்கைகளும், பாராளுமன்றத்தில் அல்லது சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து மசோதாக்களும், மேற்கண்டவைகளால் நிறைவேற்றப்படும்

அனைத்து சட்டங்களும், அரசியலமைப்பின் கீழ் வெளியிடப்படும் அனைத்து உத்திரவுகளும், விதிகளும் ஆங்கில மொழியிலேயே இருத்தல் வேண்டும். எனினும், மாநிலத்தில், மாநில மொழியைப் பயன்படுத்த, அம்மாநில ஆளுநர் அதிகாரமளிக்கலாம்.

-o0o-

அத்தியாயம் 11

தற்காலிக, இடைமாறுகால மற்றும் சிறப்பு வகைமுறைகள் (Temporary, Transitional and Special Provisions)

சில மாநிலங்களுக்கான சட்ட வகைமுறைகள்

(ஷரத்துகள் 369 முதல் 392)

(Provisions for certain States)

(Articles 369 to 392)

அரசியலமைப்பில் சில விஷயங்களின் செயல்பாட்டிற்காக சில மாநிலங்களுக்காக, அல்லது சில அதிகாரங்களுக்காக தற்காலிக, இடைமாறு கால மற்றும் சிறப்பு வகைமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. அதனடிப்படையில், பின்வரும் ஷரத்துகள் அமைந்துள்ளன.

ஷரத்து 369-ன்படி, மாநிலப் பட்டியலில் (State List) உள்ள சில விஷயங்கள் குறித்து அவை இணைப்புப் பட்டியலில் (Concurrent List) உள்ள விஷயங்களை போன்றே சட்டங்களைச் செய்ய பாராளுமன்றத்திற்கு தற்காலிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஷரத்து 370ஆனது, ஜம்மு- காஷ்மீர் மாநிலத்திற்குண்டான (State of Jammu and Kashmir) தற்காலிக வகைமுறைகளைக் குறிப்பிடுகிறது. பின்வரும் ஷரத்துகள் பின்வரும் மாநிலங்களுக்குண்டான சிறப்பு வகைமுறை குறித்துக் கூறுகிறது. அவை, ஷரத்து 371 - மகாராஷ்டிரா மற்றும் குஜராத், ஷரத்து 371A - நாகலாந்து, ஷரத்து 371 B -

அஸ்ஸாம், ஷரத்து 371 D - ஆந்திரபிரதேஷ், ஷரத்து 371F - சிக்கிம், ஷரத்து 371G - மிஜோரம், ஷரத்து 371 H - அருணாச்சல பிரதேசம் மற்றும் ஷரத்து 371 I - கோவா. மேலும் ஷரத்து 371E - ஆந்திர பிரதேசத்தில் ஒரு மத்திய பல்கலைக்கழகத்தை அமைக்க பாராளு மன்றம் சட்மியற்றலாம், என்று கூறுகிறது.

ஷரத்து 372, தற்போது இருக்கும் சட்டங்கள் தொடர்ந்து அமலில் இருக்கும் என்று கூறுகிறது. ஷரத்து 373, சில சூழல்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்கள் குறித்து உத்திரவுகளைச் செய்வதற்கான குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரம் பற்றிக் கூறுகிறது. ஷரத்து 374, 375, 376 ஆகியவை நீதிமன்றங்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குண்டான சில வகைமுறைகளைக் கூறுகின்றன. ஷரத்து 377-ஆனது, இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர் குறித்த வகைமுறைகளையும், ஷரத்து 378-ஆனது, அரசு ஊழியர் தேர்வாணையம் குறித்த வகைமுறை களையும், ஷரத்து 392-ஆனது, அரசியலமைப்பின் வகைமுறைகளில் இடர்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை நீக்க குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தைப் பற்றியும் கூறுகின்றன. இனி முக்கியமான வினா ஒன்றைக் கவனிப்போமா?

Special Status conferred on the State of Jammu and Kashmir under the Constitution - Write short notes. (அரசியலமைப்பின் கீழ் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ள தனி அந்தஸ்து - குறுகிய விடை தருக.[1])

இதற்கு விடை பகருமுன்னர், நாம் ஒரு வரலாற்று பின்னணியை ஆராய வேண்டியுள்ளது. அதாவது, 1947-ஆம் ஆண்டின் இந்திய சுதந்திரச் சட்டம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரு நாடுகள், 15-8-1947-ம் தேதியில் பிறக்க வழிவகுத்தது. அப்பொழுது இந்திய மாநிலங்கள், மேற்கண்ட இரு நாடுகளில் ஏதேனுமொன்றில் சேரவோ அல்லது சுதந்திரமாக இருக்கவோ விருப்புரிமை அளிக்கப்பட்டன. இந்தியாவில் மேற்படி 1947-ஆம் சட்டத்திற்கு பிறகு, பாகிஸ்தான், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை தாக்கியது. ஜம்மு-காஷ்மீரைக் காக்க, அம்மாநில மகாராஜா இந்தியாவின் உதவியை நாடினார். 26-10-1947-ல் ஜம்மு-காஷ்மீர் மாநிலம், இந்தியாவுடன் இணைந்து கொண்டது. மேலும் அத்தேதியிலேயே இணைப்பு உடன்படிக்கையில் (Instrument of

1. இப்படியும் ஒரு வினா தேர்வில் கேட்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

Accession) இந்தியாவுடன், மேற்படி மகாராஜா கையொப்பமிட்டார். இதற்கு, ஜம்மு-காஷ்மீர் மாநில மக்களவையின் ஒப்புதல் அளித்ததின் பேரில், 17-11-1957-ல் அம்மாநிலம், இந்திய அரசின் ஒரு பகுதியானது. இதற்கென ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பு, சட்டத்தின் 3வது பிரிவும், ஜம்மு-காஷ்மீர் இந்திய அரசுடன் ஒருமைப்பட்ட பகுதியாகும் என்று குறிப்பிடுகிறது. நமது இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 1-லிருந்தும், முதலாம் அட்டவணையிலி ருந்தும், ஜம்மு-காஷ்மீர் மாநிலம், இந்திய அரசின் ஒரு பகுதியாகும் என்பது தெளிவாகிறது. எனவே, ஜம்மு-காஷ்மீரை ஒரு வெளிநாடு ஊடுறுவினாலோ அல்லது அதன் மீது தாக்குதல் நடத்தினாலோ, அது இந்தியாவின் மீதான ஆக்கிரமிப்பாகவே கருதப்படும். சுருங்கக் கூறின், இந்தியாவிற்கு எதிராக, ஜம்மு-காஷ்மீரை எந்த வெளிநாடும் கோர முடியாது.

இவ்வாறு, ஜம்மு-காஷ்மீர் இந்திய அரசின் ஒரு பகுதியாக இருந்தாலும், அதன் அந்தஸ்து இந்தியாவின் பகுதியாக உள்ள மற்ற மாநிலங்களின் அந்தஸ்த்தைக் காட்டிலும் வேறுபட்டதாகும். அம்மாநிலத்திற்கென தனி அந்தஸ்த்து இந்திய அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ளது. இதற்குண்டான தற்காலிக வகைமுறைகளை (Temporary Provisions) நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **370-வது ஷரத்து** பின்வருமாறு கூறுகிறது. அதாவது **ஷரத்து 370 (1)-ன்படி,** இந்திய அரசியலமைப்பில் யாது கூறப்பட்டிருப் பினும்,

(a) ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கென ஒரு தனி அரசிய லமைப்புச் சட்டம் உள்ளது. அவர்களது அரசியலமைப்பின் அடிப் படையில்தான், அங்கு ஆட்சி நடக்கிறது.

(b) (i) மேற்கண்ட இணைப்பு உடன்படிக்கையால் விளம்பப் பட்டுள்ள விஷயங்கள் (துறைகள்) மத்தியப் பட்டியலி லும் இணைப்புப் பட்டியலிரும் இருப்பின், அவற்றில் மட்டுமே இந்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம்.

(ii) அப்பட்டியல்களில் உள்ள வேறு விஷயங்களின் மீது, அம்மாநிலத்தின் ஒப்புதலோடும், இந்தியக் குடியரசுத் தலைவர் குறிப்பிடுகை யுடனும்தான், இந்திய பாராளுமன்றம் சட்டமியற்ற முடியும்.

(c) எனினும், இந்திய அரசியலமைப்பின் 1வது ஷரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வகைமுறைகள் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்

குப் பொருந்தும்.

(d) ஆனால் இந்திய அரசியலமைப்பின் பிற வகைமுறைகள், குடியரசுத் தலைவர் ஒரு உத்திரவின் மூலம் குறிப்பிடும் விலக்குகள் திருத்தங்களுக்கு உட்பட்டு அம்மாநிலத்திற்கு பொருந்தும்.

எனினும், அப்படிப்பட்ட உத்திரவு எதுவும், அம்மாநிலத்தின் இணைப்பு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக இருப்பின், அம்மாநிலத்தை கலந்தாலோசிக்காமல் (without consultation) குடியரசுத் தலைவர் பிறப்பிக்கக் கூடாது. மேலும் அவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர பிற விஷயங்களைப் பொறுத்து, அம்மாநிலத்தின் ஒப்புதல் (concurrence) இல்லாமல் குடியரசுத் தலைவர் மேற்கண்ட உத்திரவு எதையும் பிறப்பிக்கக் கூடாது.

ஷரத்து 370 (2)-ன்படி, ஜம்மு-காஷ்மீர் மாநில சட்டப்பேரவையின் ஒப்புதலோடு, 1950-ல் குடியரசுத் தலைவர் அரசியலமைப்பு (ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தக் கூடியது) உத்திரவைப் [The Constitution (Application to Jammu and Kashmir) Order, 1950] பிறப்பித்தார். இது 1954-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்திரவால் மாற்றியமைக்கப்பட்டது. மேலும் இதில் அப்போதைக்கப்போது திருத்தங்களும் செய்யப்பட்டன. இதனால், இந்திய அரசியலமைப்பின் பல்வேறு ஷரத்துகளும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தும்படி செய்யப்பட்டன. அவ்வாறு 1954-ஆம் ஆண்டு உத்திரவால் பொருந்தும்படி செய்யப்பட்ட முக்கிய வகைமுறைகளின் தொகுப்பு வருமாறு.

(1) ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் அரசியலமைப்பு தொடர்ந்து அமலில் இருக்கும். இது அம்மாநில அரசாங்கத்தை வழி நடத்தும்.

(2) இந்திய உயர் நீதிமன்றங்கள் கொண்டுள்ள அனைத்து அதிகாரங்களும், ஜம்மு-காஷ்மீர் மாநில உயர் நீதிமன்றமும் கொண்டிருக்கும்.

(3) ஷரத்து 135 மற்றும் 139 தவிர, இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் மீது அளாவி நிற்கும்.

(4) மத்திய பட்டியல் மற்றும் இணைப்பு பட்டியலில் உள்ள

சில விஷயங்களைத் தவிர, பிறவற்றில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்காக பாராளுமன்றம் சட்டமியற்ற தகுதி படைத்தது.

(5) ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் ஒப்புதலோடு, அங்கு ஷரத்து 352-ன் கீழ் நெருக்கடி நிலையை குடியரசுத் தலைவர் பிரகடனப் படுத்தலாம்.

(6) மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை (President's Rule in the State) அமல்படுத்தும் வகைமுறைகள், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கும் பொருந்தும்.

(7) மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் (executive power), ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் மீதும் பரவக் கூடியதாகும்.

(8) வியாபாரம், வணிகம் மற்றும் வணிகப் போக்குவரத்து தொடர்பாக இந்திய அரசியலமைப்பு கூறும் சுதந்திர உரிமையும், குடியுரிமையும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கும் பொருந்தும்.

(9) தேர்தல்கள் தொடர்பாக இந்திய அரசியலமைப்பு கூறும் வகைமுறைகள், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கும் பொருந்தும்.

மேற்படி உத்திரவால் பொருந்தாது என்று கூறப்பட்ட வகைமுறைகள் வருமாறு.

(1) நிதி நெருக்கடி நிலைமை (Financial Emergency) குறித்த இந்திய அரசியலமைப்பின் வகைமுறைகள், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தாது.

(2) இந்திய அரசியலமைப்பின் ஒய பகுதியில் கூறப் பட்டுள்ள அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் (Directive Principles of State Policy), ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தாது.

(3) ஷரத்து 368-ன் கீழான அரசியலமைப்பை திருத்தும் வகை முறைகள் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தாது. அவ்வாறு பொருந்த வேண்டுமெனில், ஷரத்து 370 (1)-ன்படியிலான உத்திரவு ஒன்றை குடியரசுத் தலைவர் பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு, இந்திய அரசியலமைப்பின் ஒன்றிரண்டு பகுதிகள் தவிர, பிற அனைத்தும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தும் வண்ணம் மேற்படி 1954-ஆம் ஆண்டு உத்திரவால் செய்யப் பட்டுள்ளது எனில் அது மிகையாகாது. ஏறத்தாழ, இந்திய

அரசியலமைப்பு முழுவதுமோ, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்தக் கூடிய விதத்தில் இருக்கும் பொழுது, அதனை ஏன் மற்ற மாநிலங்களுக்குள்ள அந்தஸ்த்தை வழங்கக் கூடாது? இதற்கு **ஷரத்து 370 (3)** வழி வகுக்கிறது. அதாவது, ஷரத்து 370 (3)-ன்படி, ஜம்மு-காஷ்மீர் மாநில அரசியலமைப்பு நிர்ணய சபையின் (Constituent Assembly) பரிந்துரையின் பேரில், குடியரசுத் தலைவர் மேற்கண்ட ஷரத்து 370-ஐயே ஒழித்துக் கட்டி விடலாம் (President is empowered to abolish Article 370). இவ்வாறு செய்துவிட்டால், ஜம்மு-காஷ்மீர் மாநிலம் மற்ற இந்திய மாநிலங்களுக்குள்ள அதே அந்தஸ்த்தைப் பெற்று விடும். ஜம்மு-காஷ்மீர் தொடர்பான அனைத்து அரசியல் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும். **எனவே, ஷரத்து 370-ஐ ஒழித்து விடுவது சாலச் சிறந்ததுதானே?**

-o0o-

அத்தியாயம் 12

பலவகைப்பட்டவை
(Miscellaneous)

பலவகைப்பட்ட வகைமுறைகள்
(ஷரத்துகள் 361, 361-A, 363 முதல் 367, 393 முதல் 395)
(Miscellaneous Provisions)
(Articles 361, 361-A, 363 to 367, 393 to 395)

பெரும்பாலான சட்டங்களில், சில பொதுவான வகை முறைகள் அச்சட்டத்தின் இறுதியில் 'பலவகைப்பட்டவை' எனும் தலைப்பின் கீழ் தொகுத்துக் கூறப்படுவதுண்டு. அந்த வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் சில ஷரத்துகள் மேற்படி தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

ஷரத்து 361, குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்கள் மற்றும் இராஜப் பிரமுகர்களுக்கான பாதுகாப்பைப்பற்றிக் கூறுகிறது.[1] **ஷரத்து 361-A,** பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகளை பிரசுரிப்பதிலிருந்து பாதுகாப்பு குறித்து கூறுகிறது. **ஷரத்து 363,** சில உடன்படிக்கைகளிலிருந்து எழும் தகராறுகளில் தலையிட நீதிமன்றங்களுக்குள்ள தடை குறித்து கூறுகிறது. **ஷரத்து 364,** முக்கிய துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் குறித்த சிறப்பு வகைமுறைகளைக் குறிப்பிடுகின்றது. **ஷரத்து 365,** மத்திய அரசின் ஏவுரைகளை (directions) கடைப்

1. ஏற்கனவே விரிவாக 'மத்திய நிர்வாக துறை' எனும் தலைப்பில் பக்கம் எண். 23 மற்றும் 24-ல் கண்டுள்ளோம்.

பிடிக்க மறுத்தலுக்குண்டான விளைவுகளைப் பற்றி கூறுகிறது. **ஷரத்து 366,** இந்திய அரசியலமைப்பில் எடுத்தாளப்பட்டுள்ள சில பதங்களுக்குண்டான வரையறைகளைத் தருகின்றது. **ஷரத்து 367,** பொருள் விளக்கங்களைக் கூறுகிறது. **ஷரத்து 393,** இந்த அரசியலமைப்பு 'இந்திய அரசியலமைப்பு' என்றழைப்படும் என்று அதன் குறுந் தலைப்பையும் (Short Title)[1] **ஷரத்து 394,** இந்திய அரசியலமைப்பின் தொடக்கம் (Commencement)[1] குறித்தும் விளக்குகிறது. **ஷரத்து 394-A,** இந்திய அரசியலமைப்பை இந்தி மொழியில் பதிப்பு செவ்தற்கு குடியரசுத் தலைவர் உட்படுத்தலாம் என்று கூறுகிறது. **ஷரத்து 395,** இந்திய அரசியலமைப்பு அமலுக்கு வந்ததின் காரணமாக நீக்கறவு (Repeals) செய்யப்பட்ட சட்டங்கள் என்னென்னவென்று கூறுகிறது.

-o0o-

1. பொதுவாக சட்டத்தின் குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் குறித்த வகை முறைகள் சம்பந்தப்பட்ட சட்டத்தின் ஆரம்பத்தில்தான் கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முகப்புரைக்கு முதலிடம் கொடுக்கும் பொருட்டு, அவ்வகைமுறைகள் மேற்கண்டவாறு இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 13

அட்டவணைகள் (Schedules)

ஒரு சிறு விளக்கம்

இதுகாறும் நாம் இந்திய அரசியலமைப்பின் ஷரத்துகளை வழக்குகளுடன் விளக்கமாகக் கண்டோம். ஒரு சட்டத்தில், ஒரு வகைமுறை (provison) குறித்த விபரங்கள் விரிவாக இருப்பின், அதை அங்கேயே சேர்க்காமல் இறுதியில் அட்டவணைகளின் வாயிலாக கொடுக்கப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்திய அரசியலமைப் பின் இறுதியில், 12 அட்டவணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அட்டவணையும், இந்திய அரசியலமைப்பின் சில ஷரத்துகளுக்குத் தொடர்புடையதாகும். பல்கலைக்கழகத் தேர்வில், பின்வரும் இரு அட்டவணைகள் குறித்து வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. அவற்றைக் காண்போமா?

1. Nineth Schedule to the Constitution of India - Write short notes.
(அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணை - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணை **ஷரத்து 31-B-க்கு** தொடர்புடையதாகும். ஒரு சட்டம், அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பறிக்குமாறோ அல்லது மீறுமாறோ

இயற்றப்பட்டால், அது இல்லா நிலையதாகும் என்று ஷரத்து 13 (2) கூறியதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். மேற்படி அட்டவணையில் 118 சட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை, மேற்படி அடிப்படை உரிமைகளுக்கு முரணாகவோ அல்லது அவற்றை பறிப்பதாகவோ அல்லது மீறுவதாகவோ இருந்தாலுமே கூட, அவற்றை இல்லாநிலையதாக கருத முடியாது என்றும் அவை செல்லத்தக்கதே என்றும் **ஷரத்து 31-B** குறிப்பிடுகிறது. மேலும் இச்சட்டங்களின் மீது நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தையும் (Judicial Review) பயன்படுத்த இயலாது.

2. Tenth Schedule of the Constitution - Write short notes. (அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Anti-Defection Law - Write short notes. (கட்சித் தாவல் தடைச் சட்டம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Speaker's power on anti-defection and judicial review - Write short notes. (கட்சித் தாவல் தடுப்பின்மீது சபாநாயகரின் அதிகாரமும், நீதிமன்றத்தின் சீராய்வும் - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்பின் பத்தாம் அட்டவணை, 102 (2) மற்றும் 191 (2) எனும் இரண்டு ஷரத்துகளுக்கு தொடர்புடையதாகும். ஷரத்து 102 (2)-ஆனது, ஒரு நபர் பத்தாம் அட்டவணையின் கீழ் பாராளுமன்றத்தின் ஈரவைகளில் ஏதேனுமொன்றில் ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்குத் தகுதியின்மையோடு இருக்கிறார் என்றால், அவர் அவ்வாறு உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியற்றவராகிறார் என்று கூறுகிறது. அதுபோல் ஷரத்து 191 (2)-ஆனது, ஒரு நபர் பத்தாம் அட்டவணையின் கீழ் ஒரு மாநில சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியின்மையோடு இருக்கிறார் என்றால், அவர் அவ்வாறு உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியற்றவராகிறார், என்று கூறுகிறார்.

அப்பத்தாம் அட்டவணையில் எதுதான் அவ்வாறு உறுப்பினராக இருந்த வருவதற்கான தகுதியின்மைக்கு உண்டான காரணமாக கூறப்பட்டிருக்கிறது, என்ற வினா இங்கு எழுந்தால்

அது நியாயமானதே. பத்தாம் அட்டவணையின்படி, ஒருவர் தாம் எந்த அரசியல் கட்சியில் உறுப்பினராக உள்ளாரோ, அக்கட்சியிலிருந்து அவர் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், பிறிதொரு கட்சிக்குத் தாவிச் சென்றுவிட்டால், அவர் அவ்வாறு உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியற்றவராகிறார். இதுவே **கட்சித்தாவல் தடைச் சட்டம் (Anti-Defection Law)** என்றும் அழைக்கப்படுகிறது.

கட்சித் தாவலின் காரணமாக ஏற்படும் தகுதியிழப்பு குறித்த மேற்கண்ட ஷரத்துகளும், பத்தாம் அட்டவணையும் 1985-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 52வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நமது அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன.

மேற்படி பத்தாம் அட்டவணையில், கட்சித் தாவல் தடை குறித்து மொத்தம் **8 பத்திகள்** உள்ளன. அவற்றில் 1வது பத்தி, சில பதங்களுக்கு உண்டான வரையறைகளை முதற்கண் கூறுகிறது. 2வது பத்தி, கட்சித் தாவலின் காரணமாக உறுப்பினர் ஒருவர் தகுதியற்றவராக ஆகும் சூழ்நிலைகளை விளக்குகிறது. பத்தி 2 (1)-ன்படி, ஏதாவது ஒரு அரசியல் கட்சியை சேர்ந்தவராக உள்ள ஓர் அவையின் உறுப்பினர் ஒருவர் (a) அந்த அரசியல் கட்சியில் தமது உறுப்பினர் நிலையை, தன்னிச்சையாக கைவிட்டுவிட்டார் (voluntarily given up his membership of the party) என்றால், அல்லது (b) அந்த அரசியல் கட்சியின் ஏவுரைக்கு (direction) மாறாக அல்லது அதன் முன்அனுமதி (prior permission) ஏதும் பெறாமல், தாம் உறுப்பினராக உள்ள அவையில் வாக்களிக்கிறார் அல்லது வாக்களிப்பதை தவிர்க்கிறார் என்றால் மேலும் அச்செயல் அந்த அரசியல் கட்சியினால் 15 நாட்களுக்குள் மன்னிக்கப்படவில்லையானால் (condoned), அவர் அந்த அவையின் ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியற்ற வராவார். மேலும் பத்தி 2 (2)-ன்படி, ஏதேனும் ஒரு அரசியல் கட்சியால் நிறுத்தப்பட்ட ஒரு வேட்பாளராக அல்லாமல், பிறவாறாக ஓர் அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அத்தகையவர், அத்தகைய தேர்தலுக்குப் பின்பு அரசியல் கட்சி எதிலும் சேருகிறார் என்றால், அவர், அந்த அவையின் ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியற்றவராவார். அதுபோல், பிரிவு 2 (3)-ன்படி, ஓர் அவையின் நியமன உறுப்பினர் (nominated member) ஒருவர், 99[1]வது ஷரத்து

1. பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஏற்றுக் கொள்ளும் முன்பு, குடியரசுத் தலைவர் முன்பு உறுதி மொழி (Oath) எடுத்துக் கொள்ளல் - ஷரத்து 99.

அல்லது நேர்விற்கேற்ப 188[1] ஆம் ஷரத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடந்த பின்பு, அவர் தமது பதவியை ஏற்றுக் கொள்கிற தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்த பின்னர், அரசியல் கட்சி எதிலும் சேருகிறார் என்றால், அவர், அந்த அவையின் ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதியற்றவராவார்.

கட்சிப் பிளவு (split of party) ஏற்பட்டு அதனால் கட்சித்தாவல் நடைபெற்றிருந்தால், அது தகுதியின்மை ஆகாது என்று **பத்தி 3** கூறுகிறது.

அதுபோல், **பத்தி 4-ன்படி, கட்சிகள் இணைவதின் (Merger of parties)** காரணமாக கட்சித்தாவல் நடைபெற்றிருந்தால், அது தகுதியின்மை ஆகாது.

பத்தி 5-ஆனது, சில விலக்களிப்புகளைக் கூறுகின்றது. இதன்படி, மக்களவையின் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் அல்லது மாநிலங்களவையின் தலைவர் அல்லது மாநில சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவர் அல்லது மாநில சட்டமன்றப் பேரவையின் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர், கட்சித்தாவலின் காரணமாக தகுதியற்றவர்களாக ஆக மாட்டார்கள் என்று அவர்களுக்கு விலக்குரிமை அளிக்கிறது. கட்சித் தாவலால் ஏற்படும் தகுதியின்மை குறித்த வினாக்களை, அவைத் தலைவரிடமோ அல்லது நேர்விற்கேற்ப சபாநாயகரிடமோ (Speaker of the House) சுட்டியனுப்ப வேண்டும் என்றும், அவர் அவ்வினாக்களின் மீது வழங்கும் **முடிவே இறுதியானதாகும்** என்றும், **பத்தி 6** கூறுகிறது. இதிலிருந்து **கட்சித்தாவலை தடை செய்வதின் மீது, சபாநாயகர் கொண்டுள்ள உயர் அதிகாரம் புலனாகும் (Speaker's power on anti-defection).** மேலும் இந்த அதிகாரத்திற்கு வலு சேர்க்கும் விதத்தில், கட்சித்தாவலின் காரணமாக ஏற்படும் தகுதியிழப்பு குறித்த விஷயத்தில் நீதிமன்றங்கள் எவ்வித அதிகாரவரம்பையும் கொண்டிருக்கவில்லை, என்று **7-வது பத்தி** தெளிவுபடக் கூறுகிறது.

எனினும், அவைத் தலைவர் அல்லது சபாநாயகர் தங்களுக்குள்ள மேற்படி அதிகாரத்தின் கீழ் செய்யும் முடிவு (decision) எதனையும், ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றமும், ஷரத்து 136-ன் கீழ் உச்ச நீதிமன்றமும் நீதிமுறை மறுசீராய்வு (Judicial Review) செய்யலாம் என்றும், அவர்களது முடிவே '**இறுதியானது**' (**fi-**

1. மாநில சட்டமன்ற உறுப்பினர் பதவி ஏற்றுக் கொள்ளும் முன்பு, ஆளுநர் தலைவர் முன்பு உறுதி மொழி (Oath) எடுத்துக் கொள்ளல் - ஷரத்து 188.

nal) என்பது, உச்ச அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிமுறை மறுசீராய்வு அதிகாரத்தை விலக்கி வைத்ததாகாது என்றும், **Prakash Singh Badal v. Union of India**[1] எனும் வழக்கில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தால் கூறப்பட்டது. இம்மாதிரியான கருத்து, **Kihoto Hollohan v. Zachitu**[2] எனும் வழக்கிலும் **Karhinath G.Salim v. The Speaker**[3] எனும் வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

எனவே, கட்சித்தாவலினால் ஏற்படும் தகுதியிழப்பை குறித்த விஷயங்களை விசாரிக்க நீதிமன்றங்களுக்கு தடை விதிக்கும் மேற்படி 7வது பத்தி, உச்ச நீதிமன்றத்தால் மேற்படி இரு வழக்குகளில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது; ஆட்சேபிக்கப்பட்டது. நீதிமுறை மறுசீராய்வு என்பது அரசியலமைப்பின் அடிப்படை கூறுகளின் ஒரு பகுதியாகும். மேற்படி 7-வது பத்தி அந்த அதிகாரத்தை தடை செய்வது, அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகளையே அழிப்பதாக உள்ளது, என்றும் கண்டித்தது.

பத்தி 6-ன் வழியாக அவைத் தலைவர் அல்லது சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயலாக்குவதற்கு உண்டான நடைமுறைகளை ஒழுங்குபடுத்த, அவர்களே விதிகளை வகுத்துக் கொள்ளலாம், என்று **பத்தி 8** விளக்குகிறது. மேற்கண்ட வாறு அவர்களால் வகுக்கப்பட்ட விதிகளை அவர்களே சட்ட முரணாக மீறினால் அல்லது இயற்கை நீதியைக் கடைப்பிடிக்காது போனால், அல்லது நெறிபிறழ்ந்து நடந்தால், அதனை நீதிமுறையில் சீராய்வு செய்து தீர்ப்பு வழங்க உச்ச அல்லது உயர் நீதிமன்றங் களுக்கு அதிகாரமுண்டு.

-oOo-

1. AIR 1987 P & H 263
2. AIR 1993 SC 412
3. (1993) 2 SCC 703

பகுதி இ

(Part C)

பிரச்சனைகளும் தீர்வுகளும்
(Problems and Solutions)

பிரச்சனைகளும் தீர்வுகளும்
(Problems and Solutions)

பிரச்சனை 1

A convict was awarded death sentence by the Trial Court and it was confirmed by the High Court. The Supreme Court did not interfere in the lower courts order. The prisoner filed a mercy petition before the president of India to pardon him. The president rejected the mercy petition without assigning any reason for doing so. Can the court ask the president for his reason?

ஒரு குற்றவாளிக்கு விசாரணை நீதிமன்றம் மரண தண்டனை விதித்ததை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. உச்ச நீதிமன்றம் கீழமை நீதிமன்றங்களின் உத்தரவுகளில் தலையிட வில்லை. கைதி குடியரசுத் தலைவருக்கு கருணை மனு தாக்கல் செய்தார். குடியரசுத் தலைவர் கருணை மனுவை எவ்வித காரணங்களும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்தார். நீதிமன்றம் குடியரசுத் தலைவரின் தள்ளுபடிக்கான காரணம் கோர இயலுமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கான தீர்வை நாம் சில வழக்குகளின் வாயிலாகக் கண்டால் தெளிவாகும். முதற்கண், குடியரசுத் தலைவரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம் (President's Pardoning Power) பற்றி இந்திய அரசியலமைப்பின் **ஷரத்து 72** கூறுகிறது. இதன்படி, அவர்

பின்வரும் தண்டனைக்குள்ளான எந்த நபரையும் அத்தண்டனை யிலிருந்து மன்னிப்பளிக்கவும் (pardon), அதனை நிறுத்தி வைக்கவும் (reprieve), தண்டனை நிறைவேற்றுகையை காலந்தாழ்த்தவும் அல்லது குறைக்கவும் (respite or remission) அல்லது தண்டனையை இடைநிறுத்தி வைக்க (suspend), குறைக்க (remit), அல்லது மாற்றிக் குறைக்க (commute) அதிகாரம் அளித்துள்ளது. அவை,

(a) இராணுவ நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனை அல்லது சிறைவாசம்;

(b) மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் பொருந்தக் கூடிய விஷயம் தொடர்பான சட்டம் எதற்கும் எதிரான குற்றத்திற் குண்டான தண்டனை அல்லது சிறைவாசம்;

(c) சம்பந்தப்பட்ட தண்டனை, ஒரு மரண தண்டனையாக இருக்கும் அனைத்து தேர்வுகளிலும்.

Manuram v. Union of India[1]

இவ்வழக்கில், மன்னிப்பளிக்கும் அதிகாரத்தினை குடியரசுத் தலைவர், அமைச்சரவையின் அறிவுரையின்படி செயல்படுத்த வேண்டும், என்று கூறப்பட்டது.

Kuljeet Singh v. Lt. Governor of Delhi[2]

இவ்வழக்கு **'பில்லா ரங்கா வழக்கு'** என பிரபலமாக அழைக் கப்பட்டதாகும். இவ்வழக்கில் மரண தண்டனை குற்றவாளிகளான பில்லா மற்றும் ரங்கா, ஷரத்து 72-ன் கீழ் தங்கள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையிலிருந்து மன்னிப்பளிக்கும்படி குடியரசுத் தலைவரிடம் கருணை மனு செய்தனர். ஆனால் இதை குடியரசுத் தலைவர் நிராகரித்து விட்டார். இதை எதிர்த்து குடியரசுத் தலைவர் தனது மேற்படி அதிகாரத்தை நியாயமான (fair and reasonable) முறையில் செயல்படுத்தியிருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத் தில் முறையிட்டனர். ஆனால் கருணை மனுவை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது குறித்த குடியரசுத் தலைவரின் அதிகாரம் தொடர்பான வழிகாட்டு நெறிகள் எதையும் இந்திய அரசு வகுக்க வில்லை என்று உச்ச நீதிமன்றம் கை விரித்துவிட்டது. இதனால் அவர்களுடைய மரண தண்டனையை நிறைவேற்ற உத்திரவிட்டது.

1. (1981) 1 SCC 107
2. AIR 1982 SC 774

Kehar Singh v. Union of India[1]

Kehar Singh என்பவர் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியை சுட்டுக் கொலை செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர். இவ்வழக்கில் **ஷரத்து 72-ன்படி,** Kehar Singh தன்னை மன்னிக்கக் கோரி கருணைமனு ஒன்றை குடியரசுத் தலைவரிடம் கொடுத்தார். ஆனால் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில், எவ்வித காரணத்தை யும் காட்டாமல், அக்கருணை மனுவை நிராகரித்து விட்டார். எவ் வித காரணத்தையும் தெரிவிக்காமல், கருணை மனுவை நிராகரிக்க குடியரசுத் தலைவருக்கு உரிமை உண்டு என மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் மன்னிப்பளித்தல் தொடர்பாக குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தின் எல்லையை உச்ச நீதிமன்றம் பல கோணங்களில் எடுத்துக்காட்டியது.

மேற்படி வழக்குகளுக்கெல்லாம் முன்னர் எழுந்த **Godse v. State of Maharashtra**[2] எனும் வழக்கில் **மகாத்மா காந்தியை சுட்டுக் கொலை** செய்த **Godse** கொடுத்த கருணை மனு முறையற்ற விதத்தில் நிராகரிக்கப்பட்டதாக, அவன் உச்ச நீதிமன்றத்தில் வாதிட் டார். அவ்வாறு நிராகரிக்கப்பட்டது, முறையான விதத்திலா, முறையற்ற விதத்திலா என்பது தொடர்பாக குடியரசுத் தலைவரின் மன்னிப்பளிக்கும் அதிகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

எனினும் பின்வரும் வழக்கில் குடியரசுத் தலைவர் நிராகரித்த கருணை மனுவில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு அதைப் பரிசீலனை செய்தது குறிப்பிடத்தக்கது. இவ்வழக்கின் தீர்ப்பு நமது பிரச்சனைக்கு தீர்வளிக்கிறது எனலாம்.

Jumman Khan v. State of U.P.[3]

இவ்வழக்கில் 6 வயது சிறுமியை வன்புணர்ச்சி செய்து, கழுத்தை நெறித்து கொலை செய்த குற்றத்திற்காக மனுதாரருக்கு அமர்வு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது உயர் நீதிமன்றத்தாலும் உறுதி செய்யப்பட்டது. இதை எதிர்த்து மனுதாரர் உச்ச நீதிமன்றத்தில் செய்த சிறப்பு அனுமதி மனுவும்

1. AIR 1989 SC 653: (1989) 1 SCJ 126
2. AIR 1961 SC 600
3. (1991) 1 SCC 752

தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் தனக்கு மன்னிப்பு அளிக்க வேண்டி மாநில ஆளுநரிடம் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து மனுதாரர் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினார். ஆனால் இதுவும் நிராகரிக்கப்பட்டது. **இந்நிலையில் இவ்வாறு குடியரசுத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்ட கருணை மனு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.** எனவே உச்ச நீதிமன்றம் இதை மறு பரிசீலனை செய்து முடிவில் அதில் தலையிடுவதற்கு முகாந்திரம் ஏதுமில்லை என்று கூறியது.

எனவே மேற்படி பிரச்சனையில் குற்றவாளியின் கருணை மனுவை குடியரசுத் தலைவர் எவ்வித காரணங்களும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்ததை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றத்திடம் முறையிட முடியும். மேற்கண்ட **Jumman Khan v. State of U.P.**[1] வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பின்படி அதை ஆய்ந்தறிந்து முடிவெடுக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு என்பதே இங்கு தீர்வு.

பிரச்சனை 2

The Dean of Government Medical College taking serious view of the bad behaviour of a final year medical student, dismissed him after following the principles of natural justice. The dismissed student rushes straight to the Supreme Court for relief. Will the supreme court entertain the students appeal?

ஒரு இறுதியாண்டு மருத்துவ மாணவர் அவரது ஒழுங்கீன நடவடிக்கையை கருத்தில் கொண்டு அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் இயற்கை நீதி வழிமுறைகளை பின்பற்றிய பின் அம்மாணவரை கல்லூரியிலிருந்து நீக்கிவிட்டார். நீக்கம் செய்யப் பட்ட மாணவர் உச்ச நீதிமன்றத்தை அணுகுகிறார். உச்ச நீதிமன்றம் அவரது சிறப்பு அனுமதி மனுவை ஏற்றுக் கொள்ளுமா?

தீர்வு:

இப்பிரச்சனையில் நாம் ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அதாவது ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட பிரச்சனையில் "Will the supreme court entertain the students appeal?" என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. ஆனால் தமிழில் கொடுக்கப்பட்ட பிரச்சனையில்

1. (1991) 1 SCC 752

உச்ச நீதிமன்றம் அவரது சிறப்பு அனுமதி மனுவை ஏற்றுக் கொள்ளுமா? என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே தமிழில் கொடுக்கப்பட்ட பிரச்சனைக்கு ஏற்றவாறான தீர்வு பின்வருமாறு.

உச்ச நீதிமன்றத்திடம் மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி மனு (Special leave to appeal) செய்வது பற்றி இந்திய அரசியலமைப்பின் **ஷரத்து 136** கூறுகிறது. அதன்படி, உச்ச நீதிமன்றம் தனது தன் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தியாவில் எந்த ஒரு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பு, ஆணை, தண்டனை அல்லது உத்தரவை எதிர்த்து தன்னிடம் மேல்முறையீடு செய்து கொள்ள சிறப்பு அனுமதி வழங்க, மேற்படி ஷரத்து உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது.

நமது மேற்படி பிரச்சனையில் ஒரு மருத்துவ கல்லூரி மாணவரை அவரது ஒழுங்கீன நடவடிக்கைகளுக்காக கல்லூரியிலிருந்து அதன் முதல்வர் நீக்கி விடுகிறார். இங்கு கல்லூரி முதல்வர் என்பவர் நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ அல்ல. எனவே அவர் பிறப்பித்தது தீர்ப்போ, ஆணையோ அல்ல. அவரது முடிவுக்கு எதிராக அம்மாணவர் நிர்வாகரீதியாக மேல்முறையீடு செய்யலாம். முதல்வருக்கு அடுத்து மேல்நிலையிலுள்ள அதிகாரஅமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம் அல்லது நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி உயர் நீதிமன்றத்தை நாடலாம். இதற்குப் பதிலாக அவர் நேரடியாக உச்ச நீதிமன்றத்தை அணுகி சிறப்பு அனுமதி மனுவை தாக்கல் செய்ய இயலாது. இது மேற்படி ஷரத்து 136-ன் வரம்பிற்குள் வராது. எனவே அவரது மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது.

பிரச்சனை 3

The speaker of a legislative assembly was openly threatening a sitting judge of the High Court in a public meeting. The High Court called upon the speaker to appear before the High Court to answer a charge of contempt of court. When he failed to appear before the court, the court directed the Government to produce him before the court. The speaker claimed immunity from liability for contempt of court. Can his claim be sustained in law.

ஒரு பொதுக் கூட்டத்தில் உயர் நீதிமன்றத்தில் தற்போது நீதிபதியாக இருப்பவரை சட்டமன்ற சபாநாயகர் மிரட்டி

பேசினார். நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்கு விளக்கமளிக்க நீதிமன்றம் சபாநாயகரை அழைத்தது. அவர் வர மறுக்கவே, அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்த அரசிற்கு உத்தரவு பிறப்பித்தது. சபாநாயகர் நீதிமன்ற அவமதிப்பு பொறுப்பு நிலையிலிருந்து விதிவிலக்கு கோருகிறார். அவரது கோரிக்கை சட்டத்தின் முன் செல்லத்தக்கதா?

தீர்வு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 105 (1)-ஆனது,** பாராளுமன்ற உறுப்பினர்களின் **பேச்சு சுதந்திரத்திற்கு (freedom of speech in Parliament)** உத்திரவாதமளிக்கிறது. அவைவோ, (House), அதன் குழுக்களோ (Committees) அல்லது அதன் உறுப்பினர்களோ தங்களது பணியைச் செய்து கொண்டு இருக்கும் பொழுது, அவையின் நாற்சுவருக்குள் கூறப்பட்ட எந்த பேச்சிற்கும் மேற்படி ஷரத்து முழுப்பாதுகாப்பு அளிக்கிறது. இப் பாதுகாப்பு **ஷரத்து 194 (1)**ன்படி மாநிலச் சட்டமன்றங்களுக்கும் பொருந்தும்.

ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவையினுள் தன்னால் கூறப்பட்ட அவதூறான கூற்று எதனையும், அவையின் வெளியே கூறினால், அவர் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 500ன்படி தண்டிக்கப்பட வாய்ப்புண்டு, என **Jatish Chandra v. Hari Sadan**[1] வழக்கில் கூறப்பட்டது.

மேற்சென்ற ஷரத்துகள் மற்றும் வழக்கின்படி ஒரு பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினருக்கு முறையே பாராளுமன்ற அவை அல்லது சட்டமன்ற அவையின் நாற்சுவருக்குள் பேச அளப்பறிய சுதந்திரம் உண்டு. அங்கு பேசியதைக் கொண்டு அவர் மீது நீதிமன்றத்தில் அவதூறு வழக்கிட முடியாது.

ஆனால் நமது மேற்படி பிரச்சனையின் சங்கதிகள் இந் நிலைப்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இங்கு ஒரு சட்டமன்ற சபாநாயகர் ஒரு பொதுக் கூட்டத்தில் அதாவது சட்டப் பேரவைக்கு வெளியே உயர் நீதிமன்றத்தில் தற்போது நீதிபதியாக இருப்பவரை மிரட்டி பேசியுள்ளார். இதற்கு எந்தப் பாதுகாப்பையும் **ஷரத்து 194 (1)** அளிக்கவில்லை. எனவே அவர் அவதூறு குற்றச் சாட்டுக்கு உள்ளாவார் என்பதே தீர்வு.

1. AIR 1961 SC 613

பிரச்சனை 4

A House of a State Legislature issued a warrant to arrest a person held guilty of committing contempt of the House. Can the Court go into its validity?

ஒரு நபர் அவை அவமதிப்பு செய்ததாக குற்றம் சாட்டப் பட்டு, கைது செய்வதற்காக ஒரு மாநில சட்டமன்றத்தின் அவை ஒரு பிடியாணை பிறப்பித்தது. இவ்வாணை செல்லத்தக்கதா என நீதிமன்றம் முடிவு செய்ய இயலுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை **In re Keshav Singh**[1] வழக்கை ஒத்த தாகும். மேற்கண்ட பிரச்சனையில் கண்டுள்ளவாறு, பிடியாணை பிறப்பிக்க முடியாது. இவ்வாணை செல்லத்தக்கதா என்று நீதிமன்றம் முடிவு செய்ய இயலும். *(இதற்குண்டான காரணங்களை பக்கம் எண் 285-ல் காண்க.)*

பிரச்சனை 5

A State Legislature Assembly has resolved that one Keshave Singh, a citizen be sentenced to seven days imprisonment for having committed a contempt of the House and a general warrant without setting the facts was issued. Accordingly he was imprisoned. Four days later, an Advocate moved the High Court, a writ of Habeas Corpus on his behalf. A bench of two judges ordered notice to the speaker and also granted bail. The Assembly passed a resolution that the two judges, Keshav Singh and his advocate had all committed contempt. Decide on the constitutional validity of the resolution holding them for contempt of the House.

ஒரு மாநில சட்டமன்றம் கேசவசிங் என்ற குடிமகன் ஒருவனை சட்டமன்ற அவமதிப்பிற்காக ஏழு நாட்கள் சிறை தண்டனை விதித்து தீர்மானம் நிறைவேற்றியது. விவரங்கள் ஏதும் தெரிவிக்காமல் பொது பிடிவாரண்ட் ஒன்றும் வழங்கப் பட்டது. அதன்படி அவர் சிறையில் அடைக்கப்பட்டார். நான்கு

1. AIR 1965 SC 745

நாட்களுக்குப் பிறகு ஒரு வழக்கறிஞர் அவருக்காக உயர் நீதிமன்றத்தில் ஆள் கொணரும் நீதிப்பேராணை ஒன்று கேட்டு வழக்குத் தொடருகிறார். இரண்டு நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்ற பெஞ்ச் அவைத் தலைவருக்கு அறிவிப்பு ஒன்று வழங்க உத்திரவிட்டு, ஜாமீனும் வழங்குகிறார். நீதிபதிகள் இரண்டு பேரும், கேசவ்சிங் மற்றும் அவருடைய வழக்கறிஞர் இவர்கள் அவை அவமதித்தற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இவர்களை அவையை அவமதித்தாக நிறைவேற்றிய தீர்மானம் அரசமைப்புச் சட்டப்படி செல்லுமா? முடிவு செய்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனை **In re Keshav Singh**[1] வழக்கினை அப்படியே அடியொற்றியதாகும். மேற்கண்ட பிரச்சனையின் பிரத்யேக சூழலின்படி, அவையை அவமத்திததற்காக நிறைவேற்றிய தீர்மானம், அரசியலமைப்புப்படி செல்லாது. *(இதற்குண்டான காரணங்களை பக்கம் எண் 285-ல் காண்க.)*

பிரச்சனை 6

Mr. Raja was punished to undergo five days simple imprisonment by an order of a legislature for breach of its privileges. He was not given an opportunity to explain his case. Raja approaches the High Court to quash the order. Decide.

திரு. இராஜா என்பவர் ஒரு சட்டசபையின் உத்தரவால் அதன் சிறப்புரிமைகளை மீறியதற்காக ஐந்து நாள் சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறார். தன்நிலையை விளக்க அவருக்கு எந்த வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. இராஜா இந்த சட்டமன்ற உத்தரவு செல்லுபடி ஆனதல்ல என்று கூறும்படி உயர் நீதிமன்றத்தை அணுகுகிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு:

இங்கிலாந்து மக்களவையைப் போல பாராளுமன்றமும், மாநில சட்டமன்றமும் தனக்குண்டான சிறப்புரிமைகளை மீறும் மற்றும் அவமதிக்கும் உறுப்பினர்களை மற்றும் அந்நியர்களை தண்டிக்க சிறப்புரிமை படைத்தது. எனவே நமது மேற்படி

1. AIR 1965 SC 745

பிரச்சனையில் திரு. இராஜாவிற்கு சட்டமன்றம் விதித்த உத்தரவு செல்லுபடியானதே. இதில் சாதாரணமாக நீதிமன்றம் தலையிட இயலாது. எனினும் சிறைத்தண்டனைக்கான ஆணையில் கூறப் பட்ட காரணங்கள் சட்ட விரோதமானதாக இருப்பின், பாதிக்கப் பட்டவருக்கு நீதிமன்றம் நிவாரணம் வழங்க முடியும்.

பிரச்சனை 7

A house of a State Legislature issued a warrant to arrest Mr. Suresh, a Journalist held guilty of committing contempt of the house. Can the court question the validity of the warrant?

அவை அவமதிப்பு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படுவதற்காக ஒரு மாநில சட்டமன்றமானது திருசுரேஷ் என்ற பத்திரிக்கையாளருக்கு எதிராக பிடியாணை ஒன்றைப் பிறப்பித்தது. இந்தப் பிடியாணையின் செல்லும் நிலையை நீதிமன்றம் ஆராய முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் மாநில சட்டமன்றம் திருசுரேஷ் என்ற பத்திரிக்கையாளருக்கு எதிராகப் பிறப்பித்த பிடியாணையின் செல்லும் நிலையை நீதிமன்றம் ஆராய இயலாது. இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கான தீர்வில் உள்ள விளக்கத்தை வாசித்தறிய வும்.

பிரச்சனை 8

'Z' a member of the Parliament was put under preventive detention, while the parliament was in session. 'Z' challenges his detention order on the ground that a member of the parliament cannot be detained so as to prevent the member from exercising his constitutional right as a member of the parliament. Discuss the validity of the detention order.

'Z' என்ற நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார். நாடாளுமன்ற உறுப்பினர் தனது அரசமைப்பு உரிமையை நிறைவேற்றி விடாமல் தடுப்புக் காவலில் வைக்க முடியாது என்ற அடிப்படையில் தனது

தடுப்புக் காவல் ஆணையை 'Z' எதிர்க்கிறார். தடுப்புக் காவல் ஆணை செல்லுமா என்பது குறித்து விவாதிக்கவும்.

தீர்வு:

இங்கிலாந்து நாட்டில் பாராளுமன்ற கூட்டத்தின் 40 நாட்களுக்கு முன்போ அல்லது 40 நாட்களுக்கு பின்போ, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை உரிமையியல் வழக்கு நடவடிக்கையொன்றில் கைது செய்ய முடியாது. இதே சிறப்புரிமை இந்தியா பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால் **இச்சிறப்புரிமை குற்றவியல் அல்லது தடுப்புக் காவல் சட்ட நடவடிக்கைகளுக்கு பொருந்தாது** என்று **Ansumali v. State of W.B.**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

மேலும் மேற்படி பிரச்சனையையொட்டிய மற்றொரு வழக்கான **K.Anandan Nambiar v. Chief Secretary, Government of Madras**[1] என்பதில் மனுதாரர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள். அவர்கள் 1962-ஆம் ஆண்டின் இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அப்பொழுது பாராளுமன்ற கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தது. எனவே தங்களால் பாராளுமன்ற கூட்டத் தொடரில் கலந்து கொண்டு பேச முடியவில்லை என்றும், அரசியலமைப்புச் சட்டம் தங்களுக்கு வழங்கியுள்ள அரசியலமைப்பு உரிமைகளை ஒரு பாராளு மன்ற உறுப்பினராக செயல்படுத்தவில்லை என்றும், எனவே தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் ஆணை செல்லாது என்றும் அவ்வுறுப்பினர்கள் வாதிட்டனர். ஆனால் இவ்வாதத்தை உச்ச நீதிமன்றம் பின்வரும் அடிப்படைகளில் நிராகரித்தது. அவற்றின்படி (1) மனுதாரர்கள் ஒரு செல்லத்தகுந்த தடுப்புக் காவல் ஆணையின்படி சிறை வைக்கப்பட்டுள்ளனர்; (2) எனவே ஒரு சாதாரண குடிமகன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டால் அவனுக்கு எத்தகு உரிமைகள் உள்ளதோ, அதை விட மேலான சிறப்புரிமைகளை சம்பந்தப்பட்டவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் அவருக்கு வழங்க வாய்ப்பில்லை; (3) எனவே ஒரு தடுப்புக் காவல் ஆணை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை அவர் பாராளுமன்ற கூட்டத் தொடரில் கலந்து கொள்வதிலிருந்து தடுக்கும் படி பிறப்பிக்கப்பட்டிருப்பின், அவர் தனது அரசியலமைப்பு உரிமை

1. AIR 1952 Cal. 632
2. AIR 1966 SC 657

யாவ பேச்சுரிமை பறிக்கப்பட்டுவிட்டது என்று கூறுவதற்கு இடமேயில்லை. மேற்கண்டவாறு உச்ச நீதிமன்றம் கூறி, அத்தடுப்புக் காவல் ஆணை செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்கண்ட வழக்குகளின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் வரும் **'Z' என்பவர் தடுப்புக் காவல் ஆணையை 'Z' எதிர்த்து தொடுத்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது. எனவே அந்த ஆணை செல்லுபடியாகும் என்பதே தீர்வு.**

பிரச்சனை 9

The factories in the industrial areas are polluting the atmosphere thereby affecting the Air quality of the state. The same is spreading to adjacent states also. Government of India had promised to the international forums to take suitable measures to check its air pollution. Advice the central government as to how to legislate in matters relating to the State.

ஒரு மாநிலத்தின் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற் சாலைகள் வாய்வு மண்டலத்தில் மாசு கேட்டை ஏற்படுத்தி காற்றின் தரத்தை பாதிப்புக்குள்ளாக்குகின்றன. அப்பாதிப்பு பக்கத்து மாநிலங்களுக்கும் பரவுகின்றது. இந்திய அரசு காற்றில் மாசு கலப்பதை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுப்பதாக நாட்டிடை அமைப்புகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளது. மாநில பட்டியில் உள்ள பொருள்கள் குறித்து சட்டம் இயற்ற மத்திய அரசிற்கு ஆலோசனை வழங்குக.

தீர்வு:

மாநில துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசு பெற்றிருக்கவில்லையென்றாலும் பின்வரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாநிலப் பட்டியலில் (State list) உள்ள துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசு பெற்றுள்ளது.

(i) தேசிய நலனுக்காக சட்டமியற்றுதல் - மாநிலங்களவை (ராஜ்ய சபை) ஒரு விஷயத்தை தேசிய நலனுக்குகந்தது என அறிவித்து விட்டால் மாநிலப் பட்டியலில் உள்ள எந்தத் துறைகளிலும் மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம். அதற்கு மாநிலங்களவை கூட்டத்தில் பங்கு பெறும் உறுப்பினர்களில்

மூன்றில் இரு பங்கினரின் இசைவு வேண்டும். **[ஷரத்து 249].**

(ii) நெருக்கடி நிலையின் போது சட்டமியற்றல் - நெருக்கடி நிலை அமலில் இருக்கும்போது, இந்தியா முழுமைக்குமோ அல்லது இந்திய எல்லைக்குள் உள்ள ஏதேனும் ஒரு பகுதிக்கோ மாநிலப் பட்டியலில் கூறப்பட்டுள்ள எல்லா விஷயங்கள் குறித்தும் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெறுகிறது என்றும், அப்படிப்பட்ட சட்டங்களானது நெருக்கடி நிலை முடிந்தவுடன் ஆறு மாதங்கள் கழித்து தன்னுடைய செல்லுதன்மையை இழந்துவிடும் என்றும் **ஷரத்து 250** கூறுகிறது.

(iii) மாநிலங்களின் ஒப்புதலுடன் சட்டமியற்றல் - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்கள், மாநில பட்டியலில் உள்ள ஏதேனும் சில விஷயங்களில் மத்தியப் பாராளுமன்றம் சட்டமியற்றுவது விரும்பத்தக்கது, என தீர்மானம் நிறைவேற்றினால் அவ்வாறு அக்குறிப்பிட்ட விஷயங்கள் மீது பாராளுமன்றம் சட்டம் இயற்றலாம் என்று **ஷரத்து 252** கூறுகிறது. இத்தகைய சட்டத்தை மற்ற மாநில சட்டமன்றங்களும் ஒரு தீர்மானம் இயற்றுவதன் மூலம் பின்பற்றலாம்.

(iv) ஒப்பந்தங்களையும், சர்வதேச உடன்படிக்கைகளையும் அமலாக்குவதற்கு சட்டமியற்றல் - ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளை அமலாக்குவதற்கு, பாராளுமன்றம் இந்தியா முழுமைக்குமோ, இந்திய எல்லைக்குள் ஏதேனும் ஒரு பகுதிக்கோ எச்சட்டத்தையும் இயற்றலாம், என்று **ஷரத்து 253** கூறுகிறது.

(v) மாநிலமானது அரசியலமைப்பின்படி செயல்பட முடியாத போது சட்டமியற்றல் - பாராளுமன்றமானது ஒரு மாநில அரசாங்கம் அரசியலமைப்பின்படி செயல்பட முடியாத நிலையில் உள்ளது என அறிவிக்கும் பொழுது, அம்மாநிலப் பட்டியலில் உள்ள எந்த விஷயம் குறித்தும் சட்டமியற்றும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெறுகிறது என **ஷரத்து 356** கூறுகிறது.

மேற்கண்ட அய்ந்து சூழ்நிலைகளில் மாநில பட்டியலில் உள்ள ஒரு துறை மீது மத்திய அரசு சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது. இவற்றில் நமது பிரச்சனைக்கு **ஒப்பந்தங்களையும், சர்வதேச உடன்படிக்கைகளையும் அமலாக்குவதற்கு சட்டமியற்றல்** எனும் (iv)- வது தலைப்பில் தீர்வு உள்ளது. மேற்படி பிரச்சனையில் உள்ள வாசகங்களின்படி காற்றில் மாசு கலப்பதை கட்டுப்படுத்த

தகுந்த நடவடிக்கை எடுப்பதாக நாட்டிடை அமைப்புகளுக்கு இந்திய அரசு வாக்குறுதி அளித்துள்ளது கவனிக்கத்தக்கது. மேலும் 253-ஆவது சர்வதேச ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் அமலாக்க இந்தியா முழுமைக்கோ, அதன் எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் ஒரு பகுதிக்கோ பொருந்தும் வண்ணம் சட்டமியற்ற பாராளுமன்றத்திற்கு (மத்திய அரசு) அதிகாரமளிக்கிறது.

வேறு வகையில் சொன்னால், ஒரு துறை மாநிலப் பட்டியலில் இருந்தாலும் அத்துறை தொடர்பாக சர்வதேச உடன்படிக்கைகளை அமலாக்கும் பொருட்டு சட்டமியற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. இங்கு மத்திய பட்டியலில் உள்ள துறையில் மத்திய அரசுதான் சட்டமியற்ற வேண்டும், அவ்வாறே மாநிலப் பட்டியலில் உள்ள துறையில் மாநில அரசுதான் சட்டமியற்ற என்ற சாதாரணமான அதிகாரப் பகிர்வு எந்த வகையிலும் குறுக்கே நிற்பதில்லை.

எனவே மேற்படி பிரச்சனையில் ஒரு மாநிலத்தின் தொழிற் பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள் வாய்வு மண்டலத்தில் மாசு கேட்டை ஏற்படுத்தி, காற்றின் தரத்தை பாதிப்புக்கு உள்ளாக்குவதாலும், அது பக்கத்து மாநிலங்களுக்கும் பரவுவதாலும், இந்திய அரசு காற்றில் மாசு கலப்பதை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுப்பதாக நாட்டிடை (சர்வதேச) அமைப்புகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளதாலும், ஷரத்து 253-ன்படி மாநில பட்டியலில் உள்ள சம்பந்தப்பட்ட துறைகள் மீது சட்டமியற்ற மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. இதுவே நாம் மத்திய அரசுக்கு வழங்கும் ஆலோசனையாகும்.

பிரச்சனை 10

The Government of India entered into a treaty with the United States of America on a subject matter which is in the State list under the Indian Constitution. Decide, on the constitutional validity of the treaty made by central government.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாநில பட்டியலில் உள்ள பொருண்மை மீது இந்திய அரசாங்கம் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஒரு உடன்படிக்கையை செய்து கொள்கிறது. மத்திய அரசு செய்துள்ள இந்த ஒப்பந்தத்தை அரசமைப்பு சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை முடிவு செய்க.

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே இப்பிரச்சனைக்கும் பொருந்தக் கூடியதாகும்.

ஷரத்து 253-ன்படி ஒப்பந்தங்களையும், சர்வதேச உடன்படிக்கைகளையும் அமலாக்குவதற்கு மத்திய அரசு மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு துறை மீதும் சட்டமியற்ற அதிகாரம் படைத்தது. அதாவது ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச உடன் படிக்கைகளை அமலாக்குவதற்கு, பாராளுமன்றம் இந்தியா முழுமைக்குமோ, இந்திய எல்லைக்குள் ஏதேனும் ஒரு பகுதிக்கோ எச்சட்டத்தையும் இயற்றலாம்.

மேலும், **ஷரத்து 249-ன்படி தேசிய நலனுக்காக மத்திய அரசு சட்டமியற்ற அதிகாரம் படைத்தது.** அதாவது, மாநிலங்களவை (ராஜ்ய சபை) ஒரு விஷயத்தை தேசிய நலனுக்குகந்தது என அறிவித்து விட்டால் மாநிலப் பட்டியலில் உள்ள எந்தத் துறைகளிலும் மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றலாம். அதற்கு மாநிலங்களவை கூட்டத்தில் பங்கு பெறும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினரின் இசைவு வேண்டும்.

எனவே மத்திய அரசு மாநிலப் பட்டியலில் உள்ள துறை குறித்து அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் செய்து கொண்ட உடன்படிக்கை செல்லத்தக்க ஒன்றே.

பிரச்சனை 11

A State legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject matter of legislation fell under entry 31 List I "Broadcasting and other like forms of communication". The state contended that the law was within the legislative competence of the state legislature since it fell under Entry 6 List II "Public health and sanitation " - Decide.

ஒலிபெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து ஒரு மாநில சட்டமன்றம் சட்டம் செய்தது. இச்சட்டம் மத்திய பட்டியலில் 31-வது பிரிவில் 'ஒலிபரப்பல் மற்றும் அது போன்ற தகவல் தொடர்பு" என்ற தலைப்பில் உள்ளடங்கும் என்பதால்

இச்சட்டம் செல்லாது என வாதிடப்பட்டது. ஆனால் இச்சட்டம் மாநில பட்டியலில் வேது பிரிவின் கீழ் 'மக்கள் நல்வாழ்வும் துப்புரவும்' என்ற தலைப்பின் கீழ் உள்ளடங்கு வதால், மாநில சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டதே என மாநில அரசு வாதிடுகிறது. தீர்வழி காண்க.

தீர்வு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்துகள் 251, 254(1)** ஆகியவற்றின்படி மாநில சட்டமன்றம் மாநில பட்டியலில் (State List) உள்ள விபரம் குறித்து இயற்றிய எச்சட்டமாவது பாராளுமன்றம் மத்திய பட்டியலில் (Union List) உள்ள விபரம் குறித்து இயற்றிய எச்சட்டத்துடனாவது அல்லது இணைப்புப் பட்டியலில் (Concurrent list) கூறப்பட்டுள்ள விபரம் குறித்து இயற்றப்பட்டுள்ள எச்சட்டத்துடனாவது முரண்பட்டு இருப்பின், பாராளுமன்றம் இயற்றிய சட்டம்தான் (அல்லது இணைப்புப் பட்டியலில் உள்ள விவரம் குறித்த சட்டம்தான்) செல்லுபடியாகும். மாநில சட்டமன்றம் இயற்றிய சட்டம், முரண்பாட்டளவிற்கு இல்லாநிலையதாகும்.

எனவே இந்த முரண்பாட்டைத் தவிர்க்க மத்திய பாராளுமன்றம், மத்திய பட்டியலில் உள்ள தலைப்புகள் (அல்லது விபரம்) (entries) குறித்தும், மாநில சட்டமன்றம் மாநில பட்டியலில் உள்ள தலைப்புகள் குறித்தும் சட்டமியற்ற வேண்டும். எனினும் இணைப்புப் பட்டியலில் உள்ள தலைப்புகளைப் பொறுத்து மத்திய பாராளுமன்றமும், மாநில சட்டமன்றமும் இணைந்து சட்டமியற்றலாம்.

எனினும் அப்படியும் மீறி மாநில அரசின் ஒரு சட்டமானது, மத்திய பட்டியலில் உள்ள ஒரு தலைப்பில் தலையிடுமாறு இயற்றப்பட்டு விட்டால், சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றமானது அப்படி சட்டமியற்ற தகுதி படைத்ததா என்பதை தீர்மானிக்க நீதி மன்றங்கள் ஒரு விதியைப் பின்பற்றுகின்றன. அது **"பெரும்பான்மை விதி" (Doctrine of Pith and Substance)** எனப்படும். இவ்விதியின்படி, ஒரு விபரம் குறித்து சட்டமியற்ற மாநில சட்டமன்றத்திற்கு தகுதி உள்ளதா என்பதை அவ்விபரம் தொடர்டைய சட்டத்தின் உண்மையான நோக்கத்தை கண்டுணர வேண்டும். அதற்காக அச்சட்டம் முழுவதையும் பரிசீலிக்க வேண்டும்; அத்துடன்

அச்சட்ட வகைமுறைகளின் நோக்கம், எல்லை, விளைவு ஆகிய வற்றையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒரு சட்டம் மாநில சட்டமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டிருக்கும் பொழுது, அது தற்செயலாக மத்திய அரசின் அதிகாரவரம்பிலும் தலையிடுகிறது என்றால், அச்சட்டத்தினை தவறானது என்று கூறி விட முடியாது.

எனவே மேற்கண்ட பெரும்பான்மை விதியை நமது பிரச்சனைக்குப் பொருத்திப் பார்க்கும் பொழுது, ஒலி பெருக்கியி னால் காதுகளுக்கும், இதயத்திற்கும் ஊறு நேரும் அபாயம் உள்ளது. எனவே இது மக்களின் நல் வாழ்விற்கு குந்தகம் விளைவிப்பதாக உள்ளது. மக்களை நன்முறையில் வாழ வைப்பதே, மேற்படி சட்டத்தின் நோக்கமும் எல்லையும் ஆகும். மேலும் "மக்களின் நல்வாழ்வும் துப்புரவும்" மாநில பட்டியலில் 6-வது பிரிவின் கீழ் உள்ளடங்கியுள்ளது. எனவே ஒலிபெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து மாநில சட்டமன்றம் சட்டமியற்ற அதற்கு அதிகாரவரம்பு உள்ளது. இங்கு மத்திய பட்டியலில் 31-வது பிரிவில் "ஒலிபரப்பல் மற்றும் அது போன்ற தகவல் தொடர்பு" என்ற தலைப்பு இருந்தாலும், அதில் மாநில சட்ட மன்றம் தனது மேற்படி சட்டத்தின் வாயிலாக மிகக் குறைந்த அளவில்தான் தனது மூக்கை நுழைத்துள்ளது. அதுவும் தற்செயலாகத்தான் உள்ளது. எனவே மேற்படி சட்டத்தின் உண்மையான நோக்கம், அளாவுகை, விளைவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மாநில அரசின் சட்டம் செல்லத்தக்கதே என்றே தீர்வளிக்க வேண்டும். எனவே மாநில அரசின் வாதம்தான் ஏற்புடையதாகும்.

பிரச்சனை 12

The Legislative assembly in its budget, levied tax on the sale of Agarbathi in the state. On the same commodity the corporation also taxed. The Agarbathi manufactures filed a suit before the High Court complaining that it is an instance of double taxation. Will the High Court interfere in the case.

மாநிலத்தில் அகர்பத்தி விற்பனை மீது நிதி அறிக்கையின் படி சட்டமன்றம் வரி விதித்தது. அதன் மீது பெரு நகரமன்றமும் வரி விதித்தது. அகர்பத்தி தயாரிப்பவர்கள் இது இரட்டை வரி விதிப்பு என கூறி உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை வேண்டி மனு செய்தனர். இதில் உயர் நீதிமன்றம் தலையிடுமா?

தீர்வு:

"சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது" (No levy or collection of taxes except by authority of law) என **ஷரத்து 265** திட்டவட்டமாகக் கூறுகிறது. அதாவது நிர்வாகத்துறையின் உத்திரவினாலோ (executive order) அல்லது விதிகளினாலோ (rules) எந்த வரியும் விதிக்கப்படக்கூடாது. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றினால் மட்டுமே வரி விதிக்கப்பட வேண்டும்.[1] அதுவும் செல்லத்தக்க சட்டமாக (valid law) இருத்தல் வேண்டும். வேறு விதத்தில் கூறுவதாக இருந்தால், அச்சட்டமானது அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசியலமைப்புச் சட்ட வகைமுறைகள் எவற்றையும் மீறக்கூடாது.

ஆனால் ஒன்றின் மீதே **இருமுறை வரி விதிப்பதை (Double Taxation)** அரசியலமைப்பு சட்டம் தடை செய்யவில்லை, என **Contonment Board v. W.I. Theatres Ltd.**[2] எனும் வழக்கில் கூறப்பட்டது. அவ்வாறே ஒரு பொருள் மீது இரு முறை சட்டமன்றம் வரி விதிப்பதை தடுக்கும்படி ஷரத்து 265-ல் ஏதுமில்லை என்று **Avinder Singh v. State of Punjab**[3] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

நமது மேற்படி பிரச்சனையிலும் அகர்பத்தி என்ற ஒரு பொருள் மீது இரு முறை வரி விதிக்கப்பட்டுள்ளது. அதை மறுப்பதற்கில்லை. ஷரத்து 265, **"சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது"** என்று கூறுகிறது. இப்பிரச்சனையில் மாநிலத்தில் அகர்பத்தி விற்பனை மீது நிதி அறிக்கையின்படி மாநில சட்டமன்றம் வரி விதித்துள்ளது. அதாவது சட்டப்படி வரி விதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஒரு வரி செல்லத்தக்கது. ஆனால் அதே நேரத்தில் அதே பொருள் மீது மாநகராட்சி வரி விதிக்கிறது. இங்கு அவ்வாறு அதே பொருள் மீது மீண்டும் வரி விதிக்க மாநகராட்சிக்கு சட்டம் அனுமதி கொடுத்துள்ளதா அல்லது எந்த சட்டப்படி மாநகராட்சி வரி விதித்துள்ளது என்பது குறித்து நமது மேற்படி பிரச்சனையில் விளக்கம் ஏதுமில்லை. ஏனெனில் மாநகராட்சி என்பது ஒரு அரசு நிர்வாகம். அது தனது ஆணையால் வரி விதிக்க இயலாது. சட்டமன்றம் இயற்றிய சட்டத்தின் வாயிலாக வரி விதிக்க மாநகராட்சி அதிகாரம்

1. H.L.Mehra v. State of Maharashtra, AIR 1975 SC 1130
2. AIR 1964 Bom. 261
3. AIR 1979 SC 321

பெறுகிறது. அப்படி அதிகாரமளித்திருப்பின் அதை நிறைவேற்றும் பொருட்டு மாநகராட்சி விதிக்கும் வரி சட்டப்படி செல்லும். எனவே இந்த அடிப்படையில் நீதிப்பேராணை வேண்டி உயர் நீதிமன்றத்தை அணுக அகர்பத்தி தயாரிப்பாளர்களுக்கு முகாந்திரம் உண்டு.

பிரச்சனை 13

'D' a judge of a High Court was transferred by the Presidential Order to another High Court. 'D' challenges the transfer on the ground that the order was issued without his consent and without the concurrence of Chief Justice of the two State High Courts concerned and of the Chief Justice of India. Examine the legal issues involved.

ஜனாதிபதியின் உத்திரவின் பேரில் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியாகிய 'உ' என்பவர் வேறு மாநில உயர் நீதிமன்றத்திற்கு பணி இடமாற்றம் செய்யப்பட்டார். பணி இடமாற்றம் செய்யப் பட்ட நீதிபதியின் ஒப்புதலையும் மற்றும் சம்பந்தப்பட்ட இரு மாநில உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளின் உடன் இசைவினையும் பெறாமல் 'உ' என்பவருக்கு பணி இடமாற்றம் செய்யப்பட்டது என எதிர்த்து 'உ' என்பவர் வாதிடுகிறார். இவ்வழக்கு தொடர்பான சட்டப் பிரச்சனைகளை ஆராய்க.

தீர்வு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **222வது ஷரத்து,** உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பணியிட மாற்றத்தைப் பற்றிக் கூறுகிறது. அதன்படி, குடியரசுத் தலைவர், இந்திய தலைமை நீதியர சரிடம் கலந்தாலோசித்த பிறகு, உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை, வேறொரு உயர் நீதிமன்றத்திற்கு பணியிட மாற்றம் செய்ய உத்திர விடலாம். எனவே, பணியிட மாற்றம் செய்யப்படும் நீதிபதியின் ஒப்புதல், மேற்படி பணியிட மாற்ற உத்திரவிற்கு அவசியமில்லை என்பது தெளிவாகிறது. இக்கருத்து **Union of India v. Sankal Chand**[1], **S.P.Gupta v. Union of India**[2], **S.C.Advocates on Records Association v. Union of India**[3] எனும் முக்கிய வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட்டன.

1. AIR 1977 SC 2328
2. AIR 1982 SC 149
3. AIR 1995 SC 268

எனினும், அம்மாற்றல் உத்திரவு, தண்டனையளிக்கும் ஷரத்தில் இருக்கக் கூடாது; பொதுநலனுக்கு அவசியமான விதத்தில் இருக்க வேண்டுமென்றும் மேற்படி வழக்குகளில் கூறப்பட்டது.

அதுபோல், உயர் நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியை பணியிட மாற்றம் செய்ய, குடியரசுத் தலைவர் இந்திய தலைமை நீதியரசரிடம் கலந்தாலோசிக்க வேண்டும் என்று ஷரத்து 222 கூறுகிறதே தவிர, மேற்படி பிரச்சனையில் கூறப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட இரு மாநில உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதியின் உடன் இசைவையும் (Concurrence) பெற வேண்டும் என்று வலியுறுத்த வில்லை.

எனினும், மேற்படி **S.P.Gupta v. Union of India**[1] எனும் வழக்கில், இந்திய தலைமை நீதியரசரிடம், குடியரசுத் தலைவர் மேற்கண்ட பணியிட மாற்றம் தொடர்பான விஷயம் குறித்து கலந்தாலோசிக்கும்பொழுது, அவரால் அது குறித்து வழங்கப்படும் கருத்துரையானது (opinion) சம்பந்தப்பட்ட நீதிபதி எந்த மாநில உயர் நீதிமன்றத்திலிருந்து பணியிட மாற்றம் செய்யப்படுகிறாரோ, அம்மாநிலத்தின் தலைமை நீதியரசரின் கருத்துக்களை உள்ளடக்கிய தாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் சம்பந்தப் பட்ட இரு மாநில உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதியரசர்களின் உடன் இசைவினைக் குடியரசுத் தலைவர் பெற்றிருக்க வேண்டுமென்று கூறவில்லை.

எனவே, மேற்படி பிரச்சனையில் கொடுக்கப்பட்டுள்ள பொருண்மை களின் அடிப்படையில் மட்டும் ஆராய்ந்தால், ஷரத்து 222ன்படியும், மேற்கண்ட வழக்குகளின்படியும் பணியிட மாற்றம் நீதிபதியின் ஒப்புதல் தேவையில்லை என்பதும், சம்பந்தப்பட்ட இரு மாநில உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதியரசர்களின் உடன் இசைவும் தேவையில்லை என்பதும் புலனாகும். ஆகவே, 'D' எனும் உயர் நீதிமன்ற நீதிபதிக்கு, அப்பணியிட மாறுதல் உத்திரவிற்கு எதிராக வழக்கிட அடிப்படை ஒன்றுமில்லை, அல்லது வழக்கு நிலைக்காது.

ஆனால் மேற்படி பிரச்சனையின் ஆங்கில பத்தியில் குடியரசுத் தலைவர், இந்திய தலைமை நீதியரசரிடம் கலந் தாலோசிக்காமல் மேற்படி 'D'யை பணியிட மாற்றம் செய்ய உத்திரவு பிறப்பித்துள்ளதாக கண்டுள்ளது. அப்பொழுது அவ்

1. AIR 1982 SC 149

வுத்திரவு செல்லாதென எதிர்த்து வழக்காட 'D'க்கு உரிமையுண்டு. 'D'யும் வழக்கில் வெற்றி பெறலாம். (ஆனால் மேற்படி பிரச்சனையின் தமிழ் மொழிபெயர்ப்பில் "இந்திய தலைமை நீதியரசரிடமும் இசைவு பெறப்படவில்லை" எனும் வாசகம் கொடுக்கப்படவில்லை என்பதை கவனிக்க.)

பிரச்சனை 14

A Constitution Bench of three judges was constituted in the Supreme Court to interpret the constitution, which decided the case unanimously. Later the decision was impugned as wrong and therefore a Bench of Five judges was constituted to review that case. Decide the constitutional and jurisprudential requirement of constituting a Constitutional Bench.

அரசமைப்புச் சட்டத்தில் உள்ள பிரிவுகளுக்கு விளக்கம் தருவதற்காக உச்ச நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட பெஞ்ச் ஒன்று அமைக்கப்பட்டு அது அந்த வழக்கில் ஒருமித்த கருத்தை தெரிவித்தது. பின்னர் அந்த தீர்ப்பு தவறு என்று குறை கூறப்பட்டது. அந்த வழக்கை மறு ஆய்வு செய்வதற்கு ஐந்து நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் அமைக்கப் பட்டது. அரசமைப்புச் சட்ட பெஞ்ச் அமைப்பதில், அரசமைப்புச் சட்டப்படி மற்றும் சட்ட இயல்நீதியாகவும் இன்றியமை யாதனவைகளைப் பற்றி முடிவு செய்க.

தீர்வு:

ஷரத்து 145-ன்படி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு, உச்ச நீதிமன்றம், தனது நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கு உண்டான விதிகளை தாமே இயற்றிக் கொள்ளும் அதிகாரம் பெற்றதாகும். அந்த வகையில் ஷரத்து 141 (2)-ன்படி, ஒரு ஆயத்தில் (Bench) குறைந்தபட்சம் எத்தனை நீதிபதிகள் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்துக் கொள்ளும் அதிகாரத்தையும் உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது. இதனடிப்படையில் அரசியலமைப்பின் பொருள் விளக்கம் தொடர்பான பிரச்சனையை தீர்மானிக்க அமைக்கப்படும் **அரசியலமைப்பு ஆயத்தில் (Constitutional Bench)** அமரும் குறைந்தபட்ச நீதிபதிகளின் எண்ணிக்கை அய்ந்தாகும், என **ஷரத்து 145 (3)** குறிப்பிடுகிறது. எனவே, அரசியலமைப்பின் பொருள் விளக்கம் குறித்த வினாவை விசாரிக்க, குறைந்தபட்சம் அய்ந்து

நீதிபதிகள் கொண்டதொரு அரசியலமைப்பு ஆயம் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஆனால் நமது மேற்படி பிரச்சனையில் மூன்று நீதிபதிகளை மட்டுமே கொண்டு ஒரு அரசியலமைப்பு ஆயம் அமைக்கப்பட்டதே செல்லாததாகும். எனவே அது ஒருமித்த தீர்ப்பை (unanimous decision) வழங்கினாலும், அது கட்டுப்படுத்தத் தக்கதல்ல. எனவே, அந்தத் தீர்ப்பு தவறு என்று குறை கூறப்பட்டது சரியே.

உச்ச நீதிமன்றம் தான் வழங்கிய தீர்ப்பையே ஷரத்து 137-ன் கீழ் மறுஆய்வு (Review) செய்யும் அதிகாரம் கொண்டதாகும். இந்த அதிகாரத்தின் அடிப்படையில், மேற்படி குறையுடைய தீர்ப்பை மறு ஆய்வு செய்ய அய்ந்து நீதிபதிகள் கொண்ட ஆயம் அமைக்கப் பட்டது. நாம் முன்கண்ட ஷரத்து 145 (3)-ன்படி சரியானதாகும். அந்த ஆயத்தின் பெரும்பான்மை நீதிபதிகள் கொடுக்கும் முடிவு, கட்டுப்படுத்தத்தக்கதாகும்.

பிரச்சனை 15

The executive of the State Government entered into a contract with suppliers for supply of materials for the construction fo Houses for the poor. Due to urgency, a lower division clerk signed the contract without the knowledge of his superiors. Can the suppliers claim the amount from the Government for the goods supplied.

ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டுமான பொருட்கள் அளிப்போருடன் மாநில அரசின் ஆட்சித்துறை ஒப்பந்தம் செய்கிறது. அவசரத்தை முன்னிட்டு மேலதிகாரிக்கு தெரியாமல் கீழ் நிலை எழுத்தர் அவ்ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். வழங்கப்பட்ட பொருள்களுக்கு அப்பொருள்களுக்கான தொகையை கோர இயலுமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம் பின்வரும் சட்ட வகை முறைகளையும் சில முக்கிய வழக்குகளையும் காண வேண்டியது அவசியமாகும்.

ஷரத்து 298. இந்திய அரசாங்கம் ஒப்பந்தத்தில் ஈடுபட

அதிகாரம் அளிக்கிறது. ஆனால் அது **ஷரத்து 299ல்** கூறப் பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி அமைய வேண்டும். அந்நிபந்தனைகள் பின்வருமாறு.

1. ஒப்பந்தமானது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரால் செய்யப்படுகிறது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

2. ஒப்பந்தமானது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் சார்பாக கையொப்பமிடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டு எழுதிக் கொடுக்கப்பட (Executed) வேண்டும்.

3. குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் அவைகளை யாரால் எவ்விதமாகச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறாரோ (Direction) அல்லது இசைவு ஆணை (Authorise) அளிக்கிறாரோ அவ்வாறே அந்த நபர்களால் அவ்விதமாகக் கையொப்பமிடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டு முற்றுப் பெற்றிருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டால், ஒரு ஒப்பந்தத்தில் இந்திய அரசு அதற்கு பொறுப்புடையதாக ஆகி விடும். எனவே, மேற்படி நிபந்தனைகள் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய (mandatory provisions) ஒன்றாகும். மீறினால், அவ்வொப்பந்தம் இல்லா நிலையதாகும்.

சில முக்கியமான வழக்குகள்:

Bihar ECF Co-operative Society v. Sipahi Singh[1] - **ஷரத்து 299-ல்** கூறப்பட்டுள்ள மூன்று நிபந்தனைகளை பின்பற்றாமல் செய்யப்படும் அரசு ஒப்பந்தங்கள் இல்லாநிலையதும் (void), செல்லத்தகாததும் (Nullified) ஆகும், என மேற்கண்ட வழக்கில் கூறப்பட்டது.

Karamshi v. State of Bombay[2] - கண்காணிப்பு பொறியாளருக்கும் (Superintendent Engineer) கரும்புப் பண்ணை வைத்திருக்கும் ஒரு நபருக்குமிடையே, கால்வாய் நீரை, அவருடைய கரும்புப் பண்ணை பாகத்திற்கு விடுவதற்கான ஓர் உடன்படிக்கை, கடிதங்கள் மூலமாக ஏற்பட்டது. ஆனால் ஆளுநரின் பெயரில் முறையான ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. சிறிது காலத்திற்கு நீர் அளிக்கப்பட்ட பிறகு, அந்நீர் அளிப்பு நிறுத்தப்பட்டது. நீதிமன்றமானது,

1. AIR 1977 SC 2149
2. AIR 1964 SC 1714

அரசுக்கும் தொடர்புடைய நபருக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டதை ஆவணச் சான்று மூலம் அறிந்து கொண்டது. ஆனால் ஆளுநரின் பெயரில் ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட வில்லை. மேலும், இவ்வொப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பு பொறியாளர், ஒப்பந்தத்தில் ஈடுபட சட்டப்படி அதிகாரம் அளிக்கப் பட்டவரா என்பது தெளிவாக இல்லை. ஆகவே இவ்வொப்பந் தத்தை வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது, என்று நீதிமன்றம் கூறியது.

Bhikraj Jaipura v. Government of India[1] - இவ்வழக்கில் இரயில்வே நிர்வாகத்தின் கோட்டக் கண்காணிப்பாளருக்கும் (Divisional Superintendent) தனிநபருக்கும் இடையே உணவுத் தானியங்களை இரயில்வேக்கு வழங்குதல் பற்றி ஒப்பந்தம் முறைப் படி செய்யப்பட்டிருந்தது. ஆனால், கோட்டக் கண்காணிப்பாளர், அவ்வொப்பந்தத்தில் இந்தியத் தலைமை ஆளுநரின் (Governor General of India) சார்பில் கையொப்பமிடவில்லை. உச்ச நீதிமன்றம் அவ் வொப்பந்தத்தினை செயல்படுத்த இயலாதென அறிவித்துவிட்டது.

ஷரத்து 229-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை அப்படியே பின்பற்றினால், அது அரசாங்க நடைமுறைகளை சிக்கல் நிறைந்ததாக ஆக்குவதோடு மட்டுமல்லாமல், சில நேரங்களில் தனி மனிதனுக்கு அநீதியையும் விளைவித்துவிடும். இதனைக் கருத்தில் கொண்டு நீதிமன்றம் வழக்குகளின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மேற்படி ஷரத்தின் கடினத் தன்மையை சற்றே தளர்த்தியது. பின்வரும் வழக்கை எடுத்துக்காட்டாக கூறலாம்.

Union of India v. Rallia Ram[2] - இவ்வழக்கில், இந்திய அரசாங்கத்தின், கொள்முதல் துறையின் தலைமை இயக்குநர் (Chief Director of Purchases) சில சிகரெட்டுகளை வாங்குவதற்காக, ஒப்பந்தப் புள்ளிகளை (Tender) வரவேற்றார். எதிர்மனுதாரரின் ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்பட்டு, அந்த ஏற்புக் கடிதம் இயக்குநரால் கையொப்பமிடப்பட்டது. முறையான ஒப்பந்த ஆவணம் மூலமாகத் தான், ஒப்பந்தம் ஏற்பட வேண்டும், என்று ஷரத்து 299 வலியுறுத்த வில்லை. மேலும் ஒரு ஒப்பந்தம் எங்ஙனம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற முறையை குடியரசுத் தலைவர் அறிவிக்காமல் இருக்கும் பட்சத்தில் தரப்பினர்களுக்கு இடையே நடைபெறும்

1. AIR 1962 SC 113
2. AIR 1963 SC 1685

கடிதப் போக்குவரத்தே ஒப்பந்தம் ஏற்படுவதற்கு போதுமானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி வழக்கில் தரப்பினர் களுக்கு இடையே ஏற்பட்ட கடிதத் தொடர்பே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கியது.

நமது மேற்படி பிரச்சனையில் ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டுமான பொருட்கள் அளிப்போருடன் மாநில அரசின் ஆட்சித்துறை ஒப்பந்தம் செய்கிறது. எனவே ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், அவசரத்தை முன்னிட்டு மேலதிகாரிக்கு தெரியாமல் கீழ் நிலை எழுத்தர் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அதை அடிப்படையாகக் கொண்டு அரசுக்கு பொருட்களும் வழங்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப்படவில்லை, எனவே தொகையைக் கோர இயலாது என்று அந்த அரசுத் துறை வாதிட்டால், பொருளை அளித்தவர் பெரிதும் பாதிக்கப்படுவார். எனவே **Union of India v. Rallia Ram**[1] - வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பின்படி பொருளை அளித்தவர் அதற்கான தொகையைக் கோரி வழக்கிட முடியும். அதில் வெற்றி பெறவும் வாய்ப்புண்டு.

பிரச்சனை 16

A contractor constructed a House at the request of an official who had accepted his tender. The house was constructed and accepted by the government but the contractor was not paid as the contract failed to fulfill the requirements of Art. 299(1). Can the contractor claim his dues from the government?

ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட ஒரு அரசு அதிகாரி ஒரு ஒப்பந்தக்காரரை ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுகிறார். அந்த வீடு கட்டி முடிக்கப்பட்டு அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆனால் ஷரத்து 299(1) படி அந்த ஒப்பந்தம் செல்லாநிலையில் இருப்பதால் ஒப்பந்தக்காரருக்கு சேர வேண்டிய பணம் கொடுக் கப்படவில்லை. அந்த ஒப்பந்தக்காரர் அரசிடம் தனக்கு வர வேண்டிய தொகையை கோர இயலுமா?

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே

1. AIR 1963 SC 1685

இதற்கும் பொருந்தும். குறிப்பாக **Union of India v. Rallia Ram**[1] - வழக்கை சுட்டிக்காட்டலாம். மேற்படி பிரச்சனையில் வரும் ஒப்பந்தக்காரர் வீடு கட்டிக் கொடுத்ததற்கான தொகையை அரசிடமிருந்து கோரிப் பெறலாம்.

பிரச்சனை 17

A government servant was suspended from service pending disciplinary proceedings against him. He wants to challenge the order of suspension since he was suspended without following the provisions of Art. 311. Provide legal advice to him.

அரசு ஊழியர் ஒருவர் அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை முன்னோக்கி தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டார். தற்காலிக பணி நீக்க ஆணையில் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 311 பின்பற்றப்படவில்லை என்பதால் அவ்வாணை செல்லத்தகாதது என வழக்கிட விரும்புகிறார். அவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 311**, அரசுப் பணியாளர்களின் பணிக்கு பாதுகாப்பு அளிக்கிறது. அதாவது அரசுப் பணியாளர் ஒருவரை பணி (பதவி) நீக்கம் (dismissal or removal) அல்லது பதவிக் குறைப்பு (reduction in rank) செய்ய வேண்டுமெனில், ஷரத்து 311(1)-ன்படி யார் அவரை நியமனம் செய்தாரோ, அவருக்கு கீழ் உள்ள அதிகாரியினால் அவர் பணி நீக்கம் அல்லது பதவிக் குறைப்பு செய்யப்படுதல் கூடாது. அதுபோல் ஷரத்து 311(2)-ன்படி அவர் பணி நீக்கம் அல்லது பதவிக் குறைப்பு செய்யப்படுவதற்கு முன்பாக, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதில் அவருக்கு தன்னுடைய வாதத்தினை எடுத்துக் கூற ஒரு நியாயமான சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும். மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று பின்பற்றப்படவில்லை என்றாலும் கூட, அவர் தனது பணி நீக்கம் அல்லது பதவிக் குறைப்பை எதிர்த்து வழக்கிட்டு மீண்டும் பணியைப் பெறலாம். எனவே ஷரத்து 311-ஆனது பணி

1. AIR 1963 SC 1685

நீக்கம் அல்லது பதவிக் குறைப்பு செய்யப்படும் பொழுது மட்டுமே பொருந்தும் என்பது தெளிவு.

ஆனால் நமது மேற்படி பிரச்சனையில் அரசுப் பணியாளர் ஒருவர் **தற்காலிக பணி நீக்கம் (suspension)** செய்யப்படுகிறார். எனவே அவருக்கு ஷரத்து 311-ன் வாயிலாகக் கிடைக்கும் அரசியலமைப்பு பாதுகாப்புகள் கிடைக்காது (The suspension of a Government Servant from service is neither dismissal or removal nor reduction in rank, therefore, if a Government servant is suspended he cannot claim the constitution guarantee of reasonable opportunity). அதாவது, அவர் ஷரத்து 311 பின்பற்றப்படவில்லை என்று கூறி வழக்கு ஏதும் தாக்கல் செய்ய முடியாது, என்பதே தீர்வு. இது **Sukh Bansh Singh v. State of Punjab**[1] எனும் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை பின்பற்றி அமைந்ததாகும்.

எனவே அவர் ஷரத்து 311-ன் கீழ் நிவாரணம் ஏதும் தேட முயலாமல், அவரது தற்காலிக பணி நீக்கத்தை வேறு அடிப்படைகளின் கீழ் எதிர்த்து தொடர்புடைய நீதிமன்றத்தில் வழக்கிடுதலே நன்று என்பதே நாம் அவருக்கு வழங்கும் சட்ட ஆலோசனையாகும்.

பிரச்சனை 18

A government servant was compulsorily retired in accordence with the service rules. He challenges the order of compulsory retirement passed against him as invalid for violation of Article 311, since he was neither given notice nor heard before passing the order of compulsory retirement - Decide.

பணி விதிகளை பின்பற்றி ஒரு அரசு ஊழியருக்கு பணியிலிருந்து கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. அரசமைப்பின் 311வது பிரிவின்படி அறிக்கையோ, காரணம் காட்டுவதற்கான சந்தர்ப்பமோ அளிக்காததால் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட கட்டாய ஓய்விற்கான ஆணை செல்லத் தகாதது என வாதிடுகிறார். - தீர்வழி காண்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வு காண பின்வரும் முக்கிய

1. AIR 1952 SC 1711

வழக்கொன்றில் கூறப்பட்ட தீர்ப்பை காணுதல் வேண்டும்.

அதாவது **Shyam Lal v. State of Uttar Pradesh**[1] - எனும் வழக்கில் சியாம்லால் என்பவர் கட்டாய பதவி ஓய்வு (Compulsory retirement scheme) திட்டத்தின் கீழ், கட்டாயமாக பணியிலிருந்து ஓய்வு கொடுக்கப்பட்டு அனுப்பப்பட்டார். தன்னுடைய வாதத்தினை எடுத்துக்கூற நியாயமான சந்தர்ப்பம் (reasonable opportunity) அளிக்கப்படவில்லை எனக்கூறி, மேற்படி கட்டாய பதவி ஓய்வு உத்திரவை எதிர்த்து சியாம்லால் வழக்கு தொடுத்தார். இவ்வாறு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது, பதவி நீக்கம் செய்ததற்கோ அல்லது பதவிக் குறைப்பு செய்ததற்கோ ஒப்பாகாது. ஆகவே ஷரத்து 311-ன்படி நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்படத் தேவையில்லையென உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே மேற்படி பிரச்சனையில் வரும் அரசு ஊழியர் கட்டாய ஓய்விற்கான ஆணை செல்லாது என்று செய்யும் வாதம் நிலைக்கத்தக்கதல்ல. அவருக்கு ஷரத்து 311 துணைக்கு வராது.

பிரச்சனை 19

A Civil servant was dismissed from service without any enquiry as to any proposal for such punishment, by withdrawal of President's pleasure that his continuation in service would be prejudicial to national security. Aggrieved by this order he moved court for quashing the order. Decide.

ஓர் அரசுப் பணியாளரை அவருக்கு அளிக்கப்படவிருந்த தண்டனைக் குறித்து அவரிடமிருந்து கருத்து பெறும் வாய்ப்பளிக் காமல் அவர் பணியில் தொடர்ந்தால் நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகமாகும் என்ற அடிப்படையில் குடியரசுத் தலைவர் தம் இச்சையைத் திரும்பப் பெற்றதன் மூலம் பணியிலிருந்து நீக்கப் படுகிறார். பாதிக்கப்பட்டவர் அவ்வாணையை ரத்து செய்ய நீதிமன்றத்தை அணுகுகிறார். தீர்வு செய்க.

தீர்வு:

விருப்புரிமைக் கோட்பாடு (Doctrine of Pleasure) பற்றி, அரசியலமைப்பின் **310 (1)-வது ஷரத்து** குறிப்பிடுகிறது. இதன்படி, மத்திய அரசின் இராணுவ பணியிலோ அல்லது அரசுப் (சிவில்)

1. AIR 1968 SC 36

பணியிலோ உறுப்பினர்களாக இருக்கும் எந்நபர்களும் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்குட்பட்டு தங்களது பதவியினை வகிக்க வேண்டும். அதேபோல் மாநில பணியில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், அம்மாநில ஆளுநரின் விருப்பத்திற்குட்பட்டு, தங்கள் பதவியினை வகிக்க வேண்டும். ஆங்கிலச் சட்டத்தின்படி, பணியில் உள்ள ஒரு உறுப்பினரை எக்காரணங்களும் இல்லாமல் எச்சமயத் திலும் பதவியை விட்டு விலக்கலாம். பணியிலிருந்து நீக்கப்பட்ட வருக்கும் அரசுக்குமிடையே பணி ஒப்பந்தம் இருப்பினும், அரசு அதற்குக் கட்டுப்பட்டதல்ல. இது ஒரு பொதுவான நிலைப்பாடு. இங்கு நமது பிரச்சனைக்கு தீர்வு காண கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கிய ஷரத்து உள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 311 (2)-ன்படி,** எந்த ஒரு அரசு (சிவில்) ஊழியரும், தான் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு அல்லது பதவிக் குறைப்பு செய்யப்படுவதற்கு முன்பாக, அவரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதில் அவருக்கு தன்னுடைய வாதத்தினை எடுத்துக்கூற ஒரு நியாயமான சந்தர்ப்பம் (reasonable opportunity) அளிக்கப்பட வேண்டும். ஆனால், **பின்வரும் ஒரு சூழ்நிலையில், நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் எனும் விதி பொருந்தாது.**

அதாவது குடியரசுத் தலைவரோ அல்லது ஆளுநரோ நாட்டின் பாதுகாப்பின் நலனைக் கருதி, ஒரு அரசு (சிவில்) ஊழியருக்கு அத்தகு நியாயமான சந்தர்ப்பத்தினை அளிப்பது உசிதமல்ல என்று திருப்தியுறும் பொழுது **[ஷரத்து 311 (2) (c)],** அவ்வாறு அளிக்காமல் அவரை பதவி நீக்கம் செய்யலாம்.

நமது மேற்படி பிரச்சனையிலும் இதே நிலைப்பாடுதான் உள்ளது. எனவே அந்த அரசுப் பணியாளரை குடியரசுத் தலைவர் தம் விருப்புரிமையைத் திரும்பப் பெற்றதன் மூலம் பணியிலிருந்து நீக்கம் செய்த ஆணை செல்லத்தக்க ஒன்றே. அவர் இதை இரத்து செய்ய வேண்டி நீதிமன்றத்திற்கு சென்றால், அதில் வெற்றி கிட்டாது.

பிரச்சனை 20

"No government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any mat-

ter pertaining to his conditions of service". Examine the validity of this G.O.

"அரசு ஊழியர் எவரும் தங்கள் வேலை நிலைமைகள் பொருட்டு எவ்வித ஆர்பாட்டத்திலோ, வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது" - இவ்வாணையின் செல்லும் நிலையை ஆராய்க.

தீர்வு:

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உரிமை இல்லை என்று **T.R.Rangarajan v. Govt. of Tamil Nadu**[1] வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய ஈராயம் தீர்ப்பளித்தது.

2002-ஆம் ஆண்டில் தமிழக அரசு ஊழியர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சமாதானப் பேச்சு வார்த்தைகள் பலனளிக்கவில்லை. எனவே தமிழக அரசு "தமிழ்நாடு அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டம், 2002 மற்றும் தமிழ்நாடு அவசர ஆணை, 2003" (Tamil Nadu Essential Services Maintenance Act, 2002 and the Tamil Nadu Ordinance, 2003) என்பதை நிறைவேற்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அந்த 2 இலட்சம் அரசு ஊழியர்களை பணி நீக்கம் செய்தது. இதனால் குறையுற்ற அரசு ஊழியர்கள் மேற்படி சட்டம் மற்றும் அவசர ஆணையின் செல்லும் தன்மையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

அப்போது உச்ச நீதிமன்றத்தின் ஈராயம், அரசு ஊழியர்கள் ஒட்டு மொத்தமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதன் மூலம் அரசை மிரட்டி பலன் பெற முடியாது என்றும்., அரசின் நடவடிக்கையால் அரசு ஊழியர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அதற்கு சட்டப்படியாக கட்டமைக்கப்பட்டுள்ள உரிய குறைதீர் அமைப்பிடம் முறையிட வேண்டுமே தவிர இவ்வாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது என்றும், வேலை நிறுத்தம் என்ற ஆயுதம் பெரும் பாலும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது, இதனால் அரசு நிர்வாகம் சீர்குலைகிறது என்றும், சமுதாயத்தை பாதித்து, அரசின் ஒட்டு மொத்த நிர்வாகத்தையும் ஸ்தம்பிக்கச் செய்கிறது என்றும் கூறியது.

1 AIR 2003 SC 3052

மேலும் அரசின் 90 சதவீத வருவாய் நேரடி வரியிலிருந்து கிடைக்கிறது என்றும், அது 12 இலட்சம் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல் மற்றும் இதர நலன்களுக்காக செலவினிக்கப் படுகிறது என்றும், வேலையில்லாத் திண்டாட்டம் பரந்த அளவில் இருக்கிற மற்றும் வேலைக்காக தகுதி வாய்ந்த பலர் காத்திருக்கும் ஒரு சமுதாயத்தில், வேலை நிறுத்தம் என்பதை எவ்வித நியாயமான காரணத்திற்காகவும் சரியானதாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. முடிவில் மேற்கண்ட சட்டம் மற்றும் அவசர ஆணையின் கீழ் அரசு எடுத்த நடவடிக்கை சரியானதே என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

எனவே நமது மேற்படி பிரச்சனையில், "அரசு ஊழியர் எவரும் தங்கள் வேலை நிலைமைகள் பொருட்டு எவ்வித ஆர்ப் பாட்டத்திலோ, வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது" என்று கொண்டு வரப்பட்ட அரசாணை செல்லத்தக்கதே.

பிரச்சனை 21

The Madras High Court had issued a writ against the Election Commission which is a statutory body permanently located in New Delhi. The Election Commission opposed it on the ground that the commission was not within the jurisdiction of the Madras High Court. Decide.

சட்டத்தால் நிரந்தரமாக புது டெல்லியில் அமைக்கப்பட்ட தேர்தல் ஆணையத்திற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை ஒன்றை வழங்குகிறது. தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் இல்லை என்ற அடிப்படையில் தேர்தல் ஆணையம் இதனை எதிர்க்கிறது. முடிவு செய்க.

தீர்வு:

தேர்தல் விஷயங்களில் நீதிமன்றங்கள் தலையிடுவதை இந்திய அரசியலமைப்பின் **ஷரத்து 329** தடை செய்கிறது. அதாவது **ஷரத்து 329 (a)**-ன்படி, தொகுதிகளை வரையறுத்தல் அல்லது அத்தொகுதிகளில் இட ஒதுக்கீட்டைச் செய்தல் தொடர்பான எச்சட்டத்தின் செல்லு தன்மைக்கு எதிராக, எந்நீதிமன்றத்திலும் வினா எழுப்ப இயலாது.

மேலும், **ஷரத்து 329 (b)**-ன்படி, பாராளுமன்ற அவைகளுக்கு உண்டான தேர்தல் அல்லது மாநில சட்டமன்ற அவைகளுக்குண்டான தேர்தலை எதிர்த்து எந்நீதிமன்றத்திலும் வினா எழுப்ப முடியாது என்றும், உரிய சட்டமன்றத்தால் இயற்றப் பட்ட சட்டத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட அதிகார அமைப்பின் முன்பு ஒரு **தேர்தல் மனுவை (an election petiton)** தாக்கல் செய்வதன் மூலம் மட்டுமே எதிர்த்து வாதாடலாம்.

இச்ஷரத்துக்களையொட்டி எழுந்த **Ponnu Swami v. Returning Officer, Namakkal**[1] எனும் வழக்குதான் நமது மேற்படி பிரச்சனைக்கு தீர்வளிக்கவிருக்கின்றது. அவ்வழக்கின்படி, சட்ட மன்ற தேர்தலுக்கு மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த வேட்பு மனுவை தேர்தல் அதிகாரி (Returning Officer) நிராகரித்து உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார். அந்த உத்தரவை நீக்கறவு செய்யக் கோரியும், தனது பெயரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளக் கோரியும் மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தில் ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி மனு ஒன்றை தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரி பிறப்பித்த உத்தரவில் தலையிட தனக்கு அதிகாரவரம்பு இல்லையென்று கூறி அவரது மனுவை உயர் நீதிமன்றம் ஷரத்து 329(b)-ன் கீழ் தள்ளுபடி செய்துவிட்டது. எனவே இதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அப்பொழுது ஷரத்து 329-ல் வரும் "தேர்தல்" எனும் பதமானது, வேட்பாளர் ஒருவரை சட்டமன்றத் திற்கு அனுப்புவதற்கான முழு நடைமுறையையும் பரிசீலித்தலைக் குறிக்கிறது என்றும், அத்தோடு ஷரத்து 226-ன் கீழான உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரவரம்பையும் தடுக்கிறது என்றும், வேட்பு மனுவை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் என்பது "தேர்தல்" எனும் பதத்தினுள்ளே அடங்கியுள் ளது என்றும், ஏதேனும் பாதிப்புகள் இருப்பின் அதை சம்பந்தப் பட்ட தேர்தல் முடிந்த பிறகு, உயர் நீதிமன்றத்தில் ஒரு தேர்தல் மனுவை தாக்கல் செய்வதன் வாயிலாகத்தான் அத்தேர்தலை எதிர்த்து வழக்காட முடியுமே தவிர, நீதிப்பேராணை மனு தாக்கல் செய்வதன் மூலமாக அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது.

எனவே இதன் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக சென்னை உயர்

1. AIR 1962 SC 64

நீதிமன்றம் நீதிப் பேராணை எதையும் பிறப்பிக்க இயலாது. ஏனெனில் உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரவரம்பிற்குள் தேர்தல் ஆணையம் இல்லை என்பதே இங்கு நாம் வழங்கும் தீர்வாகும்.

பிரச்சனை 22

By passing a constitutional amendment the power to decide on election disputes of prime minister was excluded from judicial review and it was conferred on the Parliament. Examine its validity.

அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலமாக பிரதம மந்திரியின் தேர்தல் குறித்த பிரச்சனைகளில் முடிவு செய்யும் அதிகாரம் நீதிமுறை மறு ஆய்விலிருந்து நீக்கப்பட்டு நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் செல்லும் நிலையை ஆராய்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க "அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் உச்ச நீதிமன்றத்தால் மறு சீராய்வு செய்யப்பட முடியுமா?" (Can the Constitutional Amendments be reviewed by the Supreme Court?) என்ற வினாவிற்கு முதலில் விடை காணுதல் வேண்டும்.

இந்தியாவில் பொருளாதார நிலை, அரசியலில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திய பிறகு , அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதில் பாராளுமன்றம் முனைப்பு காட்டியது. இந்நிலையில், சாதாரண சட்டங்கள் மட்டுமில்லாமல், ஒரு அரசியலமைப்புச் சட்ட திருத்தம் கூட, நீதிமன்றத்தின் மறு சீராய்விற்கு உட்பட்டதாகும் என்ற கருத்துகள் வேகமாகப் பரவின. **கோலக் நாத் வழக்கில்**[1], அடிப்படை உரிமைகளை பாதிக்குமாறு அமையும் அரசியலமைப்பு சட்ட திருத்தங்களை, மறு சீராய்வு செய்து, செல்லுபடியாதவை என உச்ச நீதிமன்றம் விளம்பலாம், எனப்பட்டது. **கேசவானந்த பாரதி வழக்கில்**[2], இதற்கும் ஒருபடி மேலாக, அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை [Basic fea-

1. Golak Nath v. State of Punjab, AIR 1967 SC 1643,
2. Keshavanada Bharati v. State of Kerala, AIR 1973 SC 1461

tures (structure) of Constitution] பாதிக்குமாறு அமையும் சட்ட திருத்தங்களையும் மறு சீராய்வு செய்து, செல்லுபடியாதவை என்று அறிவிக்கலாம், எனப்பட்டது. கோலக் நாத் வழக்கைக் காட்டிலும், கேசவானந்த பாரதி வழக்கில் கூறப்பட்ட முடிவு, பரந்ததாக (wider) உள்ளது. எனவே, ஒரு அரசியலமைப்பு சட்ட திருத்தத் தையும் நீதிமுறை மறு சீராய்வு செய்ய முடியும். இங்கு நாம் மற்றொரு முக்கியமான வழக்கையும் காண வேண்டியுள்ளது. அது வருமாறு.

Indira Nehru Gandhi v. Raj Narain[1]

இவ்வழக்கில், 1975-ஆம் ஆண்டின் 39-வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் நமது அரசியலமைப்பின் **ஷரத்து 329-A**-ல் புகுத்தப்பட்ட (4)வது உட்கூறின் [Clause (4) of Article 329-A] செல்லுதன்மை குறித்து ஆராயப்பட்டது. ஏனெனில், அது நமது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை (Basic structure of Constitution) அழிக்கும் வண்ணம் உள்ளதே காரணமாகும். மேற்படி உட்கூறு (4)-ஆனது, பிரதமரின் அல்லது பாராளுமன்ற சபாநாயகரின் தேர்தலை செல்லாது என்ற நீதிமன்றத்தின் உத்திரவு எதுவும் இல்லாநிலையதாகும், மற்றும் அது அனைத்து விஷயங் களைப் பொறுத்தும் இல்லாநிலையதாகவே தொடரும், அதற்கு விளைவு ஏதும் கிடையாது என்று கூறுகிறது. இந்த உட்கூறு, பிரதமர் அல்லது சபாநாயகரின் தேர்தல் தொடர்பான பிரச் சனைகளை தீர்ப்பதற்காக வேறு அதிகாரம் அல்லது அமைப்பை சட்டத்தால் ஏற்படுத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கும் வண்ணம் உள்ளது. மேலும், அந்த அதிகாரத்தின் அல்லது அமைப்பின் முடிவை, நீதிமன்றத்தின் முன்னர் வழக்கிட்டு எதிர்க்க முடியாததாக ஆக்கி உள்ளது. இந்த உட்கூறு அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் பகுதிகளாக உள்ள சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல், மக்களாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை மீறுவதாக உள்ளதால், அரசியலமைப்பற்றது என்று உச்ச நீதிமன்றம், தனக்குள்ள நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தி விளம்பியது.

இந்த வழக்கில் நீதி முறை மறு சீராய்வு, மக்களாட்சி, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவை, அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. எனவே, அந்த அடிப்படை அம்சங்களை

1. AIR 1973 SC 2299

பறிக்கும் வண்ணம் இயற்றப்படும் அரசியலமைப்பு சட்ட திருத்தம் அரசியலமைப்பற்றது என்றும், எனவே, இல்லா நிலையதென்றும் உச்ச நீதிமன்றத்தால் மறு சீராய்வின் பொழுது அறிவிக்கப்படத் தக்கதாகிறது. (மேற்படி ஷரத்து 329-A, பின்னர், 1978-ஆம் ஆண்டின் 44-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தால் நீக்கப் பட்டு விட்டது.)

இவ்வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பின்படி, அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலமாக பிரதம மந்திரியின் தேர்தல் குறித்த பிரச்சனை களில் முடிவு செய்யும் அதிகாரம் நீதிமுறை மறு ஆய்விலிருந்து நீக்கப்பட்டு நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்தது செல்லாது. அது நீதிமுறை மறுசீராய்வுக்குட்பட்டதாகும்.

பிரச்சனை 23

Explain the constitutional validity of an Amendment to the constitution stating, "No amendment under Article 368 shall be called in question in any court of law".

எந்த நீதிமன்றத்திலும் பிரிவு 368ன் கீழ் இயற்றப்பட்ட எந்த அரசமைப்புத் திருத்தத்தையும் செல்லாது என்று வழக்கு தொடர முடியாது என்று கூறும் அரசமைப்புச் சட்ட திருத்தத்தின் செல்லும் தன்மையை ஆராய்க.

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே இப்பிரச்சனைக்கும் பொருந்தக் கூடியதாகும். அதன்படி, அரசியலமைப்பு சட்ட திருத்தத்தை செல்லாது என்று எந்த நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது என்று கூறும் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் செல்லாது.

பிரச்சனை 24

An amendment to the constitution was made by the Parliament to validate with retrospective effect, the election of the Prime Minister which was set aside by the High Court. Comment upon the validity of this Amendment.

உயர் நீதிமன்றத்தால் செல்லத்தக்கது அல்ல என்று

அறிவிக்கப்பட்ட ஒரு பிரதமரின் தேர்தலை காலம் பின்னிட்டு முறைப்படுத்தும் வகையில் அரசமைப்பு சட்டத் திருத்தம் ஒன்றை நாடாளுமன்றம் கொண்டு வந்தது. இந்த அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் செல்லும் நிலை குறித்து கருத்தாய்வுச் செய்க.

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே இப்பிரச்சனைக்கும் பொருந்தக் கூடியதாகும். இங்கு அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் செல்லக் கூடிய நிலையை உச்ச நீதிமன்றம் தனது நீதிமுறை மறுசீராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆராயலாம். அதாவது ஒரு பிரதமரின் தேர்தலை காலம் பின்னிட்டு முறைப்படுத்தும் வகையில் நாடாளுமன்றம் கொண்டு வந்த அரசமைப்பு சட்டத் திருத்தம் பற்றி நீதிமன்றம் வினவ முடியாது என்று எவ்வித நிலைப்பாடும் கிடையாது. அதன் செல்லுமா, செல்லாதா என்பது உச்ச நீதிமன்றத்தின் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்திற்கு உட்பட்டது.

பிரச்சனை 25

The Parliament passed a constitutional amendment making changes in the constitutional provisions relating to the election of the President. This was challenged on the ground that before the amendment the consent of the states were not obtained. Decide.

பாராளுமன்றம் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான அரசமைப்பு சட்டப் பிரிவுகளில் மாற்றம் கொண்டு வந்தது. இந்த சட்டத் திருத்தத்தை கொண்டு வருவதற்கு முன் பல்வேறு மாநிலங்களின் ஒப்புதல் பெறப்படவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில், இச்சட்ட திருத்தம் எதிர்க்கப்பட்டது. தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம் **"தனிப் பெரும்பான்மை பலம் மற்றும் மாநிலங்களின் ஒப்புதலின் பேரில் கொண்டு வரப்படும் அரசியலமைப்பு சட்டத் திருத்தம்"(Amendment by Special Majority and Ratification by States)** கொண்டு வரப்படும் நடைமுறையைக் காண வேண்டும்.

ஷரத்து 368 (2)-ன் கீழான நிபந்தனை வாசகப் பத்தியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஷரத்துகளையும், அட்டவணைகளையும் திருத்துவதற்கு பாராளுமன்ற தனிப்பெரும்பான்மை பலத்தின் அடிப்படையில் அரசியலமைப்புத் திருத்த மசோதாவைப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றிய பிறகு, அம்மசோதாவானது **மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெற அனுப்பப் படுகிறது.** அவ்வாறு அனுப்பப்படும் மசோதா இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களில் பாதிக்குக் குறையாது உள்ள மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெற்றவுடன் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று அரசியலமைப்புத் திருத்தச் சட்டமாக ஆகிறது. ஷரத்து 368 (2)-ன் நிபந்தனை வாசகப் பத்தியானது (Proviso) மேற்கண்ட முறைகளைப் பின்பற்றி திருத்தப் படத்தக்க ஷரத்துகள் மற்றும் அட்டவணைகளை பின்வருமாறு குறிப்பிடுகிறது. அவை,

1. குடியரசுத் தலைவர் தேர்தல் - ஷரத்து 54 மற்றும் 55.

2. மத்திய மற்றும் மாநிலங்களின் நிர்வாக அதிகாரத்தின் நீட்டிப்பு - ஷரத்துகள் 73 மற்றும் 162,

3. உச்ச நீதிமன்றம் மாநில உயர் நீதிமன்றங்கள் பற்றிய ஷரத்துகள் - ஷரத்துகள் 124லிருந்து 147 வரை, 214லிருந்து 231 வரை மற்றும் 241.

4. மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே சட்டமியற்றும் அதிகாரங்களின் பகிர்ந்தளிப்பு - ஷரத்து 245லிருந்து 255 வரை.

5. ஏழாவது அட்டவணையில் உள்ள பட்டியல்கள் எதுவும்.

6. பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம். (நான்காவது அட்டவணை).

7. 368வது ஷரத்து (அரசியலமைப்பைத் திருத்தும் முறை).

தற்போது குடியரசுத் தலைவரின் தேர்தல் தொடர்பான அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளில் மாற்றம் கொண்டு வர பாராளுமன்றம் அரசியலமைப்பு சட்டத்திருத்தம் ஒன்றை இயற்றுகிறது. குடியரசுத் தலைவரின் தேர்தல் பற்றி ஷரத்து 54 மற்றும் 55 கூறுகிறது. (அதாவது மேலே கண்ட இனங்களில் முதலாவது இனம்).

எனவே இச்சட்ட வகைமுறைகளில் திருத்தம் கொண்டு வர வேண்டுமெனில் அதற்கான மசோதாவிற்கு இந்தியாவில் உள்ள மாநிலங்களில் பாதிக்கு குறையாத மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று ஷரத்து 368(2) மேற்கண்ட வாறு கூறுகிறது. ஆனால் நமது பிரச்சனையில் அவ்வாறு மாநிலங்களின் ஒப்புதல் பெறப்படவில்லை. எனவே அச்சட்டத் திருத்தத்தை எதிர்த்து வழக்கிட்டால் நிச்சயம் வெற்றி கிட்டும்.

பிரச்சனை 26

Rajasthan Motor Vehicles Act, 1951 levied a tax on all motor vehicles used or kept within the State of Rajasthan. Appellants were bus operators plying on routes, which for short distance, traversed Rajasthan territory. They challenged the validity of the Act on the ground of violation of Art.301 and 304-B. Decide.

1951-ம் ஆண்டு இராஜஸ்தான் மோட்டார் வாகனச் சட்டத்தின் படி, இராஜஸ்தான் மாநிலம் அம்மாநிலத்திற்குள் உபயோகப்படுத்தும் மற்றும் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் வரி விதித்தது. மனுதாரர்கள், பஸ் உரிமையாளர்கள் இராஜஸ்தான் நிலப்பரப்பிற்குள் சிறிது தூரம் உட்சென்று கடந்து வாகனங்களை ஓட்டினார்கள். பிரிவு 301 மற்றும் பிரிவு 304Bயை மீறியதாக அவர்கள் அச்சட்டத்தின் செல்லுபடி தன்மையை அறிய வழக்குத் தொடர்ந்தார்கள். முடிவு செய்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனை **Automobile Transport Ltd. v. State of Rajasthan**[1] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும். மேற் படி பிரச்சனையில் வரி விதிக்கும் 1951-ம் ஆண்டின் இராஜஸ்தான் மோட்டார் வாகனச் சட்டம், செல்லத்தக்கதே. மற்றும், அது, ஷரத்துகள் 301 மற்றும் 304க்கு உட்பட்டதே. (எவ்வாறு செல்லத் தக்கது என்பதற்குண்டான காரணங்களை பக்கம் எண் 185-ல் மேற்படி வழக்குத் தலைப்பின் கீழ் உள்ள விளக்கத்தை படித்தறிய வும்.)

1. AIR 1962 SC 1906

பிரச்சனை 27

The petitioner carried on the business of growing tea and exporting it to Calcutta via Assam. While passing through Assam, the tea was liable to tax under the Assam Taxation (on goods carried by Roads or Inland waterways) Act 1954. Discuss the validity of this Act.

மனுதாரர் தேயிலை பயிரிட்டு அதனை அஸ்ஸாம் வழியாக கல்கத்தாவிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் வியாபாரம் மேற் கொண்டிருந்தார். அஸ்ஸாம் வழியாகச் செல்லும் போது, தேயிலை அஸ்ஸாம் வரி விதிப்பு (தரை வழியாக செல்லும் சரக்குகள் மீது அல்லது உள்நாட்டு நதி வழியாக) சட்டம் 1954-ன் கீழ், வரி விதிப்பதற்குள்ளாகிறது. இச்சட்டம் செல்லத்தக்கவையா என்பதினை விவாதிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனை **Atiabari Tea Company v. State of Assam**[1] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும். மேற்படி பிரச்சனையில் வரி விதிக்கும் 1954-ஆம் ஆண்டின் சட்டம் செல்லாது. (ஏன் செல்லாது என்பதற்குண்டான விளக்கத்தை பக்கம் எண் 184-ல் மேற்படி வழக்குத் தலைப்பு கொண்ட பத்தியில் காணவும்.)

பிரச்சனை 28

A state Government has made it a compulsory requirement for a person who transports goods through the state to obtain a permit. 'A' challenges the rule on the ground that it offends the right to carry on trade. Decide.

ஒரு மாநில அரசானது அம்மாநிலத்தின் வழியே கொண்டு செல்லப்படும் அனைத்து வணிகப் பொருள்களும் அனுமதி பெற்ற பின்தான் கொண்டு செல்லலாம் என விதி செய்தது. 'A' இவ்விதி வணிக சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது என மறுதலிக்கிறார். தீர்வு செய்.

தீர்வு:

1. AIR 1961 SC 252

மேற்படி பிரச்சனையில் செய்யப்பட்டுள்ள விதி எந்த வகையிலும் 'A' என்பவரின் வணிக சுதந்திரத்தை மீறவில்லை. அவ்விதி செல்லத்தக்க ஒன்றே. இது தொடர்பாக எழுந்த **State of Bihar v. Harihar Prasad Debuka**[1] என்ற வழக்கின் விவரங்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 186-இன் இறுதியில் காணவும்.

பிரச்சனை 29

A state Government imposed tax on lottery of other states at the entry point. But the local lottery tickets were not subjected to such tax. A lottery ticket agent wants to challenge such tax. Advise him properly.

ஒரு மாநில அரசானது வெளி மாநில லாட்டரி சீட்டுகளின் மேல் நுழைவு வரி விதித்தது. உள்ளூர் லாட்டரி சீட்டுகளின் மீது இத்தகைய வரி விதிப்பு இல்லை. ஒரு லாட்டரி சீட்டு முகவர் இத்தகைய வரி விதிப்பை எதிர்க்க விரும்புகிறார். அவருக்கு தகுந்த ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

இந்த வரி விதிப்பு செல்லத்தக்க ஒன்றே. இதை எதிர்த்து லாட்டரி சீட்டு முகவர் வழக்கிட்டால் அவர் தோல்வியுறுவார். இது தொடர்பாக எழுந்த **M/s. B.R.Enterprises v. State of U.P.**[2] என்ற வழக்கின் விவரங்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 186-இன் இறுதியில் காணவும்.

பிரச்சனை 30

The President after the issue of Proclamation of Emergency under Article 352, suspended the enforcement of Fundamental Rights under Article 359. Authorities under the preventive detention law issued orders of detention against the Petitioner. The petitioner challenged the order of his detention and the Presidential order for violation of his fundamental rights. Discuss the validity of the Presidential order.

பிரிவு 352ன் கீழ் குடியரசுத் தலைவர் அவசரநிலை பிர

1. (1989) 2 SCC 192
2. AIR 1999 SC 1867

கடனம் செய்த பின்பு, பிரிவு 359ன் கீழ் அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறார். தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் மலுதாரருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்திரவுகளை பிறப்பிக்கின்றனர். தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாக, மலுதாரர் தன்மீது உள்ள தடுப்புக் காவல் உத்திரவையும், குடியரசுத் தலைவர் உத்திரவையும் எதிர்த்து நீதிமன்றத்தில் மலு செய்கிறார். குடியரசுத் தலைவர் உத்திரவு செல்லத்தக்கவையா என்பதினை விவாதிக்கவும்.

தீர்வு:

நெருக்கடி நிலையின் பொழுது, ஷரத்து 359-ன் கீழ் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி செயல்படுத்தும் உரிமையும் குடியரசுத் தலைவரால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உத்திரவிடப்படுகிறது. இவ்வாறு குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்படும் ஒரு உத்திரவு, ஷரத்து 13 (2)-ன் கீழான 'சட்டம்' எனும் பதத்தில் அடங்காது. இதனால், அவ்வுத்திரவு, ஷரத்து 13 (2)-ன்படி, ஒரு சட்டமாகாது. எனவே சட்டமாகாத உத்திரவு ஒன்று அடிப்படை உரிமைகளை மீறிவிட்டதாக எவரும் வாதிட முடியாது, என்று **Mohd. Yakub v. State of J&K**[1] வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, மேற்படி பிரச்சனையில் கூறப்பட்டுள்ள குடியரசுத் தலைவரின் உத்திரவு செல்லத்தக்க ஒன்றே. எனினும் இவ்வுத்திரவு ஷரத்து 20 மற்றும் 21-ன் கீழான அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தாது.

பிரச்சனை 31

A Partner of a firm was carrying some gold bullion for sale was arrested and detained in police custody and the bullion was seized from him and kept in Police Custody. He was subsequently released but the bullion was not returned in spite of several demands. He filed a suit against the State for recovery of the gold or its value. Can he succeed?

விற்பனைக்காக எடுத்துச் சென்ற தங்கக்கட்டியை ஒரு கூட்டாண்மையின் கூட்டாளியிடமிருந்து பறிமுதல் செய்து, அவரையும் கைது செய்து காவலில் வைக்கப்படுகின்றார். பின்பு

1. AIR 1968 SC 765

அவர் விடுவிக்கப்படுகின்றார். ஆனால் பல முறை கோரப்பட்டும் அவரிடம் அந்த தங்கக் கட்டிகள் கொடுக்கப்படவில்லை. தங்கக் கட்டிகளை திரும்பப் பெறுவதற்கு அல்லது அதன் மதிப்பை பெறுவதற்கு அரசு மீது வழக்குத் தொடருகிறார். அவர் வெற்றி பெற முடியுமா?

தீர்வு:

மேற்படி பிரச்சனை **Kasturi Lal Ralia Ram Jain v. State of U.P.**[1] எனும் வழக்கை அப்படியே அடியொற்றியதாகும். மேற்படி பிச்சனையில், வழக்கு தொடர்ந்தவர் வெற்றிபெற முடியாது. (இதற்குண்டான காரணங்களை பக்கம் எண் 226-ல் மேற்படி வழக்குத் தலைப்பின் கீழ் உள்ள விபரங்களைப் பார்க்கவும்.)

பிரச்சனை 32

Explain the constitutional validity of an Amendment to the constitution stating, the decision of the speaker on anti-defection shall be final.

கட்சித்தாவல் தொடர்பாக அவைத் தலைவரின் முடிவு இறுதியானது என்று கூறும் அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் செல்லும் தன்மையை விளக்குக.

தீர்வு:

இந்திய அரசியலமைப்பின் இறுதியில் 12 அட்டவணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் அரசியலமைப்பின் ஏதேனும் ஒரு ஷரத்துக்கு தொடர்புடையதாகும். அந்த வகையில் மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண நாம் 10வது அட்டவணையின் கீழ் வரும் 8 பத்திகளில் 5, 6 மற்றும் 7 பத்திகளைக் காண வேண்டியுள்ளது.

10வது அட்டவணையின் பத்தி 5-ன்படி, மக்களவையின் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் அல்லது மாநிலங் களவையின் தலைவர் அல்லது மாநில சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவர் அல்லது மாநில சட்டமன்றப் பேரவையின் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர், கட்சித்தாவலின்

1. AIR 1962 SC 1039

காரணமாக தகுதியற்றவர்களாக ஆக மாட்டார்கள் என்று அவர்களுக்கு விலக்குரிமை அளிக்கிறது. கட்சித் தாவலால் ஏற்படும் தகுதியின்மை குறித்த வினாக்களை, அவைத் தலைவரி டமோ அல்லது நேர்விற்கேற்ப சபாநாயகரிடமோ (Speaker of the House) சுட்டியனுப்ப வேண்டும் என்றும், அவர் அவ்வினாக்களின் மீது வழங்கும் **முடிவே இறுதியானதாகும்** என்றும், **பத்தி 6** கூறுகிறது. இதிலிருந்து **கட்சித்தாவலை தடை செய்வதின் மீது, சபாநாயகர் கொண்டுள்ள உயர் அதிகாரம் புலனாகும் (Speaker's power on anti-defection).** மேலும் இந்த அதிகாரத்திற்கு வலு சேர்க்கும் விதத்தில், கட்சித்தாவலின் காரணமாக ஏற்படும் தகுதியிழப்பு குறித்த விஷயத்தில் நீதிமன்றங்கள் எவ்வித அதிகாரவரம்பையும் கொண்டிருக்கவில்லை, என்று **7-வது பத்தி** தெளிவுபடக் கூறுகிறது.

எனினும், அவைத் தலைவர் அல்லது சபாநாயகர் தங்களுக்குள்ள மேற்படி அதிகாரத்தின் கீழ் செய்யும் முடிவு (decision) எதனையும், ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றமும், ஷரத்து 136-ன் கீழ் உச்ச நீதிமன்றமும் நீதிமுறை மறுசீராய்வு (Judicial Review) செய்யலாம் என்றும், அவர்களது முடிவே **'இறுதியானது' (final)** என்பது, உச்ச அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிமுறை மறுசீராய்வு அதிகாரத்தை விலக்கி வைத்ததாகாது என்றும், **Prakash Singh Badal v. Union of India**[1] எனும் வழக்கில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தால் கூறப்பட்டது. இம்மாதிரியான கருத்து, **Kihoto Hollohan v. Zachitu**[2] எனும் வழக்கிலும் **Karhinath G.Salim v. The Speaker**[3] எனும் வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

எனவே, கட்சித்தாவலினால் ஏற்படும் தகுதியின்மை குறித்த விஷயங்களை விசாரிக்க நீதிமன்றங்களுக்கு தடை விதிக்கும் மேற்படி 7வது பத்தி, உச்ச நீதிமன்றத்தால் மேற்படி இரு வழக்குகளில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது; ஆட்சேபிக்கப்பட்டது. நீதிமுறை மறுசீராய்வு என்பது அரசியலமைப்பின் அடிப்படை கூறுகளின் ஒரு பகுதியாகும். மேற்படி 7-வது பத்தி அந்த அதிகாரத்தை தடை செய்வது, அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகளையே அழிப்பதாக உள்ளது, என்றும் கண்டித்தது.

மேற்சென்ற விளக்கங்களின் அடிப்படையில் நமது

1. AIR 1987 P & H 263
2. AIR 1993 SC 412
3. (1993) 2 SCC 703

பிரச்சனைக்கு தீர்வு கண்டால், 10-ஆம் அட்டவணையின் 5, 6 மற்றும் 7-ஆம் பத்திகள் கட்சித்தாவலின் காரணமாக அவைத் தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானது என்று தெரிகிறது. ஆனால் முன் சென்ற சில வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் படி பார்த்தால் அவ்வாறு இறுதியானது என்று கூறி இயற்றப்படும் நீதிமுறை மறுசீராய்விற்கு உட்பட்டது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. எனவே அப்படிப்பட்ட சட்டத்திருத்தம் செல்லும். ஆனால் அது நீதிமுறை மறுசீராய்விற்குட்பட்டது என்பதே மறுக்க முடியாத உண்மை.

-o0o-

பகுதி ஈ
(Part D)

பல்கலைக்கழக வினாத்தாள்கள்
(University Question Papers)

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக வினாத்தாள்கள் (Tamil Nadu Dr. Ambedkar Law University Question Papers)

மூன்றாண்டு சட்டக்கல்வி

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For the candidates admitted during 2017-18)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2018

(Three Years Regular Course)
Second Year / Third Semester

CONSTITUTIONAL LAW - II

Time: Two and half hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the procedure prescribed for the amendment of the Constitution of Indian and the role of states in Constitutional Amendments.
   இந்திய அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடைமுறைகளையும் மற்றும் அரசமைப்பு சட்டத்திருத்தத்தில் மாநில அரசுகளின் பங்களிப்பினையும் விளக்கவும்.
2. Discuss the safeguards to Civil Servants with recent cases.
   அரசு பணியாளர்களுக்கு உண்டான பாதுகாப்புகளை சமீபத்திய வழக்குகள் வழி நின்று விவாதிக்கவும்.
3. What are the kinds of jurisdiction of the Supreme Court of India ?
   இந்திய உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு ஆள்வரைகள் என்ன ?

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the privileges of the members of the parliament and State Legislative Assembly.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற கூட்டத்தின் உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை விளக்குக.

5. No tax shall be levied or collected except under the authority of law - Discuss.

சட்ட அதிகாரமின்றி வரி விதிக்கவோ அல்லது வரி வசூலிக்கவோ கூடாது – விவாதிக்கவும்.

6. Explain the provisions relating to ordinance making power of the President.

ஜனாதிபதியின் அவசர சட்டமியற்றும் அதிகாரம் தொடர்பான வகையங்கள் பற்றி விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) National emergency.
தேசிய நெருக்கடி நிலை.

(b) Doctrine of pith and substance.
மையக் கருப்பொருள் கோட்பாடு.

(c) Suspension of fundamental rights.
அடிப்படை உரிமைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

(d) Residuary powers.
எஞ்சியுள்ள அதிகாரங்கள்.

(e) Speaker of Lok Sabha.
மக்களவை தலைவர்.

(f) Money Bill.
பண சட்ட முன்வடிவு.

(g) Finance Commission.
நிதி ஆணையம்.

PART D - (2 x 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A military truck carrying jawans going towards the training spot. On the way it met with an accident due to negligent driving and as a result a

pedestrian died on the spot. The widow of the deceased man claimed compensation. Will she succeed ?

இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஓட்டுநரின் கவனக்குறைவால் இராணுவ வண்டி விபத்துக்குள்ளாகிறது. அதில் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் இறந்து விடுகிறார். இறந்தவரின் மனைவி இழப்பீடு கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா ?

9. The state of Rajasthan levied a tax on motor vehicles (Rs. 50 on a motor car and Rs. 1000 on a goods vehicle per year) used within the state in any public place or kept for use in the state. The validity of the tax is challenged by the Motor vehicle owners. Decide.

ராஜஸ்தான் அரசு ராஜஸ்தான் மாநிலத்தில் பயன்படுத்தும் மற்றும் பயன்படுத்துவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வாகனங்கள் மற்றும் சரக்கு வாகனங்களுக்கு (மோட்டார் வாகனத்திற்கு 50 ரூபாயும், சரக்கு வாகனத்திற்கு 100 ரூபாயும்) வரி விதித்தது. இது அரசமைப்பு சட்டத்திற்கு புறம்பானது என மோட்டார் வாகன உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் முறையிடுகின்றனர். தீர்வு காண்க.

10. A notification for presidential election was challenged on the ground that two states were under presidential rule. Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசு தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசு தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. முடிவு செய்க.

(For the candidates admitted from 2017-18 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2019

(Three Years Regular Course)
Second Year / Third Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2 ½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the various kinds of jurisdictions of the Supreme Court of India.

இந்திய உச்ச நீதிமன்றத்துக்குரிய பல வகையான அதிகாரவரம்புகள் யாவை?

2. What are the previleges of the Parliament?

பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் யாவை?

3. Explain the provisions relating to legislative relations between the Centre and the States.

மைய மற்றும் மாநில அரசுகளின் சட்டமியற்றும் உறவுகள் குறித்தான வகையங்களை விளக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the provisions relating to parliament's power to regulate trade and commerce.
   தொழில் மற்றும் வணிகத்தை ஒழுங்குறுத்தும் நாடாளுமன்ற அதிகாரத்தின் வகையங்களை பற்றி விளக்குக.
5. Discuss the structure, powers and functions of the Election Commission of India.
   இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு அதிகாரம் மற்றும் பணிகள் குறித்து விவாதிக்கவும்.
6. Discuss the various methods for amendment of the Constitution.
   அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான பல்வேறு முறைகளை விவாதிக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :
   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :
   (a) Collective responsibility
   கூட்டுப் பொறுப்பு
   (b) Tribunals
   தீர்ப்பாயங்கள்
   (c) Oridnary bill
   சாதாரண சட்ட முன்வடிவு
   (d) Attiabari Tea Estate Co. vs. State of Assam
   அடியாபரி தேயிலை நிறுவனம் எதிர் அஸ்ஸாம் அரசு
   (e) Anti-Defection Law
   கட்சித்தாவல் தடுப்புச் சட்டம்
   (f) Planning Commission
   திட்டக் குழு
   (g) Consolidated Fund of India
   இந்தியாவின் தொகுப்பு நிதி

PART D - (2 x 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A's death sentence was confirmed by the Supreme Court. He submitted a mercy petition before the President. President rejected the petition without

giving any reason. A approached the Supreme Court on the ground that the President failed to discharge his constitutional duty. Decide.

அ என்பவருடைய மரண தண்டனை உச்ச நீதிமன்றத்தால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. எனவே, ஜனாதிபதிக்கு கருணை மனு தாக்கல் செய்கிறார். ஜனாதிபதி அதனை எந்த காரணமும் கூறாமல் தள்ளுபடி செய்கிறார். அ என்பவர் ஜனாதிபதி, அரசியமைப்புச் சட்டப்படி தன் கடமையை செய்ய தவறினார் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கிறார். தீர்மானிக்க.

9. An ordinary Bill was passed by the house in which it originated and transmitted to the other house. The other house recommends some amendments which were rejected by the first house. Decide the fate of the bill?

ஒரு சாதாரண மசோதா அது உருவான சபையில் நிறைவேற்றப்பட்ட பின் அடுத்த சபைக்கு அனுப்பப்பட்டது. அடுத்த சபையானது அந்த மசோதாவில் சில திருத்தங்களை சிபாரிசு செய்தது. முதல் சபையானது அந்த திருத்தங்களை நிராகரித்தது. அந்த மசோதாவின் நிலை என்ன?

10. A government servant's promotion was withheld by the authorities as his performance was not satisfactory. the High Court refused to interfere in this matter. Can the Supreme Court come to the rescue of the government servant?

ஒரு அரசு ஊழியரின் பதவி உயர்வை அவரின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லாததால் அதிகாரிகள் நிறுத்தி வைத்துள்ளனர். இது குறித்து உயர் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறிவிட்டது. இதில் உயர் நீதிமன்றம் அவருக்கு நிவாரணம் அளிக்க முடியுமா?

(For candidates admitted during 2017-18 onwards)

L.L.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019

(Three Year Regular Course)
Second Year / Third Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the pardoning power of the President of India and the Governor of a State.

குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் ஆகியோரது மன்னிக்கும் அதிகாரத்தைப் பற்றி கூர்ந்தாய்வு செய்க

2. Explain the constitutional scheme regarding emergency in India.

இந்தியாவில் நெருக்கடி நிலை தொடர்பான அரசியலமைப்பு முறை பற்றி விளக்குக.

3. Discuss the various jurisdictions exercised by the Supreme Court.

உச்ச நீதிமன்றத்தால் செயலாக்கப்படும் பல்வேறு நீதி வரம்பெல்லைகளைப் பற்றி விவாதிக்க.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the difference between ordinary bills and Money bills.

சாதாரண சட்ட முன்வடிவிற்கும், பண சட்ட முன் வடிவிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

5. Explain the doctrine of Pith and Substance with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் வழிநின்று மையக்கருப்பொருள் கோட்பாட்டை விளக்குக.

6. Examine the law relating to adjudication of disputes relating to Inter-State river water sharing.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பங்கீடு தொடர்பான சச்சரவுகளை வழக்குத் தீர்வுக்கு உள்ளாக்குவது தொடர்பான சட்டத்தைப் பற்றி ஆய்வு செய்க.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Attorney General of India.

இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

(b) Zonal Councils

மண்டல மன்றங்கள்

(c) Public Service Commissions

மக்கள் பணியாளர் தேர்வாணையங்கள்

(d) L. Chandra Kumar u. Union of India

L. சந்திர குமார் எதிர் இந்திய யூனியன்

(e) Functions of Election Commission

தேர்தல் ஆணையத்தின் பணிகள்

(f) Basic structure doctrine

அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாடு

(g) Right to property.

சொத்துரிமை.

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட

வழக்குகளைக் கூறி தருந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Through a Constitutional amendment, the power to decide an election dispute of Prime Minister was excluded from judicial review and it was conferred on the Parliament. The validity of the constitutional amendment is challenged. Decide.

ஒரு அரசமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் பிரதமரின் தேர்தல் குறித்தான சச்சரவை தீர்மானிக்கும் அதிகார வரம்பு நீதிமன்ற ஆய்விலிருந்து விலக்களிக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்கு வழங்கப்படுகிறது. இச்சட்டத்திருத்தத்தின் செல்லுந்தன்மை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுகிறது? தீர்மானிக்கவும்.

9. A member of Parliament practises law as a senior Advocate in the Supreme Court of India. Can he be disqualified from being Member of a Parliament?

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்குரைஞராக வழக்குகளில் ஆஜராகிறார். அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்ய முடியுமா?

10. The President of India imposes emergency under Article 352 throughout India and suspends all the Fundamental Rights. Is the Presidential order valid?

உறுப்பு 352–ன் கீழ் குடியரசுத் தலைவர் நாடு முழுவதும் தேசிய நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தி அனைத்து அடிப்படை உரிமைகளையும் இடை நிறுத்தம் செய்கிறார். குடியரசுத் தலைவரின் இவ்வாணை செல்லுமா?

(For candidates admitted from 2017-18 onwards)

L.L.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021

(Three Year Regular Course)
Second Year / Third Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain how does the President exercise the ordinance making power.

அவசர சட்டம் இயற்றும் ஆற்றலைக் குடியரசு தலைவர் செயல்படுத்தும் முறை குறித்து விளக்குக.

2. "Article 368 does not enable Parliament to alter the basic structure or frame work of the constitution" - discuss this statement referring to cases.

"அரசியலமைப்புச் சட்டத்தின் 368–வது ஆம் பிரிவு அரசமைப்பின் அடிப்படை கட்டுமானத்தை மாற்றுவதற்கான அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு அளிக்கவில்லை" – இந்த கூற்றினை

தீர்ப்புகளின் உதவியுடன் விவாதிக்கவும்.

3. Discuss the Advisory Jurisdiction of the Supreme Court with relevant case laws.

உச்சநீதி மன்றத்தின் ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினை தகுந்த வழக்குகளுடன் விவரி

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain federalism and the essential characteristics of a federal constitution.

கூட்டாச்சி மற்றும் கூட்டாட்சி அரசமைப்புச் சட்டத்தின் முக்கிய கூறுகளை விளக்குக.

5. Explain the legislative relations between the Union and the States under the Indian Constitution.

இந்திய அரசமைப்பில் விவரிக்கப்பட்டுள்ள மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான சட்டமியற்றும் அதிகார உறவுகளை விவாதிக்க.

6. What is a Money Bill? Describe the procedure for passing a Money Bill in Parliament.

பண மசோதா என்பது என்ன? அதை நாடாளுமன்றம் நிறைவேற்றும் நடைமுறையை விவரி

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Review Under Article 137

பிரிவு 137 இன் கீழ் சீராய்வு

(b) Full Faith and Credit Clause.

முழு நம்பிக்கை மற்றும் நன்மதிப்பு வகையம்.

(c) Constitutional Review Committee's Report

அரசமைப்பின் மறு ஆய்வு குழுவின் அறிக்கை

(d) Joint sitting of both houses of Parliament.

பாராளுமன்றம் இரு அவைகளின் கூட்டு அமர்வு.

(e) National Emergency.

தேசிய நெருக்கடி நிலை.

(f) Attorney General of India.

மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர்.

(g) Residuary Powers

எஞ்சிய அதிகாரங்கள்.

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ravi filed a Petition challenging the holding of election of the President on the ground that since the Telagana State Legislative Assembly elections are going on, the electoral college is incomplete and hence the Presidential elections should be conducted only after the completion of election to the Telangana State Legislative Assembly. Decide.

ரவி என்பவர் தெலுங்கானா மாநில சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதால் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் குழாம் முழுமையாக இல்லை என்றும் எனவே குடியரசுத் தலைவர் தேர்தலை தெலுங்கானா மாநில சட்டசபை தேர்தல் நடந்த பின்பு தான் நடத்த வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்கிறார் தீர்மானிக்கவும்.

9. The Dean of Government Medical College taking serious view of the bad behaviour of a final year medical student, dismissed him after following the principles of natural justice. The dismissed student rushes, straight to the Supreme Court for relief. Will the Supreme Court entertain the student's petition?

ஒரு இறுதியாண்டு மருத்துவ மாணவர் அவரது ஒழுங்கீன நடவடிக்கையை கருத்தில் கொண்டு அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் இயற்கை நீதி வழிமுறைகளை பின்பற்றிய பின் அம்மாணவரை கல்லூரியிலிருந்து நீக்கிவிட்டார். நீக்கம் செய்யப்பட்ட மாணவர் உச்சநீதிமன்றத்தை அணுகுகிறார். உச்சநீதிமன்றம் அவரது மனுவை ஏற்றுக் கொள்ளுமா?

10. A convict was award death sentence by the trial court which was confirmed by the High Court. The Supreme Court did not interfere in the lower court's order. The Prisoner filed a mercy petition before the President of India to pardon him. The President rejected the mercy petition without assigning any reason for doing so. Can the court ask the President for his reasons?

ஒரு குற்றாவாளிக்கு விசாரணை நீதிமன்றம் மரண தண்டனை விதித்ததை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. உச்சநீதிமன்றம் கீழமை நீதி மன்றத்தின் ஆணையில் தலையிடவில்லை. குடியரசு தலைவருக்கு சிறை கைதி கருணை மனு சமர்ப்பித்தார். குடியரசு தலைர் கருணை மனுவை எவ்விதக் காரணங்களும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்தார். நீதிமன்றம் குடியரசு தலைவர் தள்ளுபடி செய்ததற்கான காரணங்களைக் கோர இயலுமா?

(For candidates admitted from 2017-18 onwards)

L.L.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022

(Three Year Regular Course)

Second Year / Third Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the powers of a Governor? To what extent the Governor is bound by the advice of the cabinet?

மாநில ஆளுநரின் அதிகாரங்கள் யாவை? அவர் எந்த அளவிற்கு அமைச்சரவையின் அறிவுரைகளுக்கு கட்டுப்பட்டவர்?

2. Write about the appointment and transfer of the High Court Judges with reference to decided cases.

உயர்நீதி மன்றம் நீதிபதிகள் நியமனம் மற்றும் இடம் மாறுதல் குறித்து தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

3. Discuss whether the Indian Constitution possesses all the essential characteristics of a Federal Constitution.

கூட்டாட்சி அரசமைப்பின் இன்றியமையாத கூறுகள் இந்திய அரசியலமைப்பில் உள்ளனவா என்பதை விளக்குக.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. How does the union parliament get its power to legislate on state subjects?

மாநில பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்ற எப்படி அதிகாரம் பெற்றுள்ளது?

5. Critically examine the nature and scope of parliamentary privileges in India. Is codification of privileges necessary in the present context?

இந்தியாவில் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைகளின் தன்மை மற்றும் நோக்கெல்லையினை கூர்ந்தாராய்க. நிகழ்காலச் சூழலில் சிறப்புரிமைகளைத் தொகுத்து சட்டமாக்க வேண்டியது அவசியமாகுமா?

6. What is the effect of proclamation of emergency under Article 352? Can it be challenged before the courts? If so, on what grounds?

உறுப்பு 352–ன் கீழ் சாற்றறிவிக்கப்படும் நெருக்கடி நிலைமையின் விளைவு என்ன? நெருக்கடி நிலைமை சாற்றறிவிப்பது குறித்து நீதிமன்றங்களில் மறுதலிக்க இயலுமா? இயலுமெனில் எதன் அடிப்படையில்?

PART \5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Constitutional amendments

அரசமைப்பு சட்டத் திருத்தம்

(b) Collective Responsibility.
கூட்டுப் பொறுப்பு.

(c) Residuary Powers.
எஞ்சிய அதிகாரங்கள்.

(d) Pardoning powers of the president.
குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரம்.

(e) Inter state Trade and Commerce.
மாநிலங்களுக்கிடையே வணிகம் மற்றும் வர்த்தகம்.

(f) Money Bill.
பணம் மசோதா.

(g) State liability.
அரசின் பொறுப்பு.

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "No Government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of Service". Examine the validity of this Government Order.

அரசு ஊழியர் எவரும் தங்கள் வேலை நிலைமைகளை பொருட்டு எந்தவித ஆர்ப்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது. இந்த அரசாணையின் செல்லும் தன்மையை விளக்குக.

9. An ordinance was issued by the president at a time when both houses of the parliament was not in session. This was strongly objected by the opposition parties. Discuss the Constitutional validity of the ordinance.

பாராளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டத் தொடர் இல்லாத வேளையில் குடியரசு தலைவர் ஒரு அவசரச் சட்டத்தை பிரகடனப்படுத்துகிறார். இதனை எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றனர். குடியரசு தலைவரின் அவசரச் சட்டத்தின் செல்லும் தன்மையை பற்றி விவாதிக்கவும்.

10. A suit was filed by the State of Kerala against the State of Karnataka under Article 131 raising a dispute relating to non- implementation of the finding decision rendered by the Inter-State Water Dispute Tribunal. Decide the maintainability of the suit.

கேரள மாநிலம் உறுப்பு 131–இன் கீழ் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை தீர்ப்பாயம் வழங்கிய கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பாக கர்நாடக மாநிலத்தின் மீது வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இந்த வழக்கின் செல்லுத்தன்மையை ஆராய்க.

(For candidates admitted from 2017-18 onwards)

L.L.B. DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Three Year Regular Course)
Second Year / Third Semester
CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically evaluate the immunities and privileges of the Members of the State Legislative Assembly in the light of Keshav Singh v. Speaker, Legislative Assembly of Uttar Pradesh, AIR 1965 All 349.

சட்டமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் குறித்து கேசவ்சிங் எதிர் சபாநாயகர், உத்தரப் பிரதேச சட்டமன்றம், (AIR 1965 All 349) வழக்கின் துணை கொண்டு கூர்ந்தாய்வு செய்க.

2. Critically evaluate the appointment of Judges of the Supreme Court and High Courts by collegium in light of NJAC Judgment (AIR 2015 SCC 2463).

கொலீஜியத்தின் மூலம் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து NJAC வழக்கினை துணை கொண்டு கூர்ந்தாய்வு செய்க (AIR 2015 SCC 2463).

3. Examine the grounds for the proclamation of National Emergency and point out how far it transforms the Constitution into unitary form of Government.

தேசிய நெருக்கடிநிலை அறிவிப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து மற்றும் அது எவ்வாறு நமது அரசமைப்பை ஒற்றையாட்சியாக மாற்றுகிறது என்பதை எடுத்துக்கூறு.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the recent judicial trends on pardoning power of the President of India and the Governor of state.

குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் ஆகியோரது மன்னிக்கும் அதிகாரத்தைக் குறித்து நீதிமன்றத்தின் சமீபகால அணுகுமுறை பற்றி கூர்ந்தாய்வு செய்க.

5. Explain the differences between Ordinary bills and Money bills.

சாதாரண சட்ட முன்வடிவிற்கும், பண சட்ட முன் வடிவிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

6. "No tax shall be levied or collected save by authority of law" - Comment.

"சட்ட அதிகாரமின்றி வரி விதிப்பதோ, திரட்டுவதோ கூடாது" – கருத்துரை தருக.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Composition and powers of the Election Commission of India.
இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு மற்றும் அதிகாரம்.

(b) "Basic structure of the Constitution cannot be amended".
"இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சத்தை திருத்த இயலாது".

(c) Goods and Services Tax Council.
சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குழு.

(d) Right to property under Article 300A.
உறுப்பு 300 A-யின் கீழ் சொத்துரிமை.

(e) Doctrine of Pith and Substance with decided cases.
தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் வழிநின்று மையக்கருப்பொருள் கோட்பாடு குறித்து விவரி.

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

8. The parliament of India made a constitutional Amendment to decide on election dispute of Prime Minister and excluded it from judicial review and real power was conferred on the Parliament. Whether the Parliament can restrict the power of court. Argue.

முதன்மை அமைச்சரின் தேர்தல் தொடர்புடைய வழக்குகளை நாடாளுமன்றமே முடிவு செய்யவும் மற்றும் நீதித்துறை மறு ஆய்விலிருந்து முதன்மை அமைச்சரின் தேர்தல் வழக்குகளை விலக்களித்தும் ஓர் அரசமைப்பு திருத்தச் சட்டத்தை இந்திய நாடாளுமன்றம் இயற்றியது. நாடாளுமன்றம் நீதித்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த இயலுமா? வாதுரைக்கவும்.

9. 'X' was dismissed from service based on the findings under Public Services Enquiry Act 1960. Subsequently 'X' was prosecuted under the various offences of the Prevention of Corruption Act and the Indian Penal Code. Is it sustainable? Advise.

பொதுப்பணி விசாரணைச் சட்டம் 1960 இன் கீழான விசாரணை முடிவுகளின் படி 'X' என்பவர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். பிறகு ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. இது நிலைநிற்கத்தக்கதா? அறிவுரைக்க.

10. "A suit was filed by the State of Kerala against the State of Karnataka under Article 131 raising a binding dispute relating to non-implementation of the binding decision rendered by the Inter-State water dispute Tribunal. Decide the maintainability of the suit.

கேரள மாநிலம் உறுப்பு 131–இன் கீழ் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை தீர்ப்பாயம் வழங்கிய கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பாக கர்நாடக மாநிலத்தின் மீது வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இந்த வழக்கின் செல்லுத்தன்மையை முடிவு செய்க.

அய்ந்தாண்டு சட்டக்கல்வி

(For the candidates admitted from 2009-10 onwards)

B.L. DEGREE EXAMINATION, MAY 2014

Sixth Semester - Third Year

CONSTITUTIONAL LAW - II

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. "The executive power of the union and the states are vested only in the president and the governors, and not with other powers" - Elucidate.

"மத்திய மற்றும் மாநிலங்களின் நிர்வாகத் திறன்கள் குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது பிற அதிகாரங்கள் அல்ல" – எடுத்துரைக்க.

2. Examine the different kinds of jurisdiction of the supreme court of India.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு நீதிமன்ற அதிகாரவரம்பெல்லைகளை விவரிக்கவும்.

3. Explain the circumstances under which parliament has power to legislate on state subjects.

எச்சூழ்நிலைகளில் பாராளுமன்றம் மாநில பட்டியலில் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது என்பதை விளக்குக.

4. Examine the constitutional provisons on Tortious liability of state with decided cases.

அரசுக்கெதிராக தீங்கீடு கோரும் அரசமைப்பு சட்ட வகையங்களை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவரிக்கவும்.

5. Describe the role of state legislature on constitutional amendment.

அரசமைப்பு சட்டத்தினை திருத்தம் செய்வதில் மாநில சட்டமன்றங்கள் வகிக்கும் பங்கினை விவரிக்க.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கும் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை தருக.

(a) Money bill

பண மசோதா

(b) Pardoning power

மன்னிப்பளிக்கும் அதிகாரம்

(c) Planning commission
திட்டக் குழு

(d) Administrative Tribunal
நிர்வாகத் தீர்ப்பாயம்

(e) Inter state council
மாநிலங்களிடை மன்றம்

(f) Doctrine of pleasure
முழுமையான நீதி

(g) Complete justice
முழுமையான நீதி

(h) Public Service Commission
அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(i) Distinquish tax and fee
வரி மற்றும் கட்டணம் வேறுபடுத்துக

(j) S.R.Bommai Vs. Union of India
S.R. பொம்மை – எதிர் – இந்திய யூனியன்

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons

பின்வருவனவற்றுள் நான்கிற்கு, ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி கோர்வையான காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Keshav Singh was sentenced to seven days imprisonment for having committed a contempt of the house by the speaker of the state legislative assembly. Keshav Singh's advocate filed a writ of Habeas Corpus and bail. The Hon'ble High Court granted bail. The legislative assembly passed a Resolution that, judge of the High Court, Keshav Singh's advocate and Keshav Singh had committed the contempt of the house. Argue.

சட்டமன்ற அவமதிப்பிற்காக கேசவ்சிங்கிற்கு ஏழு நாட்கள் சிறைத்தண்டனை விதித்து அம்மாநில சட்டமன்ற சபாநாயகர் உத்தரவு ஒன்றை பிறப்பித்தார். ஆட்கொணர் நீதிப்பேராணை மற்றும் ஜாமீன் வேண்டி கேசவ் சிங்கின் வழக்குரைஞர் மனு ஒன்றை தாக்கல் செய்தார். மாண்புமிகு உயர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது. உயர் நீதிமன்ற நீதிபதி, கேசவ் சிங்கின் வழக்குரைஞர் மற்றும் கேசவ் சிங் சட்டசபையை அவமதிப்பு செய்து விட்டதாக கருதி சட்டசபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. வாதுரைக்க.

8. Rajasthan state legislative enacted a Motor Vehicle Act to levy tax an all motor vehicles used or kept within the state of Rajasthan. The motor operators association filed a writ on the ground that, the Act violates Article 301 of the Constitution. Decide.

இராஜஸ்தான் மாநிலத்திற்குள் பயன்படுத்தப்படும் மற்றும் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து வாகனங்களுக்கும் வரி விதிக்க வகை செய்ய இராஜஸ்தான் மாநில சட்டமன்றம் சட்டம் ஒன்றை இயற்றியது. மோட்டார் வாகன நடத்துனர் சங்கம் இச்சட்டம் இந்திய அரசமைப்பு ஷரத்து 301ஐ மீறியது என நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தது. தீர்மானிக்க.

9. The Governor of Bihar promulgated an ordinance in 2007 and extended it till 2013 without prior consent from the state legislature. Whether the governor's act is sustainable? Advise.

மாநில சட்டமன்றத்தின் முன் சம்மதமின்றி 2007ம் ஆண்டு முதல் 2013 வரை ஓர் அவசர சட்டத்தை பீகார் மாநில ஆளுநர் கால நீட்டிப்பு செய்து வந்தார். ஆளுநரின் இச்செயல் நிலைக்கத்தக்கதா? அறிவுரைக்க.

10. Mannin mynthan filed a mercy petition to the President of India in 2009. The President of India rejected the petition without assigning any reasons. Mannin mynthan's daughter, a practising lawyer filed a writ. Can the court ask the President the reason for rejecting the mercy petition?

2009ம் ஆண்டில் மண்ணின் மைந்தன் தனக்கு கருணை வேண்டி குடியரசுத் தலைவரிடம் கருணை மனு ஒன்றை சமர்ப்பித்தார். குடியரசுத் தலைவர் கருணை மனுவை எவ்வித காரணமும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்தார். வழக்குரைஞர் தொழில் செய்யும் மண்ணின் மைந்தனின் மகள் நீதிப்பேராணை ஒன்றை தாக்கல் செய்தார். நீதிமன்றம் குடியரசுத் தலைவரின் தள்ளுபடிக்கான காரணத்தை வினவ இயலுமா?

11. Ramesh, a govt. servant, was compulsorily retired after due compliance of service rules. He was neither heard nor given notice to be heard. He challenges the order of compulsory retirement on the ground of violative of Article 311 of the Constitution of India. Advice.

இரமேஷ் என்ற அரசு ஊழியருக்கு பணி விதிகளை செவ்வனே பின்பற்றி பணியிலிருந்து கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. தனக்கு கட்டாய ஓய்வு வழங்கப்படுவது பற்றி விளக்கமோ அல்லது அதற்கான அறிவிப்போ கொடுக்கப்படவில்லை. தனக்கு பிறப்பிக்கப்பட்ட கட்டாய ஓய்விற்கான ஆணை இந்திய அரசமைப்பு சரத்து 311 மீறியது என வாதிடுகிறார். அறிவுரைக்க.

12. Mr. Bharathi Bavendhan, a retired member of the Central Administrative Tribunal appeared and pleaded before the High Court. An advocate challenged it. Is it sustainable? Advice.

மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் ஓய்வு பெற்ற உறுப்பினரான திரு. பாரதி பாவேந்தன் அவர்கள் உயர் நீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகளில் வாதாடி வருகிறார். இதை ஓர் வழக்குரைஞர் எதிர்க்கிறார். இது நிலைக்கத்தக்கதா? அறிவுரைக்க.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.B.L., DEGREE EXAMINATION, NOVEMBER 2014

(Five Years Regular Course)
Sixth Semester / Third Year

CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Discuss the distribution of legislative powers between Union and the State.
மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சட்ட அதிகாரங்கள் விநியோகம் பற்றி விவாதிக்க.
2. "Trade and commerce shall be free throughout India" - Comment.
"இந்தியா முழுவதும் வாணிகம் மற்றும் தொழில் நடத்துவதில் தடையற்ற நிலை நிலவ வேண்டும்" – விமர்சிக்க.
3. Discuss the qualifications and disqualifications of the members of Parliament.
பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் தகுதியின்மையை விவாதிக்கவும்.
4. Discuss the types of emergency and its impact.
அவசரநிலையின் விதங்கள் மற்றும் பாதிப்பு பற்றி விவாதிக்க.
5. Discuss the procedure for the appointment of Chief Justice of India.
இந்திய தலைமை நீதிபதியின் நியமனம் குறித்த நடைமுறையை விவாதிக்க.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Election Commission.
தேர்வுக் குழுமம்.

(b) Constitutional Amendment.
அரசமைப்பு திருத்தம்.

(c) Oath.
உறுதிமொழி.

(d) Money Bills.
பண மசோதா.

(e) Doctrine of Pleasure.
விருப்பக் கோட்பாடு.

(f) Secularism.
மதச்சார்பின்மை.

(g) Advocate General of a State.
அரசின் தலைமை வழக்குரைஞர்.

(h) Committee for Metropolitan Planning.
பெருநகர திட்டமிடல் குழு.

(i) Consolidate fund of India.
இந்தியாவின் இணைப்பு நிதி.

(j) Doctrine of Territorial nexus.
நிலவரைக்கு உட்பட்ட தொடர்பு கோட்பாடு.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each)
by referring to provisions of law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The Petitiner's son was taken from his home to the Police Station on charge of Theft. On the very same day, the petitioner came to know that the body of her son was found in the Railway Track into pieces. Body sustained multiple injuries. Later on she files petition under Art. 226 seeking compensation for custodial death - Decide.

திருட்டு குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக வாதியின் மகன் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். அதே நாள் தன் மகன் சடலம் ரயில் பாதையில் சுக்கு நூறாகிக் கிடப்பதாக வாதிக்கு தெரிய வந்தது. சடலத்தில் நிறைய காயங்கள் காணப்பட்டது. பின்னர் உறுப்பு 226–ன் கீழ் நீதிப்பேராணை தாக்கல் செய்து தன் மகன் சிறைக்காவல் மரணத்திற்குரிய இழப்பீடு கேட்டார் – தீர்மானிக்க.

8. In the State of Jammu and Kashmir separate set of Laws exist governing Citizenship, Ownership of property and Fundamental rights. Does Art. 370 of the Constitution confer rights to Indians to purchase property or land in Jammu and Kashmir - Advise.

ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கென்று தனிச்சட்டங்கள் உள்ளன. இதில் குடியுரிமை, சொத்துரிமை மற்றும் அடிப்படை உரிமை பற்றி கூறப்படுகின்றது. இந்திய அரசமைப்பின் உறுப்பு 370–ன் படி இந்தியருக்கு ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநில நிலங்கள் மற்றும் சொத்தை விற்பனைக்கு வாங்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளதா – தீர்மானிக்க.

9. The secretary of the State Government proposed Nationalisation of transport routes in accordance to Sec. 4 of the Motor Vehicles Act, 1939. As a result the usual route has to be changed and many private carrier operators which used the old route is affected. Hence, the private carriers alleged that only the Governor, is empowered to direct the Transport Ministers, is empowered to direct the Transport Ministry to change the route and Secretary to Government cannot change the route and hence, questioned the validity of the impugned order by filing a writ petition. Decide.

மாநில அரசாங்கத்தின் செயலர் போக்குவரத்து பாதைகளை தேசிய மயமாக்க பிரிவு 4

மோட்டார் ஊர்திகள் சட்டம், 1939–ன் கீழ் முன்மொழிந்தார். ஆணையும் அளிக்கப்பட்டது. இதன் விளைவால் பழைய பாதையை பயன்படுத்திய தனியார் ஊர்திகள் ஆபரேட்டர்கள் பாதிக்கப்பட்டனர். ஆதலால் பாதைகளை செயலர் மாற்றுவதற்கில்லை. ஆளுநர் தன் சபை அமைச்சர்களுடன் ஆலோசனை செய்து போக்குவரத்து துறையின் அறிவுரையின் பேரில் பாதைகளை மாற்றி அமைக்கலாமே ஒழிய செயலருக்கு அதிகாரம் இல்லை. ஆதலால் பிறப்பித்த ஆணையின் செல்லத்தக்க தன்மை எதிர்த்து நீதிபேராணை மனு தாக்கல் செய்தனர் – தீர்மானிக்க.

10. Karnataka State passed Entry Tax Act, 2014 with the object of obtaining Additional Tax Resources. An iron ore company challenges the validity of the Entry Tax Act as violative of freedom of Trade, Commence and Intercourse - Decide.

கூடுதல் வரி வளமை பெரும் நோக்கத்தில் கர்நாடகா அரசு மாநிலத்திற்குள் வரும் சரக்குகளின் மீது வரி சட்டம், 2014 இயற்றியது. இரும்பு ஆலை நிறுமம் இச்சட்டம் வியாபார பொருளாதார சுதந்திரத்திற்கு மீறி உள்ளது என்று அச்சட்டத்தின் செல்லும் தன்மையை எதிர்த்து வழக்கிட்டது – தீர்மானிக்க.

11. An actress and a member of the Parliament is appointed as a Director of the Central Government Film Board Association. It is alleged that she cannot hold two posts at the same time and therefore she must be disqualified as a member of the Parliament - Decide.

நடிகை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் மீண்டும் திரைப்பட வாரிய சங்கத்தின் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டார். இவர் இரு பதவிகளை ஒரே நேரத்தில் வைத்திருத்தல் இயலாது என்று கூறப்பட்டது. ஆதலால் இவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பதவி நீக்கம் மேற்கொள்ள வேண்டும் என்று வாதாடப்பட்டது – தீர்மானிக்க.

12. The President of India rejected the Mercy Petition of Death sentence convict after eleven years of giving the petition repeatedly. The State Government passed a resolution asking the President to review the Mercy Petition and commute the Death sentence to Life Imprisonment. The Central Minister for Law stated that the State Government resolution is not binding - Decide.

பதினோரு ஆண்டுகளுக்கு பிறகு மரண தண்டனை குற்றவாளியின் பலமுறை கொடுத்த கருணை மனுவை இந்திய குடியரசு தலைவர் ஏற்க மறுக்கிறார். குடியரசு தலைவர் கருணை மனுவை மறு ஆய்வு செய்து மரண தண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று மாநில அரசு தீர்மானம் கொண்டு வந்து குடியரசுத் தலைவருக்கு அளிக்கின்றது. அத்தகைய தீர்மானம் மத்திய அரசின் மீது பிணைப்பை ஏற்படுத்தாது என்று மத்திய சட்ட அமைச்சர் கூறுகின்றார் – தீர்மானிக்க.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.B.L., DEGREE EXAMINATION, MAY 2015

(Five Years Regular Course)

Third Year / Sixth Semester
CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

THREE பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Discuss the federal features of the Indian Constitution.
   இந்திய அரசமைப்பில் கூட்டாட்சி கொள்கைகளை பற்றி விவாதிக்க.
2. Enumerate the administrative relations between the State and Centre.
   மத்திய மற்றும் மாநிலங்களின் நிர்வாக தொடர்புகளை வகைப்படுத்துக.
3. Explain the powers and duties of the Comptroller and Auditor General of India.
   இந்தியாவின் பட்டய பொது தணிக்கையாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்குக.
4. Discuss the removal of a public service commission member.
   பொது அரசாங்க சேவை ஆணைக்குழு உறுப்பினர் நீக்கம் பற்றி விவாதிக்க.
5. How proclamation of emergency is declared when security of India is threatened ?
   இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் பொழுது அவசர நிலை பிரகடனம் அறிவிப்பது எவ்வாறு ?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

   (a) Idealism.
   கருத்தியல்.

   (b) Procedure for amendment.
   திருத்தத்தின் நடைமுறை.

   (c) Vice-President.
   துணை – குடியரசு தலைவர்.

   (d) Office of profit.
   ஆதாயம் தரும் பணி.

   (e) Appropriate bills.
   பொருத்தப்பாடு மசோதா.

   (f) Review under Article 137.
   உறுப்பு 137ன் கீழ் ஆய்வு

(g) Finance Commission.
நிதி குழுமம்.

(h) Full faith and credit clause.
முழு நம்பிக்கை மற்றும் நன்மதிப்பு வகையம்.

(i) Legislation giving effect to international agreements.
பன்னாட்டு உடன்படிக்கைகளை வலியுறுத்தும் சட்ட உரிமை.

(j) Speaker of Lok Sabha.
மக்களவைத் தலைவர்.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The state government arrested a naxalite and unlawfully detained him without trial. The naxalite questioned the validity of the detention to be contrary to constitutional provisions and filed a writ petition under Art. 226 - Decide.

மாநில அரசு தீவிரவாதியை கைது செய்து விசாரணையின்றி சிறைகாவலில் வைத்தது. தன் சிறைகாவல் அடைப்பு அரசமைப்பு உறுப்புகளுக்கு புரம்பாக உள்ளது என்று அதன் செல்லத்தக்க நிலை கேட்டு நீதி பேராணை மனு உறுப்பு 226–ன் கீழ் தாக்கல் செய்கிறார் – தீர்மானிக்க.

8. The state government of West Bengal granted exemption against slaughtering of cow and permitted the said Act. A community of people objected to the steps taken by the government as it affects the religious sentiments of the people and felt aggrieved by the act and filed a writ petition - Decide.

மேற்கு வங்காளம் மாநில அரசு மாடு வெட்டுவதை தடுப்பதில் இருந்து விதிவிலக்கு அளித்தது. ஆதலால் மாடுகள் வெட்டப்பட்டது. ஒரு சமூகத்தை சேர்ந்த மக்கள் இதற்கு மறுப்பு தெரிவித்து இது மத நல்லிணக்கத்தை பாதிக்கின்றது. இதனால் தாங்கள் பாதிப்பு அடைந்துள்ளனர் என்று கூறி நீதி பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது – தீர்மானிக்க.

9. A public spirited body filed a Mercy petition, on behalf of the convict, who was awarded death sentence, seeking issuance of a writ on the ground that the execution of sentence, pursuant to rejection of mercy petition bythe President of India is unconstitutional and to set aside the death sentence imposed upon convict, by commuting the same to imprisonment for life - Decide.

பொது தொண்டு நிறுமம் குற்றவாளியின் சார்பாக அவர் மீது அளிக்கப்பட்டுள்ள மரண தண்டனைக்கு எதிராக கருணை மனு அளித்த பொழுது குடியரசு தலைவர் நிராகரித்து விட்டார்.

இச் செயல் அரசமைப்பிற்கு புரம்பானது. மரண தண்டனை நிறைவேற்றல் தள்ளி வைத்து அதை ஆயுள் தண்டனையாக்க வேண்டும் என்று கோரப்பட்டது – தீர்மானிக்க.

10. The Sales Tax Laws passed by the legislature of states, levying taxes on the transfer of property in goods involved in the execution of works contract are subjected to restrictions contained in each clause or sub clause of Art. 286 - Decide.

மாநில அரசு சட்டத்துறை கொண்டு வந்த விற்பனை வரிச் சட்டம் பணி ஒப்பந்தங்களின் நிறைவேற்றலில் ஈடுபட்டுள்ள சரக்குகளின் சொத்து பரிமாற்றத்தில் வரி சுமத்தும் உரிமையானது உறுப்பு 286 விதிகள் மற்றும் துணை விதிகளில் அளிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும் – தீர்மானிக்க.

11. The government of Andhra Pradesh issued a notification delimiting retirement age of a government servant from 58 years to 50 years. Affected government servants question the constitutional validity of it before the court - Decide.

ஆந்திர பிரதேச மாநிலம் அரசாங்க ஊழியர்கள் பதவி காலத்தை 58 வயதிலிருந்து 50 ஆக அரசாணை அறிவிப்பு மூலியமாக மாற்றியது. இந்த அரசாணையின் அசமைப்பு செல்லத்தக்க நிலை குறித்து நீதிமன்றத்தின் முன் கேள்வி எழுப்பப்பட்டது – தீர்மானிக்க.

12. A petition was filed demanding the recall of Governor by the President on the ground that the Chief Minister was not consulted in the appointment of the Governor - Decide.

ஆளுநர் நியமனத்தில் முதல் அமைச்சரின் ஆலோசனை பெறாமல் குடியரசு ஆளுநரை நியமித்து விட்டதால் ஆளுநரை திரும்பி பெறல் வேண்டும் என்று வழக்கிடப்பட்டது – தீர்மானிக்க.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.B.L., DEGREE EXAMINATION, NOVEMBER 2015

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the procedure for amendment of the Constitution. What restrictions do the doctrine of basic structure of the Constitution place on the amending power of parliament?

அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை தன்மை கோட்பாடானது எத்தகைய கட்டுப்பாடுகளை நாடாளுமன்றம் அரசமைப்பு சட்டத்தை திருத்தும் அதிகாரத்தின் மீது விதிக்கிறது ?

2. Discuss the composition and functins of the Election Commission of India. Evaluate its role in protecting democracy in India.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு மற்றும் பணிகளை விவாதிக்கவும். இந்தியாவில் ஜனநாயகத்தை பாதுகாப்பதில் அதன் பங்கினை மதிப்பிடுக.

3. Explain the appointment of High Court Judges with reference to decided cases by the Supreme Court.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புகள் வழி நின்று உயர் நீதி மன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து விளக்குக.

4. How does the Union Parliament gets its power to legislate on State subjects?

மாநில பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்ற எப்படி அதிகாரம் பெற்றுள்ளது ?

5. What do you understand by 'Individual responsibility' of a Minister? What is meant by collective responsibility ?

ஒரு அமைச்சரின் 'தனிப்பட்ட பொறுப்பு' என்றால் என்ன ? கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன ?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on <u>EIGHT</u> of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் <u>இரண்டு</u> பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் <u>எட்டிற்கு</u> குறுகிய விடைகள் தருக.

(a) Appointment of Prime Minister of India.
இந்திய பிரதமரை நியமித்தல்.

(b) Inter-State Council.
மாநிலங்களுக்கு இடையேயான மன்றம்.

(c) Advisory Jurisdiction of Supreme Court.
உச்சநீதிமன்றத்தின் அறிவுரை நல்கும் ஆள்வரை.

(d) Doctrine of pith and substance.
மையக் கருப்பொருள் கோட்பாடு.

(e) Xth Schedule.
10வது அட்டவணை.

(f) Parliamentry privileges.
நாடாளுமன்ற சிறப்புரிமைகள்.

(g) Constitutional Review.
அரசமைப்பு சட்டத்தின் மறு ஆய்வு.

(h) Difference between President's pardoning power and Governor's pardoning power.

குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரத்தை ஆளுநரின் மன்னிக்கும் அதிகாரத்திலிருந்து வேறுபடுத்தி கூறு.

(i) D.C. Wadhawa Vs. State of Bihar (AIR 1987 SC 579).

டி.சி. வாதாவா எதிர் பீகார் மாநில அரசு (AIR 1987 SC 579).

(j) Types of Emergency.

நெருக்கடி நிலையின் வகைகள்.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A Government servant's promotion was withheld by the authorities as his performance was not satisfactory. The High Court did not interfere in this matter. Can the Supreme Court come to the rescue of the Government Servant ?

ஒரு அரசு ஊழியரின் பதவி உயர்வை அவரின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லாததால் அதிகாரிகள் நிறுத்தி வைத்துள்ளனர். இது குறித்து உயர்நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறிவிட்டது. இதில் உச்ச நீதிமன்றம் அவருக்கு நிவாரணம் அளிக்க முடியுமா ?

8. The legislative assembly in its budget, levied tax on the sale of Agarbathi in the state. On the same commodity the corporation also taxed. The Agarbathi manufacturers filed a suit before the High Court complaining that it is an instance of double taxation. Will the High Court interfere in this case?

மாநிலத்தில் அகர்பத்தி விற்பனை மீது நிதி அறிக்கையின் படி சட்டமன்றம் வரி விதித்தது. அதன் மீது மாநகராட்சியும் வரி விதித்தது. அகர்பத்தி தயாரிப்பவர்கள் இது இரட்டை வரிவிதிப்பு என்று கூறி உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை வேண்டி மனு செய்தனர். இதில் உயர் நீதிமன்றம் தலையிடுமா ?

9. A full bench of three judges was constituted by the Supreme Court to interpret the Constitution, which decided the case unanimously. Later the decision was impunged as erroneous and therefore a bench of five judges was constituted to review the case. Discuss the constitutional and jurisprudential requirement of constituting a constitutional bench.

மூனறு நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற முழு நீதியகம் ஒருமனதுடன் அரசமைப்பு பொருள் விளக்க தீர்ப்பு வழங்கியது. பின்னர் அத்தீர்ப்பு செல்லாது எனக் கூறி அதை மறு ஆய்வு செய்ய ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு அரசமைப்பு நீதியகம் அமைக்கப் பெற தேவையான அரசமைப்பு மற்றும் சட்டவியல் கூறுகளை விவாதிக்க.

10. The Government of India entered into a treaty with the United States of

America on a subject matter in which is in the State of America on a subject matter which is in the state list under the Indian Constitution. Decide, on the constitutional validity of the treaty made by the Central Government.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மாநில பட்டியலில் உள்ள ஒரு பொருண்மை மீது இந்திய அரசாங்கம் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஒரு உடன்படிக்கையை செய்து கொள்கிறது. மத்திய அரசு செய்துள்ள இந்த ஒப்பந்தத்தை அரசமைப்பு சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை முடிவு செய்க.

11. A notification for Presidential election was challenged on the ground that two states were under Presidential rule. Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசு தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் நேரத்தில் குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

12. When a bill having been passed by the house in which it originated and transmitted to the other house, the other house recommends some amendments were rejected by the first house. Decide the fate of the bull. Suggest a solution.

ஒரு மசோதா அது உருவான சபையில் நிறைவேற்றப்பட்ட பின் அடுத்த சபைக்கு அனுப்பப்பட்ட பொழுது அந்த மசோதாவில் சில திருத்தங்களை சிபாரிசு செய்தது. பின்னர் முதல் சபையானது எல்லாத் திருத்தங்களையும் அல்லது சில திருத்தங்களையோ நிராகரிக்கிறது. அந்த மசோதாவின் தற்போதைய நிலை என்ன? தீர்வுக்கான வழிமுறையை கூறவும்.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.B.L., DEGREE EXAMINATION, MAY 2016

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்குமிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Analyse the composition and Jurisdiction of the Supreme Court of India.

இந்திய உச்ச நீதி மன்றத்தின் அமைப்பு மற்றும் அதிகார வரம்பினை பகுப்பாய்வு செய்யவும்.

2. Explain the powers of Parliament to legislate with respect to matters contained in the State list.

மாநில பட்டியலில் உள்ள பொருண்மைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்தினை விளக்குக.

3. "The Const சட்டத்தின் 356வது ஷரத்தையும் சமீபகாலங்களில் அதன் செயல் தன்மை குறித்தும் கூர்ந்தாய்வு செய்யவும்.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Writ of Mandamus.
அறிவுறுத்தும் நீதிப்பேராணை.

(b) Territorial Nexus.
நிலவரைக்கு உட்பட்ட தொடர்பு.

(c) Money Bill.
பண மசோதா.

(d) Administrative Tribunals.
நிர்வாக தீர்ப்பாயங்கள்.

(e) Election Commission.
தேர்தல் ஆணையம்.

(f) Residuary Powers.
எஞ்சியுள்ள அதிகாரங்கள்.

(g) Doctrine of Pleasure.
விருப்புரிமைக் கோட்பாடு.

(h) Vote on account.
முன்னணி மானிய வாக்கெடுப்பு.

(i) S.R. Bommai V. Union of India.
எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய யூனியன்.

(j) Rudhal Shah V. State of Bihar.
ருதல்ஷா எதிர் பீகார் மாநிலம்.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The Bar Association of a state passed a Resolution to compel a judge of the Supreme Court to resign his post with an allegation of financial irregularities. A Public Interest Litigation was filed against the Resolution of the Bar Association. Decide.

உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் நிதி சம்பந்தமான முறைகேடுகளில் சம்பந்தப்பட்டதால்

அவரை பதவியிலிருந்து ராஜினாமா செய்யக் கோரும் தீர்மானம் ஒன்றை ஒரு மாநில வழக்குரைஞர்கள் மன்றம் நிறைவேற்றியது. மாநில வழக்குரைஞர்கள் மன்றத்தின் தீர்மானத்தை எதிர்த்து ஓர் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்கவும்.

8. By passing a constitutional amendment, the power to decide an election dispute of Prime Minister was excluded from judicial review and it was conferred on the Parliament. Is it valid? Decide.

அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலமாக பிரதமர் தேர்தல் குறித்த பிரச்சினைகளில் முடிவு செய்யும் அதிகாரம் நீதிமுறை மறு ஆய்விலிருந்து நீக்கப்பட்டு பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது செல்லுமா ? தீர்மானிக்கவும்.

9. The 'X' State Legislative Assembly passed a Resolution demanding the President to review the emrcy petition and commute the death sentence to life imprisonment. Whether the resolution is valid ? Decide.

குடியரசுத் தலைவர் கருணை மனுவை மறு ஆய்வு செய்து மரண தண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டுமென 'X' மாநில சட்டமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத்தீர்மானம் செல்லுமா ? தீர்மானிக்கவும்.

10. The Madras High Court had issued a writ against the Election Commission of India located in New Delhi. The Election Commission opposed the writ on the ground that the commission is not within the jurisdiction of the Madras High Court. Decide.

புது தில்லியில் அமைந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்திற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம் நீதிப்பேராணை ஒன்றை வழங்கியது. தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் இல்லையென தேர்தல் ஆணையம் எதிர்க்கிறது. தீர்மானிக்கவும்.

11. The Governor of State "A" repromulgated an ordinance without prior permission from the President of India. A Public Interest Litigation was filed against the act of the Governor. Is it sustainable? Decide.

குடியரசுத் தலைவரின் முன் அனுமதியின்றி 'அ' மாநில ஆளுநர் அவசரநிலை பிரகடனத்தை திரும்ப திரும்ப வெளியிட்டார். இதை எதிர்த்து ஒரு பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இது நிலைக்கத்தக்கதா ? தீர்மானிக்க.

12. 'X' State Legislative Assembly made a law in the subject matter listed in the concurrent List. The Union contended that the State Legislative Assembly has a limited competence. Decide.

பொதுப்பட்டியலில் உள்ள பொருண்மை குறித்து 'X' மாநில சட்டமன்றம் சட்டம் ஒன்றை இயற்றியது. மத்திய அரசு மாநில அரசின் சட்டமியற்றும் தன்மை குறைந்த அளவே உள்ளது என வாதிட்டது. தீர்மானிக்கவும்.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A. B.L., DEGREE EXAMINATION, NOVEMBER 2016

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester
CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

THREE

1. Discuss the election of the President his powers with relevant provisions of the Constitution.

   ஜனாதிபதியினுடைய தேர்வு மற்றும் அவருடைய அதிகாரங்களை அரசமைப்புச் சட்ட வகையங்களோடு விவாதிக்க.

2. Examine the powers of Speaker to disqualify MLA's and MP's under the Anti-Defection Law.

   கட்சித் தாவல் தடைச்சட்டத்தின் படி சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்யும் அவைத்தலைவரின் அதிகாரங்களைப் பற்றி ஆய்வு செய்க.

3. Briefly explain the various jurisdictions of the Supreme Court with decided cases.

   உச்சநீதிமன்றத்தின் பல்வேறு ஆள்வரை அதிகாரங்களை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு சுருக்கமாக விளக்குக.

4. "Trade, commerce and intercourse throughout the territory of India shall be free". Explain.

   "இந்தியா முழுமைக்கும் தொழில், வாணிபம் மற்றும் போக்குவரத்து சுதந்திரமாக இருத்தல் வேண்டும்"? விளக்குக.

5. Explain the powers of Parliament to amend the Constitution and state its limitation with decided cases.

   அரசமைப்புச் சட்டத்தை திருத்தும் பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும், அதன் கட்டுப்பாடுகளையும் பற்றி முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

   (a) Pardanoing power of Governor U/A 161.

   சரத்து 161–ன் கீழ் ஆளுநரின் மன்னிப்பளிக்கும் அதிகாரம்.

   (b) Money bill.

பண மசோதா.

(c) Special leave petition.

சிறப்பு மேல்முறையீட்டு மனு.

(d) Controller and Auditor General of India.

இந்திய தலைமைத் தணிக்கை கட்டுப்பாட்டு அலுவலர்.

(e) Doctrine of Pleasure.

விருப்பக் கோட்பாடு.

(f) Federal Government.

கூட்டாட்சி அரசாங்கம்.

(g) Doctrine of Territorial Nexus.

நிலவரையறைத் தொடர்பு கோட்பாடு.

(h) Power of Parliament to legislate on State Subject.

மாநில ஆளுமைப் பொருளின் மீது பாராளுமன்றத்திற்கு சட்டமியற்றும் அதிகாரம்.

(i) Inter-Government Tax Immunities.

அரசுகளுக்கு இடையிலான வரி பாதுகாப்புகள்.

(j) I.R. Coelho vs State of Tamilnadu.

ஐ.ஆர். கொயல்கோ எதிர் தமிழ்நாடு அரசு.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Mr. Tej Prakash Singh was appointed as a Minister in the Staet of Punjab. At that time he was not a member of legislative Assembly and failed to get elected to the legislature within six months period and resigned. In the meantime another member was appointed as Chief Minister. Then Mr. Tej Prakash Singh was once again appointed as a Minister. S.R. Chaudhari an advocate filed a petition seeking writ of quo-warranto in the Punjab High Court. Decide.

திரு. தேக் பிரகாஷ் சிங் என்பவர் பஞ்சாப் மாநில அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவர் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. மேலும் ஆறு மாதங்களுக்குள்ளாக சட்ட மன்றத்திற்கு தேர்வு செய்யப்படாததால் ராஜினாமா செய்தார். இதனிடையே வேறு ஒருவரை முதலமைச்சராக நியமனம் செய்த போது திரு. தேஜ் பிரகாஷ் சிங் மீண்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து எஸ்.ஆர். சௌத்தரி என்ற வழக்குரைஞர் தகுதி வினவும் நீதிப்பேராணை வேண்டி பஞ்சாப் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தலைப் பற்றி முடிவு செய்க.

8. Government of Chandhigarh filed a case against the Union Government for loss of Guruduwara properties during the Blue Star Operation. In view of some extraordinary situation prevailing in Chandhigarh, the fair trial would not be possible. Hence the Union Government approached the Supreme Court to transfer the above said case to Delhi High Court. Decide.

புளு ஸ்டார் நடவடிக்கையினால் குருத்துவாரா சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டதற்கு இழப்பீடு கேட்டு மைய அரசு மீது சண்டிகார் அரசு வழக்கு தொடுத்தது. சண்டிகரில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்ட அவ்வழக்கை டெல்லி உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டி மைய அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியது குறித்து முடிவு செய்க.

9. As per the Karnataka Motor Vehicle Taxation Act, the State of Karnataka imposed a tax on all motor vehicles which are plying on the roads within the State. ABT transport company filed a case against the imposition of tax as it violates the freedom of trade and commerce. Discuss the validity of the tax.

கர்நாடகா மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் படி மாநில சாலைகளில் செல்லும் மோட்டார் வாகனங்களின் மீது கர்நாடக அரசு வரி விதித்தது. மேற்கண்ட வரிவிதிப்பு தொழில் மற்றும் வணிக சுதந்திரத்தை மீறுவதாக உள்ளதால் ஏபிடி போக்குவரத்து நிறுவனம் மேற்கண்ட வரிவிதிப்பை எதிர்த்து வழக்கு தொடுத்தது. வரிவிதிப்பின் செல்லும் தன்மை குறித்து விவாதிக்க.

10. After passing the Tamilnadu Kanthuvatti Regulation Act, the Government limited the amount and rate of interest recoverable by a money lender. 'X', a money lender, challenged this Government's action as ultra vires. Discuss.

தமிழ்நாடு கந்துவட்டி ஒழுங்குமுறை சட்டத்தை இயற்றி பணக்கடன் மீதான வட்டி மற்றும் அசல் தொகையினை வட்டித்தொழிலரால் வசூலிக்கப்படுவது மீது அரசு கட்டுப்பாட்டினை விதித்தது. "எக்ஸ்" என்ற வட்டித் தொழிலர் இது அரசின் அதிகார வரம்பை மீறிய செயல் என்று எதிர்க்கிறார். விவாதிக்க.

11. Anandan, a Member of Parliament was detained under the Defence of India Act, when Parliament was in session. He challenged the detention on the ground, that as long as parliament is in session, MP's cannot be detained. Discuss.

ஆனந்தன் என்ற பாராளுமன்ற உறுப்பினர் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றம் நடந்து கொண்டிருக்கும் பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். பாராளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது உறுப்பினர்களை தடுப்புக்க ாவலில் வைக்கக் கூடாது என்ற காரணத்தின் அடிப்படையில் எதிர்க்கிறார். விவாதிக்க.

12. The Union Government by an ordinance converted the One-Member Election Commission into a Multi-Member Commission. The decision of the Commission shall be unanimous. In case of difference of opinion that shall be decided according to the opinion of the majority. Discuss about the validity of constitution of multi-member Commission.

மத்திய அரசு ஒரு அவசரகாலச் சட்டத்தை இயற்றி ஒரு நபர் தேர்தல் ஆணையத்தை பல நபர் ஆணையமாக மாற்றியது. ஆணையத்தின் முடிவுகள் ஒரு மனதாக இருக்க வேண்டும் என்றும், கருத்து வேறுபாடு ஏற்படும் பொழுது பெரும்பான்மை கருத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கலாம் எனக் கூறப்பட்டது. பல நபர் ஆணைய மாற்றத்தின் செல்லுத்தன்மை குறித்து விவாதிக்க.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.B.L., DEGREE EXAMINATION, MAY 2017

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester
CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

THREE

1. Analyse the legislative relationship between the State and Centre.
மாநில மற்றும் நடுவண் அரசுகளுக்கிடையே நிலவும் சட்டமியற்றும் அதிகார உறவுகளைப் பகுப்பாய்வு செய்க.
2. Trade and commerce shall be free throughout the territory of India - Explain.
இந்திய நிலப்பரப்பில் வணிகம் மற்றும் தொழில் நடத்துவதில் தடையற்ற நிலை வேண்டும் என்பதை விளக்குக.
3. What are the Constitutional safeguards available to a Civil Servant ?
அரசு ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புகள் யாவை ?
4. Examine the scope of the appellate jurisdiction of the Supreme Court of India.
இந்திய உச்ச நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு ஆள்வரையின் நோக்கெல்லையை ஆராய்க.
5. Explain the appointment and transfer of High Court Judges wth reference to decided cases.
உயர் நீதிமன்ற நீதிபதிகள் பணி நியமனம் மற்றும் இட மாறுதல் குறித்து தீர்க்கப்பட்ட வழக்குகளின் வாயிலாக விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Writ of Habeas Corpus.
ஆட்கொணர்வின் நீதிப்பேராணை.

(b) Financial bill.
நிதி சட்ட முன் வடிவு.

(c) Tribunals.
தீர்ப்பாயங்கள்.

(d) Doctrine of immunity of instrumentality.
அரசின் துணை அதிகார அமைப்புகளின் சட்ட விலக்களிப்புக் கோட்பாடு.

(e) Public Service Commission.
அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

(f) Amendment of fundamental rights.
அடிப்படை உரிமைகளைத் திருத்துதல்.

(g) State emergency.
மாநில நெருக்கடி நிலை.

(h) Election fo the President.
குடியரசுத் தலைவர் தேர்தல்.

(i) Disqualifications of the members of Parliament.
நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மைகள்.

(j) Right to Property.
சொத்துரிமை.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' was punished to undergo three days simple imprisonment by an order of a legislature for breach of its privileges. 'A' approaches the High Court to quash the order. Decide.

'A' என்பவர் ஒரு சட்டசபையின் ஆணையால் அதன் சிறப்புரிமைகளை மீறியதற்காக மூன்று நாட்கள் மெய்காவலுக்குள்ளாக்கப்படுகிறார். 'A' இந்த சட்டமன்ற ஆணை செல்லுபடியானதல்ல என்று விளம்பும்படி உயர் நீதிமன்றத்தை அணுகுகிறார். தீர்மானிக்க.

8. An ordinary bill was passed by the House in which it originated and transmitted to the other House. The other House recommends some amendments to that bill, all or any of those amendments having been rejected by the first Hosue - Decide.

ஒரு சாதாரண சட்ட முன்வடிவு, அது சமர்ப்பிக்கப்பட்ட அவையில் நிறைவேற்றப்பட்ட பின்

அடுத்த அலைக்கு அனுப்பப்பட்டது. அல்லகலையாளது அந்த சட்ட முன் வடிவில் சில திருத்தங்களைப் பரிந்துரை செய்தது. முதல் அலையாளது பரிந்துரைக்கப்பட்ட எல்லா திருத்தங்களையும் அல்லது சில திருத்தங்களை நிராகரித்தது. தீர்மானிக்க.

9. English was the medium of instruction in a minority educational institution. But the University ordered that Hindi should be the sole medium of instruction in the affiliated colleges. Examine the validity of the order of the University.

ஒரு சிறுபான்மைக் கல்வி நிறுவனத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்து வந்தது. ஆனால் பல்கலைக்கழகத்தின் ஆளுமைக்குட்பட்ட அனைத்துக் கல்லூரிகளிலும் இந்தி மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற பல்கலைக்கழக ஆணையின் செல்லுத்தன்மையை விளக்குக.

10. 'A', an editor of a newspaper, was found guilty committing contemp of the House and the state legislature issued a warrant to arrest him. Can "A" challenge the warrant ? Decide.

'A' ஒரு நாளிதழில் பதிப்பாசிரியர். அவர் சட்டசபை அவமதிப்புக் குற்றம் புரிந்ததற்காக கைது செய்யும்படி மாநில சட்டசபை பிடியாணை ஒன்றைப் பிறப்பிக்கிறது. 'A' அந்தப் பிடியாணையை மறுதளிக்க முடியுமா ? தீர்மானிக்க.

11. A notification for Presidential election was challenged on the ground that two States were under Presidential rule - Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

12. A military truck carrying jawans was going towards the training spot. On the way it met with an accident due to negligent driving and as a result a pedestrian died on the spot. The widow of the deceased man claimed compensation. Will she succeed ?

இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஓட்டுநரின் கவனக் குறைவால் இராணுவ வண்டி விபத்துக்குள்ளாகிறது. அச்சம்பவத்தில் அவ்வழியாக நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் அவ்விடத்திலேயே இறந்து விடுகிறார். இறந்தவரின் மனைவி இழப்பீடு கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா ?

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.B.L., DEGREE EXAMINATION, NOVEMBER 2017

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்குமிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Discuss the different kinds of jurisdiction of Supreme Court of India.
   இந்திய உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு ஆள்வரைகளை விவாதிக்கவும்.
2. Examine the doctrine of pleasure in India and examine the limitations in its application.
   இந்தியாவில் விருப்பக் கோட்பாட்டை ஆய்வு செய்க. இக்கோட்பாட்டின் மீது இருக்கும் வரம்புத் தடைகளை கூறுக.
3. Explain about the parliamentry Privileges.
   நாடாளுமன்ற சிறப்புரிமைகளை எடுத்துரைக்கவும்.
4. Discuss the procedure for the amendment of the Constitution.
   அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும்.
5. Analyse the powers of teh President pertaining to pardon.
   குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் பகுப்பாய்வு செய்க.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

   (a) Finance Commission.
   நிதி ஆணையம்.

   (b) Speaker of Lok Sabha.
   மக்களவைத் தலைவர்.

   (c) Inter-State Council.
   மாநிலங்களிடை மன்றம்.

   (d) Colourable legislation.
   முறையது போலமை இயற்றுச் சட்டம்.

   (e) National Emergency.
   நாட்டு நெருக்கடி நிலை.

   (f) Removal of Judges of Supreme Court.
   உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நீக்குதல்.

   (g) Attorney General.
   இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்.

   (h) The Vice President of India.
   இந்தியக் குடியரசு துணைத்தலைவர்.

   (i) Collective Responsibility.

கூட்டுப் பொறுப்பு.

(j) Consolidated fund of India.

இந்திய திரள் நிதியம்.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. An ordinance was issued by the President at the time when both Houses of the Parliament were not in session. This was strongly resented by the opposition parties. Discuss the constitutional validity of the ordinance.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டத் தொடர் இல்லாத காலகட்டத்தில் குடியரசுத் தலைவர் ஒரு அவசர சட்டத்தை சாற்றறிவிக்கிறார். இதனை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன. குடியரசுத் தலைவரின் அவசர சட்டத்தின் செல்லுந்தன்மை பற்றி விவாதிக்கவும்.

8. A state law regulated the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject matter of legislation would fall under List I (communications) so the law would be Ultra vires of the state legislatures. Decide.

ஒலிப் பெருக்கியைப் பயன்படுத்துவதில் ஒரு மாநிலச் சட்டம் ஒழுங்கு முறை விதித்தது. இச்சட்டம் பட்டியல் I (தகவல் தொடர்பு) என்ற தலைப்பில் உள்ளடங்கும் என்பதால் இச்சட்டம் செல்லாது. ஆகையால் இச்சட்டம் மாநில சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்தை மீறப்பட்டச் செயல் என வாதிடப்பட்டது. தீர்மானிக்க.

9. A prisoner was assaulted in the jail by the Jail authorities. It was addressed to the Supreme Court through a letter. Decide the validity.

சிறை அலுவலர்களால் ஒரு சிறைக்கைதி சிறையில் தாக்கப்பட்டார். இது ஒரு கடித வாயிலாக உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லப்பட்டது. இதன் செல்லும் தன்மையைத் தீர்மானிக்க.

10. A Government servant was made to compulsorily retire in accordance with the service rules. He challenged the order of compulsory retirement passed against him as invalid for violation of Art. 311, since he was neither given notice nor heard before passing the order of compulsory retirement - Decide.

பணி விதிகளைப் பின்பற்றி ஒரு அரசு ஊழியருக்கு பணியிலிருந்து கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. அரசமைப்பின் 311வது உறுப்பின் படி அறிவிப்போ, காரணம் காட்டுவதற்கான வாய்ப்போ அளிக்காததால் தனக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட கட்டாய ஓய்விற்கான ஆணை செல்லா நிலையது என வாதிடுகிறார். தீர்மானிக்க.

11. The State of Rajasthan levied a tax on motor vehicles used within the state

in any public place or kept for use in the state. The validity of the tax was challenged by the owners of Motor Vehicles in the Court on the ground that it violates the constitution. Decide.

ராஜஸ்தான் மாநில அரசு, ராஜஸ்தான் மாநிலத்தில் பயன்படுத்தும் மற்றும் பயன்படுத்து வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மோட்டார் வாகனங்கள் மற்றும் சரக்கு வாகனங்களுக்கு வரி விதித்தது. இது அரசமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது என மோட்டார் வாகன உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் மறுதலிக்கின்றனர். தீர்மானிக்க.

12. The Sessions Court acquitted 'A' in the year 2000 itself. But he was released only in the year 2015. Whether 'A' can claim any compensation against the state. Decide.

அமர்வு நீதிமன்றம் 'A' என்பவரை 2000ஆம் ஆண்டு குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்கிறது. ஆனால் 'A' என்பவர் 2015ஆம் ஆண்டில் தான் விடுதலை செய்யப்படுகிறார். அவர் அரசுக்கு எதிராக இழப்பீடு ஏதும் கோர முடியுமா ? தீர்மானிக்க.

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A.,LL.B/B.A.B.L., DEGREE EXAMINATION, MAY 2018

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester
CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

THREE

1. Examine the constitutional provisions relating to amendment of a provision of Indian Constitution.

அரசமைப்பு சட்ட வகைய திருத்தம் செய்வதற்கான அரசமைப்புச் சட்டத்தின் வகையங்கள ஆய்க.

2. Discuss the different kinds of jurisdiction of the Supreme Court.

உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு ஆள்வரைகளை விவாதிக்கவும்.

3. Examine the legislative relations between union and the states.

மைய மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான சட்டமியற்றும் உறவினை ஆய்க.

4. Explain the doctrine of pleasure in India and examine the limitations in its applications.

இந்தியாவில் செயல்படுத்தப்படும் விருப்பக் கோட்பாடு குறித்து விவரிக்கவும். இக்கோட்பாட்டின் மீதுள்ள வரம்புகளை விளக்குக.

5. Explain the constitutional procedure for the removal of judges of the Su-

preme Court and High Court.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளை நீக்குவதற்கு அரசமைப்பு நடைமுறைகளை விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Art. 110 of the Indian Constitution.
இந்திய அரசமைப்பு சட்டத்தின் 110–வது உறுப்பு.

(b) Writ of Quo warranto.
தகுதி வினவும் நீதிப்பேராணை.

(c) Collective responsibility.
கூட்டுப் பொறுப்பு.

(d) Comptroller and Auditor General of India.
இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறை தலைவர்.

(e) Doctrine of immunity of instrumentality.
அரசு அதிகார அமைவுகளின் விலக்களிப்பு கோட்பாடு.

(f) Finance Commission.
நிதி ஆணையம்.

(g) Inter State Council.
மாநிலங்களுக்கிடையேயான குழு.

(h) President Assent.
குடியரசு தலைவரின் இசைவு.

(i) D.C. Wadhawa vs. State of Bihar.
டி.சி. வாத்வா எதிர் பீகார் மாநில அரசு.

(j) Kehar Singh vs. Union of India.
கெகர் சிங் எதிர் இந்திய ஒன்றியத்து அரசு.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டுபக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. English was the medium of instruction in a minority education institution. But the university ordered that Tamil would be the sole medium of instruction in the affiliated colleges. Examine the validity of the order of the University.

ஒரு சிறுபான்மை கல்வி நிறுவனத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்தது. ஆனால்

பல்கலைக்கழகத்தின் ஆளுமைக்குட்பட்ட அனைத்து கல்லூரிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று பல்கலைக்கழகம் ஆணையிட்டது. பல்கலைக் கழகத்தின் ஆணையின் செல்லும் தன்மையினை விவாதிக்க.

8. A notification for Presidential election was challenged on the ground that two states were under Presidential rule. Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் போது குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதை மறுதலித்து குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான அறிவிப்பு செல்லாது என கோரி வழக்கிடப்பட்டது. தீர்மானிக்க.

9. A convict was awarded death sentence by the session's court which was confirmed by the High Court. The prisoner filed a mercy petition which was rejected by the President without assigning any reason. Can the court ask the President for his reasons ?

ஒரு குற்றவாளிக்கு அமர்வு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியதை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. குற்றவாளி சமர்ப்பித்த கருணை மனுவை குடியரசுத் தலைவர் எவ்வித காரணங்களும் குறிப்பிடாமல் தள்ளுபடி செய்தார். நீதிமன்றம் குடியரசுத் தலைவரை தள்ளுபடி செய்ததற்கான காரணங்களைக் கோர முடியுமா ?

10. Muthu injured in an accident was taken to Govt. Hospital for treatment. The receptionist refused to accept for treatment without procedural formalities to be completed. Does it amount to tortious liability of the state ? Decide.

விபத்தில் காயமடைந்த முத்துவை அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார். சட்டப்படி கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளை பின்பற்றாமல் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்க இயலாது என வரவேற்பரை ஊழியர் மறுத்து விட்டார். இச்செயல் அரசின் தீங்காகுமா ? தீர்மானிக்க.

11. Some legislations oust the jurisdiction of courts and declare that the orders of the tribunals as final. In spite of this, can the Supreme Court entertain appeals before it ?

சில இயற்றப்பட்ட சட்டங்களில் நீதிமன்ற அதிகாரத்தை நீக்கம் செய்து, தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளே இறுதியானது என்று கூறப்பட்டுள்ளது. இருந்த போதிலும் உச்ச நீதிமன்றம் இவ்வகையான வழக்குகளில் மேல்முறையீடுகளை விசாரிக்க முடியுமா ?

12. A military truck carrying jawans was going towards the training spot. On the way it met with an accident due to negligent driving and as a result, a pedestrian died on the spot. The widow of the deceased claimed compensation. Will she succeed ?

இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஓட்டுநரின் கவனக்குறைவால் இராணுவ பயண உந்து விபத்துக்குள்ளாகிறது. அந்நேர்வில் அவ்வழியாக நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் இறந்து விடுகிறார். இறந்தவரின் மனைவி இழப்பீடு கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா ?

(For the candidates admitted from 2009-10 to 2015-2016)

B.A.B.L.,/B.A.,LL.B. DEGREE EXAMINATION, NOVEMBER 2018

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

THREE

1. Discuss the appointment of High Court judges with reference to decided cases.
   உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து தீர்க்கப்பட்ட வழக்குகள் வாயிலாக விவாதிக்க.
2. Explain the procedure for the Amendment of the constitution.
   அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும்.
3. Examine the parliamentry privileges.
   நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை ஆய்க.
4. What are the constitutional safeguards available for civil servants ?
   குடிமைப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புகள் யாவை ?
5. What are the pardoning powers of the President ?
   குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரங்கள் யாவை ?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.
   (a) Writ of Habeas corpus.
   ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை.
   (b) Financial bill.
   நிதிச் சட்ட முன் வடிவு.
   (c) Colourable legislation.
   உருமறைச் சட்டம்.
   (d) Speaker of Lok Sabha.

மக்களவைத் தலைவர்.

(e) The Vice President of India.
இந்திய குடியரசுத் துணை தலைவர்.

(f) Financial emergency.
நிதி நெருக்கடி நிலை.

(g) Attorney General of India.
இந்திய அரசு தலைமை வழக்காற்றுநர்.

(h) Appeal by special leave.
தனிமுறை அனுமதி வழி மேல் முறையீடு.

(i) Residuary powers.
எஞ்சிய அதிகாரங்கள்.

(j) Doctrine of pith and substance.
மையக் கருப்பொருள் கோட்பாடு.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each)
by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The speaker of a legislative assembly was openly threatening a sitting judge of the High Court in a public meeting. The speaker claimed immunity from liability for contempt of court. Can his claim be sustained in law ?

பொதுக்கூட்டமொன்றில் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருப்பவரை சட்டப்பேரவை தலைவர் ஒருவர் வெளிப்படையாக மிரட்டிப் பேசினார். பேரவைத் தலைவர் நீதிமன்ற அவமதிப்புப் பொறுப்படைவிலிருந்து விலக்கு கோருகிறார். அவரது கோருரிமை நிலைபெறத்தக்கதா ?

8. A State Government without taking into consideration the income produced from the land levied uniform land tax for all kinds of land. Whether such levy of tax is valid or not. Decide.

ஒரு மாநில அரசு நிலத்திலிருந்து வரும் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் எல்லா வகையான நிலத்திற்கும் ஒரே அளவான வரி விதிப்பைச் செய்கிறது. இத்தகைய வரி விதிப்பு அரசமைப்பு சட்டத்தில் செல்லுபடியாகுமா ? ஆகாதா ? – தீர்மானிக்க.

9. No government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of service. Decide the validity of this Government order - Examine.

அரசு ஊழியர் எவரும் தங்கள் பணி பொருட்டு எந்தவித ஆர்ப்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது. இந்த அரசாணையின் செல்லும் நிலையை ஆராய்க.

10. A State legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the matter falls under List I and it was not within the legislative competence of the state legislature. Decide.

ஒரு மாநிலச் சட்டமன்றம் ஒலி பெருக்கியை பயன்படுத்தக் கட்டுப்பாடுகள் விதித்து சட்டம் இயற்றியது. இச்சட்டம் பட்டியல் I-ல் உள்ளடங்கும் என்பதாலும், மாநில சட்டமன்றத்தின் சட்டமியற்றும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்று வழக்கிடப்படுகிறது. தீர்வழி காண்க.

11. An ordinance was proclaimed by the President at a time when both houses of the parliament was not in session. This was strongly objected by the opposition parties. Discuss the validity of the ordinance.

நாடாளுமன்றத்தின் ஈரவைகளும் அமர்வில் இல்லா நேர்வில் குடியரசுத் தலைவரால் ஒரு அவசர சட்டம் விளம்புகைச் செய்யப்படுகிறது. இதனை எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அவசரச் சட்டத்தின் செல்லும் தன்மையை விவாதிக்க.

12. 'A' contested in an election representing a political party and elected to the legislative assembly. Later he was expelled from the party. But he continued to be a member of the legislative assembly as unattached member. Later he joined another political party. Is he disqualified as per the tenth schedule of the Indian Constitution ? Decide.

'அ' என்பவர் சட்டப் பேரவை தேர்தலில் ஒரு அரசியல் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் அவர் அந்த கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். ஆனால் அவர் தொடர்ந்து சட்டசபையில் கட்சி சாரா தனி உறுப்பினராக இருந்து வந்தார். பின்னர் அவர் வேறு ஒரு கட்சியில் சேர்ந்தார். அவர் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பத்தாம் அட்டவணையின் அடிப்படையில் தகுதி இழந்தவரா ? தீர்மானிக்க.

(For the candidates admitted from 2009-10 to 2016-2017)

B.A.B.L.,/B.A.LL.B. DEGREE EXAMINATION, MAY 2019

(Five Years Regular Course)
Third Year / Sixth Semester
CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

THREE

1. Explain the Pardanoning power of the President with relevant decisions of the Court.

ஜனாதிபதியின் மன்னிப்பளிக்கும் அதிகாரத்தினை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு விளக்குக.

2. Briefly examine the privileges of the Legislature.

சட்டம் இயற்றுபவர்களின் சிறப்புரிமைகளைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்க ?

3. Discuss the legislative and administrative relations between the Centre

and States.
மத்திய, மாநிலங்களுக்கு இடையிலான சட்டமியற்றும் மற்றும் நிருவாக உறவினை விவாதிக்கவும்.

4. What is National Emergency and on what ground it may be declared and state its consequences ?
தேசிய நெருக்கடி என்றால் என்ன மற்றும் எதன் அடிப்படையில் தேசிய பிரகடனம் செய்யலாம் என்பதனையும், அதன் விளைவுகளையும் குறிப்பிடுக.

5. Define Doctrine of Pleasure and what are the safeguards available to a Civil Servant under the Constitution.
விருப்பக் கோட்பாட்டினை வரையறை செய் மற்றும் என்ன விதமான பாதுகாப்புகள் ஒரு அரசு ஊழியருக்கு அரசமைப்பு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது ?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Doctrine of pith and substance.
மையக் கருப்பொருள் கோட்பாடு.

(b) Finance Bill.
நிதிமசோதா.

(c) Independent of Judiciary.
நீதித்துறையின் சுதந்திரம்.

(d) Election Commission of India.
இந்திய தேர்தல் ஆணையம்.

(e) Parliament.
பாராளுமன்றம்.

(f) Doctrine of Checks and Balances.
கட்டுப்படுத்தல் மற்றும் சமச்சீர் கோட்பாடு.

(g) L. Chandra Kumar vs. Union of India.
எல். சந்திரகுமார் எதிர் இந்திய அரசு.

(h) IX th schedule.
ஒன்பதாவது அட்டவணை.

(i) Centre state financial relations.
மத்திய மாநில நிதி உறவுகள்.

(j) Amendment of the Constitution.
அரசமைப்பை திருத்தம் செய்தல்.

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each)
by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The speaker of the Tamilnadu Legislative assembly disqualified four M.L.A.s under the anti defection law. The disqualified M.L.A.s approached the Madras High Court challenging the order of the speaker. The Madras High Court struck down the order of the speaker. The speaker appealed against the order of the Madras High Court on the ground that under the anti defection law the order of the speaker is final - Decide.

   கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களை தகுதியிழப்பு செய்கிறார். இதனை எதிர்த்து அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். சென்னை உயர் நீதிமன்றம் சட்டமன்ற உறுப்பினர்களை தகுதியிழப்பு செய்து சட்டமன்ற பேரவைத் தலைவர் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் சட்டப் பேரவைத் தலைவர் எடுக்கும் முடிவே இறுதியானது என வாதிடுகிறார். தீர்மானிக்கவும்.

8. The Governor of Bihar promulgated an ordinance in 2018 and extended it till 2016 without prior consent from the state legislature. Whether the Governor's act is sustainable. Advise.

   மாநில சட்ட மன்றத்தின் முன் சம்மதமின்றி 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை ஓர் அவசர சட்டத்தை பீகார் மாநில ஆளுநர் கால நீட்டிப்பு செய்து வந்தார். ஆளுநரின் இச்செயல் நிலைக்கத்தக்கதா ? அறிவுரைக்க.

9. Kanu Sanyal, a top ranking Naxalite leader, was arrested and detained without trial by the Andrapradesh police for investigation. His where abouts was not informed for months together. The wife of Kanu Sanyal approached the High Court for issuing writ of Habeas Corpus. Discuss.

   ஆந்திர மாநில போலிசார் கனு சன்யால் என்ற நக்சல் பாரி இயக்க முதன்மை தலைவரை கைது செய்து நீதிமன்ற விசாரணை இல்லாமல் தடுப்புக் காவலில் வைத்தனர். பல மாதங்களாக அவரின் தடுப்பு காவல் இருப்பிடம் எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் கனு சன்யாலுடைய மனைவி ஆட்கொணர்வு நீதிப்பேராணை வேண்டி உயர் நீதிமன்றத்தை அணுகினார். விவாதிக்க.

10. Anand, a sweeper working at Government Arts College in Chennai has remained absent for a month without any information. The College after enquiry dismissed him from service. Decide the merits of the case.

    சென்னை அரசு கலைக் கல்லூரியில் துப்புரவாளராக பணிபுரியம் ஆனந்து என்பவர் எந்த வித முன்னறிவிப்பும் இன்றி ஒரு மாதமாக வேலைக்கு வரவில்லை. கல்லூரியும் விசாரணைக்கு பிறகு அவரை வேலையில் இருந்து நீக்கியது. வழக்கின் தகுதி குறித்து முடிவு செய்க.

11. During the National Emergency, the President of India suspended all the fundamental rights under Article 359. The Human Rights watch an NGO questioned the validity of the President's order. Discuss.

தேசிய நெருக்கடி நிலையின் போது, குடியரசுத் தலைவர் சரத்து 359–ன் கீழ் அனைத்து அடிப்படை உரிமைகளையும் நிறுத்தி வைத்தார். மனித உரிமை விழிப்பு என்ற அரசு சாரா அமைப்பு ஜனாதிபதியினுடைய ஆணையின் செல்லும் தன்மை குறித்து வினவியது. விவாதிக்க.

12. 'A' a judge from Madras High Court retires on 24-03-2016. After retirement, he intended to practice as advocate in the Supreme Court and Karnataka High Court. Can 'A' practice as an Advocate in these courts.

'அ' என்ற நீதிபதி சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து 24–03–2016 அன்று ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திலும், கர்நாடகா உயர் நீதிமன்றத்திலும் வழக்குரைஞராக பணியாற்ற நினைக்கிறார். 'அ' என்பவர் வழக்கறிஞராக இந்த இரண்டு நீதிமன்றங்களில் பணியாற்ற முடியுமா ?

(For candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.A.B.L., / LL.B., DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019

Five Year Regular Course

Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

THREE

1. Explain how does the President exercise the power of pardon.

மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசு தலைவர் பயன்படுத்தும் முறை குறித்து விளக்குக.

2. Discuss the situations where the disciplinary authority has to decide ex parte and without giving a hearing to the concerned civil servant.

எந்தச் சூழல்களில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி அரசு பணியரது வழக்கினைக் கேளாது ஒருதலைப்பட்சமாக முடிவெடுக்கலாம் என்பதை விவாதிக்க.

3. How does the Parliament get its power to legislate on state subjects?

மாநில பட்டியலில் உள்ள பொருள் குறித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்ற எவ்வாறு அதிகாரம் பெற்றுள்ளது?

4. "Trade, commerce and intercourse throughout the territory of India shall be

free" – Discuss.

"இந்திய எல்லை எங்கிலும் வணிகம், வர்த்தகம் மற்றும் இடைத் தொடர்பு சுதந்திரமாக இருக்கும்" – விவாதிக்கவும்.

5. Explain the various methods of amendment of the Constitution and critically examine the role of state legislatures in constitutional amendments.

அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான பல்வேறு முறைகளை விளக்கி அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதில் மாநில சட்டமன்றங்கள் வகிக்கும் பங்கிலை திறனாய்வு செய்க.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Effects of proclamation of National emergency.
தேசிய நெருக்கடி நிலை பிரகடனத்தின் விளைவுகள்

(b) Passing of bills in the Parliament
நாடாளுமன்றத்தில் சட்டமுன்வடிவங்களை நிறைவேற்றுதல்

(c) Speaker of Legislative assembly.
சட்டப் பேரவைத் தலைவர்

(d) Appellate Jurisdiction of Supreme Court
உச்சநீதிமன்ற மேல்முறையீட்டு ஆள்வரை

(e) Functions of the Public Service Commission
அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள்

(f) Doctrine of Colourable legislation
பொய்மைத் தோற்றக் கோட்பாடு

(g) Inter-state Council
மாநிலங்களிடை மன்றம்

(h) Doctrine of immunity of instrumentality
அரசின் துணை அதிகார அமைப்புகளின் சட்ட விலக்களிப்பு கோட்பாடு

(i) Parliament's power to regulate trade and commerce.
தொழில் மற்றும் வணிக ஒழுங்குறுத்தும் நாடாளுமன்ற ஆற்றல்

(j) Amendment of Fundamental rights
அடிப்படை உரிமைகளை திருத்துதல்

PART C - (4 X 4 = 16 marks)

Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

7. The factories in the industrial areas are polluting the atmosphere thereby affecting the air quality of a State. The same is spreading to adjacent States

also. The Government of India had promised the international for a to take suitable measure to check its air pollution. Advise the Central Government as to how to legislate in matter relating to the state.

ஒரு மாநிலத்தின் தொழிற்பேட்டையில் உள்ள ஆக்கத் தொழிலகங்கள் வளி மண்டல மாசுக்கேட்டை ஏற்படுத்தி காற்றின் தரத்தை பாதிப்புக்குள்ளாக்குகின்றன. அப்பாதிப்பு அண்டை மாநிலங்களுக்கும் பரவுகின்றது. இந்திய அரசு வளிமண்டலத்தில் மாசு கலப்பதை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச அமைப்புகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளது. மாநில பட்டியலில் உள்ள பொருள் குறித்து சட்டம் இயற்ற நடுவண் அரசிற்கு ஆலோசனை வழங்குக.

8. The executive of the State Government entered into a contract with suppliers for supply of Materials for the construction of houses for the poor. Due to urgency, a lower division Clerk signed the contract without the knowledge of his superiors. Can the suppliers claim the amount from the Government for the goods supplied?

ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டுமான பொருட்கள் வழங்குவோருடன் மாநில அரசின் நிர்வாகத்துறை ஒப்பந்தம் செய்கிறது. அவசரத்தை முன்னிட்டு உயர் அலுவலருக்குத் தெரியாமல் கீழமை எழுத்தர் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டார். வழங்கப்பட்ட பொருட்களுக்குரியத் தொகையினை வழங்குவோர் கோர இயலுமா?

9. 'A', an editor of a newspaper, was found guilty of committing contempt of the House and the State Legislature issued a warrant to arrest him. Can 'A' challenge the warrant? Decide.

'A' ஒரு நாளிதழின் பதிப்பாசிரியர். அவர் சட்டசபை அவமதிப்புக் குற்றம் புரிந்ததற்காக அவரை கைது செய்யும்படி மாநில சட்டசபை பிடியாணை ஒன்றைப் பிறப்பிக்கிறது. 'A' அந்தப் பிடியாணையை மறுதலிக்க முடியுமா? தீர்மானிக்க.

10. A notification for Presidential election challenged on the ground that two states were under Presidential rule - Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

11. A nilitary truck carrying jawans was going towards the training spot. On the way it met with an accident due to negligent driving and as a result a pedestrian died on the spot. The widow of the deceased man claimed compensation. Will she succeed?

இராணுவ வீரர்களை பயிற்சிக்காக ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் ஓட்டுநரின் கவனக் குறைவால் இராணுவ வண்டி விபத்துக்குள்ளாகிறது. அச்சம்பவத்தில் அவ்வழியாக நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் அவ்விடத்திலேயே இறந்து விடுகிறார். இறந்தவரின் மனைவி இழப்பீடு கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

12. "No Government servant shall participate in any demonstration or resort to any form of strike in connection with any matter pertaining to his conditions of service". Decide the validity of this Government order - Examine.

"அரசு ஊழியர் எவரும் தங்கள் பணி பொருட்டு எந்தவித ஆர்பாட்டத்திலோ அல்லது வேலை நிறுத்தத்திலோ ஈடுபடுதல் கூடாது". இந்த அரசாணையின் செல்லும் நிலையை ஆராய்க.

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For candidates admitted during 2017-18 onwards)

B.A.B.L., / L.L.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021

(Five Year Regular Course)

Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வாரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Doctrine of pleasure in India and state its limitations,

இந்தியாவில் விருப்பக் கோட்பாட்டை விவரித்து அதன் மீது இருக்கும் தடை வரம்புகளைக் கூறுக.

2. Examine the dual capacity of Governor of States under our Constitution.

நமது அரசமைப்பு சட்டத்தின் கீழ் மாநில அளுநர்களின் இருநிலைச் செயல் திறனை ஆராய்க.

3. Discuss whether the emergency provisions modify the federal character of the Indian Constitution.

இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி சிறப்பியல்புகளை அவசர நிலை குறித்த வகையங்கள் மாற்றியமைக்கின்றனவா என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain how does the President of India exercise the ordinance making power.

அவசர சட்டம் இயற்றும் ஆற்றலை இந்திய குடியரசு தலைவர் செயல்படுத்தும் முறை குறித்து விளக்குக.

5. Explain the appointment of High Court Judges, with reference to decided cases.

தீர்ப்புகள் வழி நின்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து விளக்குக.

6. Discuss the Doctrine of Immunity of Instrumentality.
அரசின் துணை அதிகார அமைப்புகளின் சட்ட விலக்களிப்பு கோட்பாட்டினை விவரி.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Stare decisis.
முன்தீர்ப்பு முறை ஏற்பு

(b) Doctrine of Colourable legislation.
பொய்மைத் தோற்றக் கோட்பாடு

(c) Residualy Powers
எஞ்சிய அதிகாரங்கள்

(d) Right to property under Article 300A.
உறுப்பு 300A–யின் கீழ் சொத்துரிமை.

(e) Writ of Certiorari.
நெறியுறுத்தும் நீதிப் பேராணை.

(f) Money Bill
பண மசோதா

(g) R.K. Garg v. U.O.I.
ஆர்.கே. கார்க் எதிர் இந்திய யூனியன்.

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தருந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A notification for Presidential election was challenged on the ground that two states were under Presidential rule - Decide.
இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

9. A suit was filed by the State of Kerala against the State of Karnataka under Article 131, raising a dispute relating to non-implementation of the binding decision rendered by the Inter-State River water dispute Tribunal. Decide the maintainability of the suit.
கேரள மாநிலம் உறுப்பு 131–யின் கீழ் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை தீர்ப்பாயம் வழங்கிய கட்டுப்படுத்தக் கூடிய தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பாக கர்நாடக மாநிலத்தின் மீது வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இந்த வழக்கின் செல்லுந்தன்மையை ஆராய்க.

10. A State Governor repromulgated the same ordinance for the 10th time without bringing the matter before the state legislature. Discuss its validity.

ஒரு சட்டத்தை மாநில சட்டமன்றத்தின் முன் கொண்டு வராமல் அதை அவசர சட்டமாக தொடர்ந்து 10வது முறையாக திரும்ப திரும்ப ஒரு மாநில ஆளுநர் பிரகடனம் செய்கிறார். இதன் செல்லும் தன்மையை ஆராய்க.

(For candidates admitted during 2017-18 onwards)

B.A.B.L., / L.L.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022

(Five Year Regular Course)

Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Original and Advisory jurisdictions of the Supreme Court of India.

இந்திய உச்சநீதிமன்றத்தின் முதன்மை மற்றும் ஆலோசனை வழங்கும் அதிகாரங்களை விளக்குக.

2. "Trade and Commerce shall be free throughout India". -- Explain how the Indian Constitution seeks to achieve this object.

"இந்தியா முழுவதும் வாணிபம் மற்றும் தொழில் நடத்துவதில் தடையற்ற நிலை வேண்டும்" இந்திய அரசியலமைப்பு சட்டம் எவ்வாறு இந்த இலக்கினை அடைய விழைகிறது என்பதை விவரிக்கவும்.

3. Explain the procedure for amendment of the constitution. What restrictions do the doctrine of basic structure of the constitution place on the amending power of parliament?

அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடைமுறையை விவரிக்கவும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை தன்மை கோட்பாடானது எத்தகைய கட்டுப்பாடுகளை நாடாளுமன்றம் அரசமைப்பு சட்டத்தை திருத்தும் அதிகாரத்தின் மீது விதிக்கிறது?

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What do you understand by 'individual responsibility' of a minister? What is meant by collective responsibility?

ஒரு அமைச்சரின் 'தனிப்பட்ட பொறுப்பு' என்றால் என்ன? கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன?

5. Discuss the qualifications and disqualifications for membership of parliament.

பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளை விவாதிக்கவும்.

6. Explain how the president exercises the power of pardon.

மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசு தலைவர் பயன்படுத்தும் முறை குறித்து விளக்குக.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Repromulgation of ordinances again and again

ஒரே அவசர சட்டத்தை மீண்டும் மீண்டும் பிரகடனப்படுத்துவது

(b) Power of parliament to make laws in a state list.

மாநில பட்டியலில் பாராளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரம்

(c) Doctrine of Pith and substance

மையக் கருப்பொருள் கோட்பாடு

(d) Xth Schedule

10வது அட்டவணை

(e) Parliamentary privileges

நாடாளுமன்ற சிறப்புரிமைகள்

(f) Functions of the Public Service Commission

அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள்

(g) Interstate council

மாநிலங்களுக்கு இடையேயான மன்றம்

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A notification for Presidential election was challenged on the ground that two states were under Presidential rule - Decide.

இரண்டு மாநிலங்கள் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருக்கும் தருவாயில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கினை முடிவு செய்க.

9. A full bench of three judges was constituted by the Supreme Court to interpret the constitution, which decided the case and unanimously. Later the decision was impugned as erroneous and therefore a bench of five judges was constituted to review the case. Discuss the constitutional and jurisprudential requirement of constituting a constitutional bench.

மூன்று நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற முழு நீதியகம் ஒரு மனதுடன் அரசமைப்பு பொருள் விளக்க தீர்ப்பு வழங்கியது. பின்னர் அத்தீர்ப்பு செல்லாது எனக் கூறி அதை மறு ஆய்வு செய்ய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு நீதியகம் அமைக்கப்பட்டது. ஒரு அரசமைப்பு நீதியகம் அமைக்கப் பெற தேவையான அரசமைப்பு மற்றும் சட்டவியல் கூறுகளை விவாதிக்க.

10. There were certain allegations made in a newspaper against a sitting judge of the High Court. The matter was raised by an opposition member of the state legislature in the House and the same was clarified by the law minister in the house. The aggrieved judge writes to the speaker to expunge the questions and answer regarding him else he will be constrained to proceed against the house for contempt. Is his threat sustainable in law?

பதவியில் இருக்கும் ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக ஒரு பத்திரிக்கையில் வந்த குற்றச்சாட்டுகள் குறித்து சட்டமன்றத்தில் கேள்வி எழுந்து இது குறித்து சட்ட அமைச்சர் விளக்கம் கூறினார். இந்த விவாதம் குறித்து இந்த நீதிபதி சட்டமன்ற தலைவருக்கு இந்த விவாதங்களை அவை குறிப்புகளில் இருந்து நீக்காவிட்டால் அவைகளை நீதிமன்ற அவமதிப்பாக கொள்ளப்படும் என்ற கடிதத்தை அனுப்பியுள்ளார். இந்த செயல் சட்டத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுமா?

(For candidates admitted during 2017-18 onwards)

B.A.B.L. / L.L.B. DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Five Year Regular Course)
Third Year / Sixth Semester

CONSTITUTIONAL LAW - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வாரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Pardoning Power of the President under the Constitution of India with decided cases.

இந்திய அரசமைப்பின் கீழ் குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை தொடர்புடைய வழக்குகளுடன் விளக்கவும்.

2. Discuss the nature and distribution of legislative powers between the union and the states.

மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான சட்ட அதிகாரங்களின் தன்மை மற்றும் பகிர்வு பற்றி விவாதிக்கவும்.

3. Explain in detail the effects of Proclamation of Emergency under Article 352 of the Indian Constitution.

இந்திய அரசமைப்பின் 352–வது ஷரத்தின் கீழ் அவசர நிலை பிரகடனத்தின் விளைவுகளை விரிவாக விளக்கவும்.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the jurisdiction of the Supreme Court under Article 136 of the Constitution of India.

இந்திய அரசமைப்பின் 136–வது ஷரத்தின் படி உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பை விளக்கவும்.

5. 'All Money Bills are Financial Bills, but all Financial Bills are not Money Bills'. Substantiate the statement.

'அனைத்து பண மசோதாக்களும் நிதி மசோதாக்கள் ஆகும்; ஆனால் அனைத்து நிதி மசோதாக்களும் பண மசோதாக்கள் அல்ல'. அறிக்கையை நிரூபிக்கவும்.

6. Discuss the 'Doctrine of Pleasure' and its exceptions.

விருப்புரிமைக் கோட்பாடு மற்றும் அதன் விதிவிலக்குகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Attorney General of India.
இந்திய தலைமை வழக்கறிஞர்.

(b) Office of Profit.
ஆதாயம் தரும் பணி.

(c) Eminent Domain Principle.
சொத்தெடுப்பு உரிமை கோட்பாடு.

(d) Residuary Powers.
எஞ்சியுள்ள அதிகாரங்கள்.

(e) Election Commission of India.
இந்திய தேர்தல் ஆணையம்.

(f) Independence of Judiciary.
நீதித்துறையின் சுதந்திரம்.

(g) Anti-Defection Law.
கட்சித் தாவல் தடுப்புச் சட்டம்.

PART D - (2 X 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A case was pending before a special court in Bombay for over 15 years. Due

to the urgency and speedy disposal of the case, the Honourable Supreme Court under Article 139-A of the Constitution of India withdrawn the case from the Special Court and transferred it to Bombay High Court. The Constitutional validity of the order was challenged - Decide.

பம்பாயில் உள்ள ஒரு சிறப்பு நீதிமன்றத்தில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு வழக்கு நிலுவையில் இருந்தது. இந்த வழக்கு விரைவாகவும் அவசரமாகவும் முடிக்கப்பட வேண்டிய காரணத்தினால், மாண்புமிகு உச்சநீதிமன்றம் இவ்வழக்கை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஷரத்து 139–A–ன் கீழ் பம்பாய் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றியது. இந்த உத்தரவின் அரசமைப்பு செல்லுந்தன்மை குறித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தீர்மானிக்கவும்.

9. In the Legislative Assembly Election of 2004, a party named 'JKC' headed by Mr.'X' won the election with huge majority. Prior to election, a number of charges were levelled against Mr.'X' under the Prevention of Corruption Act for committing offences by him during his previous tenure as Chief Minister. He was convicted and sentenced to imprisonment for more than 2 years. As a result, he was disqualified to contest election by the Election Commission. But his party elected him as the Chief Minister. Is the appointment valid? Decide.

2004–ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் திரு.'X'என்பவரின் தலைமையிலான 'JKC' என்ற பெயருடைய கட்சி மிகப்பெரிய பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. தேர்தலுக்கு முன்பு, திரு.'X' முதலமைச்சராக பதவியில் இருந்த காலத்தில் புரிந்த குற்றங்களுக்காக ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் பல்வேறு குற்றச்சாட்டுகள் நிறுவப்பட்டிருந்தது. அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இதன் விளைவாக அவர் தேர்தலில் போட்டியிட முடியாதென தேர்தல் ஆணையத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால், அவருடைய கட்சியினர் அவரை முதலமைச்சராக தேர்ந்தெடுத்தனர். இந்த நியமனம் செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்.

10. In 2015, the Indian Parliament passed an amendment constituting a commission for the appointment of the judges of Supreme Court and High Courts of India, nullifying the 'Collegium System'. The Commission comprised of the Chief Justice of India, two eminent senior justices, the Union Minister of Law and Justice and two eminent persons. The Amendment was latter challenged before the Supreme Court of India. Analyse the Constitutional validity of the said amendment.

2015–ம் ஆண்டில் இந்திய பாராளுமன்றம் 'கொலீஜியம் முறையை' செல்லாததாக செய்து, உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கான ஆணையத்தை அமைக்கும் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியது. அந்த ஆணையத்தில் இந்திய தலைமை நீதிபதி, மற்ற இரு மூத்த நீதிபதிகள், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் மற்றும் இரண்டு சிறந்த நபர்கள் உள்ளடங்கியிருந்தனர். பிறகு, இந்தத் திருத்தத்தின் மீதான மறுப்பு உச்சநீதிமன்றத்தின் முன்பு கொண்டு செல்லப்பட்டது. இந்தத் திருத்தத்தின் அரசமைப்புச் செல்லுந்தன்மையை பகுப்பாய்வு செய்க.

அரசியலமைப்புச்சட்டம் II தேர்வை எப்படி எழுத வேண்டும்? - சில முக்கிய குறிப்புகள்

சீரமைக்கப்பட்ட புதிய முறை வினாத்தாளின்படி Part A–ல் நெடு வினாக்களும், Part B–ல் குறு வினாக்களும், Part C–ல் சிறு குறிப்புகள் எழுதுக வினாக்களும், Part D-ல் பிரச்சனை வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களின் விவரம்:

Part A –ல் நெடு வினாக்கள் மூன்றில், நீங்கள் இரண்டிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 12 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 24 மதிப்பெண்கள் ஆகும். Part B –ல் உள்ள குறு வினாக்கள் மூன்றில், இரண்டிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 7 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 14 மதிப்பெண்கள் ஆகும். Part C –ல் உள்ள சிறு குறிப்பு வரைக வினாக்கள் ஏழில், ஐந்திற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 4 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 20 மதிப்பெண்கள் ஆகும். இதை யடுத்து வரும் Part D–ல் உள்ள பிரச்சனை வினாக்கள் மூன்றில், இரண்டிற்கு விடை யளிக்க வேண்டும். இதற்கு தலா 6 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 12 மதிப்பெண்கள்.

ஆக மொத்தம் 70 மதிப்பெண்களுக்கு மட்டுமே தேர்வு. 2 1/2 மணி நேரத்திற் குள் விடையளிக்க வேண்டும்.

மேலும் முந்தைய வினாத்தாளின்படி இத்தனை பக்கங்களில் விடையளிக்க வேண்டும் என்ற முறை நீக்கப்பட்டு, தற்போது இத்தனை சொற்களில் விடையளிக்க வேண்டும் என்பது புதிதாக கொண்டு வரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, Part A–ல் வரும் நெடு வினாக்களுக்கான விடையை 500 சொற்களுக்குள்ளும், Part B –ல் வரும் குறு வினாக்களுக்கான விடையை 300 சொற்களுக்குள்ளும் எழுத வேண்டும். எனவே இவ்வரம்பை மீறி உங்கள் விடை செல்லாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

வினாத்தாளை வாங்கியவுடன் என்ன செய்ய வேண்டும்?

தேர்வில் வினாத்தாள் கையில் கொடுக்கப்பட்டவுடன், வினாத்தாளை ஒரு முறை நன்கு படித்துக் கொள்ளவும். மறக்காமல் ஆங்கில மொழி பெயர்ப்பு வினாக் களையும் படித்துக் கொள்ளவும். ஏனெனில் ஒரே ஆங்கில சொல்லுக்கு தமிழில் பல சொல்வடிவங்கள் இருப்பதுண்டு. ஆங்கில வினாவை படிக்கும் பொழுது, அதன் சரியான சொல்வடிவத்தை நாம் இனம் கண்டு கொள்ளலாம். பின்னர் நன்கு விடை தெரிந்த வினாக்களை தேர்வு செய்து கொண்டு அதற்கு விடையளிக்க ஆரம்பிக் கவும். காலத்தை கணக்கில் கொண்டு அதற்கொப்ப விடையை எழுதவும்.

நெடு மற்றும் குறு வினாவிற்கு விடையளிக்கும் விதம்:

ஒரு நெடு வினாவிற்கு விடையளிக்கும் பொழுது முதலில் அந்த வினா

குறித்த ஒரு சுருக்கமான முன்னுரை அல்லது அறிமுகம் (Introduction) கொடுக்கவும். பின்னர், அதற்குரிய சட்டப்பிரிவுகள் (Legal Provisions) ஏதேனும் இருப்பின், அவற்றின் விளக்கத்தைக் குறிப்பிடவும். பின்னர், எடுத்துக்காட்டுகள் (Illustrations) ஏதேனும் இருப்பின் அவற்றை அடுத்த பத்தியில் குறிப்பிடலாம். அடுத்து, அது குறித்த முக்கியமான வழக்குகள் (Important Case Laws) இரண்டு அல்லது மூன்றை குறிப்பிடவும். இதற்கென இந்நூல் முழுவதும் முக்கிய வழக்குகளை தந்துள்ளோம்.

இதற்கடுத்து, வினாவில் ஆய்க (Examine), விவாதிக்க (Discuss), விளக்குக (Explain), திறனாய்வு செய்க (Elucidate) என்று கேட்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதே தலைப்பின் கீழ் மேலும் சில கருத்துகளை குறிப்பிடலாம்.

நிறைவாக ஒரு சிறிய முடிவுரை (Conclusion) கொடுக்கவும். அது உங்கள் சொந்தக்கருத்தாகவும் இருக்கலாம் அல்லது பரிந்துரையாகவும் இருக்கலாம். தேவைப்படும் இடங்களில் சமீப கால சட்டக்கருத்துக்களையும் குறிப்பிடலாம்.

சிறு குறிப்பு எழுதுக வினாக்களுக்கு விடையளிக்கும் விதம்:

இவற்றுக்கும் மேற்கண்ட முறையிலேயே விடையளிக்கலாம். ஆனால் விரிவான விடை வேண்டியதில்லை. பொதுவாக தேர்வில் எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க கூறப்பட்டுள்ளதோ, அத்தனை வினாக்களுக்கும் விடையளித்து விட வேண்டும். எந்த வினாவையும் விட்டுவிடக் கூடாது. அதிலும் குறிப்பாக இந்த சிறு குறிப்பு எழுதுக வினாவை விட்டுவிடலாகாது. ஏனெனில் மதிப்பெண்களை கணிசமான அளவில் கூட்டித் தருவது, இவ்வகை வினாக்களே.

பிரச்சனை வினாக்களுக்கு விடையளிக்கும் விதம்:

முதலில் பிரச்சனை வினாக்களை நன்கு ஆழ்ந்து படித்துக் கொள்ளவும். இதையடுத்து பிரச்சனையில் தீர்க்க வேண்டிய சிக்கலை ஒரு வினா வடிவில் எழுதிக் கொண்டு, அதற்கு தீர்வு கூறும் முகமாக விடை எழுதுங்கள். உங்கள் தீர்வுக்கு ஆதரவாக நிற்கும் வழக்கின் தீர்ப்புகளை மேற்கோளாக சுட்டிக்காட்டுங்கள். நிறைவாக "தீர்வு" என்று தலைப்பிட்டு, அதன் கீழ் உங்கள் தீர்வை எழுதவும். பிரச்சனை வினாக்களை எக்காரணம் கொண்டும் விடையளிக்காமல் விட்டுவிட வேண்டாம்.

விடைகளை எழுதிய பின் என்ன செய்ய வேண்டும்?

விடைகளை எழுதிய பின், ஒருமுறை உங்கள் விடைத்தாளை புரட்டிப்பாருங்கள். வினா எண்ணிற்கான விடைதானா என்பதை சரிபாருங்கள். பக்கத்திற்கான எண் இடுங்கள். முடிவாக, "எவ்வளவு படித்தோம்" என்பதை விட, "எப்படி தேர்வு எழுதினோம்" (Way of Presentation) என்பதுதான் முக்கியம். மேற்கண்டவையே வெற்றியின் திறவுகோல். எனவே நம்பிக்கையுடன் படியுங்கள். நன்றாக தேர்வெழுதுங்கள். பிறகென்ன? வெற்றி உங்கள் கையில். வாழ்த்துகளுடன்!

- பி.ஆர்.ஜெ.

மூத்த வழக்குரைஞர் திரு. பி.ஆர்.ஜெ. எழுதிய பிற நூல்கள்

1.	இந்திய தண்டனைச் சட்டம் (திருத்திய பதினான்காம் பதிப்பு)	480–00
2.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – I (திருத்திய பத்தாம் பதிப்பு)	300–00
3.	குறித்தவகை நிவாரணச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	120–00
4.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – II (பத்தாம் பதிப்பு)	240–00
5.	நுகர்வோர் உரிமைகளும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்	240–00
6.	மொழி பெயர்ப்புக்குப் பயனாகும் முக்கிய சட்டத் தமிழ் பதங்களும் விளக்கமும்	185–00
7.	அளவையியல் (அல்லது) தருக்கவியல் (Logic)	55–00
8.	சட்ட மொழியும் சட்டம் வரைதலும்	100–00
9.	சொத்துரிமை மாற்றுச் சட்டம் (வசதியுரிமைச் சட்டத்துடன்)	380–00
10.	சட்டப் பொருள் விளக்கம் (ஏழாம் பதிப்பு)	430–00
11.	வங்கியியல் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	230–00
12.	மாற்று முறையாவணங்கள் சட்டம்	150–00
13.	நிருவாகமுறைச் சட்டம் (ஐந்தாம் பதிப்பு)	395–00
14.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் I (மூன்றாம் பதிப்பு)	360–00
15.	இந்திய அரசியலமைப்புச் சட்டம்II (நான்காம் பதிப்பு)	380–00
16.	இந்திய சாட்சிய சட்டம் (பத்தாம் பதிப்பு)	460–00
17.	நிறுவனச் சட்டம் (பதினொன்றாம் பதிப்பு)	500–00
18.	இந்திய குடும்பச் சட்டம் I (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	430–00
19.	இந்திய குடும்பச் சட்டம் II (திருத்திய எட்டாம் பதிப்பு)	370–00
20.	பொது நாட்டிடைச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	320–00
21.	இசைவுத் தீர்ப்பு, சமரசம் மற்றும் மாற்றுவழியில் தகராறுகள் தீர்வு முறை	320–00
22.	உரிமையியல் நடைமுறைச் சட்டம் (பதிமூன்றாம் பதிப்பு)	360–00
23.	குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்திய பதினொன்றாம் பதிப்பு)	495–00
24.	குற்றவியல் தத்துவம் மற்றும் தண்டனையியல் (திருத்திய எட்டாம் பதிப்பு)	410–00
25.	வாதுரைச் சட்டம் (மாதிரி வரைவுகளுடன்)	165–00
26.	பத்திரமெழுதும் முறையும் மாதிரிப் பத்திரங்களும் (ஒன்பதாம் பதிப்பு)	195–00
27.	நீதிமன்ற விதிகள் (எட்டாம் பதிப்பு)	120–00
28.	Rules of Court	90–00
29.	பொது வகையங்கள் விளக்கச் சட்டம்	100–00
30.	நீதிமன்ற ஆணையர்கள் மற்றும் சொத்துப் பேணுநர்கள் தொடர்பான சட்டம்	165–00
31.	குடியுரிமை தொடர்பான சட்டங்கள்	100–00
32.	வணிக நீதிமன்றங்கள் சட்டம் (திருத்திய இரண்டாம் பதிப்பு)	180–00
33.	ஆதார் சட்டம்	210–00
34.	ஊனங்கள் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	200–00
35.	மனித உரிமைகளும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	240–00
36.	தமிழ்நாடு கட்டட வாடகைச் சட்டம் (இரண்டாம் பதிப்பு)	160–00